நியாயாதிபதிகள் - முன்னுரை

காலமும் இடமும்

பாலஸ்தீன தேசத்தில் கி.மு. 1126 ஆம் வருஷத்தில் நியாயாதிபதிகளின் புஸ்தகம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

சாமுவேல். யூதருடைய பாரம்பரிய வரலாற்றின் பிரகாரம் இந்தப் புஸ்தகத்தை எழுதியவர் சாமுவேல். ஏசாயா இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்க வேண்டும் என்றும் சிலர் கூறுகிறார்கள். (2நாளா 32:32).

இஸ்ரவேல் தேசத்தில் ராஜாக்களின் காலம் வந்த பின்பு நியாயாதிபதிகளின் புஸ்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும். இஸ்ரவேலில் ராஜாக்களின் காலங்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சிகள் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதாக இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர் இரண்டு இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். (நியா 19:1; நியா 21:25).

இந்தப் புஸ்தகம் தாவீதின் காலத்திற்கு முன்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆசரிப்புக் கூடாரம் சீலோவில் இருந்தது. யோசுவாவின் காலத்தில் சீலோவில் ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டது. (நியா 18:31; நியா 21:12,19-21) ஏலியின் 40 ஆவது வருஷம் வரையிலும் ஆசரிப்புக் கூடாரம் சீலோவில் இருந்தது. அதன் பின்பு அது அழிக்கப்பட்டது. (1சாமு 4) அதற்குப் பின்பு, தாவீதின் காலம் வரையிலும் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை. தாவீது ராஜாவானபோது, அவர் ஆசரிப்புக் கூடாரத்தை எருசலேமிற்குக் கொண்டு வந்தார். (2சாமு 6; 1நாளா 21:29; 2நாளா 1:3). இந்தக் கருத்துக்களையெல்லாம் ஆதாரமாகப் பார்க்கும் பொழுது சாமுவேல் இந்தச் செய்திகளையெல்லாம் சேகரித்து நியாயாதிபதிகளின் புஸ்தகத்தை எழுதியிருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

மையக்கருத்து

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலின் தோல்விகள் இந்தப் புஸ்தகத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தப் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகிப்போன 9 சம்பவங்கள், இஸ்ரவேல் ஜனத்தார் ஏழு தடவை புறஜாதிகளின் கைகளில் அடிமைகளானது, 14 நியாயாதிபதிகள், நியாயாதிபதிகளின் தவறுகள், 5 உள்நாட்டுக் கலகங்கள் ஆகியவையும் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் இஸ்ரவேலின் 15 ஆவது, 16ஆவது நியாயாதிபதிகளான ஏலி, சாமுவேல் ஆகியோரின் ஊழியங்களும் விளக்கப் பட்டிருக்கிறது. நியாயாதிபதிகளின் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் சுமார் 440 வருஷக்காலத்தில் நடைபெற்றவையாகும்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 21

வசனங்கள் - 618

கேள்விகள் - 92

புதிய தீர்க்கதரிசனங்கள் - 14

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 585

கட்டளைகள் - 71

வாக்குத்தத்தங்கள் - 5

முன்னறிவிப்புக்கள் - 26

நியாயாதிபதி புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (நியா 1:2; நியா 2:1,20; நியா 4:6; நியா 6:8,12,16,20,23,25; நியா 7:2,4,7,9; நியா 10:11; நியா 13:3,11,13, 16,18; நியா 20:18,23,28)

நியாயாதிபதிகள் - முன்னுரை

பொருளடக்கம்

I. யோசுவாவிற்குப் பின்பு இஸ்ரவேலரின் வெற்றிகளும் தோல்விகளும்

1. பேசேக்கிலே யூதாவின் வெற்றி (1:1-8)
2. எபிரோனிலே யூதாவின் வெற்றி (1:9-10)
3. தெபீரிலே யூதாவின் வெற்றி (1:11-15)
4. ஓர்மாவிலும் பெலிஸ்தியாவிலும் யூதாவின் வெற்றி (1:16-18)
5. யூதாவின் தோல்வி (1:19)
6. எபிரோனிலே வெற்றி (1:20)
7. பென்யமீன் புத்திரரின் தோல்வி (1:21)
8. யோசேப்பின் குடும்பத்தாரின் வெற்றி (1:22-26)
9. மனாசே கோத்திரத்தாரின் தோல்வி (1:27-28)
10. எப்பிராயீம் கோத்திரத்தாரின் தோல்வி (1:29)
11. செபுலோன் கோத்திரத்தாரின் தோல்வி (1:30)
12. ஆசேர் கோத்திரத்தாரின் தோல்வி (1:31-32)
13. நப்தலி கோத்திரத்தாரின் தோல்வி (1:33)
14. தாண் புத்திரரின் தோல்வி (1:34)
15. யோசேப்பின் குடும்பத்தாரின் தோல்வி (1:35-36)
16. கர்த்தருடைய தூதனானவருடைய தரிசனம் (2:1-2)
17. கர்த்தருடைய பரீட்சை - நோக்கம் (2:3-5)
18. யோசுவா, மூப்பர் ஆகியோரின் கீழ் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு தற்காலிகமாகக் கீழ்ப்படிந்தார்கள் (2:6-10)
19. இஸ்ரவேலின் ஆறு பாவங்கள் (2:11-13)
20. தேவனுடைய நியாயத்தீர்ப்பு (2:14-15)
21. நியாயாதிபதிகள் நியமனமும், தற்காலிக மீட்பும் (2:16-19)
22. கர்த்தருடைய பரீட்சை - நோக்கம் (2:20-23)
23. தேவனுடைய பரீட்சையில் பயன்படுத்தப் பட்டோர் (3:1-4)

II. தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளாமல் அவற்றிலிருந்து விலகி, முரண்பட்டு ஜீவித்தல், அடிமைத்தனம், நியாயாதிபதிகள்

1. முதலாவது முரண்பாடு (3:5-7)
2. முதலாவது அடிமைத்தனம் - பாபிலோனியரிடம் எட்டு வருஷங்கள் (3:8)
3. ஒத்னியேல் - முதலாவது நியாயாதிபதி - பாபிலோன்மீது வெற்றி - நாற்பது வருஷங்கள் அமைதி (3:9-11)
4. இரண்டாவது முரண்பாடும், அடிமைத்தனமும் - மோவாபியரிடம் பதினெட்டு வருஷங்கள் (3:12-14)
5. ஏகூத் - இரண்டாவது நியாயாதிபதி - மோவாபியர்மீது வெற்றி - எண்பது வருஷங்கள் அமைதி (3:15-30)
6. மூன்றாவது முரண்பாடும், அடிமைத்தனமும். சம்கார் - மூன்றாவது நியாயாதிபதி - பெலிஸ்தரின்மீது வெற்றி (3:31)
7. நான்காவது முரண்பாடும், அடிமைத்தனமும் - கானானியரிடம் இருபது வருஷங்கள் (4:1-3)
8. தெபொராளும், பாராக்கும் - நான்காவது, ஐந்தாவது நியாயாதிபதிகள் - நாற்பது வருஷங்கள்

நியாயாதிபதிகள் - முன்னுரை

(1) தெபொராளின் தீர்க்கதரிசனம் (4:4-9)

(2) சேனையைத் திரட்டுதல் (4:10-13)

(3) கானானியர்மீது வெற்றி (4:14-16)

(4) சிசெராவின் மரணம் (4:17-24)

(5) தெபொராள், பாராக் ஆகியோரின் பாடல்

(அ) ஜெயம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம் (5:1-5)

(ஆ) இஸ்ரவேலர் அடிமைப்பட்டிருந்த போது தெபொராள், பாராக் ஆகியோரின் வழிநடத்துதல் (5:6-13)

(இ) கானானியர்மீது நடந்த யுத்தத்தில் மற்ற கோத்திரத்தாரின் நடபடிகள் (5:14-17)

(ஈ) தாபோர் பர்வதத்தில் யுத்தம் (5:18-23)

(உ) சிசெராவைக் கொன்றதற்காக யாகேலின்மீது ஆசீர்வாதம் (5:24-27)

(ஊ) சிசெராவின் தாயாரும், நாயகிகளும் (5:28-30)

(எ) தேவனுடைய விரோதிகளின்மீது சாபமும், நண்பர்கள்மீது ஆசீர்வாதமும் (5:31)

9. ஐந்தாவது முரண்பாடும், அடிமைத்தனமும் - மீதியானியரிடம் ஏழு வருஷங்கள் (6:1-6)

10. யோசுவாவிற்கு பின்பு இஸ்ரவேலின் பெயர் குறிப்பிடப்படாத முதலாவது தீர்க்கதரிசி (6:7-10)

11. கிதியோன் - ஆறாவது நியாயாதிபதி - நாற்பது வருஷங்கள்

(1) கர்த்தருடைய தூதனானவரின் தரிசனமும், கிதியோனின் ஊழிய அழைப்பும் (6:11-16)

(2) கர்த்தருடைய தரிசனத்தை கிதியோன் அங்கீகரித்தான் (6:17-21)

(3) கிதியோன் கர்த்தருடைய தூதனைக் கண்டும் சாவாமல் இருந்தான் (6:22-24)

(4) கிதியோன் தேவனுக்கு கீழ்ப்படிந்து, பாகாலின் பலி பீடத்தைத் தகர்த்து, கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான் (6:25-27)

(5) பாகாலை வழிபடுவோரிடமிருந்து கிதியோனின் தந்தை அவனை பாதுகாத்தார்(6:28-32)

(6) இஸ்ரவேலரை ஒன்றுசேர்த்தான் (6:33-35)

(7) தேவனுடைய வாக்குத்தத்தத்தை உறுதி பண்ணிய இரண்டு அற்புத அடையாளங்கள் (6:36-40)

(8) முன்னூறு பேர்களைக் கொண்ட கிதியோனின் சேனை (7:1-8)

(9) வெற்றியின் அடையாளம் (7:9-15)

(10) அற்புத வெற்றி (7:16-25)

(11) உள்நாட்டு குழப்பம் (7:1-3)

(12) முழுமையான வெற்றி - சுக்கோத்தின்மீது நியாயத்தீர்ப்பு (7:4-21)

(13) கிதியோனின் ஆளுகையும், அழிவும் (7:22-31)

நியாயாதிபதிகள் - முன்னுரை

12. ஆறாவது முரண்பாடு (7:32-35)

13. அபிமெலேக்கு - ஏழாவது நியாயாதிபதி - மூன்று வருஷங்கள்

(1) அபிமெலேக்கின் சதியாலோசனை - மூன்றாவது உள்நாட்டு குழப்பம் (9:1-6)

(2) யோதோமின் உவமையுடன்கூடிய தீர்க்கதரிசனம் (9:7-15)

(3) யோதோம்தான் கூறிய உவமையை சீகேமிலிருக்கிற ஜனங்களுக்குப் பயன்படுத்தினார் (9:16-21)

(4) நான்காவது உள்நாட்டு குழப்பம்

(அ) சீகேம் அபிமெலேக்குக்கு எதிராக செய்த சதி (9:22-29)

(ஆ) அபிமெலேக்கு சீகேமிற்கு எதிராக செய்த சதி (9:30-35)

(இ) அபிமெலேக்கின் வெற்றி (9:36-41)

(ஈ) சீகேமின் அழிவு (9:42-49)

(உ) அபிமெலேக்கின் மரணம் (9:50-57)

14. தோலா - எட்டாவது நியாயாதிபதி - இருபத்தி மூன்று வருஷங்கள் (10:1-2)

15. யாவீர் - ஒன்பதாவது நியாயாதிபதி - இருபத்திரண்டு வருஷங்கள் (10:3-5)

16. ஏழாவது முரண்பாடும், ஆறாவது அடிமைத்தனமும் - பெலிஸ்தர், அம்மோன் புத்திரர் ஆகியோரின் கீழ் பதினெட்டு வருஷங்கள் (10:6-9)

17. இஸ்ரவேலர் மனந்திரும்பினார்கள் - இஸ்ரவேலரின் வார்த்தைகளை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை (10:10-14)

18. தங்கள் பாவங்களை விலக்கி, உண்மையான மனந்திரும்புதலை இஸ்ரவேலர்கள் உறுதி பண்ணினார்கள் (10:15-16)

19. யுத்தத்திற்கு ஆயத்தம் (10:17-18)

20. யெப்தா - பத்தாவது நியாயாதிபதி - ஆறு வருஷங்கள்

(1) யெப்தாவிற்கு தன் தகப்பன் வீட்டில் சுதந்திரம் இல்லை (11:1-3)

(2) அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ணுவதற்கு சேனாதிபதியாக இருக்குமாறு யெப்தாவை அழைத்தார்கள் (11:4-6)

(3) யெப்தாவின் நிபந்தனை (11:7-9)

(4) நிபந்தனையை இஸ்ரவேலர்கள் ஏற்றுக் கொண்டார்கள் - இஸ்ரவேலரின் சேனைக்கு யெப்தா சேனாதிபதியாக இருந்தான் (11:10-11)

(5) அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு யெப்தாவின் முதல் செய்தி (11:12)

(6) அம்மோன் புத்திரரின் தேசத்தை கட்டிக்கொண்டதாக இஸ்ரவேலர் மீது தவறான குற்றச்சாட்டு (11:13)

(7) முந்நூறு வருஷ சரித்திரத்தை விளக்கிக் கூறி யெப்தா குற்றச்சாட்டை மறுத்தார் (11:14-28)

(8) யெப்தாவின் பயங்கரமான பொருத்தனை (11:29-31)

(9) அம்மோன் புத்திரரின்மீது வெற்றி (11:32-33)

(10) யெப்தாவின் பொருத்தனை நிறைவேறிற்று (11:34-40)

(11) ஐந்தாவது உள்நாட்டு குழப்பம் (12:1-7)

21. இப்சான் - பதினொராவது நியாயாதிபதி - ஏழு வருஷங்கள் (12:8-10)

நியாயாதிபதிகள் - முன்னுரை

22. ஏலோன் - பன்னிரெண்டாவது நியாயாதிபதி - பத்து வருஷங்கள் (12:11-12)

23. அப்தோன் - பதின்மூன்றாவது நியாயாதிபதி - எட்டு வருஷங்கள் (12:13-15)

24. எட்டாவது முரண்பாடும், ஏழாவது அடிமைத்தனமும் - பெலிஸ்தரின்கீழ் நாற்பது வருஷங்கள் (13:1)

25. சிம்சோன் - பதினான்காவது நியாயாதிபதி - இருபது வருஷங்கள்

(1) கர்த்தருடைய தூதனானவரின் அறிவிப்பு (13:2-5)

(2) வழிநடத்துமாறு கர்த்தரிடம் ஜெபம் (13:6-8)

(3) இரண்டாம் முறை தேவ தூதனானவரின் தரிசனம் (13:9-20)

(4) தேவ தூதனானவரை தரிசித்தும், மதிக்கவில்லை (13:21-23)

(5) சிம்சோனின் பிறப்பு (13:24-25)

(6) சிம்சோனின் முதலாவது காதலி (14:1-4)

(7) சிம்சோனும், சிங்கமும் (14:5-9)

(8) சிம்சோனின் திருமணமும், விடுதலையும் (14:10-14)

(9) விடுகதையை விடுவித்தார்கள் (14:15-18)

(10) சிம்சோன் முப்பது பேரைக் கொன்று பழிதீர்த்தான் (14:19-20)

(11) இரண்டாம் முறையாக பழிதீர்க்கும் எண்ணம் (15:1-2)

(12) முந்நூறு நரிகளால் பெலிஸ்தரின் வெள்ளாண்மையை சுட்டெரித்தான் (15:2-5)

(13) மூன்றாம் முறையாக பழிதீர்க்கும் எண்ணம் (15:6)

(14) சிம்சோன் பெலிஸ்தரை சின்னாபின்னமாக்கினான் (15:7-10)

(15) நான்காம் பழிதீர்க்கும் எண்ணம் (15:11-13)

(16) கழுதையின் தாடைஎலும்பினால் ஆயிரம் பேரைக் கொன்றான் (15:14-17)

(17) அற்புதம் - சிம்சோனுக்குத் தண்ணீர் கிடைத்தது (15:18-20)

(18) ஐந்தாம் பழிதீர்க்கும் எண்ணம் (16:1-2)

(19) பட்டணத்து வாசற்கதவுகளை அழித்தான் (16:3)

(20) ஆறாம் பழிதீர்க்கும் எண்ணம் - சிம்சோனும், தெலீலாள்

(அ) ஏழு அகணிநார் கயிறுகளால் கட்டப்படுதல் (16:4-9)

(ஆ) புதுக் கயிறுகளால் கட்டப்படுதல் (16:10-12)

(இ) சிம்சோனின் தலைமயிரின் ஏழு சடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிடுதல் (16:13-14)

(ஈ) சிம்சோன் முதன்முறையாக தலைசிரைக்கப்படுதல் (16:15-19)

(21) சிம்சோனுக்குக் கிடைத்த தண்டனை (16:20-25)

(22) முந்நூறு பேரைக் கொன்று பழிவாங்குதல் (16:26-30)

(23) சிம்சோன் கல்லறையில் அடக்கப்பண்ணப்படுதல் (16:31)

நியாயாதிபதிகள் - முன்னுரை

III. உள்நாட்டு குழப்பங்கள் - ஒன்பதாவது முரண்பாடு

1. மீகாவின் விக்கிரக ஆராதனை (17:1-5)

2. நிலையற்ற அரசாங்கம் (17:6)

3. லேவியரின் முரண்பாடு (17:7-13)

4. நிலையற்ற அரசாங்கம் (18:1)

5. தாண் புத்திரரின் உளவுவேலை (18:2-10)

6. மீகாவின் விக்கிரகங்களையும், சுரூபங்களையும் திருடுதல் (18:11-21)

7. மீகாவால் தன் விக்கிரகங்களையும், சுரூபங்களையும் திரும்பப் பெறமுடிய வில்லை (18:22-26)

8. லாயீஸ் ஊரை வென்றதும், தாண் பட்டணத்தை கட்டியதும் (18:27-29)

9. தாண்புத்திரரின் விக்கிரக ஆராதனை (18:30-31)

10. இஸ்ரவேலரின் பாவமான ஜீவியம்

(1) லேவியனும், அவனுடைய மறுமனையாட்டியும் (19:1-9)

(2) கிபியாவில் தங்குதல் (19:10-21)

(3) கிபியாவின் மக்களில் சிலர் லேவியனின் மறுமனையாட்டியை இராமுழுவதும் இலச்சையாய் நடத்தினார்கள் (19:22-25)

(4) மறுமனையாட்டியின் மரணம் (19:26-28)

(5) லேவியன் தன் மறுமனையாட்டியை பன்னிரெண்டு துண்டமாக்கி இஸ்ரவேலின் எல்லைகளுக்கு எல்லாம் அனுப்பினான் (19:29-30)

11. ஆறாவது உள்நாட்டு குழப்பம்

(1) இஸ்ரவேலரை ஒன்று சேர்த்தல் (20:1-3)

(2) இஸ்ரவேலரிடம் லேவியன் நடந்த காரியங்களை மறுபடியும் கூறினான் (20:4-6)

(3) கிபியாவின் மீது யுத்தம் (20:7-13)

(4) பென்யமீன் புத்திரர் கிபியாவின் மக்களை பாதுகாக்க ஒன்று கூடினார்கள் (20:14-17)

(5) முதலாவது யுத்தம் - இஸ்ரவேலரின் தோல்வி (20:18-21)

(6) இரண்டாவது யுத்தம் - இஸ்ரவேலரின் தோல்வி (20:22-25)

(7) இஸ்ரவேலரின் ஜெபமும் உபவாசமும் (20:26-28)

(8) மூன்றாவது யுத்தம் - பென்யமீன் புத்திரரின் தோல்வி (20:29-46)

(9) பென்யமீன் புத்திரரில் அறுநூறு பேர் தப்பி ஓடிவிட்டார்கள் (20:47-48)

(10) ஒரு கோத்திரம் குறைந்து போனதற்காக இஸ்ரவேல் புத்திரர் அழுது புலம்பினார்கள் (21:1-6)

(11) பென்யமீன் புத்திரருக்கு மனைவிகள் கிடைக்கும்படி செய்தார்கள் (21:7-12)

(12) பென்யமீன் புத்திரரோடு சமாதான உடன்படிக்கை (21:8-15)

(13) மனைவிகள் கிடைக்காமல் இருந்த பிரச்சனை தொடர்ந்தது (21:16-18)

(14) எல்லோருக்கும் மனைவிகள் கிடைக்கச் செய்தார்கள் (21:19-24)

(15) நியாயாதிபதிகளின் ஆட்சிக் காலத்தில் சமுதாய வாழ்வும், சன்மார்க்க வாழ்வும் (21:25)

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. யோசுவாவிற்குப் பின்பு இஸ்ரவேலரின் வெற்றிகளும் தோல்விகளும் - (நியா 1:1-3:4)

1. பேசேக்கிலே யூதாவின் வெற்றி

நியா 1:1 யோசுவா மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி: கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி, எங்களில் யார் முதல்முதல் எழுந்து புறப்படவேண்டும் என்று கேட்டார்கள்.

நியா 1:2 அதற்குக் கர்த்தர்: யூதா எழுந்து புறப்படக்கடவன்; இதோ, அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன் என்றார்.

நியா 1:3 அப்பொழுது யூதா தன் சகோதரனாகிய சிமியோனை நோக்கி: நாம் கானானியரோடே யுத்தம்பண்ண நீ என் சுதந்தரப் பங்குவீதத்தில் என்னோடே கூட எழுந்துவா; உன் சுதந்தரப் பங்கு வீதத்தில் நானும் உன்னோடுகூட வருவேன் என்றான்; அப்படியே சிமியோன் அவனோடேகூடப் போனான்.

நியா 1:4 யூதா எழுந்துபோனபோது, கர்த்தர் கானானியரையும் பெரிசியரையும் அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் பேசேக்கிலே பதினாயிரம்பேரை வெட்டினார்கள்.

நியா 1:5 பேசேக்கிலே அதோனிபேசேக்கைக் கண்டு, அவனோடு யுத்தம்பண்ணி, கானானியரையும் பெரிசியரையும் வெட்டினார்கள்.

நியா 1:6 அதோனிபேசேக் ஓடிப் போகையில், அவனைப் பின்தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டார்கள்.

நியா 1:7 அப்பொழுது அதோனிப்பேசேக்: எழுபது ராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின்கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான். அவனை எருசலேமுக்குக் கொண்டு போனார்கள்; அங்கே அவன் செத்துப்போனான்.

நியா 1:8 யூதாவின் புத்திரர் எருசலேமின்மேல் யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து, அதிலுள்ளவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கிவிட்டார்கள்.

"யோசுவா மரித்தபின்" - நியாயாதிபதிகளின் புஸ்தகமும், "இப்பொழுது" என்னும் வார்த்தையோடு மூலஎபிரெய பாஷையில் ஆரம்பமாகிறது. இது யோசுவா புஸ்தகத்திற்கும், இந்தப் புஸ்தகத்திற்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்பை விளக்குகிறது. (யோசு 1:1) யோசுவாவின் புஸ்தகத்தில் கானான் தேசத்தை எவ்வாறு சுதந்தரித்துக் கொண்டார்கள் என்னும் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் அது எவ்வாறு சுதந்தர வீதமாகப் பங்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது என்னும் செய்தியும் உள்ளன. நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரித்த தேசங்களை எவ்வாறு இழந்துபோனார்கள் என்பதும் ஜனங்களுடைய தோல்வி, தேவனுடைய உண்மை, ஆகியவையும்விளக்கப்பட்டிருக்கிறது. (நியா 7:6; நியா 21:25) யோசுவாவின் மரணம் யோசு 24:29-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி.... கேட்டார்கள்" - ஊரீம், தும்மீம் ஆகியவை மூலமாகக் கர்த்தரிடத்தில் கேட்டார்கள். (நியா 18:5; நியா 20:18; யாத் 28:30, எண் 26:55) **"Asked the Lord"** என்னும் வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே இந்தப் புஸ்தகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான இணையான வாக்கியங்கள் நியாயாதிபதிகள் புஸ்தகத்திலும், 1சாமுவேல் புஸ்தகத்திலும் உள்ளன. (நியா 1:1; நியா 18:5; நியா 20:18,23; 1சாமு 1:20; 1சாமு 14:37). தங்களுடைய பிரதான ஆசாரியர் மூலமாகக் கர்த்தரிடத்தில் விசாரித்துக் கேட்பது இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியம். ஆனால் ஒருசிலரே அந்தச் சிலாக்கியத்தைப் பயன்படுத்தினார்கள்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 1

"யூதா எழுந்து புறப்படக்கடவன்; இதோ, அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்" (நியா 1:2) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 1:4-20)

"கர்த்தர்......என்றார்" - நியாயாதிபதிகள் புஸ்தகத்தில் கர்த்தர் சொன்ன வார்த்தைகள் 12 இடங்களில் காணப்படுகிறது. (நியா 1:2; நியா 6:16,23,25; நியா 7:2,5,7,9; நியா 10:11; நியா 20:18,23,28).

"யூதா" - இஸ்ரவேலின் வரலாற்றில் யூதா மிகவும் முக்கிய பங்கு வகித்தவன். அவனுடைய தந்தை உயிரோடு இருந்த காலத்திலேயே யூதா சிறப்பான காரியங்களைச் செய்திருக்கிறான். யூதா என்னும் பெயருக்கு துதி என்று பொருள். இவன் யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த நான்காவது குமாரன். (ஆதி 29:35). யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் குழியில் தள்ளிவிட்டபோது யூதா அவனை மரணத்திலிருந்து பாதுகாத்தான். (ஆதி 37:20-27) யோசேப்பைக் கொன்று போடுவதற்குப் பதிலாக அவனை விற்றுப் போடலாம் என்று யூதா தன் சகோதரருக்கு ஆலோசனை கூறினான். இதன்மூலமாக இஸ்ரவேல் தேசம் பூர்வத்திலேயே அழிந்து போகாமல் பாதுகாக்கப்படுகிறது.

யூதா தன் பாவங்களை அறிக்கையிடுகிறவன். (ஆதி 38:26). பென்யமீனைப் பத்திரமாகத் திருப்பி அழைத்து வருவதற்காக யூதா யாக்கோபிடம் தன்னையே பணையமாக வைக்கிறான். (ஆதி 43:3-14) பென்யமீனை விட்டுவிடுமாறு யூதா யோசேப்பிடம் கெஞ்சி விண்ணப்பம்பண்ணுகிறான்.(ஆதி 44:18-34). யூதா கோத்திரத்திலிருந்து மேசியா வந்திருக்கிறார். (ஆதி 49:10). இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணும்போது, யூதா கோத்திரத்தார் அவர்களுக்கு முன்னால் சென்று தலைமை தாங்கினார்கள். (எண் 2:3; எண் 10:14) மேலும் பல காரியங்களில் யூதா கோத்திரத்தார் முன்னணியில் இருந்தார்கள். (எண் 34:19; யோசு 15:1).

"யூதா தன் சகோதரனாகிய சிமியோனை நோக்கி" - யூதா கானானியரோடு யுத்தம் பண்ணப் போகிறான். சிமியோனையும் தன்னோடு வருமாறு அழைக்கிறான். இவர்கள் ஒரே சுதந்தரவீதத்தில் பங்கு பெற்றிருக்கிறார்கள். (யோசு 19:1). இவர்கள் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள். ஒரே நிலத்தை இந்த இரண்டு கோத்திரத்தாரும் பகிர்ந்து கொள்வதினால் இவ்விருவரும் இணைந்து யுத்தத்திற்குப் போவது சரியாக இருக்கிறது.

"யூதா எழுந்துபோனபோது" - ஒரு உயர்ந்த ஸ்தானத்திற்கு எழுந்துபோவதைப் பற்றி வேதாகமத்தில் 134 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 17:10; யாத் 19:3) யுத்தத்தில் ஒருவருக்கு எதிராக எழும்பிப் போவதைப் பற்றியும் பல வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (நியா 1:4,22; நியா 4:10; நியா 15:9; 1இராஜா 22:29; 1நாளா 13:6; 1நாளா 14:8; 2நாளா 18:28). வடக்கே போகும்போது மேலாகப் போவது என்றும், (எண் 21:33; யோசு 7:2; 1சாமு 29:11), தெற்கே போகும்போது கீழாகப் போவது என்றும் கூறுவது வழக்கம். (ஆதி 12:10; ஆதி 43:15; உபா 1:22; உபா 26:5).

"கானானியரையும் பெரிசியரையும்" - யூதாவும், சிமியோனும் முறியடித்த ஜாதிகளில் இவர்கள் இருவரைப் பற்றி மட்டுமே இங்கு கூறப்பட்டிருக்கிறது. (நியா 1:3-4).

"பேசேக்" **(Bezek)** - யூதாவுக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்ட பேசேக் என்னும் பட்டணத்தில் இவர்கள் கானானியரையும், பெரிசியரையும் வெட்டினார்கள். இது அதோனி-பேசேக்கின் **(Adoni-bezek)** பட்டணமாகும். கேசேரிலிருந்து பேசேக் 3 மைல் தூரத்திலுள்ளது. (நியா 1:4-5). இந்தப் பட்டணமும், எப்பிராயீமிலுள்ள பேசேக் பட்டணமும் வெவ்வேறு பட்டணங்களாகும். (1சாமு 11:8).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

1 அதிகாரம்

"அதோனிபேசேக்" (Adoni-bezek) - இதற்கு "பேசேக்கின் பிரபு" "lord of Bezek" (நியா 1:5-7) என்று பொருள். எருசலேமின் ராஜாவைக் குறிப்பதற்கு அதோனிசேதேக் (Adoni-zedek) என்னும் பெயர் பயன்படுத்தப் படுகிறது. இதற்கு "நீதியின் பிரபு" "lord of righteousness" (யோசு10:1-3) என்று பொருள். இவ்விருவருமே வெவ்வேறு நபர்கள்.

அதோனிபேசேக்கினுடைய கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டதற்குக் காரணங்கள்

1. இவன் எழுபது ராஜாக்களினுடைய கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டான்.
2. இவனுடைய பெருவிரல்கள் தறித்துப் போடப்பட்டபடியினால் இவனால் வில் அம்புகளைப் பயன்படுத்தி யுத்தம் பண்ண முடியாது. பட்டயத்தையும் பிடிக்க முடியாது. வேகமாக ஓடமுடியாது.

"தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார்" - தான் மற்றவர்களுக்கு கொடுத்த தண்டனையை இப்பொழுது தேவன் தனக்கு வருவதற்கு அனுமதித்து விட்டார் என்று அதோனிபேசேக் தன்னுடைய குற்றத்தை ஒப்புக் கொள்கிறான்.

"யூதாவின் புத்திரர் எருசலேமின்மேல் யுத்தம் பண்ணி....பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கி விட்டார்கள்" - வேதாகமத்தில் முதல் முறையாக எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டதைப் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. எபிரோனை அவர்கள் ஜெயிப்பதற்கு முன்பாக எருசலேம் அக்கினிக்கு இரையாக்கப்பட்டிருக்க வேண்டும். (நியா 1:9) ஒருவேளை இது யோசுவா எருசலேமின் ராஜாவை வெற்றி பெற்ற சமயமாக இருக்கலாம். (யோசு 10:1-27; யோசு 12:10). அல்லது இதற்குப் பின்பும் இது நடைபெற்றிருக்கலாம். யூதா புத்திரர் எருசலேமின் ஒரு பகுதியை மட்டுமே பிடித்தார்கள். அதன் கோட்டைப் பகுதியைப் பிடிக்கவில்லை. தாவீதின் காலம் வரையிலும் யூதா கோத்திரத்தாரால் எருசலேமை முழுமையாகக் கைப்பற்ற முடியவில்லை. (2சாமு 5:6-9).

2. எபிரோனிலே யூதாவின் வெற்றி - (நியா 1:20)

நியா 1:9 பின்பு யூதாவின் புத்திரர் மலைத்தேசத்திலேயும், தெற்கேயும், பள்ளத்தாக்குகளிலேயும் குடியிருக்கிற கானானியரோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டுப்போனார்கள்.

நியா 1:10 அப்படியே யூதா கோத்திரத்தார் எபிரோனிலே குடியிருக்கிற கானானியருக்கு விரோதமாய்ப் போய், சேசாய், அகீமான், தல்மாய் என்பவர்களை வெட்டிப்போட்டார்கள். முற்காலத்தில் அந்த எபிரோனுக்கு கீரியாத் அர்பா என்று பேர்.

"பின்பு" - எருசலேமையும், பேசேக்கையும் கைப்பற்றிய பின்பு. (நியா 1:2-8)

"யூதா கோத்திரத்தார்....சேசாய், அகீமான், தல்மாய் என்பவர்களை வெட்டிப்போட்டார்கள்" - இது யூதா புத்திரரின் மூன்றாவது வெற்றியாகும். (நியா 1:4-5,8,10).

3. தெபீரிலே யூதாவின் வெற்றி - (யோசு 15:16)

நியா 1:11 அங்கேயிருந்து தெபீரின் குடிகளுக்கு விரோதமாகப் போனார்கள்; முற்காலத்தில் தெபீருக்கு கீரியாத்செப்பேர் என்று பேர்.

நியா 1:12 அப்பொழுது காலேப்: கீரியாத்செப்பேரை சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக் கொடுப்பேன் என்றான்.

நியா 1:13 அப்பொழுது காலேபுடைய தம்பியாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல் அதைப் பிடித்தான்; ஆகையால் தன் குமாரத்தியாகிய அக்சாளை அவனுக்கு விவாகம்பண்ணிக் கொடுத்தான்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

1 அதிகாரம்

நியா 1:14 அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்க வேண்டும் என்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு, கழுதையின் மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்றான்.

நியா 1:15 அப்பொழுது அவள்: எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான்.

"தெபீரின் குடிகளுக்கு விரோதமாகப் போனார்கள்" - இது யூதா புத்திரரின் நான்காவது வெற்றியாகும். தெபீர் எபிரோனிலிருந்து தெற்கே 7 மைல் தூரத்தில் உள்ளது. இதன் மறுபெயர் கீரியாத் செப்பேர் **(Kirjath-sepher).**

"என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம் பண்ணிக்கொடுப்பேன்" - காலேப் சொன்ன இந்த வாக்கியம் வேதாகமத்தில் இரண்டாம் முறையாக இங்கு கூறப் பட்டிருக்கிறது.(நியா 1:12-15; யோசு 15:16-19).

"ஒத்னியேல்" **(Othniel)**- இஸ்ரவேல் ஜனங்களை 16 நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்தார்கள். அவர்களில் ஒத்னியேல் முதலாவது நியாயாதிபதி

"என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்க வேண்டும்" - காலேபின் குமாரத்தியாகிய அக்சாள் தன் கணவனாகிய ஒத்னியேலிடம் காலேபிடமிருந்து ஒரு வயல்வெளியைக்கேட்க வேண்டுமென்று கூறுகிறாள். இங்கு பல நீரூற்றுகள் உள்ளன. ஒத்னியேல் காலேபிடம் இதைப் பற்றி கேட்கத் தாமதிக்கும்போது அக்சாளே அதைக் காலேபிடம் நேரடியாகக் கேட்கிறாள். வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது காலேப், மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலானநிலங்களைக்கொடுத்தான். (நியா 1:14-15, யோசு 15:17-19).

4. ஒர்மாவிலும் பெலிஸ்தியாவிலும் யூதாவின் வெற்றி

நியா 1:16 மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடேகூடப் பேரீச்சமரங்களின் பட்டணத்திலிருந்து ஆராத்திற்குத் தெற்கேயிருக்கிற யூதாவின் வனாந்தரத்திற்கு வந்து,ஜனங்களோடே குடியேறினார்கள்.

நியா 1:17 யூதா தன் சகோதரனாகிய சிமியோனோடுகூடப் போனான்; அவர்கள் சேப்பாத்தில் குடியிருக்கிற கானானியரை முறிய அடித்து, அதைச் சங்காரம் பண்ணி, அந்தப் பட்டணத்திற்கு ஒர்மா என்று பேரிட்டார்கள்.

நியா 1:18 யூதா காசாவையும் அதின் எல்லையையும், அஸ்கலோனையும் அதின் எல்லையையும், எக்ரோனையும் அதின் எல்லையையும் பிடித்தான்.

"கேனியன்" **(Kenite)** - (எண் 24:21)

"பேரீச்சமரங்களின் பட்டணம்" - இது எரிகோவின் மறுபெயர். (நியா 3:13; உபா 34:3).

"யூதா தன் சகோதரனாகிய சிமியோனோடு கூடப் போனான்" - முதலில் சிமியோன் யூதாவோடு போனான். (நியா 1:3) இப்பொழுது யூதா சிமியோனோடு போகிறான்.

"சேப்பாத்" **(Zephath)** - மறுபெயர் ஒர்மா **(Hormah)** (உபா 1:44).

"காசா" **(Gaza)** - இதற்கு வலிமை என்று பொருள். யூதாவுக்குக் கொடுக்கப்பட்ட பெலிஸ்தரின் ஐந்து பட்டணங்களில் இதுவும் ஒன்று. (நியா 1:18; நியா 6:4; யோசு 10:41; யோசு 11:22; யோசு 15:47) இது பெலிஸ்தருடைய பழங்காலத்து பட்டணம். மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்திருக்கிறது. யோப்பாவிற்குத் தெற்கே 40 மைல் தூரத்தில் உள்ளது.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

1 அதிகாரம்

வேதாகமத்தில் காசாவைப் பற்றி 19 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. காசா பட்டணத்தைப் பெலிஸ்தர்கள் மறுபடியும் கைப்பற்றிக் கொண்டார்கள். அசீரியரின் ராஜாவாகிய சர்கோன் **(Sargon)** காசாவைக் கைப்பற்றும் வரையிலும் இந்தப் பட்டணம் பெலிஸ்தரின் வசம் இருந்தது. மகா அலெக்சாண்டார் இந்தப் பட்டணத்திற்கு எதிராக இரண்டுமாதம் முற்றுகையிட்டு, இறுதியில் இதை அழித்துப்போட்டான். இந்தப் பட்டணத்திலுள்ள எல்லா புருஷரையும் கொன்றுபோட்டு, ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் அடிமைகளாக விற்றுப்போட்டான். ரோமப்பேரரசர் கி.மு. 57 ஆம் வருஷத்தில் இந்தப் பட்டணத்தை மறுபடியும் கட்டினார்கள்.

புதிய ஏற்பாட்டில் காசாவைப் பற்றி ஒரு இடத்தில் மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. கி.பி. 2 ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் காசா பட்டணம் கிரேக்கருடைய கலாச்சார மையமாகவும், வியாபார மையமாகவும் விளங்கிற்று. இங்கு புறஜாதி மார்க்கத்து பழக்கவழக்கங்கள் மிகுதியாயிருந்தது. இந்தப் பட்டணத்தில் கிறிஸ்தவ விசுவாசிகளில் அநேகர் இரத்தச் சாட்சியாக மரித்தார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் காசா பட்டணத்தார் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதிகளாக இருந்தார்கள். (1சாமு 6:17; 2இராஜா 18:8; 1நாளா 7:28). தீர்க்கதரிசன புஸ்தகங்களில் காசாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (எரே 47:1-5; ஆமோ 1:6-7; செப் 2:4; சக 9:5).

"அஸ்கலோன்" **(Askelon)** - யூதா கைப்பற்றிய பெலிஸ்தருடைய மற்றொரு பட்டணம். ஆனால் சிறிது காலம் மட்டுமே இந்தப் பட்டணம் இவர்கள் வசம் இருந்தது. (1சாமு 6:17; 2சாமு 1:20) மறுபெயர் **(Ashkelon)** (நியா 14:19; எரே 25:20; எரே 47:5-7; ஆமோ 1:8; செப் 2:4-7; சக 9:5).

யூதாவும், சிமியோனும் கைப்பற்றிய பட்டணங்கள்

1. பேசேக் (நியா 1:4-6)
2. எருசலேம் (நியா 1:7-8)
3. எபிரோன் அல்லது கீரியாத்-அர்பா (நியா 1:9-10)
4. தெபீர் அல்லது கீரியாத்செப்பேர். (நியா 1:11-15)
5. சேப்பாத் அல்லது ஒர்மா (நியா 1:17)
6. காசாவும், அதன் எல்லைகளும் (நியா 1:18)
7. அஸ்கலோனும், அதன் எல்லைகளும்
8. எக்ரோனும், அதன் எல்லைகளும்

5. யூதாவின் தோல்வி - (யோசு 15:63)

நியா 1:19 கர்த்தர் யூதாவோடேகூட இருந்ததினால், மலைத்தேசத்தாரைத் துரத்திவிட்டார்கள்; பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இருப்புரதங்கள் இருந்த படியினால், அவர்களைத் துரத்தக் கூடாமற்போயிற்று.

யூதாவின் தோல்வி

நியா 1:19 ஆவது வசனத்தில் பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இருப்புரதங்கள் இருந்தபடியினால், அவர்களைத் துரத்தக் கூடாமற்போயிற்று என்றுள்ளது. ஆகையினால் இது கர்த்தரால் அவர்களைத் துரத்த முடியவில்லை என்பதுபோல இது பொருள்படுகிறது. ஆனால் இது உண்மையான வியாக்கியானம் அல்ல. ஏனெனில் கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இஸ்ரவேல் புத்திரரால் பள்ளத்தாக்கின் குடிகளைத் துரத்த கூடாமற்போனதற்கு பல காரணங்கள் உள்ளன. அவையாவன:

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

1 அதிகாரம்

1. நியா 1:19 ஆவது வசனத்தின் முதல் பகுதி "கர்த்தர் யூதாவோடேகூட இருந்ததினால்" என்றிருக்கிறது. இது நியா 1:18 ஆவது வசனத்தின் கடைசிப் பகுதியாக இருக்க வேண்டும். கர்த்தர் யூதாவோடே கூட இருந்ததினால் அவர்களுக்கு வெற்றி உண்டாயிற்று. அவர்கள் நியா 1:4-18 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் எட்டு பட்டணங்களைப் பிடித்தார்கள். நியா 1:19 ஆவது வசனத்தின் மீதமுள்ள பகுதியில் கர்த்தர் யூதாவோடு இல்லை. யூதா கர்த்தரை விட்டுப் பின்வாங்கி விட்டது. ஆகையினால் கர்த்தர் தமது ஆதரவை யூதாவிற்குத் தரவில்லை. பள்ளத்தாக்கின் குடிகளோடு கர்த்தருடைய ஆதரவில்லாமல் யூதா தனியாக யுத்தம் பண்ணுகிறது. கர்த்தர் யூதாவோடு இருந்தால் யுத்தத்தில் இவர்களுக்கு ஜெயம் உண்டாகும். ஆனால் இப்பொழுதோ கர்த்தர் யூதாவோடு இல்லாததினால் அவர்களால் பள்ளத்தாக்கின் குடிகளைத் துரத்தக் கூடாமற்போயிற்று.

2. பழைய ஏற்பாட்டின் மூலபாஷை சுவடிகள் சிலவற்றில் நியா 1:19 ஆவது வசனத்தில் "துரத்தக்கூடாமற்போயிற்று" "**could not**" என்பதற்குப் பதிலாக "துரத்த வில்லை" "**did not**" என்று பொருள் படுமாறு இருக்கிறது. யூதாவிடத்திலே கால்களால் நடந்து செல்லும் யுத்தவீரர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஆனால் பள்ளத்தாக்கின் குடிகளிடத்திலோ இருப்பு ரதங்கள் இருந்தன. அதைக் கண்டு யூதா பயந்து விட்டது. கர்த்தரை நம்புவதற்குப் பதிலாக அவர்கள் சூழ்நிலையைப் பார்த்துப் பயப்பட்டார்கள். இந்த அதிகாரத்தின் மற்ற வசனங்களில் "துரத்தக்கூடாமற் போயிற்று" என்பதற்குப் பதிலாக "துரத்தாமற்போனார்கள்" என்றேயுள்ளது. (நியா 1:21,27,28,29,30,31,33).

6. எபிரோனிலே வெற்றி

நியா 1:20 மோசே சொன்னபடியே, எபிரோனைக்காலேபுக்குக் கொடுத்தார்கள்; அவன் அதிலிருந்த ஏனாக்கின் மூன்று குமாரரையும் துரத்திவிட்டான்.

7. பென்யமீன் புத்திரரின் தோல்வி

நியா 1:21 பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரையும் துரத்திவிடவில்லை; ஆகையால் எபூசியர் இந்நாள்மட்டும் பென்யமீன் புத்திரரோடே கூட எருசலேமில் குடியிருக்கிறார்கள்.

"பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரையும் துரத்திவிடவில்லை" - யூதா புத்திரர் பள்ளத்தாக்கின் குடிகளைத் துரத்தாததுபோல பென்யமீன் புத்திரரும் எபூசியரைத் துரத்திவிடவில்லை.

8. யோசேப்பின் குடும்பத்தாரின் வெற்றி - (வசனம்35)

நியா 1:22 யோசேப்பின் குடும்பத்தாரும் பெத்தேலுக்கு விரோதமாய்ப் போனார்கள்; கர்த்தர் அவர்களோடேகூட இருந்தார்.

நியா 1:23 யோசேப்பின் புத்திரர் பெத்தேலை வேவுபார்க்க ஆட்களை அனுப்பினார்கள்; முன்னே அந்தப் பட்டணத்திற்கு லூஸ் என்று பேர்.

நியா 1:24 அந்த வேவுகாரர் பட்டணத்திலிருந்து புறப்பட்டுவருகிற ஒரு மனுஷனைக் கண்டு: பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் வழியை எங்களுக்குக் காண்பி, உனக்குத்தயைசெய்வோம் என்றார்கள்.

நியா 1:25 அப்படியே பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் வழியை அவர்களுக்குக் காண்பித்தான்; அப்பொழுது அவர்கள் வந்து, பட்டணத்திலுள்ளவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, அந்த மனுஷனையும் அவன் குடும்பத்தையும் விட்டுவிட்டார்கள்.

1 அதிகாரம்

நியா 1:26 அப்பொழுது அந்த மனுஷன் ஏத்தியரின் தேசத்திற்குப் போய், ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு லூஸ் என்று பேரிட்டான்; அதுதான் இந்நாள்மட்டும் அதின் பேர்.

"யோசேப்பின் குடும்பத்தார்" - எப்பிராயீமும், மனாசேயும் பெத்தேலுக்கு விரோதமாகப் போனார்கள்.

"அந்த மனுஷனையும் அவன் குடும்பத்தையும் விட்டுவிட்டார்கள்" - ராகாபும், அவளுடைய குடும்பத்தாரும் தப்புவிக்கப்பட்டதுபோன்று இங்கு இந்த மனுஷனும், அவனுடைய குடும்பத்தாரும் தப்புவிக்கப்படுகிறார்கள். ராகாபும், இந்த மனுஷனும் இஸ்ரவேலுக்கு உதவி புரிந்தார்கள். இதற்காகக் கர்த்தர் அவர்களையும், அவர்கள் குடும்பத்தாரையும் பாதுகாத்தார். *(யோசு 6:22-23)*.

"ஏத்தியர்" **(Hittites)** - கானான் தேசத்திலிருந்து யோசுவா ஏத்தியரை வெளியேற்றினார். இவர்கள் சீரியாவிற்கு வடக்குப் பக்கத்தில் ஒரு தேசமாக இருக்கிறார்கள். ஏத்தியரைப் பற்றிய விவரம் கி.மு. 1500 ஆம் ஆண்டு எழுதப்பட்ட எகிப்தியரின்கல்வெட்டுகளில்காணப்படுகிறது.

9. மனாசே கோத்திரத்தாரின் தோல்வி - *(யோசு 17:12-17; உபா 7:2)*

நியா 1:27 மனாசே கோத்திரத்தார் பெத்செயான் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், தானாக் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், தோரின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், இப்லெயாம் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், மெகிதோவின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும் துரத்திவிடவில்லை; கானானியர் அந்த தேசத்திலே தானே குடியிருக்கவேண்டும் என்று இருந்தார்கள்.

நியா 1:28 இஸ்ரவேலர் பலத்தபோது, கானானியரை முற்றிலும் துரத்திவிடாமல் பகுதி கட்டப்பண்ணினார்கள்.

மனாசே கோத்திரத்தார் துரத்திவிடாத பட்டணத்தார்

1. பெத்செயான் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும்
2. தானாக் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும்
3. தோரின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும்
4. இப்லெயாம் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும்
5. மெகிதோவின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும் *(யோசு 17:11)*

"கானானியர் அந்த தேசத்திலே தானே குடியிருக்கவேண்டும் என்று இருந்தார்கள்" - கானானியருக்கு இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்கள். ஆனாலும் கானானியர் இஸ்ரவேல் புத்திரர் நடுவில் குடியிருக்க வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார்கள்.

"கானானியரை முற்றிலும் துரத்திவிடாமல் பகுதி கட்டப் பண்ணினார்கள்" - இஸ்ரவேல் புத்திரர் கானானியரை முழுவதுமாக அழிக்க வேண்டும். இதுவே அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கட்டளை. ஆனால் இஸ்ரவேல் புத்திரர் கானானியரைத் துரத்தி விடாமல் அவர்களைப் பகுதி கட்டப்பண்ணினார்கள். *(யாத் 23:24; உபா 7:2; உபா 12:2; உபா 20:17)*.

10. எப்பிராயீம் கோத்திரத்தாரின் தோல்வி - *(யோசு 16:10; உபா 7:2)*

நியா 1:29 எப்பிராயீம் கோத்திரத்தார் கேசேரிலே குடியிருந்த கானானியரையும் துரத்திவிடவில்லை; ஆகையால் கானானியர் கேசேரில் அவர்கள் நடுவே குடியிருந்தார்கள்.

1 அதிகாரம்

"எப்பிராயீம் கோத்திரத்தார் கேசேரிலே குடியிருந்த கானானியரையும் துரத்திவிடவில்லை" - மனாசேயைவிட எப்பிராயீம் கோத்திரத்தார் நன்றாகச் செயல்படுகிறார்கள். (நியா1:27) எப்பிராயீம் கோத்திரத்தார் மத்தியிலே கேசேரிலே மட்டுமே கானானியர் குடியிருக்கிறார்கள். (யோசு 16: 5-10).

11. செபுலோன் கோத்திரத்தாரின் தோல்வி - (உபா 7:2)

நியா 1:30 செபுலோன் கோத்திரத்தார் கித்ரோனின் குடிகளையும், நாகலோலின் குடிகளையும் துரத்திவிடவில்லை, ஆகையால் கானானியர் அவர்கள் நடுவே குடியிருந்து, பகுதி கட்டுகிறவர்களானார்கள்.

"செபுலோன் கோத்திரத்தார் கித்ரோனின் குடிகளையும், நாகலோலின் குடிகளையும் துரத்திவிடவில்லை" - செபுலோனின் சுதந்தரத்தில் கானானியர் கித்ரோனிலும், நாகலோலிலும் குடியிருக்கிறார்கள். (யோசு 19:10-15). கித்ரோன் **(Kitron)** எங்குள்ளது என்று தெரியவில்லை. இது லேவியரின் பட்டணமான காத்தாத்தாக **(Kattath)** இருக்கலாம். (யோசு 19:15). நாகலோல் **(Nahalol)** லேவியரின் பட்டணம். செபுலோனுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அதைச் சுதந்தரிக்கவில்லை. மறுபெயர்கள் **(Nahallel)** (யோசு 19:15) **(Nahalal)** (யோசு 21:35).

12. ஆசேர் கோத்திரத்தாரின் தோல்வி - (உபா 7:2)

நியா 1:31 ஆசேர் கோத்திரத்தார் அக்கோவின் குடிகளையும், சீதோனின் குடிகளையும், அக்லாப், அக்சீப், எல்பா, ஆப்பீக், ரேகோப் பட்டணங்களின் குடிகளையும் துரத்திவிடவில்லை.

நியா 1:32 ஆசேரியர் தேசத்தின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள்; அவர்களை அவர்கள் துரத்திவிடவில்லை.

ஆசேர் கோத்திரத்தார் துரத்திவிடாத பட்டணத்தின் குடிகள்

1. அக்கோவின் குடிகள்
2. சீதோனின் குடிகள் (யோசு 11:8)
3. அக்லாபின் குடிகள்
4. அக்சீபின் குடிகள்
5. எல்பாவின் குடிகள்
6. ஆப்பீக்கின் குடிகள் - ஆசேருக்குபிரித்துக் கொடுக்கப்பட்ட பட்டணம். ஆனால் இதில் அவர்கள் குடியேறவில்லை. ஆப்பீக் எங்குள்ளது என்று தெரியவில்லை. மறுபெயர் ஆப்பெக் **(Aphek)** (யோசு 12:18; யோசு 13:4; யோசு 19:30; 1சாமு 4:1; 1சாமு 29:1; 1இராஜா 20:26,30; 2இராஜா 13:17, யோசு 12:18).
7. ரேகோபின் குடிகள் - ஆசேரிலுள்ள பட்டணம். லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. (யோசு 19:28-30; யோசு 21:31; 2சாமு 10:8; 1நாளா 6:75). மறுபெயர் பெத்ரேகோப் **(Bethrehob)** (நியா 18:28; 2சாமு 10:6).

"ஆசேரியர் தேசத்தின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள்" - ஆசேரியர் கானானியர் நடுவில் குடியிருக்கிறார்கள். கானானியர் ஆசேரியர் நடுவில் குடியிருக்கவில்லை. (நியா 1:21,27-30).

13. நப்தலி கோத்திரத்தாரின் தோல்வி - (உபா 7:2)

நியா 1:33 நப்தலி கோத்திரத்தார் பெத்ஷிமேசின் குடிகளையும் பெத்தானாத்தின் குடிகளையும் துரத்திவிடாமல், தேசத்தின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள்; பெத்ஷிமேஸ், பெத்தானாத் பட்டணங்களின் குடிகள் அவர்களுக்குப் பகுதி கட்டுகிறவர்களானார்கள்.

1 அதிகாரம்

நப்தலி கோத்திரத்தார் துரத்திவிடாத பட்டணங்களின் குடிகள் (யோசு 19:32-39)

1. பெத்ஷிமேசின் குடிகள் (யோசு 15:10)
2. பெத்தானாத்தின் குடிகள் - ஆனாத்தின் வீடு. ஆனாத் கானானியரின் பெண் தெய்வம். பாலஸ்தீனத்தின் வடக்கிலுள்ள நப்தலியின் பட்டணம். (யோசு 19:38)

"நப்தலி கோத்திரத்தார்..... கானானியரின் நடுவே குடியிருந்தார்கள்" - (நியா 1:32)

"பெத்ஷிமேஸ்,பெத்தானாத் பட்டணங்களின் குடிகள் அவர்களுக்குப் பகுதி கட்டுகிறவர்களானார்கள்" - யோசுவாவின் புஸ்தகம் எழுதப்படும்போது நப்தலி கோத்திரத்தார் பலத்திருந்தார்கள். பெத்ஷிமேஸ், பெத்தானாத் பட்டணங்களின் குடிகளைத் தங்களுக்குப் பகுதி கட்டுகிறவர்களாக்கினார்கள்.

14. தாண் புத்திரரின் தோல்வி - (உபா 7:2)

நியா 1:34 எமோரியர் தாண் புத்திரரைப் பள்ளத்தாக்கில் இறங்க வொட்டாமல், மலைத்தேசத்திற்குப் போகும்படி நெருக்கினார்கள்.

"எமோரியர் தாண் புத்திரரைப் பள்ளத்தாக்கில் இறங்கவொட்டாமல்" - தாண் புத்திரரும், தங்களுடைய பங்குவீதத்தை முழுமையாகச் சுதந்தரிக்க முடியவில்லை. எமோரியர் அவர்களுடைய எல்லைகளை மட்டுப்படுத்தினார்கள்.

15. யோசேப்பின் குடும்பத்தாரின் தோல்வி - (வசனம் 22)

நியா 1:35 எமோரியர் ஏரேஸ் மலைகளிலும் ஆயலோனிலும் சால்பீமிலும் குடியிருக்க வேண்டும் என்று இருந்தார்கள்; ஆனாலும் யோசேப்பின் குடும்பத்தாரின் கை பலத்தபடியினால், அவர்களுக்குப்பகுதி கட்டுகிறவர்களானார்கள்.

நியா 1:36 எமோரியரின் எல்லை அக்கராபீமுக்குப் போகிற மேடுதொடங்கி அதற்கு அப்புறமும் போயிற்று.

மனாசே, எப்பிராயீம் ஆகியோர் துரத்தி விடாத இடங்கள்

1. ஆயலோனிலுள்ள ஏரேஸ் மலைகள் - தாணுக்கு ஒதுக்கப்பட்ட பட்டணம். (யோசு 19:42) ஆனால் எமோரியர் அவர்களை அங்கு குடியேற அனுமதிக்கவில்லை. மனாசேயும், எப்பிராயீமும் எமோரியரைப் பகுதி கட்டப்பண்ணினார்கள். இந்தப் பட்டணம் லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. (யோசு 21:24; 1நாளா 6:69; 1நாளா 8:13). யோசுவாவும், சவுலும் இங்கு வெற்றி பெற்றார்கள். (யோசு 10:12; 1சாமு 14:31).
2. சால்பீம் - தாணுக்கு ஒதுக்கப்பட்ட பட்டணம். எமோரியர் அவர்களை அங்கு குடியேற விடவில்லை. மனாசேயும், எப்பிராயீமும் இவர்களைப் பகுதிகட்டப் பண்ணினார்கள். (நியா 1:34-35). மறுபெயர் சலாபீன் **(Shaalabbin)** (யோசு 19:42).

"அக்கராபீம்" **(Akrabbim)** - இதற்கு தேள்கள் என்று பொருள். இது அரபா பள்ளத்தாக்கில் உள்ளது. சவக்கடலுக்குத் தெற்கே 20 மைல் தூரத்திலுள்ளது. (எண் 34:4). மறுபெயர் அக்ராபீமின் மேடுகள் **(Maaleh-acrabbim)** (யோசு 15:3).

2 அதிகாரம்

16. கர்த்தருடைய தூதனானவருடைய தரிசனம் - (எண் 31:17)

நியா 2:1 கர்த்தருடைய தூதனானவர் கில்காலிலிருந்து போகீமுக்கு வந்து: நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நான் உங்களைக் கொண்டு வந்து விட்டு, உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை என்றும்,

நியா 2:2 நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கை பண்ணாமல், அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடக் கடவீர்கள் என்றும் சொன்னேன்; ஆனாலும் என் சொல்லைக் கேளாதே போனீர்கள்; ஏன் இப்படிச் செய்தீர்கள்?

"கர்த்தருடைய தூதனானவர்" **(angel of the LORD)** - இவர் திரித்துவத்தில் ஒரு நபர். இவருக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் "நான், என்" என்னும் பிரதிப் பெயர்ச்சொல்லின் விவரம்.

1. நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினேன்.
2. உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நான் உங்களைக் கொண்டு வந்து விட்டேன்.
3. உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை.
4. என் சொல்லைக் கேளாதேபோனீர்கள் (நியா 2:2).
5. நான் அவர்களை உங்கள் முகத்திற்கு முன்பாகத் துரத்துவதில்லை நியா 2:3).

கர்த்தருடைய கிரியைகள்

1. அவர் வந்தார் - ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வந்தார்.
2. இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார்.
3. அவர்களைக் கானான் தேசத்திற்குக் கொண்டுவந்து விட்டார்.
4. அவர் அவர்களுடைய பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணினார்.
5. கர்த்தர் பேசினார் - "சொன்னோன்".
6. கர்த்தர் வாக்குப்பண்ணினார் - என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை.
7. கர்த்தர் இரண்டு காரியங்களைக் கட்டளையிட்டார். (நியா 2:2)

    (1) நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணக்கூடாது.

    (2) அவர்கள் பலிபீடங்களை இடித்துவிட வேண்டும்.

8. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது குற்றம் சுமத்தினார் - என் சொல்லைக் கேளாதே போனீர்கள்.
9. கர்த்தர் சோதித்துப் பார்க்கிறார் - ஏன் இப்படிச் செய்தீர்கள்.

"கில்காலிலிருந்து" - கர்த்தர் கில்காலில் என்ன செய்து கொண்டிருந்தார் என்று தெரியவில்லை. ஆனாலும் இதன் மூலமாக ஒரு காரியம் தெளிவாகிறது. கர்த்தரால் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பிரயாணம் பண்ண முடியும். (ஆதி 17:22; ஆதி 18:2,5,21-22,33; யாத் 14:19) இதற்கு முன்பாகக் கர்த்தர் கில்காலில் காணப்பட்டார். (யோசு 5:13-15).

"நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணி" - (யாத் 12-19; எண் 10-21; யோசு 2-12)

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

2 அதிகாரம்

"உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில்" - (ஆதி 12:1-7; ஆதி 13:14-17; ஆதி 15:18-21; ஆதி 17:8; ஆதி 26:3-4; ஆதி 28:3-4,13-15; ஆதி 35:11-12)

தேவன் உடன்படிக்கைகளைக் காக்கிறவர்

தேவன் தம்முடைய உடன்படிக்கையை இதுவரையிலும் காத்து வந்திருக்கிறார். இனிமேலும் காத்துக் கொள்வார். இஸ்ரவேல் புத்திரருடைய தோல்விகள், சிறையிருப்பு, சிதறிப்போதல் ஆகியவற்றிற்கு கர்த்தர் பொறுப்பல்ல. இஸ்ரவேல் புத்திரர் உடன்படிக்கையை மீறியதினால் அவர்களுக்குத் தோல்வியுண்டாயிற்று. உடன்படிக்கையை மீறினால் அவர்களுக்கு என்ன நேரிடும் என்று கர்த்தர் அவர்களை ஏற்கெனவே எச்சரித்திருக்கிறார். தவறு செய்கிறவர்களைக் கர்த்தர் நிச்சயமாகத் தண்டிப்பார். (லேவி 26; உபா 28).

ஆனாலும், கர்த்தர் கிருபையுள்ளவர். பாவம் செய்தவர்கள் மனந்திருந்தும்போது கர்த்தர் அவர்களை மன்னித்து அவர்களோடு தாம் பண்ணிய உடன்படிக்கையை நினைவு கூருகிறார். பூர்வ நாட்களில் கர்த்தர் அவர்களைக் காத்துக் கொண்டதுபோல இப்போதும் அவர்களை மீட்டுக் காத்துக் கொள்வார். (உபா 4:25-31; உபா 30: 1-10; ஏசா 11:10-16; எரே 23:1-8; எரே 30:1-31:40; எரே 32:37-44; எரே 33:3-26; எசே 34:11-31; எசே 36:1-38; எசே 37:1-28; ஆமோ 9:9-15; செப் 3:8-20; சக 8: 3-8,20-23; சக 12:10-13:9; சக 14:14-21; மத் 24:31; ரோமர் 11:25-29).

மனுஷர் பாவம் செய்யும்போது கர்த்தர் உடனடியாக அவர்களைக் கடிந்து கொள்கிறார். அதுபோலவே அவர்களை ஆசீர்வதிக்க வேண்டிய சமயங்களில் உடனடியாக ஆசீர்வதிக்கிறார். (ரோமர் 8:33-34; ரோமர் 14:4; 1கொரி 11:32).

பவுல் தன்னுடைய உள்ளத்தில் கர்த்தருக்கும், தனக்கும் உள்ள தொடர்பை நிச்சயித்துக் கொண்டதுபோல நாமும் நிச்சயத்துக் கொள்ள வேண்டும். "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங் காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 8: 35-39). பவுலைப்போல நாமும் நமது சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்த வேண்டும். (1கொரி 9:27) அப்போதுதான்தான் நமக்கு இயேசு கிறிஸ்துவிற்குள் ஆவிக்குரிய பாதுகாப்பு உண்டாகும். நமது சரீரத்தில் பாவத்திற்கு இடம் கொடுத்துவிட்டால் ஆவிக்குரிய ரீதியாக மரித்துப் போவோம்.

நமது பாவத்திற்கு மனந்திரும்பாமல், நீதியாக ஜீவிக்க விருப்பமில்லாமல் பாவத்தில் தொடர்ந்துஜீவித்துக்கொண்டிருப்போமானால் நாம் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டு விடுவோம். (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; ரோமர் 11:11-29; 2கொரி 3:16-17; 2கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8; எபி 6:4-9; எபி 10:26-29; 2பேதுரு 2:20-21).

"இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கை பண்ணாமல்" - (யாத் 23:32; உபா 7:2-5,16-25; உபா12:1-3)

17. கர்த்தருடைய பரீட்சை - நோக்கம் - (வசனம் 20-23; 3:1-4)

நியா 2:3 ஆகையால் நான் அவர்களை உங்கள் முகத்திற்கு முன்பாகத் துரத்துவதில்லை என்றேன்; அவர்கள் உங்களை நெருக்குவார்கள்; அவர்களுடைய தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள் என்றார்.

2 அதிகாரம்

நியா 2:4 கர்த்தருடைய தூதனானவர் இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் எல்லாரோடும் சொல்லுகையில், ஜனங்கள் உரத்த சத்தமிட்டு அழுதார்கள்.

நியா 2:5 அவ்விடத்திற்குப் போகீம் என்று பேரிட்டு, அங்கே கர்த்தருக்குப் பலியிட்டார்கள்.

"அவர்கள் உங்களை நெருக்குவார்கள்" - கானான் தேசத்தில் இஸ்ரவேலின் சத்துருக்கள் சிலரைக் கர்த்தர் விட்டு வைத்திருக்கிறார். இஸ்ரவேலராகிய அனைவரையும் கர்த்தர் சோதிப்பதற்காகவே அவர்களை விட்டு வைத்திருக்கிறார். அவர்கள் இந்தச் சோதனையில் வெற்றி பெறவேண்டும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து கர்த்தரையே சார்ந்து ஜீவிக்க பழகிக்கொள்ள வேண்டும். இந்தச் சோதனையில் இஸ்ரவேல் புத்திரர் வெற்றி பெற்றால் அவர்களுக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதம் மிகுதியாய் உண்டாயிருக்கும். இதுபோலவே புதிய ஏற்பாட்டுக்காலத்தில் விசுவாசிகளுக்கும் சோதனை வருகிறது. கர்த்தர் இந்தசோதனைகளை அனுமதிக்கிறார். நாம் சோதனையை மேற்கொண்டு, ஜெயிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஜீவிக்கிற நமக்கு ஓர் எச்சரிப்பாகவும், ஓர் பாடமாகவும் அமைந்துள்ளது. (2கொரி 11:1-13, எண் 33:55; யோசு 23:13)

"அவர்களுடைய தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள்" -எகிப்து தேசத்திலும், கானான் தேசத்திலும் விக்கிரகங்கள் இஸ்ரவேலருக்கு மிகப்பெரிய சாபமாக இருந்தது. மற்ற பாவமான காரியங்களைவிட விக்கிராராதனையே கர்த்தருடைய சமுகத்தில் மிகவும் அருவருப்பாகக் காணப்பட்டது. ஆகையினால் கர்த்தர் விக்கிராராதனைக்கு எதிராக அநேக கற்பனைகளைக் கூறியிருக்கிறார். இஸ்ரவேல்புத்திரரின் விக்கிராராதனையின் நிமித்தமாக அவர்களுக்கு அநேக வாதைகளும், நியாயத்தீர்ப்புகளும் உண்டாயிற்று. எண் 25 ஆவது அதிகாரத்தில்கூறப்பட்டிருக்கும்வேசித்தனமும், விக்கிராராதனையின் ஒரு பகுதியாகவே இருந்தது.

"ஜனங்கள் உரத்த சத்தமிட்டு அழுதார்கள்" - கர்த்தர் இஸ்ரவேலைத் தண்டிக்கும்போது அவர்கள் மனங்கசந்து அழுவார்கள். அவர்களுடைய வாழ்வில் ஆசீர்வாதம் பெருகும்போது கர்த்தரை மறந்துவிட்டு கடின இருதயத்தோடு ஜீவிப்பார்கள். (நியா 20:23,26; 1சாமு 11:4; 1சாமு 30:4; 2சாமு 13:36; 2சாமு 15:23,30).

இஸ்ரவேல் புத்திரரின் இருதயம் தொடர்ந்து கடினமாயிற்று. கர்த்தரிடத்தில் திரும்பி வராத அளவிற்கு அவர்களுடைய ஜீவியம் மிகவும் மோசமாயிற்று. ஆகையினால் கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்பிற்கு அனுப்பிவிடுகிறார். சிறையிருப்பில் பாடுகளை அனுபவித்தபோது அவர்கள் தற்காலிகமாக மனம்மாறி கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறார்கள். (எஸ்றா 3:12; எஸ்றா 10:1; நெகே 8:9; சங் 137:1) விடுதலை பெற்ற பின்போ மறுபடியும் அவர்களுடைய இருதயம் கடினமாயிற்று.

மேசியா இந்த உலகத்திற்கு வந்தபோது கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்னும் எண்ணம் ஜனங்கள் மத்தியில் சிறிதுகூட இல்லை. தேவபக்தியுள்ள மனுஷர்கள் ஒருசிலர் மட்டுமே இருந்தார்கள். அவர்கள் மட்டுமே இஸ்ரவேல்மீது வரப்போகும் அழிவிற்காகக் கர்த்தரிடத்தில் அழுது ஜெபித்தார்கள். (மத் 24:34-39; லூக்கா 19:41; லூக்கா 23:28). மற்றவர்கள் மேசியாவைப் பற்றிக் கவலைப்படவில்லை.

இயேசு கிறிஸ்துவிற்கு எதிராக ஜனங்களுடைய இருதயம் கடினமாயிற்று. மார்க்கத் தலைவர்களில் சிலர் கிறிஸ்துவிற்கு எதிராக எழும்பி ஜனங்களை அவருக்கு எதிராகத் தூண்டிவிட்டார்கள். அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் இஸ்ரவேல் தேசம் அழிந்து போயிற்று. (மத் 13:13-17; மத் 26:47-27:66; மத் 28:11-5; அப் 7:51-52; அப் 19:9; அப் 28: 25-31).

"போகீம்" (Bochim) - இதற்கு அழுகை, புலம்பல் என்று பொருள். (நியா 2:1,5).

2 அதிகாரம்

18. யோசுவா, மூப்பர் ஆகியோரின் கீழ் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு தற்காலிகமாகக் கீழ்ப்படிந்தார்கள் - (யோசு 24:21)

நியா 2:6 யோசுவா இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்களை அனுப்பிவிட்ட போது, அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ள அவரவர் தங்கள்தங்கள் சுதந்தர வீதத்திற்குப் போனார்கள்.

நியா 2:7 யோசுவாவின் சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் செய்த அவருடைய பெரிய கிரியைகளை யெல்லாம் கண்டவர்களும், யோசுவாவுக்குப் பின்பு உயிரோடிருந்தவர்களுமாகிய மூப்பரின் சகல நாட்களிலும் ஜனங்கள் கர்த்தரைச் சேவித்தார்கள்.

நியா 2:8 நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தரின் ஊழியக்காரன் நூற்றுப் பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான்.

நியா 2:9 அவனை எப்பிராயீமின் மலைத்தேசத்திலுள்ள காயாஸ் மலைக்கு வடக்கேயிருக்கிற அவனுடைய சுதந்தரத்தின் எல்லையாகிய திம்னாத் ஏரேசிலே அடக்கம் பண்ணினார்கள்.

நியா 2:10 அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று.

"யோசுவா இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்களை அனுப்பிவிட்டபோது" - நியாயாதிபதிகள் புஸ்தகத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போன சம்பவங்களும், இதனால் அவர்கள்மீது வந்த கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்களும் விவரிக்கப் பட்டிருக்கிறது.

இந்த வசனம் இவையெல்லாவற்றிற்கும் ஒரு முன்னுரையாக அமைந்துள்ளது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைச் சேவிக்கும் வரையிலும் கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து வந்தார். அவர்களுடைய ஜீவியம் ஆசீர்வதிக்கப் பட்டது. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி பின்மாறிச் சென்றபோது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கவில்லை. அவர்களுக்குத் தோல்வியுண்டாயிற்று. சத்துருக்களிடத்தில் அவர்கள் அடிமையானார்கள். பலவிதமான நியாயத்தீர்ப்புக்கள் அவர்கள்மீது வந்தது. தம்மைவிட்டு விலகிப்போனால் இஸ்ரவேல் புத்திரருக்கு என்னென்ன தண்டனைகள் கிடைக்கும் என்று கர்த்தர் வாக்குப் பண்ணி இருந்தாரோ அவைகளெல்லாம் அவர்கள்மீது வந்தது.

நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரரின் தொடர்ச்சியான பாவங்களும், கர்த்தரைவிட்டு அவர்கள் விலகிப்போன சம்பவங்களும், இதனால் அவர்கள்மீது வந்த கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்களும், அவர்களுடைய தற்காலிகமான மன மாறுதல்களும் விவரிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலை அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து மீட்பதற்காகக் கர்த்தர் அவ்வப்போது சில தலைவர்களை எழுப்பினார். அவர்களுடைய காலங்களில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் நெருங்கி வந்தார்கள். அதன்பின்பு, கர்த்தரைவிட்டு விலகிப்போய் விட்டார்கள். நியாயாதிபதிகளின் காலத்தில் 520 வருஷங்களாகவும், ராஜாக்களின் காலத்தில் 513 வருஷங்களாகவும் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் இதேபோன்ற நிலைமையே காணப்பட்டது. இறுதியாக அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாகக் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் இஸ்ரவேல் தேசம் அழிந்தது. புறஜாதி தேசங்களில் அவர்கள் சிறையிருப்பில் இருந்தார்கள்.

(நியா 2:11-2 நாளா 36, நியா 2:16-19)

"ஜனங்கள் கர்த்தரைச் சேவித்தார்கள்" - யோசுவாவின் நாட்களில் ஜனங்கள் கர்த்தரைச் சேவித்தார்கள். யோசு 24:31 ஆவது வசனம் இங்கு மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது.

"நூற்றுப் பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான்" - யோசுவாவைப்போல யோசேப்பும் 110 வயதில் மரணமடைந்தான். (ஆதி 50:26; யோசு 24:29).

2 அதிகாரம்

"திம்னாத்ஏரேசிலே அடக்கம் பண்ணினார்கள்" - (யோசு 24:30)

"கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று" - யோசு 24:31 ஆவது வசனத்தோடு இங்கு கூடுதலான செய்தி கொடுக்கப்படுகிறது. யோசுவாவின் காலத்திலும், யோசுவாவிற்குப் பின்பு உயிரோடு இருந்த மூப்பரின் காலத்திலும் ஜனங்கள் கர்த்தரைச் சேவித்தார்கள். அதன்பின்பு, வேறொரு சந்ததி எழும்பிற்று. அவர்கள் கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியவில்லை. (நியா 2:10).

19. இஸ்ரவேலின் ஆறு பாவங்கள்

நியா 2:11 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து,

நியா 2:12 தங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள்.

நியா 2:13 அவர்கள் கர்த்தரை விட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள்.

கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தவர்கள்

நியாயாதிபதிகள் புஸ்தகத்தில்

1. இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 2:11); தண்டிக்கப்பட்டார்கள். (நியா 2:15)
2. இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 3:7); 8 வருஷங்கள் தண்டிக்கப்பட்டார்கள் (நியா 3:8)
3. 40 வருஷங்களுக்கு பின்பு மறுபடியும் இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 3:11-12); 18 வருஷங்களுக்குத் தண்டிக்கப்பட்டார்கள். (நியா 3:13-14)
4. 80 வருஷ சமாதானத்திற்குப் பின்பு மறுபடியும் இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 3:30-4:1); 20 வருஷங்களுக்குத் தண்டிக்கப் பட்டார்கள். (நியா 4:2-3, 6-7)
5. 40க்கு மேற்பட்ட வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 5:31; நியா 6:1) 7 வருஷங்கள் தண்டிக்கப் பட்டார்கள். (நியா 6:1)
6. மற்ற 40 வருஷங்களுக்குப்பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 8:28-35) தண்டிக்கப்பட்டார்கள். (நியா 9)
7. 48 வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 10:1-6) 18 வருஷங்கள் தண்டிக்கப்பட்டார்கள். (நியா 10:8)
8. 31 வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் (நியா12:7-13:1) 40 வருஷங்கள் தண்டிக்கப்பட்டார்கள். (நியா 13:1)
9. 20 வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் (நியா 15:20,17:6-19:30) தண்டிக்கப்பட்டார்கள்.(நியா20:1-21:25)

1சாமுவேல் புஸ்தகத்தில்

10. ஆசாரியர்கள் (1சாமு 2:12-25) தண்டிக்கப்பட்டார்கள். (1சாமு 4:1-18)
11. 40 வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் (1சாமு 4:18; 1சாமு7:6; 1சாமு 8:1-22) தண்டிக்கப்பட்டார்கள். (1சாமு 8:11-20)
12. சவுலும், இஸ்ரவேல் ஜனங்களும் (1சாமு 15) தண்டிக்கப்பட்டார்கள். (1சாமு 15:26-35; 1சாமு 16:13-23; 1சாமு 19:1-17; 1சாமு 31:1-13)

2 அதிகாரம்

2சாமுவேல் புஸ்தகத்தில்

13. தாவீது (2சாமு 11) தண்டிக்கப்பட்டான். (2சாமு 12:1-23)

14. அம்னோன் (2சாமு 13:1-22) தண்டிக்கப்பட்டான். (2சாமு 13:23-36)

15. தாவீது (2சாமு 14:21-33) தண்டிக்கப்பட்டான். (2சாமு 15:1-6)

16. அப்சலோம் (2சாமு 15:7-17:29) தண்டிக்கப்பட்டான். (2சாமு 18)

17. யோவாப் (2சாமு 20:4-12) தண்டிக்கப்பட்டான்.(1இராஜா 2:28-34)

18. சேபா (2சாமு 20:1-3) தண்டிக்கப்பட்டான். (2சாமு 20:13-21)

19. சவுல் (2சாமு 21:1) தண்டிக்கப்பட்டான். (2சாமு 21:2-14)

20. தாவீது (2சாமு 24:1-9) தண்டிக்கப்பட்டான். (2சாமு 24:15)

1இராஜாக்கள் புஸ்தகத்தில்

21. சாலொமோன் (1இராஜா 11:1-8) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 11:9-40)

22. ரெகொபெயாம் (1இராஜா 12:13-15) தண்டிக்கப்பட்டான். (1இராஜா12:16-24)

23. ரெகொபெயாம் (1இராஜா 12:13-15; 1இராஜா13:33-34) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 13:1-32; 1இராஜா 14:1-18; 1இராஜா 15:29-30)

24. யூதா (1இராஜா 14:21-24) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 25-30)

25. அபியாம் (1இராஜா 15:1-3) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 15:7)

26. யூதா (1இராஜா 15:14) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 15:16)

27. நாதாப் (1இராஜா 15:26) தண்டிக்கப்பட்டான்.(1இராஜா15:27-28)

28. பாஷா (1இராஜா 15:34) தண்டிக்கப்பட்டான்.(1இராஜா 16:1-7,11)

29. ஏலா (1இராஜா 16:9) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 16:9-14)

30. சிம்ரி (1இராஜா 16:16-19) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 16:18-19)

31. உம்ரி (1இராஜா 16:25-26) தண்டிக்கப்பட்டான். (1இராஜா 16:28)

32. ஆகாப் (1இராஜா 16:30-33; 1இராஜா 21:1-16) தண்டிக்கப்பட்டான் (1இராஜா 17:1; 1இராஜா 21:17-26; 1இராஜா 22:29-38)

33. யேசபேல் (1இராஜா 18:4; 1இராஜா 21:7-16) தண்டிக்கப்பட்டாள். (2இராஜா 9:30-37)

34. அகசியா (1இராஜா 22:51-53) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 1:16-18)

2இராஜாக்கள் புஸ்தகத்தில்

35. யோராம் (2இராஜா 3:2-3) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 9:24)

36. கேயாசி (2இராஜா 5:20-24) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 5:27)

37. யோராம் (2இராஜா 8:18) தண்டிக்கப்பட்டான்.(2இராஜா 8:20-24)

38. அகசியா (2இராஜா 8:25-27) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 8:28)

39. யெகூ (2இராஜா 10:31) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 10:32-36)

2 அதிகாரம்

40. அத்தாலியா (2இராஜா 11:1-3) தண்டிக்கப்பட்டாள். (2இராஜா 11:16)

41. யோவாகாஸ் (2இராஜா 13:2) தண்டிக்கப்பட்டான் (2இராஜா 13:3-9)

42. யோவாஸ் (2இராஜா 13:11) தண்டிக்கப்பட்டான்.(2இராஜா 13:12-13)

43. இஸ்ரவேல் ஜனங்கள் (2இராஜா 14:4) தண்டிக்கப்பட்டார்கள்.(2இராஜா 14:12)

44. யெரொபெயாம் (2இராஜா 14:24) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 14:29)

45. சகரியா (2இராஜா 15:9) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 15:10)

46. மெனாகேம் (2இராஜா 15:18) தண்டிக்கப்பட்டான்.(2இராஜா15:19-20)

47. பெக்காகியா (2இராஜா 15:24) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 15:25)

48. பெக்கா (2இராஜா 15:28) தண்டிக்கப் பட்டான். (2இராஜா 15:29-31)

49. ஆகாஸ் (2இராஜா 16:1-2) தண்டிக்கப்பட்டான்.(2இராஜா 16:5-20)

50. ஓசெயா (2இராஜா 17:2) தண்டிக்கப் பட்டான். (2இராஜா 17:3-6)

51. மனாசே (2இராஜா 21:2-16) தண்டிக்கப் பட்டான்.(2நாளா 33:1-20)

52. ஆமோன் (2இராஜா 21:20-22) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 21:23)

53. யூதா (2இராஜா 23:26) தண்டிக்கப் பட்டாள். (2இராஜா 23:27)

54. யோவாகாஸ் (2இராஜா 23:32) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 23:33)

55. யோயாக்கீம் (2இராஜா 23:37) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 24:1-5)

56. யோயாக்கீன் (2இராஜா 24:9) தண்டிக்கப்பட்டான். (2இராஜா 24:12)

57. சிதேக்கியா (2இராஜா 24:19) தண்டிக்கப்பட்டான்.(2இராஜா 25:7-21)

மற்ற புஸ்தகங்களில்

58. இஸ்ரவேல் ஜனங்கள் (எஸ்றா 9:1-3) தண்டிக்கப்பட்டார்கள். (எஸ்றா 10:1-19; நெகே 13)

59. பஸ்கூர் (எரே 20:2) தண்டிக்கப்பட்டான். (எரே 20:6)

60. யூதா (மத் 23) தண்டிக்கப்பட்டாள். (மத் 23:38; மத் 24:2; லூக்கா 21:20-24)

கர்த்தருக்குக் கோபமூட்டும் காரியங்கள்

1. பொல்லாப்பானதைச் செய்வது. (நியா 2:11)
2. கர்த்தரைவிட்டு விலகுவது. (நியா 2:12-13)
3. அந்நிய தேவர்களைப் பின்பற்றுவது. (நியா 2:11-13)
4. அந்நிய தேவர்களைப் பணிந்து கொள்வது. (நியா 2:12)

20. தேவனுடைய நியாயத்தீர்ப்பு - (உபா 11:26-29; 28:15-68; லேவி 26)

நியா 2:14 அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார்.

2 அதிகாரம்

நியா 2:15 கர்த்தர் சொல்லியபடியும், கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்த படியும், அவர்கள் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம் கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது; மிகவும் நெருக்கப்பட்டார்கள்.

கோபமாயிரு (hot) - חָרָה - khaw-raw' - 2734

வினைச்சொல் - எரிச்சலாகு, கோபமாயிரு, விசனமாயிரு, மூண்டது, ஜாக்கிரதையாயிரு, ஓடு, உலாவு, பற்றியெரி, மூளு, எரி (to be hot or furious; to burn; be incensed) (நியா 2:14; நியா 3:8; நியா 6:39; நியா 10:7; யாத் 22:24; யாத் 32:10-11, 22; உபா 9:19; சங் 6:1; சங் 38:1).

கர்த்தர் கோபமூண்டவரானதற்குக் காரணம்

1. விதவைகளையும், திக்கற்றவர்களையும், அந்நியங்களையும் ஒடுக்கினார்கள். (யாத் 22:21-24)
2. இருதயக்கடினமும், விக்கிரகாராதனையும் (நியா 2:11-15; நியா 3:7-8; நியா 10:6-18; யாத் 32:8-11; உபா 9:19-22)
3. கர்த்தரை விட்டு விலகுவதும், அவரை மறப்பதும். (நியா 2:12; நியா 3:7)
4. பாவம் (சங் 6:1; சங் 38:1-5)

"அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார்" - நியாயாதிபதிகள், ராஜாக்கள் ஆகியோரின் காலங்களில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு யுத்தங்களில் பல தோல்விகள் உண்டாயிற்று. அந்தத் தோல்விகளுக்கெல்லாம் இதுவே ஆரம்பம்.

விற்றுப்போடுதல் (sold) - מָכַר - maw-kar' - 4376

வினைச்சொல் - கிரயமாகக்கொடு, ஒப்புக்கொடு, விலைப்படு, விற்கப்படு - திருமணத்தில் அல்லது அடிமைத்தனத்தில் தன் மகளை விற்றுப்போடுதல். கர்த்தர் தம்முடைய ஜனங்களை பகைஞரின் கையில் விற்றுப்போட்டார் என்பது இஸ்ரவேல் புத்திரரின் பின்மாற்றத்திற்காக அவர்களைத் தண்டிப்பதற்குப் பகைஞர் கையில் ஒப்புக்கொடுத்தார் என்று பொருள்படும். (நியா 3:8; நியா 4:2; நியா 10:7; உபா 28:68; உபா 32:30;1சாமு 12:9; எஸ் 7:4; சங் 44:12). மனுஷர் தீமையான காரியங்களைச் செய்வதற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தல் அல்லது தங்களை விற்றுப்போடுதல் என்றும் இந்த எபிரெய வார்த்தைக்குப் பொருள் கூறலாம். (1இராஜா 21:20,25; 2இராஜா 17:17; ஏசா 50:1; ஏசா 52:3) அடிமைகளை விற்பதற்கும், (ஆதி 25:33; ஆதி 37:28,36; ஆதி 45:4; உபா 15:12; சங் 105:17; எரே 34:14), பொருட்களை விற்பதற்கும் இந்த வார்த்தை பயன்படுகிறது. (உபா 14:21; ரூத் 4:3; 2இராஜா 4:7; நெகே 13:15,16; நீதி 31:24).

"தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவித்தபோது அவர்களுடைய சத்துருக்களால் அவர்களுக்கு முன்பாக நிற்க முடியவில்லை. (உபா 7:27; உபா 11:25; யோசு 1:5; யோசு 10:8; யோசு 23:9) இப்போது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் அவரை விட்டு விலகிப்போய்விட்டார்கள். ஆகையினால் அவர்களுடைய சத்துருக்களுக்கு எதிராக இஸ்ரவேல் புத்திரரால் இப்போது நிற்க முடியவில்லை. (லேவி 26:27).

"கர்த்தர் சொல்லியபடியும்" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு ஆசீர்வாதமும், கர்த்தருக்குக் கீழ்ப்படியாமற்போனால் அவர்களுக்குச் சாபமும் வரும் என்று கர்த்தர் அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். (லேவி 26; உபா 28). புதிய ஏற்பாட்டுக் காலத்து கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இது ஒரு வாக்குத்தத்தமாகவும்,ஒருமுன்னறிவிப்பாகவும் இருக்கிறது.(யோவான் 15:1-8;ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:16-26;எபி 10:38-39).

2 அதிகாரம்

"கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது" - இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த போது கர்த்தருடைய கை அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது. அவர்கள் புறப்பட்டுப் போகிற இடமெல்லாம் அவர்களுக்கு நன்மையும், ஜெயமும் உண்டாயிற்று. (உபா 29:9; யோசு 1:7-9) இப்போதோ அவர்கள் புறப்பட்டுப் போகிற இடமெல்லாம் அவர்களுக்குத் தீமையும், தோல்வியும் உண்டாயிற்று.

"மிகவும் நெருக்கப்பட்டார்கள்" - இது ஒரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம். (உபா 28:53-57; நியா 10:8; 1சாமு 13:6; 1சாமு 14:24; 1சாமு 28:15; 1சாமு 30:6).

21. நியாயாதிபதிகள் நியமனமும், தற்காலிக மீட்பும்

நியா 2:16 கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிற வர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்.

நியா 2:17 அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்துகொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள்.

நியா 2:18 கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணுகிற போது, கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்துவருவார்; அவர்கள் தங்களை இறுகப்பிடித்து ஒடுக்குகிற வர்களினிமித்தம் தவிக்கிறதினாலே, கர்த்தர் மனஸ்தாபப் படுவார்.

நியா 2:19 நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்து கொள்ளவும், தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் கேடாய் நடந்து, தங்கள் கிரித்தியங்களையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள்.

"அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல்" - இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய இருதயங்களைக் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து கடினப் படுத்துகிறார்கள். (நியா 2:4)

"அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய்" - நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் விக்கிரகாராதனை தாராளமாக இடம் பெற்றுவிட்டது. விக்கிரகாராதனை சம்பந்தமான பாவக் காரியங்களிலும், இஸ்ரவேல் புத்திரர் தாராளமாக ஈடுபட்டார்கள். (யாத் 34:15-16; லேவி 17:7; லேவி 20:5-6; எண் 15:39; எண் 25:1; உபா 31:16; நியா 2:17; நியா 8:27,33; 1நாளா 5:25; 2நாளா 21:13; சங் 73:27; சங் 106:39; எரே 3:2,9; எரே 13:27,33; எசே 6:9; எசே 16:17-36; எசே 20:30; எசே 23:3-43; எசே 43:7-9; ஓசி 1:2; ஓசி 2:2-4; ஓசி 4:10-18; ஓசி 5:3-4; ஓசி 6:10; ஓசி 9:1; நாகூம் 3:4).

"தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி" - ஆரோனுக்குக் கீழும், (யாத் 32), மோசேக்குக் கீழும் (எண் 11; எண் 16; எண் 25) இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போன சம்பவங்கள்ஏற்கெனவே நடைபெற்றிருக்கிறது.

பிதாக்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு

1. பிதாக்கள் சரியான வழியில் நடந்தார்கள்.
2. பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

2 அதிகாரம்

சில சமயங்களில் பிள்ளைகள் கர்த்தருடைய வழிகளிலும், பெற்றோர் துன்மார்க்கமான வழிகளிலும் நடந்த சம்பவங்களும் உள்ளன. (எசே 18).

"நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம்" - நியாயாதிபதியின் நாட்களில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி, இரட்சித்து வந்தார். நியாயாதிபதிகளின் ஜீவியம் எப்படி இருந்தபோதிலும் கர்த்தர் தமது பிள்ளைகளை இரட்சித்துக் கொண்டுவந்தார். நியாயாதிபதிகளில் அநேகர் கர்த்தரைவிட்டுப் பின் வாங்கிப்போனார்கள். (நியா 6:24-28; நியா 16:20). தலைவர்கள் பின்வாங்கிப் போனாலும் இஸ்ரவேல் சந்ததியாரைப் பாதுகாக்க வேண்டியது கர்த்தருடைய சித்தமாயிற்று. ஏனெனில் வரப்போகிற மேசியா இஸ்ரவேல் சந்ததியில் வருவார். இஸ்ரவேலுக்குக் கொடுத்த வாக்குத் தத்தங்களையும், முன்னறிவிப்புக்களையும் நிறைவேற்றுவதில் கர்த்தர் உண்மையுள்ளவர்.

"கர்த்தர் மனஸ்தாபப்படுவார்" - (ஆதி 6:6)

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள்

1. தேவனுடைய உடன்படிக்கையை மீறினார்கள். (நியா 2:1,20; உபா 31:16-26; யோசு 23:16).
2. கானான் தேசத்து குடிகளோடு உடன்படிக்கை பண்ணினார்கள். (நியா 2:2; யாத் 23:32; உபா 7:2-5).
3. புறஜாதி தெய்வங்களின் பலிபீடங்களை இடிக்கவில்லை. (நியா 2:2; யாத் 34:13; உபா 7:5; உபா 12:3).
4. தேவனுடைய சொல்லைக் கேளாதே போனார்கள். (நியா 2:2,20; யாத் 15:26; யாத் 19:5; எண் 14:22; யோசு 5:6).
5. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து பாகால்களையும், அந்நிய தெய்வங்களையும் சேவித்தார்கள். (நியா 2:11-13; நியா 3:6-7).
6. கர்த்தரை விட்டு விலகினார்கள். (நியா 2:12-13).
7. அந்நிய தேவர்களைப் பின்பற்றிப் போனார்கள். (நியா 2:12)
8. அந்நிய தேவர்களைப் பணிந்து கொண்டார்கள்.
9. கர்த்தருக்குக் கோபம் மூட்டினார்கள். (நியா 2:12).
10. அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேட்கவில்லை.(நியா 2:17).
11. அந்நிய தேவர்களைப் பின்பற்றி சோரம்போனார்கள்.
12. கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த தங்கள் வழியைச் சீக்கிரமாய் விட்டு விலகிப்போனார்கள்.
13. கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வில்லை.
14. அவர்கள் அந்நிய தேவர்களைப் பின்பற்றி அவற்றைச் சேவித்து பணிந்து கொண்டார்கள். (நியா 2:19).
15. தங்கள் முரட்டாட்டமான வழிகளை விடவில்லை.
16. அந்நிய குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள். (நியா 3:6).
17. தேவனாகிய கர்த்தரை மறந்தார்கள். (நியா 3:7).

22. கர்த்தருடைய பரீட்சை - நோக்கம் - (வசனம் 3-5; 3:14)

நியா 2:20 ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி: இந்த ஜனங்கள் தங்கள் பிதாக்களுக்கு நான் கற்பித்த என்உடன்படிக்கையை மீறி என் சொல்லைக் கேளாதேபோனபடியால்,

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

2 அதிகாரம்

நியா 2:21 யோசுவா மரித்துப் பின்வைத்துப் போன ஜாதிகளில் ஒருவரையும், நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்தி விடாதிருப்பேன்.

நியா 2:22 அவர்கள் பிதாக்கள் கர்த்தரின் வழியைக் கவனித்ததுபோல, அவர்கள் அதிலே நடக்கும்படிக்கு, அதைக் கவனிப்பார்களோ இல்லையோ என்று, அவர்களைக்கொண்டு இஸ்ரவேலைச் சோதிப்பதற்காக அப்படிச் செய்வேன் என்றார்.

நியா 2:23 அதற்காகக் கர்த்தர் அந்த ஜாதிகளை யோசுவாவின் கையில் ஒப்புக்கொடாமலும், அவைகளைச் சீக்கிரமாய்த் துரத்திவிடாமலும் விட்டுவைத்தார்.

கர்த்தர் புறஜாதியாரைக் கானான் தேசத்தில் துரத்தாமல் விட்டு வைத்ததற்குக் காரணம்

1. தம்முடைய வழிகளில் இஸ்ரவேல் புத்திரர் நடப்பார்களா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காக கர்த்தர் அவர்களை விட்டு வைத்தார்.
(நியா 2:22-23; நியா 3:1-4)
2. இஸ்ரவேல் புத்திரர் யுத்தம் செய்ய அறியும்படிக்கும் தங்களைப் பாதுகாப்பதற்காக யுத்தம் செய்வதற்கு அவர்களைப் பழக்குவிப்பதற்கும் கர்த்தர் புறஜாதியாரை விட்டுவைத்தார். (நியா 3:2)

3 அதிகாரம்

23. தேவனுடைய பரீட்சையில் பயன்படுத்தப்பட்டோர் - (நியா 3:3,20)

நியா 3:1 கானான் தேசத்தில் நடந்த சகல யுத்தங்களையும் அறியாதிருந்த இஸ்ரவேலராகிய அனைவரையும் சோதிப்பதற்காகவும்,

நியா 3:2 இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்குமுன் யுத்தஞ்செய்ய அறியாதிருந்தவர்களும் அவைகளை அறியும்படி பழக்குவிப்பதற்காகவும், கர்த்தர் விட்டுவைத்த ஜாதிகள் யாரென்றால்:

நியா 3:3 பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளும், சகல கானானியரும், சீதோனியரும், பாகால்எர்மோன் துவக்கி ஆமாத்திற்குள் பிரவேசிக்கும்வரைக்கும் லீபனோனின் மலைகளிலே குடியிருக்கிற ஏவியருமே.

நியா 3:4 கர்த்தர் மோசேயைக்கொண்டு தங்கள் பிதாக்களுக்கு விதித்த கற்பனைகளுக்கு இஸ்ரவேலர் கீழ்ப்படிவார்களோ என்று அறியும்படி, இஸ்ரவேலரை அவர்களாலே சோதிப்பதற்காக அவர்கள் விடப்பட்டிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தஞ்செய்த ஜாதிகள்

1. பெலிஸ்தர் **(Philistines)** (நியா 3:3,31; நியா 10:6-11; நியா 13:1-16:30; 1சாமு 4:1-17; 1சாமு 5:1-11; 1சாமு 6:1-21; 1சாமு 7:3-14; 1சாமு 9:16; 1சாமு 10:5; 1சாமு 12:9; 1சாமு 13:3-23; 1சாமு 14:1-52; 1சாமு 17:1-53; 1சாமு 18:17-30; 1சாமு 19:8; 1சாமு 23:1-28; 1சாமு 24: 1-11; 1சாமு 28:1-19; 1சாமு 29: 1-11; 1சாமு 30:16; 1சாமு 31:1-11; 2சாமு 1:20; 2சாமு 3:14-18; 2சாமு 5:17-25; 2சாமு 8:1-12; 2சாமு 19:9; 2சாமு 21:12-19; 2சாமு 23:9-16; 1இராஜா 4:21; 1இராஜா 15:27; 1இராஜா 16:15; 2இராஜா 8:2-3; 2இராஜா 18:8; 1நாளா 10:1-11; 1நாளா 11:13-18; 1நாளா 12:19; 1நாளா 14:8-16; 1நாளா 18:1-11; 1நாளா 20: 4-5; 2நாளா 9:26; 2நாளா 17:11; 2நாளா 21:16; 2நாளா 26:6-7; 2நாளா 28:18)
2. கானானியர் **(Canaanites)** (நியா 1:1-33; நியா 3:3-5; எண் 14:43-45; யோசு 3:10; யோசு 5:1; யோசு 16:10; யோசு 17: 12-18)
3. சேதோமியர் **(Sidonians)** (நியா 3:3; நியா10:12; நியா 18:7; யோசு 13:4-6)
4. ஏவியர் **(Hivites)** (நியா 3:3-5; யாத் 23:28; யோசு 12:8; யோசு 24:11; 2சாமு 24:7)
5. ஏத்தியர் **(Hittites)** (நியா 3:5; யாத் 23: 23-28; யாத் 33:2; யாத் 34:11; யோசு 1:4; யோசு 3:10; 1இராஜா 9:20; 1இராஜா 10:29; 2இராஜா 7:6; 2நாளா 8:7)
6. எமோரியர் **(Amorites)** (நியா 1:34-36; நியா 3:5; நியா 6:10; நியா 10:8-11; நியா 11:19-23; ஆதி 48:22; யாத் 34:11; ஆமோ 2:9-10)
7. பெரிசியர் **(Perizzites)** (நியா 1:4-5; நியா 3:5; யாத் 3:8,17; யாத் 23:23; யாத் 33:2; யாத் 34:11; யோசு 3:10; யோசு 9:1; யோசு 11:3; யோசு 12:8; யோசு 17:15; யோசு 24:11; 1இராஜா 9:20; 2நாளா 8:7)
8. எபூசியர் **(Jebusites)** (நியா 1:21; நியா 3:5; நியா 19:11; யாத் 3:8,17; யாத் 13:5; யாத் 23:23; யாத் 33:2; யாத் 34:11; யோசு 3:10; யோசு 9:1; யோசு 11:3; யோசு 12:8; யோசு 15:8,63; யோசு 24:11; 2சாமு 5:6-8)

3 அதிகாரம்

9. பாபிலோனியர் **(Babylonians)** (நியா 3:8-11; எஸ்றா 4:9; எசே 23:15-23; தானி 2:39-45; தானி 3:1-5:31; தானி 7:1-27)

10. மோவாபியர் **(Moabites)** (நியா 3:12-30; நியா 11:15-25; 2சாமு 8:2; 2இராஜா 3:18-24; 2இராஜா 13:20; 2இராஜா 24:2; 2இராஜா 18:2)

11. அம்மோனியர் **(Ammonites)** (நியா 3:13; நியா 11:4-36; உபா 2:20; உபா 23:3; 1சாமு 11:1-2,11; 2நாளா 26:8; 2நாளா 27:5; எரே 27:3; எரே 40:11-14; எரே 41:10-15; எரே 49:1-2; எசே 21:20,28; எசே 25: 2- 10)

12. அமலேக்கியர் **(Amalekites)** (நியா 3:13; நியா 5:14; நியா 6:3,33; நியா 7:10-12; எண் 14:25-45; 1சாமு 14:48; 1சாமு 15:6-32; 1சாமு 30:1-18; 2சாமு 1:1-13; 1நாளா 4:43)

13. மீதியானியர் **(Midianites)** (நியா 6:1-33; நியா 7:1-25; நியா 8:1; எண் 10:29; எண் 25:17; எண் 31:2-7; சங் 83:9).

14. இஸ்மவேலர் **(Ishmaelites)** (நியா 8:24; 1நாளா 2:17; சங் 83:6)

15. மாகோனியர் **(Maonites)** (நியா 10:12).

16. ஏதோமியர் **(Edomites)** (1இராஜா 11:1-17; 2இராஜா 8:21; 1நாளா 18:12-13; 2நாளா 21: 8-10; 2நாளா 25:14-19; 2நாளா 28:17)

17. சீரியர் **(Syrians)** (2சாமு 8:5-18; 2சாமு 10:6-19; 1இராஜா 20:20-29; 2இராஜா 5:2; 2இராஜா 6:9; 2இராஜா 7:4-16; 2இராஜா 8:28-29; 2இராஜா 9:15; 2இராஜா 13:5,17; 2இராஜா 16:6; 2இராஜா 24:2; 1நாளா 18:5-6; 1நாளா 19:10-19; 2நாளா 18:34; 2நாளா 22:5; 2நாளா 24:24)

18. அரபியர் **(Arabians)** (2நாளா 21:16; 2நாளா 22:1)

19. அசீரியர் **(Assyrians)** (2இராஜா 19:35; ஏசா 10:5,24; ஏசா 14:25; ஏசா 19:23; ஏசா 23:13; ஏசா 30:31; ஏசா 31:8; ஏசா 37:36; ஏசா 52:4; எசே 16:28;எசே 23:5-23; எசே 31:3; ஓசி 5:13; ஓசி 11:5; ஓசி 12:1; மீகா 5:5-6)

20. எகிப்தியர் **(Egyptians)** (நியா 6:9; நியா 10:11; யாத் 1:1-14:31; யாத் 18:8-10; யாத் 19:4; யாத் 32:12; எண் 20:15; எண் 33:3-4; உபா 26:6; யோசு 24:6-7; 1சாமு 4:8; 1சாமு 6:6; 1சாமு 10:18; 2இராஜா 7:6; எஸ்றா 9:1)

21. மேதிய-பெர்சியர் **(Medo-Persians)** (2இராஜா 17:6; 2இராஜா 18:11; எஸ்றா 6:2; எஸ் 1:3-19; எஸ் 10:2; ஏசா 13:17; ஏசா 21:2; எரே 25:25; எரே 51:11,28; தானி 5:28; தானி 6:1-15; தானி 9:1; தானி 8:20-25)

22. கிரேக்கர் **(Grecians)** (தானி 2:38-45; தானி 7:1-27; தானி 8:20-25; தானி 10:20; தானி 11:1-45; தானி 12:1-7; யோவே 3:6; சக 9:13; சக 14:1-15; வெளி 13:1-18; வெளி 17:8-17; வெளி 19:19-21)

23. ரோமர் **(Romans)** (தானி 2:38-45; தானி 7: 1-27; மத் 23:37-24:2; மத் 27:11-66; யோவான் 11:48; அப் 28:17).

நியாயாதிபதிகள் – தொகுப்புரை

3 அதிகாரம்

II. தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளாமல் அவற்றிலிருந்து விலகி, முரண்பட்டு ஜீவித்தல், அடிமைத்தனம், நியாயாதிபதிகள்-(நியா 3:5-16:31)

1. முதலாவது முரண்பாடு

நியா 3:5 இப்படி இஸ்ரவேல் புத்திரர், கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியராகிய இவர்கள் நடுவே குடியிருந்து,

நியா 3:6 அவர்களுடைய குமாரத்திகளை விவாகம்பண்ணி, தங்களுடைய குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடுத்து, அவர்கள் தேவர்களைச் சேவித்தார்கள்.

நியா 3:7 இப்படி இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து பாகால்களையும் தோப்பு விக்கிரகங்களையும் சேவிக்கிறபோது,

"இஸ்ரவேல் புத்திரர், கானானியர்.....நடுவே குடியிருந்து" - கானானியர் இஸ்ரவேல் நடுவில் குடியிருக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரரே கானானியர் நடுவில் குடியிருக்கிறார்கள். இஸ்ரவேலர்கள் கானானியரைக் கானான் தேசத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். (யாத் 3:8,17; யாத் 23:23-28; உபா 7:1-5).

"அவர்களுடைய குமாரத்திகளை விவாகம் பண்ணி" - கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள். (யாத் 34:16; உபா 7:3).

2. முதலாவது அடிமைத்தனம் - பாபிலோனியரிடம் எட்டு வருஷங்கள்

நியா 3:8 கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராகி, அவர்களை மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமின் கையிலே விற்றுப்போட்டார்கள்; இப்படியே இஸ்ரவேல் புத்திரர் கூசான் ரிஷதாயீமை எட்டு வருஷம் சேவித்தார்கள்.

"கோபமூண்டவராகி" - (நியா 2:14)

"கூசான்ரிஷதாயீம்" (Chushan-rishathaim) - எபிரெய மொழியில் இந்த வார்த்தையில் 17 எழுத்துக்கள் உள்ளன. வேதாகமத்தில் இது இரண்டாவது நீளமான வார்த்தையாகும். (ஏசா 8:1).

"மெசொப்பொத்தாமியா"(Mesopotamia) - ஆபிரகாம் 505 வருஷங்களுக்கு முன்பாக மெசொப்பொத்தாமியாவிட்டுப் புறப்பட்டுப் போனார். இப்போது ஆபிரகாமின் சந்ததியார் மெசொப்பொத்தாமியா ராஜாவிடம் 8 வருஷம் சேவிக்கிறார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர் கூசான்ரிஷதாயீமை எட்டு வருஷம் சேவித்தார்கள்" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராகச் செய்த பாவத்தின் நிமித்தம் ஏழு அந்நிய ஜாதிகளிடம் அடிமைகளாக இருக்கிறார்கள். இது அடிமைத்தனத்தின் ஆரம்பம்.

3. ஒத்னியேல் - முதலாவது நியாயாதிபதி - பாபிலோன்மீது வெற்றி - நாற்பது வருஷங்கள் அமைதி

நியா 3:9 இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேல் என்னும் ஒரு ரட்சகனை அவர்களுக்கு எழும்பப் பண்ணினார்.

3 அதிகாரம்

நியா 3:10 அவன்மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம்பண்ணப் புறப்பட்டான்; கர்த்தர் மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்; ஆகையால் அவன் கை கூசான்ரிஷதாயீமின்மேல் பலங்கொண்டது.

நியா 3:11 தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது. கேனாசின் குமாரனாகிய ஒத்னியேல் மரணமடைந்தான்.

"ஒத்னியேல்" (Othniel) - (யோசு 15:17)

"அவன்மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால்" - இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் இரட்சகரை எழுப்புகிறார். அவர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்குவார். ஆவியானவரால் அவர்கள் ஏவப்படுவார்கள். தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஆவியானவர் அவர்களைப் பெலப்படுத்துவார்.

கர்த்தருடைய ஆவி வந்திருந்தவர்களின் விவரம்

1. மோசே (எண் 11:17,25)
2. எழுபது மூப்பர் (எண் 11:25-26)
3. பிலேயாம் (எண் 24:2)
4. ஒத்னியேல் (நியா 3:10)
5. கிபியோன் (நியா 6:34)
6. யெப்தா (நியா 11:29)
7. சிம்சோன் (நியா 14:6,19; நியா 15:14)
8. சவுல் (1சாமு 10:6,10; 1சாமு 11:6; 1சாமு 19:23)
9. தாவீது (1சாமு 16:13)
10. சவுலின் சேவகர்கள் (1சாமு 19:20)
11. எலிசா (2இராஜா 2:9-15)
12. அமாசாய் (1நாளா 12:18)
13. அகசியா (2நாளா 15:1)
14. சகரியா (2நாளா 24:20)
15. மேசியா (ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 61:1; மத் 3:16; லூக்கா 4:18)

"யுத்தம்பண்ணப் புறப்பட்டான்" - இரண்டாம் முறையாக ஒத்னியேல் யுத்தம் பண்ணப் புறப்படுகிறான். இம்முறையும் வெற்றி பெறுகிறான். (நியா 3:10-11; நியா 1:12-15; யோசு 15:16-19).

"தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணிய சம்பவங்களுக்கு இடையில் இரண்டாம் முறையாக தேசம் அமைதலாயிருக்கிறது. (நியா 3:8,11,30; நியா 5:31; நியா 8:28).

4. இரண்டாவது முரண்பாடும், அடிமைத்தனமும் - மோவாபியரிடம்பதினெட்டு வருஷங்கள்

நியா 3:12 இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்; அவர்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவை இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலக்கப்பண்ணினார்.

நியா 3:13 அவன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கியரையும் கூட்டிக்கொண்டு வந்து, இஸ்ரவேலை முறிய அடித்தான்; பேரீச்சமரங்களின் பட்டணத்தையும் பிடித்தான்.

நியா 3:14 இப்படியே இஸ்ரவேல் புத்திரர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவைப் பதினெட்டு வருஷம் சேவித்தார்கள்.

3 அதிகாரம்

"பேரீச்சமரங்களின் பட்டணம்" - எரிகோ பட்டணம் இருந்த இடம். இக்காலத்தில் எரிகோ பட்டணம் மறுபடியும் கட்டப்படவில்லை. (உபா 34:3).

"எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவைப் பதினெட்டு வருஷம் சேவித்தார்கள்" - நியாயாதிபதிகளின் 450 வருஷக்காலத்தில் இஸ்ரவேல்புத்திரர் இரண்டாம் முறையாக அந்நிய ராஜாவைச் சேவிக்கிறார்கள். அம்மோன் ராஜாவை மற்றொரு சமயத்தில் மேலும் 18 வருஷங்கள் சேவித்தார்கள். (நியா 10:6-18) கானானியரை 20 வருஷங்களுக்கும், (நியா 4:1-3); மொசெப்பொத்தோமியரை 8 வருஷங்களுக்கும் (நியா 3:7-8), மீதியானியரை 7 வருஷங்களுக்கும், இஸ்ரவேல் புத்திரர் சேவித்தார்கள். (நியா 6:1-10).

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ராஜாக்களைச் சேவித்ததில் பெலிஸ்தரை 40 வருஷங்கள் சேவித்தது மிகவும் நீண்டகால அடிமைத்தனமாகும். (நியா 13:1). இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ராஜாக்களை மொத்தம் 111 வருஷங்கள் சேவிக்கிறார்கள். யோசுவாவின் காலத்தில் இருந்ததுபோல அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து கர்த்தரையே சேவித்திருந்தால், அந்நிய ராஜாக்களைச் சேவிக்க வேண்டிய அவசியமிருக்காது. கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கானான் தேசத்திலுள்ள புறஜாதிகள் எல்லோரையும் துரத்தியிருந்தால் இஸ்ரவேலருக்கு இந்தப் பிரச்சனை வந்திருக்காது.

5. ஏகூத் - இரண்டாவது நியாயாதிபதி - மோவாபியர்மீது வெற்றி - எண்பது வருஷங்கள் அமைதி

நியா 3:15 இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்களுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப் பண்ணினார்; அவன் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்; அவன் கையிலே இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குக் காணிக்கை அனுப்பினார்கள்.

நியா 3:16 ஏகூத், இருபுறமும் கருக்கும் ஒரு முழ நீளமுமான ஒரு கத்தியை உண்டுபண்ணி, அதைத் தன் வஸ்திரத்துக்குள்ளே தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டிக்கொண்டு,

நியா 3:17 காணிக்கையை மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குச் செலுத்தினான்; எக்லோன் மிகவும் ஸ்தூலித்த மனுஷனாயிருந்தான்.

நியா 3:18 அவன் காணிக்கையைச் செலுத்தித் தீர்ந்தபின், காணிக்கையைச் சுமந்து வந்த ஜனங்களை அனுப்பிவிட்டான்.

நியா 3:19 அவனோ கில்காலிலுள்ள சிலைகள் இருக்கும் இடத்திலிருந்து திரும்பிவந்து: ராஜாவே, உம்மிடத்தில் சொல்லவேண்டிய இரகசியமான ஒரு வார்த்தை உண்டு என்றான். அதற்கு அவன்: பொறு என்றான்; அப்பொழுது அவனிடத்தில் நின்ற யாவரும் அவனை விட்டு வெளியே போய்விட்டார்கள்.

நியா 3:20 ஏகூத் அவன் கிட்டே போனான்; அவனோ தனக்குத் தனிப்புற இருந்த குளிர்ச்சியான அறைவீட்டில் உட்கார்ந்திருந்தான்; அப்பொழுது ஏகூத்: உம்மிடத்தில் சொல்லவேண்டிய தேவவாக்கு எனக்கு உண்டு என்றான்; அவன் தன் ஆசனத்திலிருந்து எழுந்திருந்தான்.

நியா 3:21 உடனே ஏகூத் தன் இடதுகையை நீட்டி, தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டியிருந்த கத்தியை உருவி, அதை அவன் வயிற்றுக்குள் பாய்ச்சினான்.

நியா 3:22 அலகோடேகூடக் கைப்பிடியும் உள்ளே புகுந்தது; அவனுடைய வயிற்றிற்குள் போன கத்தியை இவன் இழுக்கக் கூடாதபடிக்கு, நிணம் அலகைச் சுற்றிக் கொண்டடைத்தது; அது பின்புறத்திலே புறப்பட்டது.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

3 அதிகாரம்

நியா 3:23 ஏகூத் புறப்பட்டு, அறைவீட்டின் கதவைச் சாத்திப் பூட்டிப்போட்டு, கொலுக்கூடத்தின் வழியாய்ப் போய்விட்டான்.

நியா 3:24 அவன் போனபின்பு ஊழியக்காரர் வந்து பார்த்தான்; இதோ, அறைவீட்டின் கதவு பூட்டியிருந்தது; ஆகையால் அவர் அந்தக் குளிர்ச்சியான அறையிலே மலஜலாதிக்கிருக்கிறாராக்கும் என்றார்கள்.

நியா 3:25 அவர்கள் சலித்துப்போகுமட்டும் காத்திருந்தார்கள்; அவன் அறைவீட்டின் கதவைத் திறக்கவில்லை; ஆகையால் ஒரு திறவுகோலை எடுத்துத் திறந்தார்கள்; இதோ, அவர்கள் ஆண்டவன் தரையிலே செத்துக்கிடந்தான்.

நியா 3:26 அவர்கள் தாமதித்துக் கொண்டிருந்தபோது, ஏகூத் ஓடிப்போய், சிலைகளுக்குள்ள இடத்தைக் கடந்து, சேயிராத்தைச் சேர்ந்து தப்பினான்.

நியா 3:27 அங்கே வந்தபோது எப்பிராயீம் மலையில் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனோடேகூட மலையிலிருந்து இறங்கினார்கள்; அவன் அவர்களுக்கு முன்பாக நடந்து:

நியா 3:28 என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்; கர்த்தர் உங்கள் பகைஞராகிய மோவாபியரை உங்கள் கைகளில் ஒப்புக் கொடுத்தார் என்றான். அவர்கள் அவனைப் பின்தொடர்ந்துபோய், மோவாபுக்கு எதிரான யோர்தான் துறைகளைப் பிடித்து, ஒருவனையும் கடந்துபோகவொட்டாமல்,

நியா 3:29 அக்காலத்திலே மோவாபியரில் ஏறக்குறையப் பதினாயிரம் பேரை வெட்டினார்கள்; அவர்களெல்லாரும் புஷ்டியுள்ளவர்களும் பராக்கிரமசாலிகளுமாயிருந்தார்கள்; அவர்களில் ஒருவனும் தப்பவில்லை;

நியா 3:30 இப்படியே அந்நாளிலே மோவாப் இஸ்ரவேலுடைய கையின்கீழ்த் தாழ்த்தப்பட்டது; அதனாலே தேசம் எண்பது வருஷம் அமைதலாயிருந்தது.

கூப்பிடுதல் (cried) - זָעַק - zaw-ak' - 2199

வினைச்சொல் - முறையிடு, அழு, கூப்பிடு, கூக்குரலிடு, வேண்டிக்கொள், அலறு, கதறு, அபயமிடு, ஓலமிடு, வரவழை, புலம்பு. **(to shriek from anguish or danger; cry out spontaneously)** - இஸ்ரவேல் புத்திரருக்கு ஆபத்துக்கள் நேரிடும்போது அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது வழக்கம். (நியா 3:9,15; நியா 6:6-7; நியா 10:10; யாத் 2:23; 1சாமு 12:8-10; 1நாளா 5:20).

நியாயாதிபதிகளும், அவருடைய கோத்திரங்களும்

1. ஒத்னியேல் - யூதா (நியா 1:10-20; நியா 3:9)
2. ஏகூத் - பென்யமீன் (நியா 3:15)
3. சம்கார் - பென்யமீன் (நியா 3:31; நியா 5:6-8)
4. தெபொராள் - எப்பிராயீம் (நியா 4:5; நியா 5:14)
5. பாராக் - நப்தலி (நியா 4:6)
6. கிதியோன் - மனாசே (நியா 6:15)
7. அபிமெலேக்கு - மனாசே (நியா 9:1; நியா 7:1)
8. தோலா - இசக்கார் (நியா 10:1-2)
9. யாவீர் - மனாசே (நியா 10:3-5)
10. யெப்தா - மனாசே (நியா11:1-3,29)

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

3 அதிகாரம்

11. இப்சான் - செபுலோன் அல்லது யூதா (நியா 12:8-10)

12. ஏலோன் - செபுலோன்(நியா 12:11-12)

13. அப்தோன் - எப்பிராயீம் (நியா 12:13-15)

14. சிம்சோன் - தாண் (நியா 13:2)

15. ஏலி - லேவி (1சாமு 1:3; 1சாமு 2:11; 1சாமு 4:15-18)

16. சாமுவேல் - லேவி (1சாமு 1:1; 1சாமு 3:1; 1சாமு 7:6-17)

"அவன் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்" வேதாகமத்தில் இடதுகைப் பழக்கமுள்ளவர்களாக குறிப்பிடப்பட்டிருக்கிறவர்கள் அனைவருமே பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். (நியா 20:16).

"எக்லோன்" **(Eglon)** - இதற்குச் "சின்னக் கன்றுக்குட்டி" **"little calf"** என்று பொருள். பாலாகிற்கு அடுத்து வந்தவனுடைய பெயரும் எக்லோனாகும். (எண் 22-24, நியா 3: 12-17) ஒரு பட்டணத்தின் பெயரும் எக்லோன் என்றிருக்கிறது. (யோசு 10:3-37; யோசு 12:12; யோசு 15:39).

முழம் (cubit) - גֹּמֶד - go'-med - 1574

ஆ.பெ.சொ.-முழம்**(to grasp; a span)** - சுமார் 9 அங்குலம்.

"காணிக்கையை மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குச் செலுத்தினான்" - கிழக்கு தேசத்தின் வழக்கத்தின் பிரகாரம் ராஜாக்களுக்குக் காணிக்கையைச் செலுத்துவதை மிகப்பெரிய பண்டிகையாகக் கொண்டாட வேண்டும். ராஜாவுக்கும், அடிமைப்பட்ட ஜனத்திற்கும் இடையிலுள்ள உறவு இதனால் வெளிப்படும்.

சிலைகள் (quarries) - פְּסִיל - pes-eel' - 6456

ஆண்பால் பெயர்ச்சொல் - விக்கிரகம், சிலை, விக்கிரகத் தோப்பு, விக்கிரக ராஜ்யம், விக்கிரகத் தேவர், சுரூபம் **carved images** (2நாளா 33:22; 2நாளா 34:3-4) **graven images** (உபா 7:5,25; உபா 12:3; 2இராஜா 17:41; 2நாளா 33:19; 2நாளா 34:7; சங் 78:58; ஏசா 10:10; ஏசா 21:9; ஏசா 30:22; ஏசா 42:8; எரே 8:19; எரே 50:38; எரே 51:47,52; ஓசி 11:2; மீகா 1:7; மீகா 5:13).

"கில்கால்" - மோவாபியர் யோர்தான் நதியைக் கடந்து வந்துவிட்டார்கள். தங்களுடைய ராஜாவிற்குக் கோடைகாலத்திற்குக் குளிர்ச்சியான அறை ஒன்றைக் கில்காலுக்கும், எரிகோவிற்கும் நடுவில் கட்டினார்கள். அங்கு அவர்கள் சிலைகளை நிறுவியிருக்க வேண்டும். அல்லது யோசுவா கில்காலில் நிறுவிய கற்களை மோவாபியர் சிலைகளாக வடித்து, அதைத் தங்கள் இடத்தில் வைத்திருக்க வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் வலிமை இழந்து, இப்பொழுது மோவாபியருக்குக் கப்பம் கட்டுகிறார்கள். (நியா 4:3).

"குளிர்ச்சியான அறைவீடு" - பூர்வ காலத்தில் ராஜாக்களும், ஐசுவரியவான்களும் கோடைகாலத்தில் இதுபோன்ற குளிர்ச்சியான வீடுகளை விசேஷித்த வடிவங்களில் கட்டிக் கொள்வார்கள். வெளியில் வெயில் அதிகமாக இருந்தாலும் வீட்டிற்குள் குளிர்ச்சியாக இருக்கும்.

"திறவுகோல்" - சில திறவுகோல்கள் தோள்களில் தூக்கிச்சுமக்க வேண்டிய அளவுக்குப் பெரியதாக இருக்கும். (ஏசா 22:22).

"எண்பது வருஷம்" - நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் அமைதியாக இருந்ததில் இதுவே நீண்டகால அமைதியாகும். (நியா 3:30). மூன்று தடவை இஸ்ரவேலருக்கு நாற்பது வருஷ அமைதி இருந்தது. (நியா 3:11; நியா 5:31; நியா 8:28; 1சாமு 4:18).

3 அதிகாரம்

6. மூன்றாவது முரண்பாடும், அடிமைத்தனமும். சம்கார் - மூன்றாவது நியாயாதிபதி - பெலிஸ்தரின்மீது வெற்றி

நியா 3:31 அவனுக்குப்பிற்பாடு ஆனாத்தின் குமாரன் சம்கார் எழும்பினான்; அவன் பெலிஸ்தரில் அறுநூறுபேரை ஒரு தாற்றுக்கோலால் முறிய அடித்தான்; அவனும் இஸ்ரவேலை இரட்சித்தான்.

"தாற்றுக்கோல்" (ox goad) - மாட்டு வண்டி ஓட்டுகிறவர் பயன்படுத்தும் ஆயுதம் (அப் 9:5; அப் 26:14). இது பலவீனமான ஆயுதம். ஆயினும் சம்கார் ஒரு தாற்றுக்கோலால் பெலிஸ்தரில் அறுநூறுபேரை முறியடித்தான்.

பலமான சத்துருக்களை எதிர்ப்பதற்கு நியாயாதிபதிகள் பயன்படுத்திய பலவீனமான பொருட்கள் (2கொரி 1:27)

1. இடதுகை (நியா 3:21)
2. தாற்றுக்கோல் (நியா 3:31)
3. ஸ்திரீ (நியா 4:4,21; நியா 9:53)
4. ஆணி (நியா 4:21)
5. எந்திரக்கல் (நியா 9:53)
6. பானை (நியா 7:20)
7. எக்காளம் (நியா 7:20)
8. கழுதையின் தாடை எலும்பு (நியா 15:16)

4 அதிகாரம்

7. நான்காவது முரண்பாடும், அடிமைத்தனமும் - கானானியரிடம் இருபது வருஷங்கள்

நியா 4:1 ஏகூத் மரணமடைந்தபின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள்.

நியா 4:2 ஆகையால் கர்த்தர் அவர்களை ஆத்சோரில் ஆளுகிற யாபீன் என்னும் கானானியருடைய ராஜாவின் கையிலே விற்றுப்போட்டார்; அவனுடைய சேனாபதிக்குச் சிசெரா என்று பேர்; அவன் புறஜாதிகளுடைய பட்டணமாகிய அரோசேத்திலே குடியிருந்தான்.

நியா 4:3 அவனுக்குத் தொளாயிரம் இருப்பு ரதங்கள் இருந்தது; அவன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்கினான்; இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.

"ஏகூத் மரணமடைந்தபின்பு" - நியா 2:18-19 ஆவது வசனத்தில் நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைச் சேவித்து வந்தார்கள் என்றிருக்கிறது. இதன் அடிப்படையில் ஏகூத் மரணமடையும்போது அவனுக்கு நூறு வயதாக இருக்க வேண்டும். ஏனெனில் தேசம் 80 வருஷம் அமைதலாயிருந்தது (நியா 3:30). அவன் இஸ்ரவேலை இரட்சித்தபோது அவன் வளர்ந்து பெரிய மனுஷனாக இருந்தான். (நியா 3:15-30).

"இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள்" - இதற்கு முன்பும், இதற்குப் பின்பும் இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் மறுபடியும் பாவம் செய்து வந்தார்கள். (நியா3:12; நியா 4:1; நியா 8:33; நியா 10:6).

"விற்றுப்போட்டார்" - (நியா 2:14)

"யாபீன்" (Jabin) - யோசு 11:1-3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யாபீனைத் தவிர இவன் மேலும் ஒரு யாபீன். இவன் ஆத்சோரை ஆளுகை செய்தான். இது கானானியருடைய பலமான பட்டணம். யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஆத்சோரைச் சுட்டெரித்தார்கள். (யோசு11:1).

"அரோசேத்" (Harosheth) - வடக்கு கானான் தேசத்தின் வலுவான பட்டணம். கானானியரின் சேனாபதியான சிசெரா (Sisera) இங்கு குடியிருந்தான். அவன் இஸ்ரவேல் ஜனங்களை 20 வருஷங்களாகத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். (நியா 4:2-3).

"இருபது வருஷம்" - நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஒடுக்கப்பட்ட இரண்டாவது நீண்ட காலம். அவர்கள் ஒடுக்கப்பட்ட அதிகமான காலம் நாற்பது வருஷங்களாகும். (நியா 13:1). இரண்டாம் ஒடுக்குதலும், ஆறாம் ஒடுக்குதலும் 18 வருஷங்களுக்கு நீடித்தது. (நியா 3:12-14; நியா 10:6-18). முதலாம் ஒடுக்குதல் ஏழு வருஷமும், ஐந்தாம் ஒடுக்குதல் எட்டு வருஷமும் நீடித்தது. (நியா 3:7-8; நியா 6:1-10).

கொடுமை (mightily) - חָזְקָה - khoz-kaw' - 2394

பெ.பெ.சொ. - கொடுமை, பலப்படுத்துதல், பலப்படுதல், பலம் (prevailing power or strength) - "mightily" (நியா 4:3; யோனா 3:8); with force (1சாமு 2:16; எசே 34:4).

8. தெபொராளும், பாராக்கும் - நான்காவது, ஐந்தாவது நியாயாதிபதிகள் - நாற்பது வருஷங்கள் - (5:31)

(1) தெபொராளின் தீர்க்கதரிசனம் - (யாத் 15:20)

நியா4:4 அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

4 அதிகாரம்

நியா 4:5 அவள் எப்பிராயீம் மலைத் தேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின்கீழ் குடியிருந்தாள்; அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணைக்குப் போவார்கள்.

நியா 4:6 அவள் நப்தலியிலுள்ள கேதேசிலிருக்கிற அபினோகாமின் குமாரன் பாராக்கை வரவழைத்து: நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும்,

நியா 4:7 நான் யாபீனின் சேனாபதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும் அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து அவனை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள்.

நியா 4:8 அதற்குப் பாராக்: நீ என்னோடே கூட வந்தால் போவேன்; என்னோடேகூட வராவிட்டால், நான் போகமாட்டேன் என்றான்.

நியா 4:9 அதற்கு அவள்: நான் உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன்; ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது; கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி, தெபொராள் எழும்பி, பாராக்கோடேகூடக் கேதேசுக்குப் போனாள்.

"தீர்க்கதரிசியானவள்" **(prophetess)** - (யாத் 15:20)

"இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்" - இஸ்ரவேலின் 16 நியாயாதிபதிகளில் தொபொராளும் ஒருத்தி. (நியா 4:4-5).

"எப்பிராயீம் மலைத்தேசம்" - எருசலேமிலிருந்து எஸ்தரலோன் சமவெளி வரையிலுமுள்ள மலை பிரதேசத்திற்கு எப்பிராயீம் மலைத்தேசம் என்பது பொதுவான பெயராகும். தாபோர் மலை எஸ்தரலோனின் வடக்குப் பகுதியிலுள்ளது. இதன் உயரம் 1,900 அடி.

"ராமாவுக்கும் பெத்தேலுக்கும்" - ராமா எருசலேமிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது. பெத்தேல் 10 மைல் தூரத்திலுள்ளது. இங்கு கூறப்பட்டிருக்கும் பேரீச்சமரம் பேயேரோத்திற்கு அருகில் இருக்க வேண்டும். இது இவ்விரண்டு பட்டணங்களுக்கும் நடுவில் இருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 2

"நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய்......." (நியா 4:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 4:12-24).

"பதினாயிரம் பேர்" - இந்த வசனத்தில் பதினாயிரம்பேர் யுத்தத்திற்குப் போக வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார். (நியா 4:6,14) அதே சமயத்தில் நியா 7:3-6 ஆகிய வசனங்களில் பதினாயிரம்பேர் யுத்தத்திற்குப் போகவேண்டாமென்றும் கட்டளையிடுகிறார்.

"நீ என்னோடே கூட வந்தால் போவேன்" - இங்கு ஒரு மனுஷன் ஒரு ஸ்திரீயைச் சார்ந்திருக்கிறான். (2கொரி 11:7-12). செப்துவஜிந்த் பதிப்பில் நியா 4:8 ஆவது வசனத்தில் இந்த வாக்கியத்தின் தொடர்ச்சியாக "கர்த்தர் தம்முடைய தூதனை என்னோடு அனுப்பி என்னை ஆசீர்வதிக்கும் நாள் எனக்குத் தெரியாது" என்றுள்ளது. **"for I do not know the day when the Lord would prosper the angel with me"**. பாராக் தெபொராளைச் சார்ந்திருக்கவில்லை. ஆனால் தெபொராள் ஒரு தீர்க்கதரிசினி. கர்த்தரிடத்தில் செய்தியைப் பெற்று, மனுஷருக்குக் கூறுகிறவள். கர்த்தரிடத்தில் தொடர்பு வைத்துக் கொள்வதற்காகவும், சத்துருக்கள்மீது எப்போது யுத்தம் பண்ண வேண்டுமென்று கர்த்தரிடத்தில் கேட்பதற்காகவும் பாராக் தெபொராளைச் சார்ந்திருக்கிறான். (நியா 4:14)

4 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 3

"நான் உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன்; ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது." (நியா 4:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 4:17-22).

"ஸ்திரீ" - பாராக் யுத்தம் பண்ணிய சம்பவங்களில் தெபொராள், யாகேல் ஆகிய இரண்டு ஸ்திரீகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (நியா 4:4-22).

(2) சேனையைத் திரட்டுதல்

நியா 4:10 அப்பொழுது பாராக்: செபுலோன் மனுஷரையும் நப்தலி மனுஷரையும் கேதேசுக்கு வரவழைத்து, தன்னைப் பின்செல்லும் பதினாயிரம் பேரோடே போனான்; தெபொராளும் அவனோடேகூடப் போனாள்.

நியா 4:11 கேனியனான ஏபேர் என்பவன் மோசேயின் மாமனாகிய ஓபாபின் புத்திரராயிருக்கிற கேனியரை விட்டுப் பிரிந்து, கேதேசின் கிட்ட இருக்கிற சானாயிம் என்னும் கர்வாலிமரங்கள் அருகே தன் கூடாரத்தைப் போட்டிருந்தான்.

நியா 4:12 அபினோகாமின் குமாரன் பாராக் தாபோர் மலையில் ஏறிப்போனான் என்று சிசெராவுக்கு அறிவிக்கப்பட்ட போது,

நியா 4:13 சிசெரா தொளாயிரம் இருப்புரதங்களாகிய தன்னுடைய எல்லா ரதங்களையும், தன்னோடிருக்கும் எல்லா ஜனங்களையும், புறஜாதிகளின் பட்டணமாகிய அரோசேத்திலிருந்து கீசோன் பள்ளத்தாக்கிலே வரவழைத்தான்.

"பதினாயிரம் பேரோடே போனான்" - தெபொராள் தனக்குக் கட்டளையிட்ட பிரகாரமாகவே பாராக் 10,000 பேரோடே யுத்தத்திற்குப் போனான். (நியா 4:6)

"மோசேயின் மாமன்" - (எண் 10:29)

"சிசெராவுக்கு அறிவிக்கப்பட்டபோது" - இந்த அறிவிப்பு இஸ்ரவேலுக்கு உதவி புரிவதற்கா அல்லது அவர்களுக்குத் துரோகம் பண்ணுவதற்கா என்று தெரியவில்லை. ஆயினும் ஏபேரின் மனைவி இஸ்ரவேல் புத்திரருக்கு உதவி புரிந்திருக்கிறாள். (நியா 4:17-22)

"சிசெரா தொளாயிரம் இருப்புரதங்களாகிய தன்னுடைய எல்லா ரதங்களையும்" - நியா 4:7, நியா 4:9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களைச் சிசெரா அறியாமலேயே நிறைவேற்றுகிறான்.

"அரோசேத்திலிருந்து கீசோன் பள்ளத்தாக்கிலே வரவழைத்தான்" - கானானியர் மேரோம் கடலுக்கு அருகிலுள்ள அரோசேத்தில் குடியிருந்தார்கள். இது யோர்தான் நதி பாயும் கீசோன் பள்ளத்தாக்கில் உள்ளது.

"கீசோன் பள்ளத்தாக்கு" - இது கீசோன் ஆறு **(the river of Kishon)** என்றும் அழைக்கப்படுகிறது. யெஸ்ரயேல் சமவெளியில் இந்த ஆறு 30 மைல் தூரம் ஓடி இறுதியில் மத்திய தரைக்கடலில் கலக்கிறது. (நியா 4:7,13; நியா 5:21). இது மெகிதோவின் தண்ணீர் **(the waters of Megiddo)** என்று அழைக்கப் படுகிறது. (நியா 5:19). இந்தப் பள்ளத்தாக்கில் பாராக்கிற்கும், சிசெராவிற்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. (நியா 4:13-22) இந்தப் பள்ளத்தாக்கில் எலியா தீர்க்கதரிசி பாகாலின் தீர்க்கதரிசிகளை அழித்துப் போட்டார். (1இராஜா 18:40). இந்தப் பள்ளத்தாக்கிற்கு "யொக்கினேயாமிற்கு எதிரான ஆறு" **"before Jokneam"** என்றும் ஒரு பெயர் உள்ளது. (யோசு 19:11). கீசோன் செபுலோனுக்கும், இசக்காருக்கும் இடையிலுள்ள எல்லைப் பகுதியாகும்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

4 அதிகாரம்

(3) கானானியர்மீது வெற்றி

நியா 4:14 அப்பொழுது தெபொராள் பாராக்கை நோக்கி: எழுந்துபோ; கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக் கொடுக்கும் நாள் இதுவே; கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்படவில்லையா என்றாள்; அப்பொழுது பாராக்கும், அவன் பின்னாலே பதினாயிரம்பேரும், தாபோர் மலையிலிருந்து இறங்கினார்கள்.

நியா 4:15 கர்த்தர் சிசெராவையும் அந்த எல்லா ரதங்களையும் சேனை யனைத்தையும் பாராக்குக்கு முன்பாகப் பட்டயக்கருக்கினால் கலங்கடித்தார்; சிசெரா ரதத்தைவிட்டிறங்கி கால்நடையாய் ஓடிப்போனான்.

நியா 4:16 பாராக் ரதங்களையும் சேனையையும் புறஜாதிகளுடைய அரோசேத்மட்டும் துரத்தினான்; சிசெராவின் சேனையெல்லாம் பட்டயக்கருக்கினால் விழுந்தது; ஒருவனும் மீதியாயிருக்கவில்லை.

தீர்க்கதரிசன எண் - 4

"எழுந்துபோ; கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே" (நியா 4:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"கர்த்தர் சிசெராவை..... பாராக்குக்கு முன்பாகப் பட்டயக்கருக்கினால் கலங்கடித்தார்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம் பண்ணுகிறார். இதற்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய துணையில்லாமல் தங்கள் சொந்த முயற்சியினால் சிசெராவோடு யுத்தம்பண்ணி,தோல்வியடைந்திருக்கிறார்கள். இப்போது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு இருப்பதினால் இஸ்ரவேலருக்கு ஜெயம் உண்டாயிற்று. சிசெரா ரதத்தைவிட்டிறங்கி கால்நடையாய் ஓடிப்போனான். கானானியருடைய சேனைக்கு இப்பொழுது தலைவன் இல்லை. சிசெரா ஓடிப்போய்விட்டான்.ஆகையினால் பாராக்கும் அவனுடைய யுத்த மனுஷரும் சிசெராவின் சேனையையெல்லாம் பட்டயக்கருக்கினால் அழித்துப்போட்டார்கள். (நியா 4:15-16). கர்த்தருடைய தூதனானவர் கானானியருடைய சேனைக்குள் புகுந்து, அவர்களைக் குழப்பிவிட்டிருக்க வேண்டும். ஆகையினால் ஒருவருக்கொருவர் முட்டிமோதிக் கொண்டு ஓடிப்போகிறார்கள். கானானியரின் இரதங்களெல்லாம் அழிக்கப்பட்டன. இரதங்களின் பகுதிகள் அரோசேத் நதியில் அடித்துச் செல்லப்பட்டன.

"ஒருவனும் மீதியாயிருக்கவில்லை" - கானானியரின் மொத்த சேனையும் அழிந்தது. அவர்களுடைய இரதங்களும் அழிந்தது.

(4) சிசெராவின் மரணம்

நியா 4:17 சிசெரா கால்நடையாய்க் கேனியனான ஏபேரின் மனைவி யாகேலுடைய கூடாரத்திற்கு ஓடிவந்தான்; அப்பொழுது யாபீன் என்னும் ஆத்சோரின் ராஜாவுக்கும், கேனியனான ஏபேரின் வீட்டுக்கும் சமாதானம் உண்டாயிருந்தது.

நியா 4:18 யாகேல் வெளியே சிசெராவுக்கு எதிர்கொண்டுபோய்: உள்ளே வாரும்; என் ஆண்டவனே, என்னண்டை உள்ளே வாரும், பயப்படாதேயும் என்று அவனோடே சொன்னாள்; அப்படியே அவளண்டை கூடாரத்தில் உள்ளே வந்தபோது, அவனை ஒரு சமுக்காளத்தினாலே மூடினாள்.

நியா 4:19 அவன் அவளைப் பார்த்து: குடிக்க எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா, தாகமாயிருக்கிறேன் என்றான்; அவள் பால் துருத்தியைத் திறந்து, அவனுக்குக் குடிக்கக்கொடுத்து, திரும்பவும் அவனை மூடினாள்.

நியா 4:20 அப்பொழுது அவன்: நீ கூடாரவாசலிலே நின்று, யாராவது ஒருவன் வந்து, இங்கே யாராகிலும் இருக்கிறார்களா என்று உன்னிடத்தில் கேட்டால், இல்லை என்று சொல் என்றான்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

4 அதிகாரம்

நியா 4:21 பின்பு ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஒரு கூடார ஆணியை எடுத்து, தன் கையிலே சுத்தியைப் பிடித்துக் கொண்டு, மெள்ள அவனண்டையில் வந்து, அவன் நெற்றியிலே அந்த ஆணியை அடித்துப்போட்டாள்; அது உருவிப் போய், தரையிலே புதைந்தது; அப்பொழுது ஆயாசமாய்த் தூங்கின அவன் செத்துப்போனான்.

நியா 4:22 பின்பு சிசெராவைத் தொடருகிற பாராக் வந்தான்; அப்பொழுது யாகேல் வெளியே அவனுக்கு எதிர் கொண்டுபோய்: வாரும், நீர் தேடுகிற மனுஷனை உமக்குக் காண்பிப்பேன் என்று சொன்னாள்; அவன் அவளிடத்திற்கு வந்தபோது, இதோ, சிசெரா செத்துக்கிடந்தான்; ஆணி அவன் நெறியில் அடித்திருந்தது.

நியா 4:23 இப்படி தேவன் அந்நாளிலே கானானியரின் ராஜாவாகிய யாபீனை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தினார்.

நியா 4:24 இஸ்ரவேல் புத்திரரின் கை கானானியரின் ராஜாவாகிய யாபீனை நிர்மூலமாக்குமட்டும் அவன்மேல் பலத்துக் கொண்டேயிருந்தது.

"சிசெரா கால்நடையாய்க் கேனியனான ஏபேரின் மனைவி யாகேலுடைய கூடாரத்திற்கு ஓடிவந்தான்" - ஏபேருக்கும், சிசெராவிற்கும் ஏற்கெனவே சமாதானம் உண்டாயிருந்தது. ஆகையினால் சிசெரா யாகேலுடைய கூடாரத்தைத் தெரிந்தெடுத்தான். யாகேல் ஏபேரின் மனைவி.

"என் ஆண்டவனே, என்னண்டை உள்ளே வாரும், பயப்படாதேயும்" - கிழக்கு தேசத்தின் கலாச்சாரத்தின் பிரகாரம் ஒரு ஸ்திரீயினுடைய கூடாரத்திற்குள் அந்நியன் யாரும் உள்ளே பிரவேசிக்கக்கூடாது. இதற்கு மரண தண்டனை கொடுக்கப்படும். சிசெராவிற்கும் இந்தப் பயம் இருந்திருக்கலாம். ஆகையினால் யாகோல் சிசெராவைப்பார்த்து "பயப்படாதேயும்" என்று கூறுகிறாள். இஸ்ரவேல் புத்திரருடைய சேனையின் அசைவுகளைச் சிசெராவிற்கு யாகேலுடைய புருஷனான ஏபேர் அறிவித்தான். ஆகையினால் அவர்கள் தனக்குச் சாதகமாக இருப்பார்கள் என்று சிசெரா நினைத்தான். யாகேலை பூரணமாக நம்பி, அவளுடைய கூடாரத்திலேயே ஆயாசமாய்த் தூங்கினான். (நியா 4:18-21). ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருவை அழிப்பதற்கு யாகேலைப் பயன்படுத்தினார். யாகேல் சிசெராவைக் கொன்றுபோட்டாள்.

சமுக்காளம் (mantle) - שְׂמִיכָה - sem-ee-kaw' - 8063

பெ.பெ.சொ. - சமுக்காளம் (rug or thick covering)

அங்கி (robe) - מְעִיל - meh-eel' - 4598

ஆண்பால் பெயர்ச்சொல் - அங்கி, சட்டை, உள்ளங்கி, சால்வை, உடுப்பு (1சாமு 15:27; 1சாமு 28:14; எஸ்றா 9:3,5; யோபு 1:20; யோபு 2:12; சங் 109:29).

ஸ்திரீகள் நிமித்தமாக மரணமடைந்தவர்கள்

1. சிசெரா (நியா 4:21)
2. அபிமெலேக்கு(நியா 9:53;2சாமு 11:21)
3. சேபா (2சாமு 20:22)
4. வேசியின் பிள்ளை (1இராஜா 3:19)
5. கர்த்தரின் தீர்க்கதரிசிகள் (1இராஜா 18:4)
6. நாபோத் (1இராஜா 21:9-10)
7. ஒரு ஸ்திரீயின் குமாரன் (2இராஜா 6:29)
8. ராஜவித்து (2இராஜா 11:1; 2நாளா 22:19)
9. ஆமோனின் குமாரர் (எஸ் 9:13-14)
10. யோவான்ஸ்நானன் (மத் 14:8)

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

4 அதிகாரம்

"சிசெராவைத் தொடருகிற பாராக் வந்தான்" - பாராக் சிசெராவைக் கொன்றிருந்தால் அவனுக்கு மேன்மை உண்டாயிருக்கும். ஆனால் இப்பொழுதோ அவனுடைய சத்துருவைக் கொல்லும் சிலாக்கியம் ஒரு ஸ்திரீக்குக் கிடைத்திருக்கிறது. (நியா 4:9).

"தேவன் அந்நாளிலே கானானியரின் ராஜாவாகிய யாபீனை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தினார்" - கானானியர் முழுவதுமாக அழிக்கப்படும் வரையிலும் தேவன் இஸ்ரவேல் புத்திரரை உயர்த்தினார். கானானியரைத் தாழ்த்தினார். (நியா 4:23-24). இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது அவர்களுக்கு ஜெயம் உண்டாகிறது. கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை இஸ்ரவேல் ஜனத்திடம் நிறைவேற்றுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த ஜாதியாவார்கள். அவர்களிடத்தில் தேவன் அன்பாக இருக்கிறார். இஸ்ரவேல் சந்ததியிலிருந்து மேசியா வருவார் என்பது பழைய ஏற்பாட்டுக்காலத்து வாக்குத்தத்தம். இது புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிறைவேறிற்று.

5 அதிகாரம்

(5) தெபொராள், பாராக் ஆகியோரின் பாடல்

(அ) ஜெயம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்

நியா 5:1 அந்நாளிலே தெபொராளும் அபினோகாமின் குமாரன் பாராக்கும் பாடினதாவது:

நியா 5:2 கர்த்தர் இஸ்ரவேலுக்காக நீதியைச் சரிக்கட்டினதினிமித்தமும், ஜனங்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்ததினிமித்தமும் அவரை ஸ்தோத்திரியுங்கள்.

நியா 5:3 ராஜாக்களே, கேளுங்கள்; அதிபதிகளே, செவிகொடுங்கள்; நான் கர்த்தரைப் பாடி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

நியா 5:4 கர்த்தாவே, நீர் சேயீரிலிருந்து புறப்பட்டு, ஏதோமின் வெளியிலிருந்து நடந்துவருகையில், பூமி அதிர்ந்தது, வானம் சொரிந்தது, மேகங்களும் தண்ணீராய்ப் பொழிந்தது.

நியா 5:5 கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்கள் கரைந்தது; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக சீனாயும் கரைந்தது.

"தெபொராளும் அபினோகாமின் குமாரன் பாராக்கும் பாடினதாவது" - யுத்தத்தில் ஜெயம் பெறும் வரையிலும் அவர்களுக்கு பாடல் எதுவுமில்லை. சத்துருக்கள் தங்களை ஒடுக்கியதினால் அவர்கள் அழுது புலம்பினார்கள். கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டார். இஸ்ரவேல் புத்திரரின் துக்கம் சந்தோஷமாய் மாறிற்று. அழுதவர்கள் இப்போது சந்தோஷமாகப் பாடல்களைப் பாடுகிறார்கள். (நியா 2:4= யாத் 2:23-24). இந்தப் பாடலைத் தெபொராளும், பாராக்கும் சேர்ந்து பாடுகிறார்கள். (நியா 5:1-31; அப் 16:25).

துதியின் கீதங்கள்

1. மோசேயின் பாடல் (யாத் 15:1-19)
2. இஸ்ரவேலரின் பாடல் (எண் 21:17-18)
3. மோசேயின் பாடல் (உபா 32:1-43)
4. தெபொராள், பாராக் ஆகியோரின் பாடல் (நியா 5)
5. அன்னாளின் பாடல் (1சாமு 2:1-10)
6. தாவீதின் பாடல் (2சாமு 22:1-51)
7. இரட்சிக்கப்பட்டவர்களின் பாடல் (வெளி 5:8-10)
8. உபத்திரவக்காலத்தின் பரிசுத்தவான்களின் பாடல் (வெளி 15: 3-4)

இவை தவிர சங்கீதம் புஸ்தகத்தில் பல துதியின் கீதங்கள் உள்ளன.

"ஜனங்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்ததினிமித்தமும்" - தம்முடைய பிள்ளைகள் தங்களை மனப்பூர்வமாகத் தம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது கர்த்தர் அவர்கள்மீது பிரியமாய் இருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு மட்டுமல்லாமல் முழு உலகத்திலும் இருக்கும் ஜனங்கள் மனப்பூர்வமாய் தங்களைக் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது அவர் அவர்களை ஆதரித்து ஆசீர்வதிக்கிறார். (சங் 84:11; சங் 91:1-12).

"கர்த்தாவே, நீர் சேயீரிலிருந்து புறப்பட்டு" - (யாத் 19:18-24; எபி 12:18-21)

(ஆ) இஸ்ரவேலர் அடிமைப்பட்டிருந்த போது தெபொராள், பாராக் ஆகியோரின் வழிநடத்துதல்

நியா 5:6 ஆனாத்தின் குமாரனாகிய சம்காரின் நாட்களிலும், யாகேலின் நாட்களிலும், பெரும்பாதைகள் பாழாய்க் கிடந்தது; வழி நடக்கிறவர்கள் பக்கவழியாய் நடந்தார்கள்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

5 அதிகாரம்

நியா 5:7 தெபொராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், கிராமங்கள் பாழாய்ப்போயின, இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்ப் போயின.

நியா 5:8 நூதன தேவர்களைத் தெரிந்து கொண்டார்கள்; அப்பொழுது யுத்தம் வாசல்வரையும் வந்தது; இஸ்ரவேலிலே நாற்பதினாயிரம் பேருக்குள்ளே கேடகமும் ஈட்டியும் காணப்பட்டதுண்டோ?

நியா 5:9 ஜனங்களுக்குள்ளே தங்களை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்த இஸ்ரவேலின் அதிபதிகளை என் இருதயம் நாடுகிறது; கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

நியா 5:10 வெள்ளைக் கழுதைகளின்மேல் ஏறுகிறவர்களே, நியாயஸ்தலத்தில்வீற்றிருக்கிறவர்களே, வழியில் நடக்கிறவர்களே, இதைப் பிரஸ்தாபியுங்கள்.

நியா 5:11 தண்ணீர்மொண்டுகொள்ளும் இடங்களில் வில்வீரரின் இரைச்சலுக்கு நீங்கினவர்கள் அங்கே கர்த்தரின் நீதிநியாயங்களையும், அவர் இஸ்ரவேலிலுள்ள தமது கிராமங்களுக்குச் செய்த நீதிநியாயங்களையுமே பிரஸ்தாபப் படுத்துவார்கள்; அதுமுதல் கர்த்தரின் ஜனங்கள் ஒலிமுக வாசல்களிலே போய் இறங்குவார்கள்.

நியா 5:12 விழி, விழி, தெபொராளே, விழி, விழி, பாட்டுப்பாடு; பாராக்கே, எழும்பு; அபினோகாமின் குமாரனே, உன்னைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோ.

நியா 5:13 மீதியாயிருந்தவர்கள் ஜனத்தின் பிரபுக்களை ஆளும்படி செய்தார்; கர்த்தர் எனக்குப் பராக்கிரமசாலிகளின்மேல் ஆளுகை தந்தார்.

“சம்காரின் நாட்கள்” - (நியா 3:31)

“யாகேலின் நாட்கள்” - (நியா 4:15-22)

“பெரும்பாதைகள் பாழாய்க் கிடந்தது; வழி நடக்கிறவர்கள் பக்கவழியாய் நடந்தார்கள்” - பிரயாணம் பண்ணுகிறவர்கள் பாதுகாப்பாக பிரயாணம் பண்ண முடியவில்லை. கள்ளர் பயம் அதிகமாக இருந்தது. ஆகையினால் ஜனங்கள் பெரும்பாதை வழியாக நடக்காமல் பக்க வழியாய் நடந்தார்கள். துன்மார்க்கரிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக ஜனங்கள் மிகுந்த எச்சரிப்போடு சென்றார்கள். (நியா 5:6-7).

“நூதன தேவர்களைத் தெரிந்து கொண்டார்கள்” - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகி அவரை மறுதலித்து விட்டார்கள். நூதன தேவர்களைத் தெரிந்து கொண்டார்கள். ஆனால் அந்தத் தேவர்களோ அவர்களை இரட்சிக்கவில்லை. அவர்களுடைய பட்டணங்களில் யுத்தம் உண்டாயிற்று. சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரின் ஆயுதங்களையெல்லாம் உரித்துப்போட்டார்கள். தேசத்தில் இவ்வளவு தீமைகள் வந்ததற்கு அவர்களுடைய விக்கிரகாராதனையே காரணம். அவர்கள் கர்த்தரை ஆராதித்தபோது அவர்களுக்குச் சமாதானம் உண்டாயிற்று. அவர்கள் வாழ்வில் வளம் பெற்றார்கள். ஜனங்கள் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்தார்கள். தேசத்தில் திருடர் பயமில்லை. தங்களைக் காத்துக் கொள்வதற்கு அவர்களிடம் கேடகமும், ஈட்டியும் இருந்தன. எதிரிகள் தாக்கினால் அவர்களைத் தாக்குவதற்கு ஆயத்தமாக இருந்தார்கள்.

புதுமாதிரியான யுத்தம்

இஸ்ரவேல் புத்திரரின் சேனையில் 10,000 பேர் மட்டுமே இருந்தார்கள். இவர்களிடத்தில் ஆயுதங்களும் இல்லை. கானானியரிடத்திலோ 900 இருப்புரதங்கள் இருந்தன. சாதாரண முறையில் இஸ்ரவேல் புத்திரர்களால் அவர்களை ஜெயிக்க முடியாது. ஆனால் இங்கு நடைபெறுவது புதுமாதிரியான யுத்தம். இந்த யுத்தத்தில் காணப்பட்ட விசேஷித்த காரியங்களாவன:

1. ஒருஸ்திரீயானவள் தீர்க்கதரிசனத்தின் மூலமாக யுத்தத்தையும், சேனை வீரர்களையும் வழிநடத்தினாள். (நியா 4:6-14).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

5 அதிகாரம்

2. ஆயுதமில்லாத 10,000பேருடைய இருதயங்களில் கர்த்தர் விசுவாசத்தையும், சத்துருக்களை ஜெயிக்கலாம் என்னும் நம்பிக்கையையும் கொடுத்தார்.

இது மிகப்பெரிய அற்புதம். 10,000பேர் கர்த்தரிடத்தில் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தி ஆயுதம் ஏந்திய சத்துருக்களை முறியடித்தார்கள். கிதியோனுக்கு இதுபோன்ற சூழ்நிலை வந்தது. அப்போது 300பேர் இதுபோன்ற விசுவாசத்தை வெளிப் படுத்தினார்கள். (நியா 7:5-25).

தாபோர் மலையில் பாராக் 10,000 போர்வீரர்களோடு பாளயமிறங்கினான். சிசெராவின் ஆயுதமணிந்த ஏராளமான போர்வீரர்கள் அவன்மீது யுத்தம் பண்ண வந்தார்கள். பாராக்கும், அவனுடைய மனுஷரும் திடீரென்று சிசெராவின் சேனையின்மேல் விழுந்தார்கள். விசுவாசத்தோடு தங்கள் கிரியையை ஆரம்பித்தார்கள். பாராக்கின் சேனைக்குக் கர்த்தர் உதவி புரிந்தார். கானானியரின் சேனைக்குள் பயமும், திகிலும், குழப்பமும் உண்டாயிற்று. தங்களுடைய ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, கானானியர் உயிருக்குப் பயந்து ஓடினார்கள்.

கானானியர் விட்டுச் சென்ற ஆயுதங்களை இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு, உயிருக்குப் பயந்து ஓடிய சத்துருக்களைப் பின்தொடர்ந்து அவர்களைச் சங்காரம் பண்ணினார்கள்.

இரதத்தில் ஏறிச்சென்ற சிசெராவிற்கும் ஆபத்து நெருங்கிற்று. ஆகையினால் அவன் இரதத்தை விட்டு இறங்கி காலால் நடந்து ஓடினான். கானானியரின் எல்லா வீரரையும் இஸ்ரவேல் புருஷர்கள் கொன்றுபோட்டார்கள். கானானியரின் படைத்தளபதியான சிசெராவை ஒரு ஸ்திரீ கொன்றுபோட்டாள். ஆகையினால் இதுஒரு புதுமாதிரியான யுத்தமாகும்.

"வெள்ளைக் கழுதைகளின்மேல் ஏறுகிறவர்களே, நியாயஸ்தலத்தில் வீற்றிருக்கிறவர்களே" - வெள்ளைக் கழுதைகள் என்பது வெள்ளைக் குதிரைகளைக் குறிக்கும். அக்காலத்தில் கிழக்குத் தேசத்தின் நியாயாதிபதிகள், ஆட்சியாளர்கள், செல்வந்தர்கள் ஆகியோர் வெள்ளைக் குதிரைகளில் ஏறிச் செல்வார்கள். அவற்றின் விலை அதிகம். பெர்சிய தேசத்தின் நியாயாதிபதிகள் வெள்ளைக் குதிரையின்மேல் ஏறிச் செல்வதைத் தங்களுக்கு ஒரு கௌரவமாகக் கருதினார்கள். இங்கு அவர்கள் இஸ்ரவேலின் நியாயாதிபதிகளோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறார்கள்.

"தண்ணீர் மொண்டுகொள்ளும் இடங்களில் வில்வீரரின் இரைச்சலுக்கு நீங்கினவர்கள்" - கிணற்றோரங்களிலும், ஊற்றோரங்களிலும் கள்ளர்கள் பதுங்கியிருப்பார்கள். தண்ணீர் குடிப்பதற்காக அங்குவரும் பயணிகளை அவர்கள் தாக்கிக் கொள்ளையிடுவார்கள். துன்மார்க்கர் தேசத்தை ஆளுகை செய்தபோது கள்ளர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. இப்போது இஸ்ரவேலருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. கள்ளர்களெல்லாம் துரத்தப்பட்டுவிட்டார்கள். ஆகையினால் பயணம் செய்கிறவர்கள் கள்ளர் பயமின்றி பாதுகாப்பாக எல்லா இடங்களுக்கும் சென்று வரலாம். ஜனங்கள் கிணற்றண்டையிலும், ஊற்றண்டையிலும், கள்ளர் பயமின்றி கூடியிருப்பார்கள். தேசத்தில் மறுபடியும் சமாதானம் உண்டாயிற்று. தேவனுடைய நீதிநியாயங்களை ஜனங்கள் பிரஸ்தாபப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

"உன்னைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோ" - கானானியர் இஸ்ரவேல் புத்திரரை ஏற்கெனவே சிறையாக்கியிருந்தார்கள். இப்போது இஸ்ரவேல் புத்திரர் கானானியரில் அவர்களுடைய ஸ்திரீகளையும், கன்னிகைகளையும் சிறையாக்கிக் கொண்டு வந்திருக்க வேண்டும். சத்துருக்களின் கொள்ளைப் பொருட்களைக் கொண்டுவருவதற்குப் பிரமாணத்தில் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. (எண் 31:17-18).

5 அதிகாரம்

"கர்த்தர் எனக்குப் பராக்கிரமசாலிகளின்மேல் ஆளுகை தந்தார்" - பாராக்கும், 10,000 பேரும் சிசெராவிற்கும், அவனுடைய சேனைக்கும் எதிராக யுத்தம் பண்ண போனார்கள். கர்த்தருடைய ஜனம் வானத்திலிருந்து கீழே இறங்கிவந்து, இஸ்ரவேல் புத்திரரோடு சேர்ந்து கொண்டு, கானானியருக்கு எதிராக யுத்தம் பண்ணினார்கள். கானானியர் பராக்கிரமசாலிகளாக இருந்தாலும் கர்த்தர் தெபொராளுக்கு அவர்கள்மீது ஆளுகையைத் தந்தார்.

(இ) கானானியர்மீது நடந்த யுத்தத்தில் மற்ற கோத்திரத்தாரின் நடபடிகள்

நியா 5:14 அமலேக்குக்கு விரோதமாக இவர்களுடைய வேர் எப்பிராயீமிலிருந்து துளிர்த்தது; உன் ஜனங்களுக்குள்ளே பென்யமீன் மனுஷர் உனக்குப் பின்சென்றார்கள்; மாகீரிலிருந்து அதிபதிகளும், செபுலோனிலிருந்து எழுதுகோலைப் பிடிக்கிறவர்களும் இறங்கிவந்தார்கள்.

நியா 5:15 இசக்காரின் பிரபுக்களும் தெபொராளோடே இருந்தார்கள்; பாராக்கைப் போல இசக்கார் மனுஷரும் பள்ளத்தாக்கில் கால்நடையாய் அனுப்பப்பட்டுப் போனார்கள்; ரூபனின் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி.

நியா 5:16 மந்தைகளின் சத்தத்தைக் கேட்க, நீ தொழுவங்களின் நடுவே இருந்துவிட்டதென்ன? ரூபனின் பிரிவினைகளால் மனோவிசாரங்கள் மிகுதி.

நியா 5:17 கீலேயாத் மனுஷர் யோர்தானுக்கு அக்கரையிலே இருந்துவிட்டார்கள்; தாண் மனுஷர் கப்பல்களில் தங்கியிருந்ததென்ன? ஆசேர் மனுஷர் கடற்கரையிலே தங்கி, தங்கள் குடாக்களில் தாபரித்தார்கள்.

பத்துக் கோத்திரங்களைப் பற்றிய செய்திகள்

நியா 5:14-17 ஆகிய வசனங்கள் தீர்க்கதரிசன வாக்கியங்களாகும். இதற்கு இவ்வாறு வியாக்கியானம் கூறலாம்.

1. எப்பிராயீம் பள்ளத்தாக்கிற்குள் போனான். அவன் பர்வதங்களிலிருந்து போனான். அந்தப் பர்வதங்களை இதற்கு முன்பு அமலேக்கியர் பிடித்திருந்தார்கள். தெபொராள் எப்பிராயீம்கோத்திரத்தைச் சேர்ந்தவள்.
2. சிசெராவிற்கு எதிரான யுத்தத்தில் பென்யமீன் மனுஷர் எப்பிராயீமைப் பின்பற்றிச் சென்றார்கள்.
3. மாகீரிலிருந்து அதிபதிகள் இறங்கி வந்தார்கள்.
4. செபுலோனிலிருந்து எழுதுகோலைப் பிடிக்கிறவர்கள் இறங்கிவந்தார்கள்.
5. இசக்காரின் பிரபுக்களும் தெபொராளோடே இருந்தார்கள். (நியா 5:15).
6. பாராக்கைப் போல நப்தலி மனுஷரும் பள்ளத்தாக்கில் கால்நடையாய் அனுப்பப்பட்டுப் போனார்கள்.
7. ரூபனின் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி. (நியா 5:15-16).
8. கீலேயாத்திலுள்ள காத் மனுஷர் யோர்தானுக்கு அக்கரையிலே இருந்து விட்டார்கள் (நியா 5:17).
9. தாண் மனுஷர் கப்பல்களில் தங்கியிருந்தார்கள்.
10. ஆசேர் மனுஷர் கடற்கரையிலே தங்கி, தங்கள் குடாக்களில் தாபரித்தார்கள்.

5 அதிகாரம்

முதல் நான்கு கோத்திரங்களான ரூபன், காத், தாண், ஆசேர் ஆகியோரின் பராக்கிரமங்கள் இங்கு கூறப்படவில்லை. இவர்களோடு யூதா, சிமியோன், ஆகியோரைப் பற்றியும் ஒன்றும் கூறப்படவில்லை. கானானியரோடு நடைபெற்ற யுத்தத்தில் 10,000 இஸ்ரவேல் புத்திரர்கள் பங்கு பெற்றார்கள். இவர்கள் எப்பிராயீம், மனாசே, பென்யமீன், செபுலோன், இசக்கார், நப்தலி ஆகிய கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள். இந்தக் கோத்திரங்களிலும் ஒருசிலரே யுத்தத்தில் பங்கு பெற்றார்கள். நப்தலி கோத்திரத்திலிருந்துதான் அநேகர் வந்தார்கள். இது பாராக்கின் கோத்திரம். (நியா 4:6) இவர்களோடு செபுலோன் புத்திரரும் சேர்ந்து கொண்டார்கள். (நியா 5:18)

(ஈ) தாபோர் பர்வதத்தில் யுத்தம்

நியா 5:18 செபுலோனும் நப்தலியும் போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றார்கள்.

நியா 5:19 ராஜாக்கள் வந்து யுத்தம்பண்ணினார்கள்; அப்பொழுது கானானியரின் ராஜாக்கள் மெகிதோவின் தண்ணீர் அருகான தானாக்கிலே யுத்தம்பண்ணினார்கள்; அவர்களுக்குத் திரவியக்கொள்ளை கிடைக்கவில்லை.

நியா 5:20 வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம்பண்ணின.

நியா 5:21 கீசோன் நதி, பூர்வநதியாகிய கீசோன் நதியே, அவர்களை அடித்துக் கொண்டுபோயிற்று;என் ஆத்துமாவே, நீ பலவான்களை மிதித்தாய்.

நியா 5:22 அப்பொழுது குதிரைகளின் குளம்புகள், பாய்ச்சலினாலே, பலவான்களின் பாய்ச்சலினாலேயே, பிளந்துபோயின.

நியா 5:23 மேரோசைச் சபியுங்கள்; அதின் குடிகளைச் சபிக்கவே சபியுங்கள்; என்று கர்த்தருடைய தூதனானவர்சொல்லுகிறார்; அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணைநிற்க வரவில்லை; பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாய் அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணைநிற்க வரவில்லையே.

"செபுலோனும் நப்தலியும்" - இவ்விரண்டு கோத்திரத்தாரும் போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றார்கள். இவ்விரண்டு கோத்திரத்திலிருந்துதான் 10,000 வீரர்களில் அநேகர் வந்திருக்கிறார்கள்.

"ராஜாக்கள் வந்து யுத்தம்பண்ணினார்கள்" - கானானியர் இஸ்ரவேல் புத்திரர்மீது நடத்திய இந்த யுத்தத்தில் கானானின் ராஜாக்கள் பலர் யாபீனுக்கு உதவி புரிய வந்தார்கள். ஆனால் தானாக்கிலே அவர்கள் தோல்வியுற்றார்கள். இந்த இடம் மெகிதோவின் தண்ணீருக்கு அருகில் உள்ளது. இது மனாசேயின் பங்குவீதம்.

"அவர்களுக்குத் திரவியக்கொள்ளை கிடைக்கவில்லை" - இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ணினால் தங்களுக்கு திரளான திரவியக்கொள்ளை கிடைக்கும் என்று கானானின் ராஜாக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் யுத்தத்தில் தோல்வியுற்றனர். கானானின் ராஜாக்கள் திரவியக் கொள்ளைக்காக யுத்தம் பண்ணினார்கள். இஸ்ரவேலின் ஜனங்களோ தங்களுடைய ஜீவனைக் காப்பதற்காகவும், தங்களுடைய விடுதலைக்காகவும் யுத்தம் பண்ணினார்கள். கானான் தேசத்தாருக்குத் திரவியக்கொள்ளை கிடைக்கவில்லை. யுத்தத்தில் தங்கள் போராயுதங்களையும், தங்கள் ஜீவன்களையும் கானானியர் இழந்தார்கள்.

"வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று" - வானத்திலுள்ள தேவதூதர்களும், நட்சத்திரங்களும் கானானின் ராஜாவாகிய சிசெராவிற்கு எதிராக யுத்தம் பண்ணின. தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய வரலாற்றில் மிகவும் இக்கட்டான பகுதியில் இருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜாதியே அழிந்துவிடும் அளவிற்கு யுத்தம் பலத்தது. இஸ்ரவேல் சந்ததியின் மூலமாகத்தான் மேசியா வரவேண்டும். ஆகையினால் இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரர் தோற்கக்கூடாது என்பதில் கர்த்தர் வைராக்கியமாக இருந்தார். வானத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த யுத்தத்தில் உதவி வந்தது.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

5 அதிகாரம்

பூமியில் நடைபெறும் யுத்தங்களில் ஜெயமும், தோல்வியும் பரலோகத்தில் தீர்மானம் பண்ணப்படும். அங்கு கர்த்தருடைய சேனைக்கும், சாத்தானின் அந்தகாரச் சக்திகளுக்கும் இடையில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஏற்ப பூமியில் ஜெயமும், தோல்வியும் நிர்ணயிக்கப்படும். (தானி 10:13).

"பூர்வநதியாகிய கீசோன் நதியே, அவர்களை அடித்துக் கொண்டுபோயிற்று" - இந்த யுத்தத்தில் கர்த்தர் வானத்தின் சேனைகளைப் பயன்படுத்தினார். இதனால் இடி, மின்னல், பெருமழை ஆகியவை உண்டாயிற்று. கீசோன் நதி கரைபுரண்டு ஓடிற்று. கானானியர் சேனைகளை இந்த நதி அடித்துக் கொண்டு போயிற்று. மேலும் பல சமயங்களில் கர்த்தர் சத்துருக்களைத் தோற்கடிப்பதற்கு இதுபோன்ற பெருங்காற்றுகளைப் பயன்படுத்தியிருக்கிறார். (யாத் 9:18-34; யோசு 10:11; 1சாமு 7:10; 1சாமு 12:18). அர்மகெதோனில் நடைபெறும் யுத்தத்திலும், வானசேனைகள் பங்கு பெறுவார்கள். (எசே 38:17-21; வெளி 16:18).

"குதிரைகளின் குளம்புகள்...... பிளந்து போயின" - கானானியர் தங்கள் குதிரைகள்மீது கரடுமுரடான பாதைகளின் வழியாகத் தப்பியோடினார்கள். அக்காலத்தில் குதிரைகளுக்கு லாடம் அடிக்கும் வழக்கம் இல்லை. ஆகையினால் குதிரைகளின் குளம்புகள் பிளந்துபோயிற்று.

"மோரோஸ்" (Meroz) - இது பட்டணமாகவோ, அல்லது மாகாணமாகவோ இருக்கலாம். ஆனால் இது எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. மோரோசின் குடிகள் இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த யுத்தத்தில் உதவி புரியவில்லை. ஆகையினால் அவர்களைச் சபிக்க வேண்டுமாறு கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார். இந்தத் தூதர் ஒருவேளை திரித்துவத்தின் ஒரு நபராக இருக்கலாம்.

(உ) சிசெராவைக் கொன்றதற்காக யாகேலின்மீது ஆசீர்வாதம் - (நியா 4:18-24)

நியா 5:24 ஸ்திரீகளுக்குள்ளே கேனியனான ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள்; கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப் பட்டவளே.

நியா 5:25 தண்ணீரைக் கேட்டான், பாலைக் கொடுத்தாள்; ராஜாக்களின் கிண்ணியிலே வெண்ணெயைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

நியா 5:26 தன் கையால் ஆணியையும், தன் வலதுகையால் தொழிலாளரின் சுத்தியையும் பிடித்து, சிசெராவை அடித்தாள்; அவன் நெற்றியில் உருவக்கடாவி, அவன் தலையை உடைத்துப்போட்டாள்.

நியா 5:27 அவள் கால் அருகே அவன் மடங்கி விழுந்துகிடந்தான், அவள் கால் அருகே மடங்கி விழுந்தான்; அவன் எங்கே மடங்கி விழுந்தானோ அங்கே மடிந்து கிடந்தான்.

"ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள்" - இந்த ஆசீர்வாதம் தெபொராளிடமிருந்து வருகிறது. கர்த்தரிடமிருந்து இந்த ஆசீர்வாதம் வந்ததா என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

யாகேல் செய்த காரியங்கள்

1. யாகேல் வெளியே சிசெராவிற்கு எதிர்கொண்டு போனாள். (நியா 4:18).
2. தன்னுடைய கூடாரத்திற்கு உள்ளே வருமாறு அவனை அழைத்தாள்.
3. யாகேல் சிசெராவிற்கு குடிக்க பாலும், வெண்ணெயும் கொடுத்தாள். (நியா 4:19; நியா 5:25).
4. தன்னோடிருக்கும்போது அவனை யாரும் கண்டுபிடிக்க முடியாதென்று அவள் சிசெராவிற்கு உறுதி கூறினாள். (நியா 4:18,20).

5 அதிகாரம்

5. அவனை ஒரு சமுக்காளத்தினால் மூடினாள். (நியா 4:18-19).

6. அவன் ஆயாசமாய் தூங்கினபோது அவன் நெற்றியிலே ஆணி அடித்து அவனைக் கொன்றுபோட்டாள். (நியா 4:21; நியா 5:26).

7. அவன் தலையை உடைத்துப்போட்டாள். (நியா 5:26).

8. பாராக்கிடம் சிசெராவின் மரணத்தை அறிவித்தாள். (நியா 4:22).

(ஊ) சிசெராவின் தாயாரும், நாயகிகளும்

நியா 5:28 சிசெராவின் தாய் ஜன்னலில் நின்று பலகணிவழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்து: அவனுடைய ரதம் வராமல் பிந்திப்போனதென்ன? அவனுடைய ரதங்களின் ஓட்டம் தாமதிக்கிறதென்ன என்று புலம்பினாள்.

நியா 5:29 அவளுடைய நாயகிகளில் புத்திசாலிகள் அவளுக்கு உத்தரவு சொன்னதுமன்றி, அவள் தானும் தனக்கு மறுமொழியாக:

நியா 5:30 அவர்கள் கொள்ளையைக் கண்டுபிடிக்கவில்லையோ, அதைப் பங்கிட வேண்டாமோ, ஆளுக்கு இரண்டொரு பெண்களையும், சிசெராவுக்குக் கொள்ளையிட்ட பலவருணமான ஆடைகளையும், கொள்ளையிட்ட பலவருணமான சித்திரத் தையலாடைகளையும், கொள்ளை யிட்டவர்களின் கழுத்துக்கு இருபுறமும் பொருந்தும் சித்திரத் தையலுள்ள பலவருணமான ஆடையையும் கொடுக்கவேண்டாமோ என்றாள்.

"சிசெராவின் தாய் ஜன்னலில் நின்று பலகணிவழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்" - யுத்தத்திற்குப் போன மகன் பாதுகாப்பாக எப்போது திரும்பி வருவான் என்று தாயானவள் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருப்பாள். அதுபோன்று சிசெராவின் தாய் அவனுடைய வருகைக்காக ஜன்னலில் நின்று பலகணிவழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். கிழக்குத் தேசத்து வீடுகளில் ஜன்னல்கள் அதிகமாக இராது. வெளியிலிருந்து யாரும் வீட்டிற்குள் எட்டிப்பார்க்க முடியாதவாறு ஜன்னல் உயரமாக இருக்கும். வீட்டிலிருந்து பார்த்தால் வெளியே தெரியும் விதமாகவும், வெளியே இருந்து பார்த்தால் உள்ளே தெரியாத விதமாகவும் ஜன்னல் உயரமாக வைக்கப் பட்டிருக்கும். இந்த ஜன்னல்கள் பொதுவாக தெருப்பக்கமாகவே இருக்கும். (2சாமு 6:16; 2இராஜா 9:30-33; 2இராஜா 13:17; நீதி 7:6; உன் 2:9; தானி 6:10; அப் 20:9)

"அவனுடைய ரதம் வராமல் பிந்திப்போனதென்ன?" - யுத்தத்திற்குப் போகும் காலங்களில் பொதுவாக சிசெராவிற்கு வெற்றி கிடைக்கும். அவன் தன்னுடைய இரதத்தில் வெற்றிச் செய்தியோடு வேகமாக வீட்டிற்குத் திரும்பி வருவான். இப்பொழுது சிசெரா இன்னும் வரவில்லை. ஆகையினால் அவனுக்கு ஏதோ ஆயிற்று என்று அவனுடைய தாய் நினைக்கிறாள். இந்த யுத்தம் புதுமாதிரியான யுத்தம். கர்த்தர் சிசெராவிற்கு எதிராக யுத்தம் பண்ணினார். ஆகையினால் சிசெராவின் இரதம் வீட்டிற்கு திரும்பி வரவேயில்லை. (நியா 5:28-29).

"கொள்ளையை......பங்கிட வேண்டாமோ" - யுத்தத்தில் ஜெயித்தவர்கள் யுத்தத்தின் கொள்ளைப் பொருட்களைப் போர்வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்கள். இது யுத்தம் பண்ணியவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி. இஸ்ரவேல் புத்திரருக்கும் கொள்ளையைப் பங்கிடுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரர் கொள்ளையைப் பங்கிடும்போது கொள்ளையின் ஒரு பகுதியை யுத்தத்தில் பங்குபெறாமல் பாளயத்தில் இருக்கிறவர்களுக்கும் பங்கு பிரித்துக் கொடுப்பது வழக்கம். (எண் 31:16-54).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

5 அதிகாரம்

"பலவருணமான ஆடைகள்" - கிழக்கு தேசத்து ஜனங்கள் பலவருணமான ஆடைகளை விரும்பினார்கள். இப்படிப்பட்ட வஸ்திரமே ஆகானைப் பாவம் செய்யத் தூண்டிற்று. (யோசு 7:21). இஸ்ரவேலின் பிரதான ஆசாரியர்கள் இதுபோன்ற பலவருணமான ஆடைகளையும், அங்கிகளையும் அணிந்திருப்பார்கள். (சங் 45:13-14; எசே 23:12).

பலவருணம் **divers colours צֶבַע - tseh'-bah - 6648**

ஆண்பால் பெயர்ச்சொல் - பலவருணம்

(எ) தேவனுடைய விரோதிகளின்மீது சாபமும், நண்பர்கள்மீது ஆசீர்வாதமும்

நியா 5:31 கர்த்தாவே, உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள்; அவரில் அன்பு கூருகிறவர்களோ, வல்லமையோடே உதிக்கிற சூரியனைப் போல இருக்கக்கடவர்கள் என்று பாடினார்கள். பின்பு தேசம் நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது.

தெபொராளுடைய பாடலின் நோக்கம்

1. கானானியர்மீது நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஜெயம் பெற்றதற்காகக் கர்த்தரைத் துதிப்பது. மேலும் 20 வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரர் அனுபவித்த அடிமைத் தனங்களிலிருந்தும், தோல்வி களிலிருந்தும் விடுதலை பெற்றதற்காகக் கர்த்தரைத் துதிப்பது. (நியா 5:1-8; நியா 4:3).

2. கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்து, யுத்தத்தில் பங்குபெற்ற ஒருசில கோத்திரத்து ஜனங்களுடைய வீரத்தையும், வைராக்கியத்தையும் புகழ்ந்து பேசுவது. இவர்கள் ஒரு பொதுவான காரணத்திற்காக யுத்தம் பண்ணுவதற்குத் தங்களை மனப்பூர்வமாகஒப்புக் கொடுத்தவர்கள். (நியா 5:9-15, 18-19).

3. சில கோத்திரத்தார் இந்த யுத்தத்தில் பங்குபெறாமல் வீட்டிலேயே இருந்து விட்டார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தையும், கோழைத் தனத்தையும் கடிந்துரைப்பது. மேலும் தேவனுடைய ஜனங்களுக்கு ஆபத்து வரும்போது தானாக முன்வந்து உதவி செய்யாமற் போனதற்காக அவர்களைக் கடிந்து கொள்வது. (நியா 5:15-17).

4. பூமியிலுள்ள இரண்டு தேசங்கள் யுத்தம் பண்ணும்போது கர்த்தர் பரலோகத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம் பண்ணியதற்காக அவரை மகிமைப்படுத்துவது. (நியா 5:20-22).

5. இந்தயுத்தத்தில்பங்குபெறாதவர்களைச் சபிப்பது. (நியா 5:23).

6. சிசெராவைத் தைரியமாகக் கொன்ற ஸ்திரீயை ஆசீர்வதிப்பது. (நியா 5:24-27).

7. சிசெராவினுடைய தாயாரின் ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும் பிரதிபலிப்பது. (நியா 5:28-30).

8. தேவனுடைய ஜனங்கள்மீது ஆசீர்வாதத்தையும், கர்த்தரைப் பகைக்கிறவர்கள்மீது சாபத்தையும் கூறுவது. (நியா 5:31).

"கர்த்தாவே, உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள்" - (சங் 45:5; சங் 60:12; சங் 66:3; சங் 92:11; ஏசா 42:18; ஏசா 59:18; ஏசா 66:6,14)

கர்த்தரைப் பகைக்கிறவர்களுக்கும், அவரில் அன்புகூருகிறவர்களுக்கும் கூறப்படும் செய்தி

1. கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அழிவார்களாக.

2. கர்த்தரில் அன்புகூருகிறவர்கள் வல்லமையோடே உதிக்கிற சூரியனைப் போல இருப்பார்களாக.

"பின்பு தேசம் நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது" - (நியா3:30)

6 அதிகாரம்

9. ஐந்தாவது முரண்பாடும், அடிமைத்தனமும் - மீதியானியரிடம் ஏழு வருஷங்கள்

நியா 6:1 பின்னும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் அவர்களை ஏழு வருஷம் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார்.

நியா 6:2 மீதியானியரின் கை இஸ்ரவேலின் மேல் பலத்துக்கொண்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிகொண்டார்கள்.

நியா 6:3 இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும் போது, மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து;

நியா 6:4 அவர்களுக்கு எதிரே பாளயமிறங்கி, காசாவின் எல்லைமட்டும் நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதேபோவார்கள்.

நியா 6:5 அவர்கள் தங்கள் மிருகஜீவன்களோடும், தங்கள் கூடாரங்களோடும், வெட்டுக்கிளிகளைப் போல் திரளாய் வருவார்கள்; அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாததாயிருக்கும்; இந்தப் பிரகாரமாக தேசத்தைக் கெடுத்துவிட அதிலே வருவார்கள்.

நியா 6:6 இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.

"மீதியான்" (Midian) - ஆபிரகாமின் குமாரன். கெத்தூராளுக்குப் பிறந்தவன். (ஆதி 25:2-4). மோசேயின் காலத்தில் மீதியானியர் இஸ்ரவேல் புத்திரருக்குப் பலத்த சத்துருக்களாக இருந்தார்கள். (எண் 22:4-7; எண் 25:15-18; எண் 31:1-12; யோசு 13:21) மோசே மீதியானிய ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தார். (யாத் 2:15-3:1; யாத் 4:19; யாத் 18:1-27). இவர்களுக்கு இடையே காணப் பட்ட விரோதத்திற்கு காரணம் கூறப்படவில்லை. எண் 31 ஆவது அதிகாரத்தின்படி மீதியானியருடைய தேசம் முற்றிலுமாக அழிக்கப் பட்டது. ஆனால் அவர்கள் திரும்பவும் பலுகிப் பெருகினார்கள். திரளான ஜாதிகளுக்குத் தலைவர்களானார்கள். கிதியோனின் நாட்களில் மீதியானியர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக எழும்பி வந்தார்கள். (நியா 6:1-8:28; நியா 9:17; ஏசா 9:4; ஏசா 10:26).

"ஏழு வருஷம்" - யோசுவாவின் காலத்திலிருந்து சவுல் ராஜாவின் காலம் வரையிலும். இஸ்ரவேல் புத்திரர் மொத்தம் 520 வருஷங்கள் சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தார்கள். இதில் ஏழு வருஷம் என்பது மிகவும் குறைந்த காலளவாகும்.

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட வருஷங்கள்

1. பாபிலோனியரிடம் - 8 வருஷங்கள். (நியா 3:7-8)
2. மோவாபியரிடம் - 18 வருஷங்கள். (நியா 3: 12-14)
3. பெலிஸ்தரிடம் - காலம் தெரியவில்லை. (நியா 3:31)
4. கானானியரிடம் - 20 வருஷங்கள் (நியா 4:1-3)

நியாயாதிபதிகள் – தொகுப்புரை

6 அதிகாரம்

5. மீதியானியரிடம் - 7 வருஷங்கள் (நியா 6:1)

6. பெலிஸ்தரிடமும், அம்மோனியரிடமும் - 18 வருஷங்கள். (நியா 10:6-18)

7. பெலிஸ்தரிடம் - 40 வருஷங்கள் (நியா 13:1)

"தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கி கொண்டார்கள்" - இஸ்ரவேல் புத்திரரின் பாவமான நிலைமையையும், பரிதாபமான நிலைமையையும், இந்த வாக்கியம் விளக்குகிறது. (நியா 6:2-6). மோசே, யோசுவா ஆகியோரின் காலத்தில் வல்லமை மிக்கவர்களாக இருந்த இஸ்ரவேல் புத்திரர் இப்போது சத்துருக்களுக்குப் பயந்து கெபிகளிலும், குகைகளிலும் வசிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களின் நிமித்தமாகக் கர்த்தர் அவர்களுக்கு இந்தத் தீங்குகளையும், தோல்விகளையும் அனுமதிக்கிறார்.

"மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து" - இவர்களுக்கு மீதியானியர்களே தலைவர்கள். இவர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஜெயித்து, அவர்களுடைய நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, அவர்களுடைய தானியங்களையும், மிருகஜீவன்களையும் கொள்ளையிட்டார்கள். இஸ்ரவேல் புத்திரரும் தங்கள் ஜீவனுக்குப் பயந்து கெபிகளிலும், குகைகளிலும் போய் ஒளிந்துகொண்டார்கள். (நியா 6:3லி6) ஒருசில கெபிகளில் 4,000பேர் கூட தங்க முடியுமாம்.

"காசாவின் எல்லைமட்டும்" -இஸ்ரவேல் புத்திரர் மிகவும் ஒடுக்கப்பட்டார்கள். மீதியானியரின் உபத்திரவம் தொடர்ந்து அதிகரித்து வந்திருந்தால், இஸ்ரவேல் தேசமே பஞ்சத்தினாலும், பட்டினியினாலும், யுத்தத்தினாலும் அழிந்துபோயிருக்கும். எப்போதும் போல தங்களுக்குத் துன்பம் வரும் வேளையில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். கர்த்தரும் மனதிறங்கி அவர்களுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவர்களை இரட்சிப்பதற்காகக் கிதியோனை எழுப்பினார். (நியா 6:4-7:25).

"வெட்டுக்கிளிகளைப் போல் திரளாய் வருவார்கள்" - எண்ணிக்கையில் அடங்காதவர்களாக வருவார்கள்.

"இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்" - சத்துருக்கள் அவர்களுடைய தானியங்களையும், மிருகஜீவன்களையும் எடுத்துச் சென்றதினால் இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள். (நியா 6:3-4).

"கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்" - (நியா 2:6; நியா 3:15)

10. யோசுவாவிற்கு பின்புஇஸ்ரவேலின் பெயர் குறிப்பிடப்படாத முதலாவது தீர்க்கதரிசி - (யோசு 1:10; 23:1; 24:2; எபி 1:1-2)

நியா 6:7 இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிட்ட போது,

நியா 6:8 கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்திற்கு அனுப்பினார்; அவன் அவர்களை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நான் உங்களை எகிப்திலிருந்து வரவும், அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படவும் செய்து,

நியா 6:9 எகிப்தியர் கையினின்றும், உங்களை ஒடுக்கின யாவருடைய கையினின்றும் உங்களை இரட்சித்து, அவர்களை உங்களுக்கு முன்பாகத் துரத்தி, அவர்கள் தேசத்தை உங்களுக்குக் கொடுத்து,

நியா 6:10 நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றும், நீங்கள் குடியிருக்கும் அவர்கள் தேசத்திலுள்ள எமோரியருடைய தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றும், உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ என் சொல்லைக் கேளாதே போனீர்கள் என்கிறார் என்று சொன்னான்

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

6 அதிகாரம்

கர்த்தர் அனுப்பியவர்கள்

1. இஸ்ரவேல் புத்திரரைக் கடிந்து கொள்வதற்காக கர்த்தர் தீர்க்கதரிசிகளை அனுப்பினார். (நியா 6:8; 2நாளா 24:19; 2நாளா 25:15; எரே 26:5; எரே 29:1).
2. பொல்லாத ஆவி (நியா 9:23)
3. ஏதேன் தோட்டத்திலிருந்து ஆதாமை வெளியே அனுப்பினார். (ஆதி 3:23)
4. தேவதூதர்கள் - சோதோமை அழிப்பதற்காக. (ஆதி 19:13)
5. யோசேப்பு - ஜீவனைப் பாதுகாப்பதற்காக. (ஆதி 45:7)
6. மோசே - இஸ்ரவேலரை விடுவிப்பதற்காக (யாத் 3:13-15; யாத் 4:28; யாத் 5:22; யாத் 7:16; எண் 16:28)
7. இடியும், கல்மழையும் (யாத் 9:23)
8. தேவதூதர் - இஸ்ரவேலரை மீட்பதற்காக. (எண் 20:16)
9. வலுசர்ப்பங்கள். (எண் 21:6)
10. மோசே - அற்புதங்கள் செய்வதற்காக (உபா 34:10-11)
11. நாதான் - தாவீதிடம் (2சாமு 12:1)
12. கொள்ளைநோய் - இஸ்ரவேல்மீது (1நாளா 21:14)
13. தேவதூதர் - இஸ்ரவேலைத் தண்டிப்பதற்காக - எருசலேமிற்கு (1நாளா 21:15)
14. தேவதூதர் - அசீரியரைத் தோற்கடிப்பதற்காக. (2நாளா 32:21)
15. வண்டுஜாதிகள் (சங் 78:45)
16. காரிருள் (சங் 105:28)
17. ஆத்துமாக்களில் இளைப்பு (சங் 106:15)
18. கர்த்தருடைய வார்த்தை - குணப்படுத்துவதற்கு. (சங் 107:20)
19. எரேமியா - தீர்க்கதரிசனம் உரைப்பதற்காக. (எரே 26:12)
20. பெருங்காற்று (யோனா 1:4)
21. சிவப்பும், மங்கின நிறமும், வெண்மையுமான குதிரைகளில் இருந்தவர்கள் - பூமியெங்கும் சுற்றிப் பார்ப்பதற்காக (சக 1:8-11)
22. யோவான்ஸ்நானன்(யோவான் 1:6,33)
23. இயேசு கிறிஸ்து (யோவான் 3:34; யோவான் 5:23,38; யோவான் 6:29; கலா 4:4; 1யோவான் 4:9-14). "என்னை அனுப்பினார்" என்னும் வாக்கியம் இயேசு கிறிஸ்துவிற்கு 33 இடங்களில்பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யோவான் 4:34-20:21)
24. பரிசுத்த ஆவியானவர். (கலா 4:6; வெளி 5:6)
25. தேவதூதன் - வெளிப்படுத்தின விசேஷத்தைக் கொடுப்பதற்காக. (வெளி 1:3; வெளி 22:6,16)

"கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்திற்கு அனுப்பினார்" - முதன் முறையாக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பியதாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களுக்காக அவர்களைக் கடிந்து கொள்வதற்கு கர்த்தர் தீர்க்கதரிசிகளை எழுப்புகிறார். இதற்கு முன்பாக ஆபிரகாம், ஆரோன், மோசே, மேலும் பலரும் இஸ்ரவேல் புத்திரரைக் கடிந்து கொண்டார்கள். ஆனபோதிலும் அவர்கள் தீர்க்கதரிசிகள் என அழைக்கப்படவில்லை. யோசுவாவிற்குப் பின்பு, கர்த்தர்தாமே வானத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்து, இஸ்ரவேல் புத்திரரைக் கடிந்து கொண்டார். (நியா 2:1-5). ஒருசில விசேஷித்த சம்பவங்களில் மட்டுமே கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை நேரடியாகக் கடிந்து கூறியிருக்கிறார். (நியா 6:11-24; நியா 13:2-23).

6 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விடுவித்த சம்பவங்கள்

1. எகிப்திலிருந்து வரவழைத்தார்.
2. அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படச் செய்தார். (யாத் 12:37-19:2).
3. எகிப்தியர் கையினின்று அவர்களை இரட்சித்தார். (நியா 6:9; யாத் 14:1-15:21).
4. அவர்களை ஒடுக்கின யாவருடைய கையினின்றும் அவர்களை இரட்சித்தார். (யோசு 2:1-12:24).
5. அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தினார். (யோசு 2:1-12:24).
6. அவர்கள் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்தார். (யோசு 13: 1-21:45).
7. "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றும், நீங்கள் குடியிருக்கும் அவர்கள் தேசத்திலுள்ள எமோரியருடைய தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றும்" கர்த்தர் இஸ்ரவேல் புத்திரிடம் கூறினார். (நியா 6:10).

"நீங்களோ என் சொல்லைக் கேளாதே போனீர்கள்" - இஸ்ரவேல் புத்திரர்மீது கர்த்தர் கூறும் சுருக்கமான குற்றச்சாட்டு. மற்ற சமயங்களில் கர்த்தர் விரிவாகப் பேசி அவர்கள்மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவார். (நியா 2:1-20; யாத் 32:7-9; எண் 14:22-35; யோசு 7:11-20).

11. கிதியோன் - ஆறாவது நியாயாதிபதி - நாற்பது வருஷங்கள் - (8:28)

(1) கர்த்தருடைய தூதனானவரின் தரிசனமும், கிதியோனின் ஊழிய அழைப்பும்

நியா 6:11 அதற்குப்பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலிமரத்தின்கீழ் உட்கார்ந்தார்; அப்பொழுது அவனுடைய குமாரன் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான்.

நியா 6:12 கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.

நியா 6:13 அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக் கொடுத்தாரே என்றான்.

நியா 6:14 அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்.

நியா 6:15 அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்.

நியா 6:16 அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடே கூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

6 அதிகாரம்

"கர்த்தருடைய தூதனானவர்" - இவர் திரித்துவத்தில் ஒரு நபராக இருக்க வேண்டும். நியா 6:14-16,22-26 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய தூதனானவர் யெகோவா என்று அறியப்பட்டிருக்கிறார். நியா 6:8-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசியைப் பற்றிய வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்காகக் கர்த்தருடைய தூதனானவர் வந்தார்.

கர்த்தருடைய தூதனானவரின் கிரியைகள்

1. தேவன் வானத்திலிருந்து பூமிக்கு வந்தார். (நியா 6:11).
2. ஒரு கர்வாலிமரத்தின்கீழ் உட்கார்ந்தார்.
3. கிதியோனுக்குத் தரிசனமானார். (நியா 6:12).
4. கிதியோனிடம் பேசினார்.
5. கிதியோனை நோக்கிப் பார்த்தார். (நியா 6:14).
6. கிதியோனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தார்.
7. இஸ்ரவேலை இரட்சிப்பதற்காகக் கிதியோனை அனுப்பினார்.
8. கிதியோனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தார். (நியா 6:16).
9. வாக்குப்பண்ணினார். (நியா 6:18).
10. கிதியோனுக்குக் கட்டளையிட்டார். (நியா 6:20)
11. கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார் நியா 6:21).
12. கர்த்தரின் தூதன் கிதியோனின் கண்களுக்கு மறைந்து போனார்.

"கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான்" - இஸ்ரவேல் புத்திரரின் பரிதாபமான நிலைமையை இந்த வாக்கியம் விளக்குகிறது. தங்கள் சத்துருக்களுக்கு அவர்கள் பயந்திருந்ததினால் பொதுவாக போரடிக்கும் களங்களில் தானியத்தை அவர்களால் போரடிக்க முடியவில்லை. மாடு கட்டிப், போரடிப்பதற்குப் பதிலாக கொஞ்சம் கொஞ்சமாகப் போரடிக்கிறார்கள். கிதியோன் திராட்சரச ஆலைக்குச் சமீபமாய் போரடித்தான். மீதியானியர் திராட்சைத்தோட்டத்தில் உள்ள எல்லா திராட்சைப் பழங்களையும் திருடிச் சென்று விட்டார்கள். ஆகையினால் ஆலையில் திராட்சரசத்தை பிழிவதற்கு அங்கு எந்தத் திராட்சைப் பழமும் இல்லை. ஆலையில் ஒரு வேலையும் நடைபெறவில்லை. அந்த இடத்தில் போரடித்தால் யாருக்கும் சந்தேகம் வராது என்று நினைத்து, கிதியோன் ஆலைக்குச் சமீபமாய் கோதுமையைப் போரடித்தான்.

"கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி" - கிதியோன் ஒரு தூதனையோ, அல்லது தேவனையோ முகமுகமாகப் பார்த்தான். இருவரும் ஒருவருக்கொருவர் சம்பாஷணை பண்ணிக் கொண்டார்கள். (நியா 6:11-21).

"ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்?" - இஸ்ரவேலின் இக்கட்டான சூழ்நிலையில் இதுபோன்ற கேள்விகள் எழும்புவது இயற்கையானது. கடந்த காலத்தில் தேவன் இஸ்ரவேல் புத்திரருக்குப் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். இவையெல்லாவற்றையும் பற்றி இவர்களுடைய முற்பிதாக்கள் இவர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்போதோ இவர்கள் கர்த்தரால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். மீதியானியர் இவர்களை ஒடுக்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய ஒடுக்கத்திற்கு இவர்களுடைய பாவமே காரணம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகிப்போய்விட்டார்கள். ஆனால் கர்த்தர் அவர்களைக் கைவிடவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப்போனால், மற்ற தேசங்கள் அவர்களை ஜெயித்து ஒடுக்குவார்கள். இதை அனுமதிப்பதாகக் கர்த்தர் ஏற்கெனவே கூறியிருக்கிறார். (லேவி 26; உபா 28). கர்த்தருடைய உடன்படிக்கையில் மனுஷரும், தங்களுடைய பங்கை நிறைவேற்ற வேண்டும். தம்முடைய பங்கை நிறைவேற்றுவதில் கர்த்தர் உண்மையுள்ளவர்.

6 அதிகாரம்

"எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவில் செய்த அற்புதச் சம்பவங்களைப் பற்றிய செய்திகள் ஒவ்வொரு சந்ததியாகக் கடந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு காலத்திலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அற்புதம் செய்யக்கூடியவர். அற்புதங்கள் தேவைப்படும் போதும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போதும் கர்த்தர் தொடர்ந்து அற்புதங்களைச் செய்து வந்திருக்கிறார். கர்த்தருடைய அற்புதங்கள் எங்கும் போய்விடவில்லை. அவர்கள் மத்தியில் கர்த்தர் தொடர்ந்து அற்புதமாகக் கிரியை செய்து வருகிறார்.

தீர்க்கதரிசன எண் - 5

"உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா" (நியா 6:14) இந்தத் தீர்க்கரிசனம் நிறைவேறிற்று. (நியா 7:1-25).

"மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது" - இஸ்ரவேலை இரட்சிப்பதற்காக கர்த்தர் கிதியோனை அழைக்கும்போது அவன் தன்னை மிகவும் தாழ்த்துகிறான். அவனுடைய ஜீவியத்தில் கர்த்தர் அவனை உயர்த்தியபோது அவன் கர்த்தரைவிட்டு விலகிப்போய் விடுகிறான். (நியா 6:15= நியா 8:22-28).

தீர்க்கதரிசன எண் - 6

"நான் உன்னோடே கூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறியஅடிப்பாய்" (நியா 6:16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.(நியா 7:1-25).

(2) கர்த்தருடைய தரிசனத்தை கிதியோன் அங்கீகரித்தான்

நியா 6:17 அப்பொழுது அவன்: உம்முடைய கண்களில் இப்பொழுதும் எனக்குத் தயை கிடைத்ததானால் என்னோடே பேசுகிறவர் தேவரீர்தான் என்று எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டும்.

நியா 6:18 நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையைக் கொண்டுவந்து, உமக்கு முன்பாக வைக்குமளவும், இவ்விடம் விட்டுப் போகாதிருப்பீராக என்றான்; அதற்கு அவர்: நீ திரும்பிவருமட்டும் நான் இருப்பேன் என்றார்.

நியா 6:19 உடனே கிதியோன் உள்ளே போய், ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் ஒரு மரக்கால் மாவிலே புளிப்பில்லாத அப்பங்களையும் ஆயத்தப்படுத்தி, இறைச்சியை ஒரு கூடையில் வைத்து, ஆணத்தை ஒரு கிண்ணத்தில் வார்த்து, அதை வெளியே கர்வாலி மரத்தின் கீழிலிருக்கிற அவரிடத்தில் கொண்டுவந்து வைத்தான்.

நியா 6:20 அப்பொழுது தேவனுடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் எடுத்து, இந்தக் கற்பாறையின்மேல் வைத்து ஆணத்தை ஊற்று என்றார்; அவன் அப்படியே செய்தான்.

நியா 6:21 அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் தூதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

6 அதிகாரம்

கர்த்தர் கிதியோனுக்குக் காண்பித்த அடையாளங்கள்

1. அக்கினி போஜனத்தை அற்புதமாகப் பட்சித்தது. (நியா 6:21)
2. பனி தோலின்மேல்மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தது. (நியா 6:37-38)
3. தோல்மாத்திரம் காய்ந்திருந்து பூமியெங்கும் பனி பெய்திருந்தது. (நியா 6:39-40)
4. சுற்றியிருந்த வாற்கோதுமை அப்பம் மீதியானியருடைய பாளயத்திற்கு உருண்டு வந்தது பற்றிய சொப்பனம். (நியா 7:9-15)

"நீ திரும்பிவருமட்டும் நான் இருப்பேன்" - ஆபிரகாமின் நாளில் நடந்ததுபோல கர்த்தருடைய தூதன் இங்கும் போஜனம் ஆயத்தமாகும் வரையில் காத்திருக்கிறார். ஆனால் இப்போது தூதனானவர் இந்தப் போஜனத்தைப் புசிக்கவில்லை. ஒரு அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி இறைச்சியையும், புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது. (நியா 6:18-21=ஆதி 18:1-8).

"ஆணத்தை ஊற்று" - இறைச்சியின்மீதும், புளிப்பில்லாத அப்பங்களின்மீதும் ஊற்றி, அல்லது அவற்றைத் தோய்த்து புசிப்பதற்காக ஆணம் பயன்படுத்தப்பட்டது. கர்த்தருடைய தூதன் தமது கையினால் போஜனத்தைத் தொடாமல் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார். போஜனம் பட்சிக்கப்பட்டது. இது தூதனானவர் அந்தப் போஜனத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகும். (நியா 6:21; ஆதி 4:4; லேவி 9:24; 1இராஜா 18:38).

(3) கிதியோன் கர்த்தருடைய தூதனைக் கண்டும் சாவாமல் இருந்தான் - (ஆதி 32:30)

நியா 6:22 அப்பொழுது கிதியோன், அவர் கர்த்தருடைய தூதன் என்று கண்டு: ஐயோ, கர்த்தரான ஆண்டவரே, நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய்க் கண்டேனே என்றான்.

நியா 6:23 அதற்குக் கர்த்தர்: உனக்குச் சமாதானம்; பயப்படாதே, நீ சாவதில்லை என்று சொன்னார்.

நியா 6:24 அங்கே கிதியோன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யெகோவா ஷாலோம் என்று பேரிட்டான்; அது இந்நாள்வரைக்கும் அபியேஸ்ரியரின் ஊராகிய ஒப்ராவிலே இருக்கிறது.

"ஐயோ, கர்த்தரான ஆண்டவரே, நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய்க் கண்டேனே" - ஒருவன் கர்த்தரையோ, தேவதூதனையோ முகமுகமாய்ப் பார்த்து விட்டால் அவன் செத்துப்போய் விடுவான் என்பது பூர்வகாலத்து நம்பிக்கை. (நியா 6:22-23; நியா 13:22; ஆதி 32:30) ஆனால் இதுவரையிலும் யாரும் அப்படி மரித்ததுமில்லை. இனிமேலும் அதற்காக மரிக்கப்போவதுமில்லை.

"நீ சாவதில்லை" - கர்த்தரைப் பார்ப்பதினால் யாரும் சாகப்போவதில்லை என்பதை கர்த்தர் இங்கு உறுதிபண்ணுகிறார். கர்த்தருடைய தூதனானவர் பிரத்தியட்சமாய் காணப்பட்டா விட்டாலும் கிதியோனோடு தொடர்ந்து பேசுகிறார். (நியா 6:21-26).

"ஒப்ரா" (Ophrah) - மனாசேயிலுள்ள யோர்தானின் கிழக்கு பகுதியிலுள்ள பட்டணம். (நியா 6:11,24; நியா 8:27,32; நியா 9:5; யோசு 18:23; 1சாமு 13:17; 1நாளா 4:14).

"அபியேஸ்ரியர்" (Abi-ezrites) - (நியா 6:11,24,32) அபியேசரின் சந்ததியார். (நியா 6:34; நியா 8:2; யோசு 17:2).

6 அதிகாரம்

(4) கிதியோன் தேவனுக்கு கீழ்ப்படிந்து, பாகாலின் பலி பீடத்தைத் தகர்த்து, கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்

நியா 6:25 அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனை நோக்கி: நீ உன் தகப்பனுக்கு இருக்கிற காளைகளில் ஏழு வயதான இரண்டாம் காளையைக் கொண்டுபோய், உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலி பீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போட்டு,

நியா 6:26 இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த இரண்டாம் காளையைக் கொண்டு வந்து, அதை நீ வெட்டிப்போட்டதோப்பினுடைய கட்டை விறகுகளின் மேல் சர்வாங்க தகனமாகப் பலியிடக் கடவாய் என்றார்.

நியா 6:27 அப்பொழுது கிதியோன், தன் வேலையாட்களில் பத்துப்பேரைச் சேர்த்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே செய்தான்; அவன் தன் தகப்பன் குடும்பத்தாருக்கும் அந்த ஊர் மனுஷருக்கும் பயப்பட்டபடியினாலே, அதைப் பகலிலே செய்யாமல், இரவிலே செய்தான்.

மெய்யான ஆராதனை மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறது

1. நீ உன் தகப்பனுக்கு இருக்கிற காளைகளில் ஏழு வயதான இரண்டாம் காளையைக் கொண்டுபோ.
2. உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்துபோடு.
3. அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போடு.
4. இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டு (நியா 6:26).
5. அந்த இரண்டாம் காளையைக் கொண்டு வந்து, அதை நீ வெட்டிப் போட்ட தோப்பினுடைய கட்டை விறகுகளின் மேல் சர்வாங்க தகனமாகப் பலியிடு.

"ஏழு வயதான இரண்டாம் காளை" - இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் கையில் ஏழு வருஷங்களாக ஒடுக்கப்பட்டிருந்தார்கள். அந்த ஏழு வருஷங்களுக்கு அடையாளமாக ஏழு வயதான காளை சர்வாங்க தகனபலியாக இடப்படுகிறது. (நியா 6:1).

"உன் தகப்பன்" - மனாசேயின் குடும்பத் தலைவர்கள் இப்போது விக்கிரகாராதனைக் காரர்களாக இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய வரலாற்றில் இது பரிதாபமான சம்பவமாகும். ஒரு காலத்தில் கர்த்தருக்கு வைராக்கியமாக இருந்தவர்கள் இப்போது கர்த்தரைவிட்டுப் பின்வாங்கி பாகாலைச் சேவிக்கிறார்கள். (நியா 6:24,29-32) பாகால் ஆராதனை மிகவும் பிரபல்யமாக இருந்தது. மெய்யான தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பதற்கு ஜனங்கள் பயந்தார்கள். கிதியோன் கர்த்தர் சொன்னபடி பலியிட்டான். ஆனால் ஜனங்களுக்குப் பயந்தபடியினால் பகலில் பலியிடாமல், கர்த்தருக்கு இரவில் பலியிட்டான். (நியா 6:27). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு வெகுதூரம் விலகிப்போய் விட்டார்கள். இஸ்ரவேலின் நியாயப் பிரமாணத்தில் பாகாலை ஆராதிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது. பாகாலை ஆராதிக்கிறவர்கள் கொலைபண்ணப்பட வேண்டும். பாகாலை ஆராதிக்கும் பட்டணம் சுட்டெரிக்கப்பட வேண்டும். (உபா 13).

"இரண்டாம் காளை" - முதல் காளை பாகாலுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கும். ஆகையினால் அது அசுத்தமானது. விக்கிரகத்திற்குப் பலியிடுவதற்காக அது நியமிக்கப்பட்டிருக்கிற படியினால் கர்த்தர் அதைத் தவிர்த்துவிடுகிறார். இரண்டாம் காளையைத் தமக்காகத் தெரிந்து கொண்டு, அதைச் சர்வாங்க தகனபலியிடுமாறு கட்டளையிடுகிறார்.

6 அதிகாரம்

"தோப்பினுடைய கட்டை விறகுகள்" - அஸ்தரோத்திற்குத் தோப்புமேடைகள் இருக்கும். அதிலுள்ள மரங்களைக் கிதியோன் வெட்டிப் போட்டான். இப்போது அந்த மரங்களின் விறகுகளினால் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியிடுகிறான்.

"அதைப் பகலிலே செய்யாமல், இரவிலே செய்தான்" - கர்த்தருக்குப் பகலில் பலியிட்டால் ஊருக்குள் பெரிய குழப்பமும், கலவரமும் வந்துவிடும் என்று பயந்து, கிதியோன் கர்த்தருக்கு இரவில் பலியிட்டான்.

(5) பாகாலை வழிபடுவோரிடமிருந்து கிதியோனின் தந்தை அவனை பாதுகாத்தார்

நியா 6:28 அந்த ஊர் மனுஷர் காலமே எழுந்திருந்தபோது, இதோ, பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டதும், அதின் அருகேயிருந்த தோப்பு வெட்டிப்போடப் பட்டதும், கட்டப்பட்டிருந்த பலிபீடத்தின் மேல் அந்த இரண்டாம் காளை பலியிடப் பட்டதுமாயிருக்க அவர்கள் கண்டு;

நியா 6:29 ஒருவரையொருவர் நோக்கி: இந்தக் காரியத்தைச் செய்தவன் யார் என்றார்கள்; கேட்டு விசாரிக்கிறபோது, யோவாசின் மகன் கிதியோன் இதைச் செய்தான் என்றார்கள்.

நியா 6:30 அப்பொழுது ஊரார் யோவாசை நோக்கி: உன் மகனை வெளியே கொண்டுவா; அவன் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருந்த தோப்பை வெட்டிப் போட்டான், அவன் சாகவேண்டும் என்றார்கள்.

நியா 6:31 யோவாஸ் தனக்கு விரோதமாக நிற்கிற அனைவரையும் பார்த்து: நீங்களா பாகாலுக்காக வழக்காடுவீர்கள்? நீங்களா அதை இரட்சிப்பீர்கள்? அதற்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலே தானே சாகக்கடவன்; அது தேவனானால் தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம், அது தானே தனக்காக வழக்காடட்டும் என்றான்.

நியா 6:32 தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம் பாகால் அவனோடே வழக்காடட்டும் என்று சொல்லி, அந்நாளிலே அவனுக்கு யெருபாகால் என்று பேரிடப்பட்டது.

"யோவாசின் மகன்" - அபியேஸ்ரியர் குடும்பத்திலுள்ள யோவாஸ் என்பவன் கிதியோனின் தகப்பன். (நியா 6:24,29). பாகாலின் பலிபீடம் யோவாசின் இடத்தில் இருக்கிறது. தன்னுடைய மகனைப் பாதுகாப்பதற்காக யோவாஸ் பாகால் ஆராதனைக்காரர்களுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். (நியா 6:31).

"அதற்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலே தானே சாகக்கடவன்" - யோவாஸ் அபியேஸ்ரியரின் தலைவன். ஆகையினால் அவனுக்கு இதுபோன்ற கட்டளை பிறப்பிப்பதற்கு அதிகாரமுள்ளது.

"யெருபாகால்" **(Jerubbaal)** - கிதியோன் யெருபாகால் என்று அழைக்கப்பட்டான். இதற்கு "பாகால் அவனோடே வழக்காடட்டும்" என்று பொருள். **"let Baal contend"** (நியா 6:32; நியா 7:1; நியா 8:29,35; நியா 9:1-5, 16,19,24,28,57). இதன் பின்பு கிதியோனின் பெயர் "எருப்பேசேத்" **(Jerubbesheth)** என்று மாற்றப்படுகிறது. இதற்கு "அவமானம் வழக்காடட்டும்" **"let shame contend"** என்று பொருள். (2சாமு 11:21).

(6) இஸ்ரவேலரை ஒன்றுசேர்த்தான்

நியா 6:33 மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரர் யாவரும் ஏகமாய்க் கூடி, ஆற்றைக் கடந்துவந்து, யெஸ்ரயேல் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள்.

6 அதிகாரம்

நியா 6:34 அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்; அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து,

நியா 6:35 மனாசே நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி, அவர்களையும் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து, ஆசேர், செபுலோன், நப்தலி நாடுகளிலும் ஆட்களை அனுப்பினான்; அவர்களும் அவனுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

"கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்" - (நியா 3:10)

கிதியோனோடு பின்சென்ற இஸ்ரவேல் புத்திரர்

1. அபியேஸ்ரியர் (நியா 6:24,34)
2. மனாசே (நியா 6:35)
3. ஆசேர்
4. செபுலோன்
5. நப்தலி

(7) தேவனுடைய வாக்குத்தத்தத்தை உறுதி பண்ணிய இரண்டு அற்புத அடையாளங்கள்

நியா 6:36 அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: தேவரீர் சொன்னபடி என் கையினாலே இஸ்ரவேலை இரட்சிக்க வேண்டுமானால்,

நியா 6:37 இதோ, நான் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடுகிறேன்; பனிதோலின்மேல்மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என்கையினால் இரட்சிப்பீர் என்று அதினாலே அறிவேன் என்றான்.

நியா 6:38 அப்படியே ஆயிற்று. அவன் மறுநாள் காலமே எழுந்திருந்து, தோலைக் கசக்கி, அதிலிருந்து பனிநீரை ஒரு கிண்ணம் நிறையப் பிழிந்தான்.

நியா 6:39 அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: நான் இன்னும் ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என்மேல் மூளாதிருப்பதாக; தோலினாலே நான் இன்னும் ஒரேவிசை சோதனைபண்ணட்டும்; தோல்மாத்திரம் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும் என்றான்.

நியா 6:40 அப்படியே தேவன் அன்று ராத்திரி செய்தார்; தோல்மாத்திரம் காய்ந்திருந்து, பூமியெங்கும் பனி பெய்திருந்தது.

"அப்படியே ஆயிற்று" - கிதியோன் ஏற்கெனவே கர்த்தரிடத்தில் ஒரு தெய்வீக அடையாளத்தைக் கேட்டான். (நியா 6:17-21) இப்போது மேலும் இரண்டு அடையாளங்களைக் கேட்கிறான். கர்த்தர் தம்முடைய பிரசன்னத்தைத் தெய்வீக அடையாளங்கள் மூலமாக உறுதி பண்ணுகிறார். (நியா6:17, 37-40).

7 அதிகாரம்

(8) முன்னூறு பேர்களைக் கொண்ட கிதியோனின் சேனை

நியா 7:1 அப்பொழுது கிதியோனாகிய யெருபாகாலும் அவனோடிருந்த ஜனங்கள் யாவரும் காலமே எழுந்து புறப்பட்டு, ஆரோத் என்னும் நீரூற்றின் கிட்டப் பாளயமிறங்கினார்கள்; மீதியானியரின் பாளயம் அவனுக்கு வடக்கே மோரே மேட்டிற்குப் பின்னான பள்ளத்தாக்கிலே இருந்தது.

நியா 7:2 அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: நான் மீதியானியரை உன்னோடிருக்கிற ஜனத்தின் கையில் ஒப்புக் கொடுக்கிறதற்கு அவர்கள் மிகுதியாயிருக்கிறார்கள்; என் கை என்னை ரட்சித்தது என்று இஸ்ரவேல் எனக்கு விரோதமாக வீம்பு பேசுகிறதற்கு இடமாகும்.

நியா 7:3 ஆகையால் பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பி, கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப்போகக் கடவன் என்று, நீ ஜனங்களின் செவிகள் கேட்கப் பிரசித்தப்படுத்து என்றார்; அப்பொழுது ஜனத்தில் இருபத்தீராயிரம் பேர் திரும்பிப் போய்விட்டார்கள்; பதினாயிரம்பேர் மீதியாயிருந்தார்கள்.

நியா 7:4 கர்த்தர் கிதியோனை நோக்கி: ஜனங்கள் இன்னும் அதிகம், அவர்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப் பண்ணு; அங்கே அவர்களைப் பரிட்சித்துக்காட்டுவேன்; உன்னோடேகூட வரலாம் என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வரக்கடவன்; உன்னோடேகூட வரலாகாது என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடே கூட வராதிருக்கக்கடவன் என்றார்.

நியா 7:5 அப்படியே அவன் ஜனங்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப் பண்ணினான்; அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: தண்ணீரை ஒரு நாய் நக்கும் பிரகாரமாக அதைத் தன் நாவினாலே நக்குகிறவன் எவனோ அவனைத் தனியேயும், குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிகிறவன் எவனோ, அவனைத் தனியேயும் நிறுத்து என்றார்.

நியா 7:6 தங்கள் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கெடுத்து, நக்கிக் கொண்டவர்களின் லக்கம் முந்நூறுபேர்; மற்ற ஜனங்களெல்லாம் தண்ணீர் குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிந்தார்கள்.

நியா 7:7 அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: நக்கிக்குடித்த அந்த முந்நூறு பேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன், மற்ற ஜனங்களெல்லாரும் தங்கள் தங்கள் இடத்திற்குப் போகக்கடவர்கள் என்றார்.

நியா 7:8 அப்பொழுது ஜனங்கள் தங்கள் கையில் தின்பண்டங்களையும், எக்காளங்களையும் எடுத்துக் கொண்டார்கள்; மற்ற இஸ்ரவேலரெல்லாரையும் தங்கள் தங்கள் கூடாரங்களுக்கு அனுப்பிவிட்டு, அந்த முந்நூறு பேரைமாத்திரம் வைத்துக் கொண்டான்;. மீதியானியரின் சேனை அவனுக்குத் தாழ்விடமான பள்ளத்தாக்கில் இருந்தது.

"ஆரோத்" **(Harod)** - இதற்கு நடுங்குதல் **(trembling)** என்று பொருள். மீதியானியர், அமலேக்கியர், ஆகியோரின் சேனைகள் மோரே மேட்டிற்குப் பின்னான பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருந்தார்கள். கிதியோனும், அவனுடைய ஜனங்களும் ஆரோத் என்னும் நீரூற்றின்கிட்டப் பாளயமிறங்கினார்கள். மீதியானியர் வெட்டுக்கிளிகளைப்போல திரளாக இருந்தார்கள். ஆகையினால் அவர்களைப் பார்த்து கிதியோனும் அவனோடிருந்த ஜனங்களும் நடுங்கினார்கள். (நியா 7:1,12; நியா 6:33)

7 அதிகாரம்

"கர்த்தர் கிதியோனை நோக்கி" - கர்த்தருடைய தூதனானவரைப் போல கர்த்தர் கிதியோனுக்குப் பிரத்தியட்சமாகத் தரிசனம் தரவில்லை. (நியா 6:11-21) ஆயினும் கர்த்தர் இன்னும் கிதியோனோடு பேசிக் கொண்டிருக்கிறார். யுத்தத்திற்கு ஆயத்தமாவது பற்றி கட்டளை கொடுத்துக் கொண்டிருக்கிறார். (நியா 6:22-7:11).

"உன்னோடிருக்கிற ஜனத்தின் கையில் ஒப்புக் கொடுக்கிறதற்கு அவர்கள் மிகுதியாயிருக்கிறார்கள்" - இஸ்ரவேல் புத்திரர் மனதில் பெருமையோடு இருக்கிறார்கள். தங்களுடைய சூழ்நிலைகளினால் அவர்கள் ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு இருக்கின்ற போதிலும், அவர்களிடத்தில் பெருமை காணப்படுகிறது. கர்த்தர் அவர்களுடைய பெருமையைப் பார்த்தார்.

கிதியோனின் சேனையில் மொத்தம் 32,000 புருஷர்கள் இருக்கிறார்கள். இத்தனைபேரும் யுத்தம் பண்ணி, மீதியானியரை ஜெயித்தால் இந்த ஜெயம் தங்களுடைய பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் வந்தது என்று கர்வமாக இருப்பார்கள். கர்த்தரை மகிமைப்படுத்தாமல், தங்களைப் பற்றியே பெருமைப்பட்டுக் கொள்வார்கள். ஆகையினால் கர்த்தர் கிதியோனிடம் "பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பி, கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப்போகக்கடவன் என்று, நீ ஜனங்களின் செவிகள் கேட்கப் பிரசித்தப்படுத்து" என்று கூறுகிறார். (நியா 7:3). கிதியோன் தன்னுடைய மனுஷரிடம் இதைச் சொன்ன உடனே 22,000 புருஷர்கள் யுத்த களத்திலிருந்து தங்கள் வீட்டிற்குத் திரும்பி போய்விட்டார்கள். இப்போது கிதியோனோடு 10,000பேர் மட்டுமே இருக்கிறார்கள்.

நியா 5-6 ஆகிய அதிகாரங்களில் பாராக்கோடு 10,000 வீரர்கள் இருந்தார்கள். கர்த்தருடைய பார்வையில் கிதியோனோடிருந்த 10,000 மனுஷரும் எண்ணிக்கையில் அதிகமானவர்களே. ஆகையினால் கர்த்தர் அவர்களை மறுபடியும் பரீட்சித்துக் காட்ட விரும்புகிறார். அவர்கள் தண்ணீரைக் குடிக்குமாறு கூறி, அவர்களைச் சோதித்துப் பார்க்கிறார். குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிகிறவன் எவனோ, அவன் வீட்டிற்குத் திரும்பிப் போய்விட வேண்டும். தண்ணீரை ஒரு நாய் நக்கும் பிரகாரமாக அதைத் தன் நாவினாலே நக்குகிறவன் எவனோ அவன் கிதியோனோடு சேர்ந்து யுத்தம் பண்ணலாம். (நியா 7:4-5).

"பரீட்சித்துக்காட்டுவேன்" - இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீர் குடிக்கும் விதத்தை வைத்து, கர்த்தர் அவர்களைச் சோதித்துப் பார்க்கிறார். இந்தப் பரீட்சையில் 300பேர் மட்டுமே யுத்தத்திற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று கர்த்தர் காண்கிறார். மீதமுள்ள 9,700பேரை வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார். (நியா 7:4-7).

தீர்க்கதரிசன எண் - 7

"அந்த முந்நூறு பேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன்" (நியா 7:7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 7:16-25) மீதியானியரின் பெரிய சேனையைக் கிதியோனின் 300பேர் கொண்ட சேனை ஜெயிக்கும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம். இது மனுஷனால் கூடாத காரியம் போன்று தெரியும். ஆனாலும் கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நம்முடைய வாழ்விலும் நமக்கு சோதனையான காலங்கள் வரும் பொழுது கர்த்தரையே சார்ந்திருந்து பழகவேண்டும். கர்த்தர் நம்மை ஆபத்துக்களிலிருந்து விடுவிப்பதற்கு வல்லவர். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26).

7 அதிகாரம்

"மற்ற ஜனங்களெல்லாரும் தங்கள் தங்கள் இடத்திற்குப் போகக்கடவர்கள்" - முழங்கால் ஊன்றி குனிந்து தண்ணீர் குடித்தவர்களெல்லாம் வீட்டிற்குத் திரும்பி போகிறார்கள். அவர்கள் பயப்படவில்லை. ஆனால் அவர்கள் யுத்தத்திற்கு ஆயத்தமாகவும் இல்லை. இவர்களெல்லாரும் வீட்டிற்குப் போய்விட்டால், மீதம் 300பேர் மட்டுமே இருப்பார்கள். 300பேரைக் கொண்டு யுத்தத்தில் ஜெயம் பெற வேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு "உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள். உங்களில் நூறுபேர் பதினாயிரம்பேரைத் துரத்துவார்கள்" (லேவி 26:8) என்று வாக்குப் பண்ணியிருக்கிறார். மேலும் ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்தி, இரண்டுபேர் பதினாயிரம்பேரை ஓட்டுவார்கள் என்றும் (உபா 32:30) கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது கிதியோனின் 300பேர் மீதியானியரின் 1,500,000 பேரைத் துரத்துவார்கள். மீதியானியருடைய சேனையில் 1,35,000 பேர் இருந்தார்கள். (நியா 8:10).

"ஜனங்கள் தங்கள் கையில் தின்பண்டங்களையும்" - கிதியோனின் 300 வீரர்களுக்கு "ஜனங்கள்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(9) வெற்றியின் அடையாளம் - (6:17)

நியா 7:9 அன்றுராத்திரி கர்த்தர் அவனை நோக்கி: நீ எழுந்து, அந்தச் சேனையினிடத்திற்குப் போ; அதை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்.

நியா 7:10 போகப் பயப்பட்டாயானால், முதல் நீயும் உன் வேலைக்காரனாகிய பூராவும் சேனையினிடத்திற்குப் போய்,

நியா 7:11 அங்கே என்ன பேசுகிறார்கள் என்றுகேள்; பின்பு சேனையிடத்திற்குப் போக, உன் கைகள் திடப்படும் என்றார்; அப்படியே அவனும் அவன் வேலைக்காரனாகிய பூராவும் சேனையின் முன்னணியிலே ஜாமம் காக்கிறவர்களின் இடமட்டும் போனார்கள்.

நியா 7:12 மீதியானியரும், அமலேக்கியரும், சகல கிழக்கத்திப் புத்திரரும், வெட்டுக் கிளிகளைப் போலத் திரளாய்ப் பள்ளத்தாக்கிலே படுத்துக்கிடந்தார்கள்; அவர்களுடைய ஒட்டகங்களுக்கும் கணக்கில்லை, கடற்கரை மணலைப்போலத் திரளாயிருந்தது.

நியா 7:13 கிதியோன் வந்தபோது, ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு சொப்பனத்தைச் சொன்னான். அதாவது: இதோ ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சுட்டியிருந்த ஒரு வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளயத்திற்கு உருண்டு வந்தது, அது கூடாரமட்டும் வந்தபோது, அதை விழத்தள்ளிக் கவிழ்த்துப்போட்டது, கூடாரம் விழுந்துகிடந்தது என்றான்.

நியா 7:14 அப்பொழுது மற்றவன்: இது யோவாசின் குமாரனாகிய கிதியோன் என்னும் இஸ்ரவேலனுடைய பட்டயமே அல்லாமல் வேறில்ல; தேவன் மீதியானியரையும், இந்தச் சேனை அனைத்தையும் அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார் என்றான்.

நியா 7:15 கிதியோன் அந்தச் சொப்பனத்தையும் அதின் வியார்த்தியையும் கேட்டபோது, அவன் பணிந்துகொண்டு, இஸ்ரவேலின் பாளயத்திற்குத் திரும்பிவந்து: எழுந்திருங்கள், கர்த்தர் மீதியானியரின் பாளயத்தை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி,

தீர்க்கதரிசன எண் - 8

"நீ எழுந்து, அந்தச் சேனையினிடத்திற்குப் போ; அதை உன் கையில் ஒப்புக் கொடுத்தேன்......"(நியா 7:9-11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 7:13-15)

7 அதிகாரம்

கர்த்தர் கிதியோனிடம் முன்னறிவித்த காரியங்கள்

1. மீதியானியரின் சேனையை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்.
2. அங்கே என்ன பேசுகிறார்கள் என்று கேட்பாய். (நியா 7:11)
3. பின்பு சேனையிடத்திற்குப் போக, உன் கைகள் திடப்படும்.

"அன்றுராத்திரி" - கிதியோனின் 40,000 மனுஷரில் 31,700பேர் தங்களுடைய வீட்டிற்குத் திரும்பிப்போன அன்றுராத்திரியில் கிதியோனின் சேனைக்கு ஜெயம் உண்டாயிற்று. (நியா 7:8). அந்த ராத்திரியிலே கர்த்தர் கிதியோனைப் பார்த்து "எழுந்து, அந்தச் சேனையினிடத்திற்குப் போ" என்று கட்டளையிடுகிறார்.

"போகப் பயப்பட்டாயானால்" - கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் பலவீனங்களைப் புரிந்து வைத்திருக்கிறவர். இன்னுமொரு அடையாளத்தைக் காண்பித்தால் கிதியோனுக்கு விசுவாசம் பெருகும் என்பது கர்த்தருக்குத் தெரியும். ஆகையினால் தம்முடைய தீர்க்கதரிசனத்தை உறுதி பண்ணுவதற்காக கிதியோன் என்ன செய்ய வேண்டுமென்று கர்த்தர் அவனுக்கு விளக்கிக் கூறுகிறார். (நியா 7:10-15).

"வெட்டுக்கிளிகள்" - எகிப்து தேசத்தில் வாதைகளை உண்டுபண்ணிய வெட்டுக் கிளிகளைப் போன்றவை. (யாத் 10:4) மீதியானியருடைய ஒட்டகங்களுக்கும் கணக்கில்லை, கடற்கரை மணலைப்போலத் திரளாயிருந்தது. அவற்றை எண்ண முடியாது.

தீர்க்கதரிசன எண் - 9

"இதோ ஒரு சொப்பனத்தைக் கண்டேன்....." (நியா 7:13லி15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 7:16-25).

இந்தத் தீர்க்கதரிசனத்தில் காணப்படும் அம்சங்கள்

1. சொப்பனம் - வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளயத்திற்கு உருண்டு வந்தது, அது கூடாரமட்டும் வந்தபோது, அதை விழத்தள்ளிக் கவிழ்த்துப்போட்டது, கூடாரம் விழுந்துகிடந்தது.
2. வியார்த்தி - இது கிதியோனின் பட்டயமாகும். கர்த்தர் மீதியானியரைக் கிதியோனின் கைகளில் ஒப்புக் கொடுத்தார். (நியா 7:14). கர்த்தர் சொப்பனத்தையும், அதன் வியார்த்தியையும் ஏவியிருக்கிறார். கிதியோன் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவர் சொன்ன பிரகாரம் செயல்படவேண்டும்.
3. பயன்பாடு - எழுந்திருங்கள், கர்த்தர் மீதியானியரின் பாளயத்தை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார் (நியா 7:15)

(10) அற்புத வெற்றி

நியா 7:16 அந்த முந்நூறுபேரை மூன்று படையாக வகுத்து, அவர்கள் ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும், வெறும் பானையையும், அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்து,

நியா 7:17 அவர்களை நோக்கி: நான் செய்வதைப் பார்த்து, அப்படியே நீங்களும் செய்யுங்கள். இதோ, நான் பாளயத்தின் முன்னணியில் வந்திருக்கும்போது, நான் எப்படிச் செய்கிறேனோ அப்படியே நீங்களும் செய்யவேண்டும்.

நியா 7:18 நானும் என்னோடே இருக்கும் சகலமானபேரும் எக்காளம் ஊதும்போது, நீங்களும் பாளயத்தைச் சுற்றி எங்கும் எக்காளங்களை ஊதி, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்பீர்களாக என்று சொன்னான்.

7 அதிகாரம்

நியா 7:24 கிதியோன் எப்பிராயீம் மலைகளெங்கும் ஆட்களை அனுப்பி: மீதியானியருக்கு விரோதமாயிறங்கி, பெத்தாபரா இருக்கும் யோர்தான்மட்டும் வந்து, அவர்களுக்கு முந்தித் துறைகளைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லச்சொன்னான்; அப்படியே எப்பிராயீமின் மனுஷர் எல்லாரும் கூடி, பெத்தாபரா இருக்கும் யோர்தான்மட்டும் வந்து, துறைகளைக் கட்டிக்கொண்டு,

நியா 7:25 மீதியானியரின் இரண்டு அதிபதிகளாகிய ஓரேபையும் சேபையும் பிடித்து, ஓரேபை ஓரேப் என்னப்பட்ட கன்மலையிலும், சேபை சேப் என்னப்பட்ட ஆலையிலும் கொன்றுபோட்டு, மீதியானியரைத் துரத்தி, ஓரேப் சேப் என்பவர்களின் தலைகளை யோர்தானுக்கு இக்கரையிலிருந்த கிதியோனிடத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

கிதியோனின் யுத்த வியூகம்

உலக வரலாற்றில் இதுபோன்ற யுத்தம் என்றும் நடைபெற்றிருக்காது. கிதியோனின் 300பேர் மூன்று படைகளாக வகுக்கப் படுகிறார்கள். ஒவ்வொருவர் கையிலும் ஒரு எக்காளமும், ஒரு வெறும் பானையும் அந்த பானைக்குள் வைக்கும் தீவட்டியும் இருக்கிறது. இதுதான் அவர்களுடைய ஆயுதம். இந்த யுத்தத்தை நடத்துகிறவர் கர்த்தரே. கிதியோனின் ஒவ்வொரு மனுஷனும் இந்த மூன்று பொருட்களையும் வைத்திருக்க வேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளை. கிதியோன் கர்த்தருடைய சத்தத்திற்கு அப்படியே கீழ்ப்படிகிறான். கர்த்தர் கிதியோனுக்கு ஏற்கெனவே நான்கு அடையாளங்களைக் கொடுத்து, தமது வார்த்தையையும், வல்லமையையும் அவனுக்கு நிரூபித்திருக்கிறார். ஆகையினால் இந்த முறை கிதியோன் வேறு எந்த அடையாளமும் கேட்காமல் கர்த்தர் சொன்ன பிரகாரம் செயல்படுகிறார். கிதியோனின் யுத்த வியூகத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. அவையாவன:

1. 300பேரையும் மூன்று படையாக வகுத்தான்.

2. அவர்கள் ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும், வெறும் பானையையும், அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்தான்.

3. கிதியோன் பாளயத்தின் முன்னணியில் வந்திருக்கும்போது, அவன் எப்படிச் செய்கிறேனோ அப்படியே அவர்களும் செய்யவேண்டும். கிதியோனும், அவனோடே இருக்கும் சகலமானபேரும் எக்காளம் ஊதும்போது, அவர்களும் பாளயத்தைச் சுற்றி எங்கும் எக்காளங்களை ஊதி, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று சத்தமிட்டு கூறவேண்டும். (நியா 7:17-20).

மீதியானியரின் வீரர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். இரவுவேளையில் திடீரென்று 301 எக்காளங்கள் ஊதும்போது மீதியானியருக்குக் குழப்பம் உண்டாகும். அத்துடன் அவர்களைச் சுற்றிலும் 301 தீவட்டிகள் எரிந்து கொண்டிருக்கிறது. மேலும் கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று 301 பேரும் சத்தமாகக் கூறுகிறார்கள். இதைப் பார்த்த மீதியானியரின் யுத்த வீரர்கள் எல்லோரும் சிதறிக் கூக்குரலிட்டு ஓடிப்போனார்கள்.

"நடுஜாமத்தின் துவக்கம்" - யூதருடைய பழைய முறையில் இரவுவேளையை மூன்று சாமங்களாகப் பிரித்திருந்தார்கள். ஒவ்வொரு சாமமும் நான்குமணி நேரம். (யாத் 14:24; 1சாமு 11:11; சங் 63:6; சங் 90:4; சங் 119:148; புல 2:19). ரோமப்பேரரசார் யூதரை ஆட்சி புரிந்தபோது, அவர்கள் இரவுவேளையை நான்கு சாமங்களாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு சாமமும் மூன்று மணிநேரம். (மத் 14:25; மாற்கு 13:35).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

7 அதிகாரம்

"பாளயத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நின்றார்கள்" - கிதியோனின் முந்நூறுபேரும் தங்களிடத்திலுள்ள எக்காளங்களை ஊதிக்கொண்டு, தீவட்டியை ஆட்டிக்கொண்டு, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று சத்தமிட்டு சூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். (நியா 7:19-21). மீதியானியரின் பாளயத்தில் இருந்தவர்கள் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்து பயந்தார்கள். காணக்கூடாத ஏதோ ஒரு சக்தி அங்கு கிரியை செய்வதை உணர்ந்தார்கள். கர்த்தர் கிதியோனின் மனுஷர் மத்தியில் இருந்து கிரியை செய்து கொண்டிருக்கிறார். மீதியானியரின் சேனைக்குள் குழப்பம் உண்டாயிற்று. அவர்கள் எல்லோரும் சிதறிக் கூக்குரலிட்டு, ஓடிப் போனார்கள். இந்தக் குழப்பத்தில் தங்களுடைய பட்டயங்களை எடுத்து ஒருவரையொருவர் வெட்டிக் கொண்டார்கள். (நியா 7:22). இனிமேல் நடைபெறப்போகும் அர்மகெதோன் யுத்தத்திலும், சத்துருவின் சேனையில் இதுபோன்ற குழப்பம் உண்டாகும். (எசே 38:21; சக 14:13).

"பெத்சித்தா" **(Beth-shittah)** - இது யெஸ்ரயேல் பள்ளத்தாக்கிலுள்ள சுத்தாவாக **(Shuttah)** இருக்கலாம். இதுவும், சேரோத்தும் **(Zererath)** ஒரே இடமா என்று தெரியவில்லை. சேரோத்தும், சர்தானும் **(Zarthan)** (1இராஜா7:46; 2நாளா 4:17) ஒரே இடமாக இருக்கலாம். மறுபெயர்கள் சார்தான் **(Zaretan)** (யோசு 3:16), சர்த்தனா **(Zartanah)** (1இராஜா 4:12).

"ஆபேல்மேகொலா" **(Abel-meholah)** - இதற்கு நடனமாடும் புல்வெளி **meadow of dancing** என்று பொருள். யோர்தானுக்கு மேற்கு பகுதியில் இந்த சமவெளி அமைந்துள்ளது. இது இசக்காரின் பங்கு வீதத்தில் வருகிறது. மனாசேயின் மேற்கு பகுதியிலுள்ள இந்த இடத்தில் எலிசா பிறந்தான். (1இராஜா 4:12; 1இராஜா 19:16).

"தாபாத்" **(Tabbath)** - இது எங்கேயுள்ளது என்று தெரியவில்லை. யோர்தான் பள்ளத்தாக்கின் தென்பகுதியில் இருக்கலாம்.

"சகல மனுஷருமாகிய இஸ்ரவேலர்" - இந்த மனுஷர் நப்தலி, ஆசேர், மனாசே, எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். (நியா 7:23-24).

"பெத்தாபரா" **(Beth-barah)** - கடவுதுறையின் வீடு **(house of the ford)** என்பது இதன் பொருள். யோவான் 1:28 ஆவது வசனத்தில் இது **"Beth-abara"** என்று அழைக்கப்படுகிறது. யோர்தான் நதியைக் கடக்கும்போது, அதன் ஆழமில்லாத பாதை வழியாகக் கடந்து வரவேண்டும். யோர்தான் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடும்போது இஸ்ரவேல் ஜனங்கள் பெத்தாபரா வழியாக யோர்தானைக் கடப்பது வழக்கம். இது எரிகோவிலிருந்து ஒரு சில மைல்கள் தூரத்திலுள்ளது. (யோசு 3:15-17).

"ஓரேபையும் சேபையும்" - ஓரேப் **(Oreb)** என்பதற்கு காகம் என்றும், சேப் **(Zeeb)** என்பதற்கு ஓநாய் என்றும் பொருள். மீதியானியருடைய தேசத்தில் இவர்கள் பிரபல்யமானவர்கள். இவர்களுடைய தோல்வி இஸ்ரவேல் புத்திரருக்கு பெரிய வெற்றியாயிற்று. (நியா 8:3; சங் 83:11; ஏசா 10:26).

"கிதியோனிடத்துக்கு" - இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றதன் மூலமாக கிதியோன் ஒரு தலைவராக அங்கிகரிக்கப்படுகிறான். (நியா 8:1-32).

8 அதிகாரம்

(11) உள்நாட்டு குழப்பம் - (20:1; 2இராஜா 25:25)

நியா 8:1 அப்பொழுது எப்பிராயீம் மனுஷர் அவனை நோக்கி: நீ மீதியானியர்மேல் யுத்தம் பண்ணப்போகிறபோது, எங்களை அழைப்பிக்கவில்லையே, இப்படி நீ எங்களுக்குச் செய்தது என்ன என்று, அவனோடே பலத்த வாக்குவாதம் பண்ணினார்கள்.

நியா 8:2 அதற்கு அவன்: நீங்கள் செய்ததற்கு நான் செய்தது எம்மாத்திரம்? அபியேஸ்ரியரின் திராட்சப்பழத்தின் முழு அறுப்பைப்பார்க்கிலும், எப்பிராயீமரின் மீதியான அறுப்பு அதிகம் அல்லவா?

நியா 8:3 தேவன் உங்கள் கையிலே மீதியானியரின் அதிபதிகளாகிய ஓரேபையும் சேபையும் ஒப்புக் கொடுத்தாரே; நீங்கள் செய்ததிலும் நான் செய்யக்கூடியது எம்மாத்திரம் என்றான்; இந்த வார்த்தையை அவன் சொன்ன போது, அவன்மேலிருந்த அவர்களுடைய கோபம் ஆறிற்று.

"எப்பிராயீம் மனுஷர்....... வாக்குவாதம் பண்ணினார்கள்." - கிதியோன் மீதியானியர்மேல் யுத்தம் பண்ணப்போகிறபோது எப்பிராயீம் மனுஷரைச் சேர்த்துக் கொள்ளவில்லை. இதனால் எப்பிராயீம் மனுஷர் மிகுந்த கோபமுற்று, கிதியோனோடே பலத்த வாக்குவாதம்பண்ணினார்கள். கிதியோன் அவர்களுக்கு மிகவும் ஞானமாக பதில் கூறினான். எப்பிராயீம் மனுஷர் கையிலே மீதியானியரின் அதிபதிகளாகிய ஓரேபையும் சேபையும் கர்த்தர் ஒப்புக்கொடுத்த சம்பவத்தைக் கூறி கிதியோன் எப்பிராயீம் மனுஷரைப் புகழ்ந்து பேசினான். இதனால் அவர்களுடைய கோபம் ஆறிற்று. (நியா 8:1-3).

"எப்பிராயீமரின் மீதியான அறுப்பு" - பொதுவாக திராட்சப்பழத்தின் முழு அறுப்பு அதிகமாக இருக்கும். மீதியான அறுப்பு குறைவாக இருக்கும். கிதியோன் இங்கு முழு அறுப்பைப் பார்க்கிலும் மீதியான அறுப்பு அதிகம் என்று கூறுகிறான். யுத்தத்தில் தனக்கு கிடைத்த வெற்றியைவிட எப்பிராயீமருக்குக் கிடைத்த வெற்றி அதிகம் என்று கூறுகிறான். கிதியோன் அபியேஸ்யரின் புத்திரன்.

(12) முழுமையான வெற்றி - சுக்கோத்தின்மீது நியாயத்தீர்ப்பு

நியா 8:4 கிதியோன் யோர்தானுக்கு வந்தபோது, அவனும் அவனோடிருந்த முந்நூறுபேரும் அதைக்கடந்துபோய், விடாய்த்திருந்தும் (சத்துருவை) பின்தொடர்ந்தார்கள்.

நியா 8:5 அவன் சுக்கோத்தின் மனுஷரை நோக்கி: என்னோடிருக்கிற ஜனத்திற்குச் சில அப்பங்களைக் கொடுங்கள்; அவர்கள் விடாய்த்திருக்கிறார்கள், நான் மீதியானியரின் ராஜாக்களாகிய சேபாவையும் சல்முனாவையும் பின் தொடருகிறேன் என்றான்.

நியா 8:6 அதற்குச் சுக்கோத்தின் பிரபுக்கள்: உன் சேனைக்கு நாங்கள் அப்பம் கொடுக்கிறதற்குச் சேபா சல்முனா என்பவர்களின் கை உன் கைவசமாயிற்றோ என்றார்கள்.

நியா 8:7 அப்பொழுது கிதியோன் அவர்களை நோக்கி: கர்த்தர் சேபாவையும் சல்முனாவையும் என் கையில் ஒப்புக்கொடுக்கும் போது, உங்கள் மாம்சத்தை வனாந்தரத்தின் முள்ளுகளாலும் நெரிஞ்சில்களாலும் கிழித்துவிடுவேன் என்று சொல்லி,

நியா 8:8 அவ்விடம் விட்டு, பெனூவேலுக்குப் போய், அவ்வூராரிடத்தில் அந்தப்படியே கேட்டான்; சுக்கோத்தின் மனுஷர் பிரதியுத்தரமாகச் சொன்னபடியே பெனூவேலின் மனுஷரும் அவனுக்குச் சொன்னார்கள்.

8 அதிகாரம்

நியா 8:9 அப்பொழுது அவன், பெனூவேலின் மனுஷரைப் பார்த்து: நான் சமாதானத்தோடே திரும்பிவரும்போது, இந்தக் கோபுரத்தை இடித்துப்போடுவேன் என்றான்.

நியா 8:10 சேபாவும் சல்முனாவும் அவர்களோடேகூட அவர்களுடைய சேனைகளும் ஏறக்குறைய பதினையாயிரம்பேர் கர்கோரில் இருந்தார்கள்; பட்டயம் உருவத்தக்க லட்சத்து இருபதினாயிரம்பேர் விழுந்த படியால், கிழக்கத்தியாரின் சகல சேனையிலும் இவர்கள்மாத்திரம் மீந்திருந்தார்கள்.

நியா 8:11 கிதியோன் கூடாரங்களிலே குடியிருக்கிறவர்கள் வழியாய் நோபாகுக்கும், யொகிபெயாவுக்கும் கிழக்கே போய், அந்தச் சேனை பயமில்லை என்றிருந்த போது, அதை முறிய அடித்தான்.

நியா 8:12 சேபாவும் சல்முனாவும் ஓடிப்போனார்கள்; அவனோ அவர்களைத் தொடர்ந்து, சேபா சல்முனா என்னும் மீதியானியரின் இரண்டு ராஜாக்களையும் பிடித்து, சேனை முழுவதையும் கலங்கடித்தான்.

நியா 8:13 யோவாசின் குமாரனாகிய கிதியோன் யுத்தம்பண்ணி, சூரியன் உதிக்கும் முன்னே திரும்பிவந்தபோது,

நியா 8:14 சுக்கோத்தின் மனுஷரில் ஒரு வாலிபனைப் பிடித்து, அவனிடத்தில் விசாரித்தான்; அவன் சுக்கோத்தின் பிரபுக்களும் அதின் மூப்பருமாகிய எழுபத்தேழு மனுஷரின் பேரை அவனுக்கு எழுதிக்கொடுத்தான்.

நியா 8:15 அவன் சுக்கோத்து ஊராரிடத்தில் வந்து: இதோ, விடாய்த்திருக்கிற உன் மனுஷருக்கு நாங்கள் அப்பம் கொடுக்கிறதற்குச் சேபா சல்முனா என்பவர்களின் கை உன் கைவசமாயிற்றோ என்று நீங்கள் என்னை நிந்தித்துச் சொன்ன சேபாவும் சல்முனாவும் இங்கே இருக்கிறார்கள் என்று சொல்லி,

நியா 8:16 பட்டணத்தின் மூப்பரைப் பிடித்து, வனாந்தரத்தின் முள்ளுகளையும் நெரிஞ்சில்களையும் கொண்டுவந்து, அவைகளால் சுக்கோத்தின் மனுஷருக்குப் புத்திவரப்பண்ணி,

நியா 8:17 பெனூவேலின் கோபுரத்தை இடித்து, அவ்வூர் மனுஷரையும் கொன்றுபோட்டான்.

நியா 8:18 பின்பு அவன் சேபாவையும் சல்முனாவையும் நோக்கி: நீங்கள் தாபோரிலே கொன்றுபோட்ட அந்த மனுஷர் எப்படிப்பட்டவர்கள் என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: நீர் எப்படிப்பட்டவரோ அவர்களும் அப்படிப்பட்டவர்களே; ஒவ்வொருவனும் பார்வைக்கு ராஜகுமாரனைப் போலிருந்தான் என்றார்கள்.

நியா 8:19 அப்பொழுது அவன்: அவர்கள் என் சகோதரரும் என் தாயின் பிள்ளைகளுமாயிருந்தார்கள்; அவர்களை உயிரோடே வைத்திருந்தீர்களானால், உங்களைக் கொல்லாதிருப்பேன் என்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று சொல்லி,

நியா 8:20 தன் மூத்தகுமாரனாகிய யெத்தேரை நோக்கி: நீ எழுந்து, இவர்களை வெட்டிப்போடு என்றான்; அந்த வாலிபன் இளைஞனானபடியால் பயந்து தன் பட்டயத்தை உருவாதிருந்தான்.

8 அதிகாரம்

"அவனும் அவனோடிருந்த முந்நூறுபேரும்" - கிதியோனோடு முந்நூறுபேர் யுத்தத்திற்குப் போனார்கள். யுத்தத்தில் இவர்கள் யாருமே மரித்துப் போகவில்லை. இவர்களுடைய கையில் மீதியானியர் ஆயிரக்கணக்கானோர் மரித்துப் போகிறார்கள். கர்த்தர் கிதியோனையும், அவனோடிருந்த முந்நூறுபேரையும் பாதுகாத்தார்.

"என்னோடிருக்கிற ஜனத்திற்குச் சில அப்பங்களைக் கொடுங்கள்" - கிதியோனின் மனுஷர் மீதியானியரைப் பின்தொடர்ந்து போகிறார்கள். யோர்தானைக் கடந்துபோகும் போது அவர்கள் விடாய்த்துப் போனார்கள். சுக்கோத்திற்கு வரும்போது அவர்களுடைய களைப்பு அதிகமாயிற்று. ஆனாலும் மீதியானியரின் ராஜாக்களாகிய சேபாவையும், சல்முனாவையும் பின்தொடர்ந்து போகிறார்கள். (நியா 8:4) சுக்கோத்தின் மனுஷரிடம் கிதியோன் சில அப்பங்களைக் கேட்கிறான். ஆனால் சுக்கோத்தின் பிரபுக்களோ கிதியோனுக்கு அப்பங்களைக் கொடுக்க மறுத்து விடுகிறார்கள். (நியா 8:4-6). இஸ்ரவேல் புத்திரரோடு அவர்கள் ஒத்துழைக்க மறுத்து விடுகிறார்கள். இதனால் கிதியோனுக்குச் சுக்கோத்தின் மனுஷர்மீது கோபம் உண்டாயிற்று. சுக்கோத்தின் மனுஷருடைய மாம்சத்தை வனாந்தரத்தின் முள்ளுகளாலும் நெரிஞ்சில்களாலும் கிழித்துவிடுவேன் என்று கிதியோன் கோபத்தோடு கூறுகிறான். (நியா 8:7)

தீர்க்கதரிசன எண் - 10

"கர்த்தர் சேபாவையும் சல்முனாவையும் என் கையில் ஒப்புக்கொடுக்கும் போது........" (நியா 8:7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 8:16). கிதியோனும், அவனுடைய சேனையும் விடாய்த்துப் போயிருக்கிறார்கள். பசியோடு இருக்கிறார்கள். ஆனாலும் யுத்தத்தில் கர்த்தர் தங்களுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார் என்று கிதியோன் விசுவாசிக்கிறான்.

"சுக்கோத்தின் மனுஷர் பிரதியுத்தரமாகச் சொன்னபடியே" - சுக்கோத்திலிருந்து கிதியோனும், அவனுடைய மனுஷரும் பெனூவேலுக்குப் போனார்கள். அவர்களிடமும் கிதியோன் அப்பத்தைக் கேட்கிறான். சுக்கோத்தின் மனுஷரைப் போலவே கிதியோனுக்கு அப்பத்தைத்தர அவர்களும் மறுத்துவிடுகிறார்கள். ஆகையினால் திரும்பி வரும்போது பெனூவேலிலுள்ள கோபுரத்தை இடித்துப் போடுவதாகக் கோபத்தோடு கூறுகிறான். (நியா 8:8-9).

தீர்க்கதரிசன எண் - 11

"நான் சமாதானத்தோடே திரும்பிவரும் போது...." (நியா 8:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 8:17).

"கர்கோர்" (Karkor) - இதற்கு ஓய்வு என்று பொருள். யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள ஸ்தலம். மீதியானியருடைய சேனை ஓய்வெடுத்து தங்குவதற்காக அவர்களுக்கு இதுபோன்று பல ஓய்வு ஸ்தலங்கள் உள்ளன. ஜனங்கள் இங்கு வசிக்காவிட்டாலும் மீதியானியரின் சேனை இதன் வழியாகச் செல்லும்போது இங்கு ஓய்வெடுப்பது வழக்கம்.

"பதினையாயிரம்பேர்" - மீதியானியருடைய சேனையில் 1,35,000 புருஷர்கள் இருந்தார்கள். இவர்களில் 1,20,000பேர் ஏற்கெனவே மாண்டுபோனார்கள். மீதமுள்ள 15,000 பேரும் யோர்தானின் மேற்கு பகுதியில் நடைபெற்ற யுத்தத்தில் தப்பித்தவர்கள். இவர்களை அழிப்பதற்காகக் கிதியோனும் அவனுடைய மனுஷரும் மீதியானியரை யோர்தானின் கிழக்குப் பகுதி வரையிலும் துரத்தி வருகிறார்கள். கிதியோன் ஏற்கெனவே இரவுவேளையில் சத்துருக்களைத் தாக்கியதுபோல இப்போது இவர்களையும் தாக்கினான். மீதியானியரின் இரண்டு ராஜாக்களையும் பிடித்தான். (நியா 8:11-12).

"எழுபத்தேழு மனுஷர்" - சுக்கோத்தில் எழுபத்தேழு பிரபுக்கள் இருந்தார்கள். ஏற்கெனவே எச்சரித்த பிரகாரம், கிதியோன் சுக்கோத்து பட்டணத்தின் எழுபத்தேழு மூப்பரைப் பிடித்து, வனாந்தரத்தின் முள்ளுகளையும் நெரிஞ்சில்களையும் கொண்டுவந்து, அவைகளால் சுக்கோத்தின் மனுஷருக்குப் புத்திவரப்பண்ணினான். (நியா 8:15,16).

8 அதிகாரம்

"பெனூவேலின் கோபுரத்தை இடித்து" - சுக்கோத்தின் மனுஷருக்குப் புத்திவரப்பண்ணின பின்பு, கிதியோன் பெனூவேலுக்கு வந்தான். தான் ஏற்கெனவே கூறிய பிரகாரமாக பெனூவேலின் கோபுரத்தை இடித்து, அவ்வூர் மனுஷரையும் கொன்றுபோட்டான். (நியா 8:8-9,17).

"அவர்களை உயிரோடே வைத்திருந்தீர்களானால், உங்களைக் கொல்லாதிருப்பேன்" - சேபாவும், சல்முனாவும் கிதியோனின் இரண்டு சகோதரரைக் கொன்றுபோட்டார்கள். அதற்குப் பழிவாங்குவதற்காகக் கிதியோன் இவ்விரண்டு ராஜாக்களையும் கொன்றுபோட்டான். (நியா 8:18-19).

"தன் மூத்தகுமாரனாகிய யெத்தேர்" - கிதியோனுக்கு கர்ப்பப் பிறப்பான குமாரர் 70பேர் இருந்தார்கள். யெத்தேர் இந்த எழுபதுபேர்களில் ஒருவனா அல்லது கிதியோனோடு யுத்தத்திற்குப் போன முந்நூறுபேரில் ஒருவனா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவன் கிதியோனின் மகனாக இருக்க வேண்டும். ஏனெனில் இவன் இளைஞனானபடியால் பயந்து தன் பட்டயத்தை உருவாதிருந்தான். சேபாவும், சல்முனாவும் கிதியோனிடம் தன்னைக் கொன்றுபோடுமாறு கூறுகிறார்கள். கிதியோன் அவர்களைக் கொன்றுபோட்டான். (நியா 8:21).

சாந்துக்காறைகள் שַׂהֲרֹן - saharon - 7720

வினைச்சொல் - கடன்கொடு - (**a round pendant for the neck; ornament, a necklace or chain**) (நியா 8:21,26). **round tires like the moon"** (ஏசா 3:18). ஒட்டகங்களின் கழுத்துக்களில் அணியப் பட்டிருக்கும் ஆபரணம். ஏசா 3:18 ஆவது வசனத்தில் இது பிறைச்சிந்தாக்கள் என்று அழைக்கப்படுகிறது.

(13) கிதியோனின் ஆளுகையும், அழிவும்

நியா 8:22 அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் கிதியோனை நோக்கி: நீர் எங்களை மீதியானியர் கைக்கு நீங்கலாக்கிவிட்டபடியினால் நீரும் உம்முடைய குமாரனும், உம்முடைய குமாரனின் குமாரனும், எங்களை ஆளக்கடவீர்கள் என்றார்கள்.

நியா 8:23 அதற்குக் கிதியோன்: நான் உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான்.

நியா 8:24 பின்பு கிதியோன் அவர்களை நோக்கி: உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன்; நீங்கள் அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். அவர்கள் இஸ்மவேலராயிருந்த படியினால் அவர்களிடத்தில் பொன்கடுக்கன்கள் இருந்தது.

நியா 8:25 இஸ்ரவேலர்: சந்தோஷமாய்க் கொடுப்போம் என்று சொல்லி, ஒரு வஸ்திரத்தை விரித்து, அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை அதிலே போட்டார்கள்.

நியா 8:26 பிறைச் சிந்தாக்குகளும், ஆரங்களும், மீதியானியரின் ராஜாக்கள் போர்த்துக் கொண்டிருந்த இரத்தாம்பரங்களும், அவர்களுடைய ஒட்டகங்களின் கழுத்துக்களிலிருந்த சரப்பணிகளும் அல்லாமல், அவன் கேட்டு வாங்கின பொன்கடுக்கன்களின் நிறை ஆயிரத்து எழுநூறு பொன்சேக்கலின் நிறையாயிருந்தது.

நியா 8:27 அதினால் கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கி, அதைத் தன் ஊரான ஒப்ராவிலே வைத்தான்; இஸ்ரவேலரெல்லாரும் அதைப் பின்பற்றிச் சோரம்போனார்கள்; அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று.

8 அதிகாரம்

நியா 8:28 இந்தப்பிரகாரம் மீதியானியர் திரும்ப தலையெடுக்கக்கூடாதபடிக்கு, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்; தேசமானது கிதியோனின் நாட்களில் நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது.

நியா 8:29 யோவாசின் குமாரனாகிய யெருபாகால் போய், தன் வீட்டிலே வாசமாயிருந்தான்.

நியா 8:30 கிதியோனுக்கு அநேகம் ஸ்திரீகள் இருந்தார்கள்; அவனுடைய கர்ப்பப்பிறப்பான குமாரர் எழுபதுபேர்.

நியா 8:31 சீகேமிலிருந்த அவனுடைய மறுமனையாட்டியும் அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு அபிமெலேக்கு என்று பேரிட்டான்.

"எங்களை ஆளக்கடவீர்கள்" - இஸ்ரவேல் மனுஷர் இப்போது கிதியோனைத் தேடி வருகிறார்கள். தங்களை ஆளுகை செய்யுமாறு கூறுகிறார்கள். கிதியோனின் மூன்று சந்ததிகளும் தங்களை ஆளுகை செய்ய வேண்டுமென்று இஸ்ரவேல் மனுஷர் கேட்டுக் கொள்கிறார்கள்.

கிதியோனைப் பற்றிய செய்திகள்

1. சுறுசுறுப்பாக இரகசிய இடத்தில் வேலை செய்கிறவன். (நியா 6:11)
2. பராக்கிரமசாலி. (நியா 6:12)
3. மார்க்கக் காரியங்களில் ஈடுபாடுள்ளவன். (நியா 6:13-27; நியா 8:27)
4. புத்திமான். (நியா 6:13)
5. கர்த்தரை விசுவாசிக்கிறவன். (நியா 6:13-25)
6. கர்த்தருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிகிறவன். (நியா 6:14,24-27)
7. தாழ்மையும், கீழ்ப்படிதலும் உள்ளவன். (நியா 6:15; நியா 8:23)
8. சந்தேகப்படுகிறவன். (நியா 6:17-23, 36-40; நியா 7:10-15)
9. ஆவியினால் நிரப்பப்பட்டு ஒருமுறை அபிஷேகம் பண்ணப்பட்டவன். (நியா 6:34)
10. தைரியசாலி. (நியா 6:34-35; நியா 8:10-12)
11. உதாரத்துவக் குணமுள்ளவன். (நியா 6:17-19)
12. பக்திவைராக்கியமுள்ளவன். (நியா 6:24-27)
13. பிறப்பிலேயே தலைமைத்துவ குணமுடையவன். (நியா 6:34-35; நியா 7:1-8:35)
14. விவேகமும், ஞானமுமுள்ளவன். (நியா 8:1-3)
15. இரக்கமுள்ளவன். அதேசமயத்தில் பழிவாங்குகிறவன். (நியா 8:18-21)
16. மெய்யான ஆராதனையைத்திரும்ப ஸ்தாபிப்பதில் அக்கறை உள்ளவன். (நியா 8:27)
17. பொன்னை நேசிக்கிறவன். (நியா 8:24-26)
18. பல ஸ்திரீகளை விவாகம் பண்ணியவன். (நியா 8:30)
19. எழுபது குமாரருக்குத் தகப்பன். (நியா 8:30)
20. விக்கிரகாராதனையின் கண்ணியில் மறுபடியும் விழுந்தவன்.(நியா 8:24-27)

கிதியோனின் விசுவாசத்தைப் பற்றி எபி 11:32 ஆவது வசனத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

8 அதிகாரம்

கிதியோனுக்கு வெகுமதி

1. இஸ்ரவேல் புத்திரர் அவனைக் கனப் படுத்தினார்கள். (நியா 8:22-23)
2. பொன்கடுக்கன்கள் (நியா 8:24-26)
3. பிறைச்சிந்தாக்குகள் (நியா 8:26)
4. ஆரங்கள்
5. இரத்தாம்பரங்கள்
6. சரப்பணிகள்

ஆரங்கள் נְטִיפָה - **netiyphah - 5188**

பெண்பால் பெயர்ச்சொல் - ஆரங்கள், கிளை **(a pendant for the ears, especially of pearls)**

"அவர்கள் இஸ்மவேலராயிருந்தபடியினால்" - இஸ்மவேலர் ஆபிரகாமிற்கும், ஆகாருக்கும் பிறந்தவர்கள் (ஆதி 16). மீதியானியர் ஆபிரகாமிற்கும், கெத்தூராளுக்கும் பிறந்தவர்கள். (ஆதி 25) மீதியானியர் அனைவருமே இஸ்மவேலர் என்று அழைக்கப் பட்டார்கள். ஆயினும் இஸ்மவேலர் அனைவரும் மீதியானியர் என்று அழைக்கப்படுவதில்லை. (ஆதி 37:25,28,36; ஆதி 39:1)

"அதினால் கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கி, அதைத் தன் ஊரான ஒப்ராவிலே வைத்தான்" - கிதியோன் முதலில் கர்த்தரிடத்தில் விசுவாசமாய் இருந்தான். (எபி 11:32). பின்பு பொன்னாபரணங்கள்மீது ஆசை வைத்தான். அது அவனுக்கு கண்ணியாயிற்று. அந்தப் பொன்னால் ஒரு ஏபோத்தை உண்டாக்கினான். (நியா 8:24லி26). மோசேயினுடைய ஏபோத்து இப்போது அழிந்துபோயிற்றா அல்லது பழையதாய்ப் போயிற்றா என்று தெரியவில்லை. கிதியோன் இஸ்ரவேல் புத்திரருக்கு உதவி புரிய விரும்புகிறான். அதனால் ஒரு ஏபோத்தைச் செய்கிறான். அந்த ஏபோத்து அவனுக்கும், அவன் வீட்டாருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் கண்ணியாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதிப்பதற்குப் பதிலாக அந்த ஏபோத்தை ஆராதிக்கிறார்கள். மீகா மேலும் ஒரு ஏபோத்தைச் செய்தான். (நியா 17:5, யாத் 28:2-43)

"மீதியானியர் .... இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்" - மீதியானியர் யுத்தத்தில் தோல்வி அடைந்தார்கள். அதன்பின்பு அவர்கள் இஸ்ரவேல் புத்திரர்மீது யுத்தம் பண்ணவில்லை. கிதியோன் நியாயாதிபதியாக இருந்த நாட்களில் இஸ்ரவேல் தேசம் நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது.

"அவனுடைய கர்ப்பப்பிறப்பான குமாரர் எழுபதுபேர்." - ஆகாபைப் போல கிதியோனுக்கும் எழுபது குமாரர்கள் இருந்தார்கள். (2இராஜா 10:1-8). ஆயினும் யாருக்கு அநேகம் ஸ்திரீகள் இருந்தார்கள் என்று தெரியவில்லை.

12. ஆறாவது முரண்பாடு

நியா 8:32 பின்பு யோவாசின் குமாரனாகிய கிதியோன் நல்ல விருத்தாப்பியத்திலே மரித்து, ஒப்ராவிலே தன் தகப்பனாகிய யோவாஸ் என்னும் அபியேஸ்ரியனுடைய கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான்.

நியா 8:33 கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போய், பாகால்பேரீத்தைத் தங்களுக்கு தேவனாக வைத்துக் கொண்டார்கள்.

நியா 8:34 இஸ்ரவேல் புத்திரர் தங்களைச் சுற்றிலுமிருந்த தங்கள் எல்லாச் சத்துருக்களின் கையினின்றும் தங்களை இரட்சித்த தங்கள் தேவனாகிய கர்த்தரை நினையாமலும்,

நியா 8:35 கிதியோன் என்னும் யெருபாகால் இஸ்ரவேலுக்குச் செய்த சகல நன்மைக்குந்தக்க தயவை அவன் வீட்டாருக்குப் பாராட்டாமலும் போனார்கள்.

8 அதிகாரம்

"கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போய்" - நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டுப் பின்வாங்குவதும், இதற்காக அவர்கள் சத்துருக்களின் கைகளில் ஒடுக்கப்படுவதும், இஸ்ரவேலர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதும், கர்த்தர் அவர்களுக்கு மனந்திறங்கி அவர்களை இரட்சிப்பதும், மறுபடியும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டுப் பின்வாங்குவதும் வழக்கமான சம்பவம். இப்போது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மறுதலித்துவிட்டு பாகால்பேரீத்தைத் தங்களுக்கு தேவனாக வைத்துக் கொண்டார்கள். அவர்கள் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போனார்கள். (நியா 2:17) இதற்காக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். (நியா 2:1-3:2)

"பாகால்பேரீத்" (**Baal-berith**) - இதற்கு உடன்படிக்கையின் பிரபு (**lord of the covenant**) என்று பொருள். ரோமருக்கும், கிரேக்கருக்கும் யூபித்தர், மெர்குரி போன்ற தெய்வங்களைப் போன்று பாகால்பேரீத் அவற்றிற்கு இணையான தெய்வமாகும். உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் பாகால்பேரீத் மேற்பார்வையிடும் என்பது இவர்களுடைய நம்பிக்கை.

கிதியோனின் காலத்திற்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போய் இந்தப் பாகால்பேரீத்தைத் தங்களுக்குத் தெய்வமாக வைத்துக் கொண்டார்கள். இந்தத் தெய்வத்தைப் பற்றி அதிகமான விவரம் எதுவும் தெரியவில்லை. பாகால்பேரீத்திற்கு சீகேமிலே ஒரு ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு ஆராதனை செய்வதுபோன்று, ஒரு மாயையான ஆராதனையைப் பாகால்பேரீத்திற்கும் செய்தார்கள். (நியா 9:46).

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள்

1. பாகால்களைப் பின்பற்றிச் சோரம் போனார்கள். (நியா 8:33).

2. பாகால்பேரீத்தைத் தங்களுக்கு தேவனாக வைத்துக் கொண்டார்கள்.

3. தங்களை இரட்சித்த தங்கள் தேவனாகிய கர்த்தரை நினையாமற்போனார்கள். (நியா 8:34).

4. கிதியோன் என்னும் யெருபாகால் இஸ்ரவேலுக்குச் செய்த சகல நன்மைக்குந்தக்க தயவை அவன் வீட்டாருக்குப் பாராட்டாமற் போனார்கள். (நியா 8:35).

9 அதிகாரம்

13. அபிமெலேக்கு - ஏழாவது நியாயாதிபதி - மூன்று வருஷங்கள் - (9:22)

(1) அபிமெலேக்கின் சதியாலோசனை - மூன்றாவது உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 25:25)

நியா 9:1 யெருபாகாலின் குமாரன் அபிமெலேக்கு சீகேமிலிருக்கிற தன் தாயின் சகோதரிடத்திற்குப் போய், அவர்களையும் தன் தாயின் தகப்பனுடைய வம்சமான அனைவரையும் நோக்கி:

நியா 9:2 யெருபாகாலின் குமாரர் எழுபதுபேராகிய எல்லாரும் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ, ஒருவன்மாத்திரம் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ என்று நீங்கள் சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரின் காதுகளும் கேட்கப் பேசுங்கள்; நான் உங்கள் எலும்பும் உங்கள் மாம்சமுமானவன் என்று நினைத்துக் கொள்ளுங்கள் என்றான்.

நியா 9:3 அப்படியே அவன் தாயின் சகோதரர் சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரின் காதுகளும் கேட்க இந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்காகப் பேசினார்கள்; அப்பொழுது: அவன் நம்முடைய சகோதரன் என்று அவர்கள் சொன்னதினால், அவர்கள் இருதயம் அபிமெலேக்கைப் பின்பற்றச் சாய்ந்தது.

நியா 9:4 அவர்கள் பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்து எழுபது வெள்ளிக்காசை எடுத்து அவனுக்குக் கொடுத்தார்கள்; அவைகளால் அபிமெலேக்கு வீணரும் போக்கிரிகளுமான மனுஷரைச் சேவகத்தில் வைத்தான்; அவர்கள் அவனைப் பின்பற்றினார்கள்.

நியா 9:5 அவன் ஒப்ராவிலிருக்கிற தன் தகப்பன் வீட்டிற்குப் போய், யெருபாகாலின் குமாரராகிய தன் சகோதரர் எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்தான்; ஆனாலும் யெருபாகாலின் இளைய குமாரனாகிய யோதாம் ஒளித்திருந்தபடியினால் அவன் தப்பினான்.

நியா 9:6 பின்பு சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரும், மில்லோவின் குடும்பத்தாரனைவரும் கூடிக்கொண்டு போய், சீகேமிலிருக்கிற உயர்ந்த கர்வாலி மரத்தண்டையிலே அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள்.

“அபிமெலேக்கு” **(Abimelech)** - இந்தப் பெயருக்கு ராஜாவின் தகப்பன் என்று பொருள். இவன் கிதியோனின் குமாரன். சீகேமிலிருக்கிற மறுமனையாட்டிக்குப் பிறந்தவன். (நியா 8:31). வேதாகமத்தில் அபிமெலேக்கு என்னும் பெயரில் ஐந்து நபர்கள் இருக்கிறார்கள். (நியா 9:1; ஆதி 20, ஆதி 26; 1சாமு 21:10-22:1; 1நாளா 18, 1நாளா 24). இஸ்ரவேல் புத்திரர் கிதியோனிடம் நீரும், உம்முடைய குமாரனும், உம்முடைய குமாரனின் குமாரரும் எங்களை ஆளக்கடவீர்கள் என்று கூறினார்கள். (நியா 8:22). கிதியோனுக்கு எழுபது குமாரர்கள் இருக்கிறார்கள். மற்ற குமாரர்களைப்போல தனக்கு அதிக உரிமை இருப்பதாக அபிமெலேக்கு நினைத்தான். சீகேமிலிருக்கிற தன் தாயின் ஆதரவை அபிமெலேக்கு பெற்றுக் கொள்கிறான். (நியா 9: 2-3). சீகேமிலிருக்கிற பெரிய மனுஷர்கள் அபிமெலேக்கிற்கு ஆதரவு தருகிறார்கள். தங்களுடைய பட்டணம் பிரசித்தி பெற்றதாக ஆகவேண்டும் என்பது அவர்களுடைய எண்ணம். கிதியோனின் எழுபது குமாரர்களைக் கொல்வதற்காகப் பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்து எழுபது வெள்ளிக் காசை எடுத்து அவனுக்குக் கொடுத்தார்கள். இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அபிமெலேக்கு வீணரும் போக்கிரிகளுமான மனுஷரைச் சேவகத்தில் வைத்தான். அவர்கள் யோதாமைத்தவிர கிதியோனின் எல்லாக் குமாரர்களையும் கொன்றுபோட்டார்கள். (நியா 9:4-5) இதன் பின்பு அபிமெலேக்கிற்கு எதிர்த்து நிற்பார் யாருமில்லை. சீகேமின் மனுஷர் அபிமெலேக்கை ராஜாவாக ஆக்கினார்கள். அவன் இஸ்ரவேலை மூன்று வருஷம் ஆட்சி புரிந்தான். கடைசியில் ஒரு ஸ்திரீ அவனைக் கொன்றுபோட்டாள். (நியா 9:6,22,53).

9 அதிகாரம்

"பாகால்பேரீத்தின் கோவில்" - சீகேமியர் பாகால்பேரீத்திற்கு ஒரு கோவிலைக் கட்டினார்கள். கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துவதற்குப் பதிலாக அவர்கள் பாகால்பேரீத்திற்குச் செலுத்தினார்கள். இந்தக் கோவில் பணத்திலிருந்துதான் கிதியோனின் எழுபது குமாரரைக் கொல்வதற்கான கூலிப்பணத்தை அபிமெலேக்கு பெற்றுக் கொண்டான். (நியா 8:33)

"வீணரும் போக்கிரிகளுமான மனுஷர்" - வேலைவெட்டியில்லாத மனுஷர்கள். சும்மா இருந்து பொழுதைப் போக்குகிறவர்கள். இவர்கள் மரித்துப் போனாலும் இவர்களைப் பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். இப்படிப்பட்ட துன்மார்க்கர் அபிமெலேக்கினுடைய ராஜ்ஜியத்தின் அஸ்திபாரமாக இருந்தார்கள். இவர்கள் மூலமாகவே அபிமெலேக்கிற்கு பல பிரச்சனைகள் உண்டாயிற்று.

"யெருபாகாலின் குமாரராகிய தன் சகோதரர் எழுபது பேரையும் ஒரே கல்லின் மேல் கொலைசெய்தான்" - எழுபது குமாரரில் யோதாம் மட்டும் தப்பியோடி பிழைத்துக் கொண்டான். (நியா 9: 7-21). வரலாற்றுக் காலங்களில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஒரே குடும்பத்திற்குள் இதுபோன்ற கொலை சம்பவங்கள் ஏராளமாய் நடைபெற்றிருக்கிறது.

"மில்லோவின் குடும்பத்தாரனைவரும்" - மில்லோ சீகேமிற்கு அருகிலுள்ள பெரிய ஊர். அரணிப்பான பட்டணம். இவர்கள் அபிமெலேக்கை ராஜாவாக ஆக்குவதற்கு சீகேமின் மனுஷருக்கு உதவி புரிந்தார்கள்.

"அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள்" - இஸ்ரவேலில் ஒரு ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் முதலாவது முயற்சி இங்கு நடைபெறுகிறது. மோசேக்கு 283 வருஷங்களுக்குப் பின்பு அபிமெலேக்கு ராஜாவானான். சவுலின் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுவதற்கு 247 வருஷங்களுக்கு முன்பு அபிமெலேக்கு ராஜாவானான்.

"உயர்ந்த கர்வாலிமரம்" - இது ஒரு மலையின்மேல் உள்ளது. அபிமெலேக்கு இஸ்ரவேலில் தன்னைத்தானே ராஜாவாக்கிக் கொண்டான். அவன் முடிசூடும் நிகழ்ச்சியை எல்லோரும் காணவேண்டுமென்பதற்காக உயர்ந்த கர்வாலி மரத்தண்டையில் ஜனங்கள் அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள்.

(2) யோதோமின் உவமையுடன்கூடிய தீர்க்கதரிசனம்

நியா 9:7 இது யோதாமுக்கு அறிவிக்கப் பட்டபோது, அவன் போய், கெரிசீம் மலையின் உச்சியில் ஏறி நின்று, உரத்தசத்தமிட்டுக் கூப்பிட்டு, அவர்களை நோக்கி: சீகேமின் பெரிய மனுஷரே, தேவன் உங்களுக்குச் செவிகொடுக்கும் படி நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்.

நியா 9:8 விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி போய், ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியா 9:9 அதற்கு ஒலிவமரம்: தேவர்களும் மனுஷரும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை நான் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது.

நியா 9:10 அப்பொழுது மரங்கள் அத்திமரத்தைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியா 9:11 அதற்கு அத்திமரம்: நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது.

நியா 9:12 அப்பொழுது மரங்கள் திராட்சச் செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியா 9:13 அதற்குத் திராட்சச்செடி: தேவர்களையும் மனுஷரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு மரங்களை அரசாளப்போவேனோ என்றது.

நியா 9:14 அப்பொழுது மரங்களெல்லாம் முட்செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

9 அதிகாரம்

நியா 9:15 அதற்கு முட்செடியானது மரங்களைப் பார்த்து: நீங்கள் என்னை உங்களுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறது மெய்யானால், என் நிழலிலே வந்தடையுங்கள்; இல்லாவிட்டால் முட்செடியிலிருந்து அக்கினி புறப்பட்டு லீபனோனின் கேதுரு மரங்களைப் பட்சிக்கக்கடவது என்றது.

யோதாமின் செயல்கள்

1. யோதாம் தன்னைக் கொலை பண்ணுகிறவர்களின் கையிலிருந்து ஓடி ஒளிந்தான். (நியா 9:5)
2. அபிமெலேக்கை ராஜாவாக்கியதற்காக சீகேமின் மனுஷரிடத்தில் தைரியமாகப் பேசினான். (நியா 9:7)
3. அபிமெலேக்கு ராஜாவாக்கப்பட்டதைக் குறித்து, உவமையாகவும், உருவகக் கதைகளாகவும் அவர்களிடம் எடுத்துக் கூறினான். (நியா 9:7-15)
4. தன்னுடைய உவமைக்கு வியாக்கியானம் கூறினான். (நியா 9:16-20)
5. அங்கிருந்து தப்பியோடி பேயேருக்குப் போனான். (நியா 9:21)

தீர்க்கதரிசன எண் - 12

"விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி போய், ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு ராஜாவாயிரு என்றது......" (நியா 9:8-20) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 9:22-57).

"விருட்சங்கள்" - வேதாகமத்தில் காணப்படும் முதலாவது உருவகக்கதை **(allegory)**. இந்த உருவகம் மிகவும் பழமையானது.

"ஒலிவமரம்" - பாலஸ்தீன தேசத்தில் உள்ள எல்லா விருட்சங்களிலும் ஒலிவமரமே மிகவும் பயனுள்ளது. இது தேவனுக்கும், மனுஷனுக்கும் நன்மை செய்வதில் பூரணமாக ஈடுபட்டிருக்கும். (நியா 9:9). அத்திமரம் இதற்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தது. இது மதுரமானது. ஜனங்களுக்கு நற்கனியைக் கொடுக்கும். (நியா 9:11). திராட்சச்செடி தேவர்களையும், மனுஷரையும் மகிழப்பண்ணும் திராட்சரசத்தைக் கொடுக்கக்கூடியது. (நியா 9:13). இவையெல்லாமே நல்ல விருட்சங்களாக இருந்தாலும், இவை மற்றவர்களுக்கு பலன் தருவதில் அதிக ஈடுபாடோடு இருந்தன. இவற்றிற்கு மனுஷரை ஆளுகை செய்ய நேரமில்லை. கடைசியாக முட்செடியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்தச் செடியே ராஜாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டது. (நியா 9:15).

"தேவர்களும் மனுஷரும்" - தேவாலயத்து ஆராதனையில் ஒலிவ எண்ணெய் பயன்படுத்தப் படுகிறது. (யாத் 27:20-21; லேவி 2:1) ஆகையினால், கர்த்தருக்கு ஒலிவமரம் முக்கியமானது.

"தேவர்களையும் மனுஷரையும் மகிழப் பண்ணும் என் ரசம்" - ஒலிவ எண்ணெயைப் போல திராட்சரசமும் ஆசரிப்புக் கூடாரத்து ஆராதனையில் பயன்படுத்தப் படுகிறது.

"முட்செடி" - தேவனுக்கும், மனுஷருக்கும் பயனற்றது. முட்செடிக்கு அருகில் நாம் போனாலே அதின் முட்கள் நம்மைக் குத்திவிடும். முட்செடி ஜனங்களைக் கொடூரமாக ஒடுக்கும் ராஜாவுக்கு அடையாளம். (நியா 9:15).

(3) யோதோம்தான் கூறிய உவமையை சீகேமிலிருக்கிற ஜனங்களுக்குப் பயன்படுத்தினார்

நியா 9:16 என் தகப்பன் உங்களுக்காக யுத்தம் பண்ணி, தன் ஜீவனை எண்ணாமற்போய், உங்களை மீதியானியரின் கையினின்று இரட்சித்தார்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

9 அதிகாரம்

நியா 9:17 நீங்களோ இன்று என் தகப்பனுடைய குடும்பத்துக்கு விரோதமாய் எழும்பி, அவருடைய குமாரரான எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்து, அவருடைய வேலைக்காரியின் மகனாகிய அபிமெலேக்கு உங்கள் சகோதரனான படியினால், அவனைச் சீகேம் பட்டணத்தாருக்கு ராஜாவாக்கினீர்கள்.

நியா 9:18 இப்போதும் நீங்கள் அவனை ராஜாவாக்கின செய்கை உண்மையும் உத்தமமுமான செய்கையாயிருக்கு மானால்,

நியா 9:19 நீங்கள் யெருபாகாலையும் அவர் குடும்பத்தாரையும் நன்மையாக நடத்தி, அவர் கைகளின் செய்கைக்குத் தக்கதை அவருக்குச் செய்து, இப்படி இந்நாளில் அவரையும் அவர் குடும்பத்தாரையும் நடத்தினது உண்மையும் உத்தமுமாயிருக்குமானால், அபிமெலேக்கின்மேல் நீங்களும் சந்தோஷமாயிருங்கள்; உங்கள்மேல் அவனும் சந்தோஷமாயிருக்கட்டும்.

நியா 9:20 இல்லாவிட்டால் அபிமெலேக்கிலிருந்து அக்கினி புறப்பட்டு, சீகேம் பட்டணத்தாரையும், மில்லோவின் குடும்பத்தாரையும் பட்சிக்கவும், சீகேம் பட்டணத்தாரிலும் மில்லோவின் குடும்பத்தாரிலுமிருந்து அக்கினி புறப்பட்டு, அபிமெலேக்கைப் பட்சிக்கவும்கடவது என்று யோதாம் சொல்லி,

நியா 9:21 தன் சகோதரனாகிய அபிமெலேக்குக்குப் பயந்து, தப்பியோடி, பேயேருக்குப் போய், அங்கே குடியிருந்தான்.

சீகேமியரின் பாவங்கள்

1. அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள். இவன் ஒரு கொலைகாரனும், துன்மார்க்கனும் ஆவான். (நியா 9:16, 18).
2. இஸ்ரவேலை இரட்சித்த கிதியோனின் குடும்பத்தாருக்கு நன்றியில்லாமற் போனார்கள். (நியா 9:16-17).
3. கிதியோனின் குடும்பத்திற்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள்.
4. கிதியோனின் குமாரரைக் கொலை பண்ணினார்கள்.

கிதியோனை மேன்மைப்படுத்துவதற்குக் காரணம்

1. கிதியோன் உங்களுக்காக யுத்தம் பண்ணினான்.
2. உங்களுக்காக தன் ஜீவனை எண்ணாமற்போனான்.
3. உங்களை மீதியானியரின் கையினின்று இரட்சித்தான்.

"அபிமெலேக்கு உங்கள் சகோதரனான படியினால், அவனைச் சீகேம் பட்டணத்தாருக்கு ராஜாவாக்கினீர்கள்" - யோதாம் இந்த உருவகக் கதையைக் கூறி அபிமெலேக்கின்மீது சாபத்தைத் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறான். இந்தச் சாபம் அவன்மீதும், அவன் ராஜ்யத்தின்மீதும் வரும். சீகேமின் ஜனங்களும், மில்லோவின் ஜனங்களும் அழிக்கப்படுவார்கள். (நியா 9:19-20).

"அபிமெலேக்கின்மேல் நீங்களும் சந்தோஷமாயிருங்கள்; உங்கள்மேல் அவனும் சந்தோஷமாயிருக்கட்டும்" - சீகேமியரின் பாவங்களை அடிப்படையாக வைத்து, யோதாம் தீர்க்கதரிசனம் கூறுகிறான். அவர்கள் சரியானதைச் செய்தால், அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும். அவர்கள் தவறானதைச் செய்தால் அபிமெலேக்கு சீகேமின் மனுஷரையும், மில்லோவின் மனுஷரையும் அழித்துப்போடட்டும். ஏனெனில் அவர்களே அவனை ராஜாவாக்கினார்கள். அவர்கள் அபிமெலேக்கை அழித்துப் போடட்டும். (நியா 9:19-20).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

9 அதிகாரம்

"பேயேர்" (Beer) - ஓர் மலையிலிருந்து அர்னோனின் வடக்குப் பகுதிக்கு செல்லும் வழியில் பேயேர் உள்ளது. (எண் 21:16). யோதாம் இங்கு செல்லவில்லை. பென்யமீன் தேசத்திலுள்ள எருசலேமிற்கு அருகிலுள்ள பேரோத்திற்குச் (Beeroth) சென்றான். (யோசு 9:17; யோசு 18:25; 2சாமு 4:2; எஸ்றா 2:25; எண் 7:29).

(4) நான்காவது உள்நாட்டு குழப்பம்

(அ) சீகேம் அபிமெலேக்குக்கு எதிராக செய்த சதி

நியா 9:22 அபிமெலேக்கு இஸ்ரவேலை மூன்று வருஷம் அரசாண்டபின்பு,

நியா 9:23 அபிமெலேக்குக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியை தேவன் வரப்பண்ணினார்.

நியா 9:24 யெருபாகாலின் எழுபது குமாரருக்குச் செய்யப்பட்ட கொடுமை வந்து பலித்து, அவர்களுடைய இரத்தப்பழி அவர்களைக் கொன்ற அவர்களுடைய சகோதரனாகிய அபிமெலேக்கின்மேலும், தன் சகோதரரைக் கொல்ல அவன் கைகளைத் திடப்படுத்தின சீகேம் மனுஷர் மேலும் சுமரும்படியாகச் சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்குக்கு இரண்டகம் பண்ணினார்கள்.

நியா 9:25 சீகேமின் மனுஷர் மலைகளின் உச்சியில் அவனுக்குப் பதிவிருக்கிறவர்களை வைத்தார்கள்; அவர்கள் தங்கள் அருகே வழிநடந்து போகிற யாவரையும் கொள்ளையிட்டார்கள்; அது அபிமெலேக்குக்கு அறிவிக்கப்பட்டது.

நியா 9:26 ஏபேதின் குமாரனாகிய காகால் தன் சகோதரரோடே சீகேமுக்குள் போனான்; சீகேமின் பெரிய மனுஷர் அவனை நம்பி,

நியா 9:27 வெளியே புறப்பட்டு, தங்கள் திராட்சத்தோட்டங்களின் பழங்களை அறுத்து, ஆலையாட்டி, ஆடிப்பாடி, தங்கள் தேவனின் வீட்டிற்குள் போய், புசித்துக் குடித்து, அபிமெலேக்கை சபித்தார்கள்.

நியா 9:28 அப்பொழுது ஏபேதின் குமாரனாகிய காகால்: அபிமெலேக்கு யார்? சீகேம் யார்? நாம் அவனைச் சேவிக்கவேண்டியதென்ன? அவன் யெருபாகலின் மகன் அல்லவா? சேபூல் அவனுடைய காரியக்காரன் அல்லவா? சீகேமின் தகப்பனாகிய ஏமோரின் மனுஷரையே சேவியுங்கள்; அவனை நாங்கள் சேவிப்பானேன்?

நியா 9:29 இந்த ஜனங்கள்மாத்திரம் என் கைக்குள் இருக்கட்டும்; நான் அபிமெலேக்கைத் துரத்திவிடுவேன் என்றான். உன் சேனையைப் பெருகப் பண்ணிப் புறப்பட்டுவா என்று, அவன் அபிமெலேக்குக்குச் சொல்லி யனுப்பினான்.

"பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியை தேவன் வரப்பண்ணினார்" - அபிமெலேக்கு இஸ்ரவேலை மூன்று வருஷம் அரசாளுவதற்கு கர்த்தர் அனுமதித்தார். அதன்பின்பு, கர்த்தர் பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியை அபிமெலேக்கிற்கும், சீகேமின் மனுஷருக்கும் வரப்பண்ணினார். சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்கிற்கு இரண்டகம் பண்ணினார்கள்.(நியா 9:22-23). சீகேமியருக்கும், அவர்களுடைய ராஜாவாகிய அபிமெலேக்கிற்கும், இடையில் காகால் கலகத்தை உண்டுபண்ணினான். பிசாசானவன் காகால் மூலமாகக் கிரியை செய்தான். (நியா 9:26-41)

நியாயத்தீர்ப்பின் நோக்கம்

1. கிதியோனின் குமாரரைக் கொல்வதற்காக அபிமெலேக்கைத் தண்டிப்பது.

2. கிதியோனின் குமாரரைக் கொல்வதற்குச் சீகேம் புத்திரர் அபிமெலேக்கிற்கு உதவி புரிந்ததற்காக அவர்களைத் தண்டிப்பது.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

9 அதிகாரம்

"சீகேமின் மனுஷர்" - ஒருகாலத்தில் அபிமெலேக்கு ராஜாவாக ஆவதற்கு சீகேமின் மனுஷர் அவனுக்கு உதவி புரிந்தார்கள். இப்போதோ அவர்கள் அவனுக்கு எதிராக எழும்பியிருக்கிறார்கள். (நியா 9:25-57).

சீகேமின் மனுஷருடைய கிரியைகள்

1. அபிமெலேக்கை அழிப்பதற்கு மலைகளின் உச்சியில் அவனுக்குப் பதிவிருக்கிறவர்களை வைத்தார்கள்.
2. அவர்கள் தங்கள் அருகே வழிநடந்து போகிற யாவரையும் கொள்ளையிட்டார்கள்.
3. அவர்கள் அபிமெலேக்குக்கு எதிராக எழும்பி காகாலை நம்பினார்கள். (நியா 9:26).
4. அபிமெலேக்குக்கு எதிராகக் கலகம் பண்ணி சதிபண்ணினார்கள். (நியா 9:27).
5. அபிமெலேக்குக்கு எதிராக வெளிப்படையாகவே யுத்தம் பண்ணினார்கள். (நியா 9:28-29).

"காகால்" (Gaal) - இவன் ஏபேதின் குமாரன். இவர்கள் இருவரைப் பற்றியுமே அதிகமான விவரம் எதுவும் தெரியவில்லை. அபிமெலேக்குக்கு எதிராகக் கலகத்தைத் தூண்டுவதற்காகக் காகால் சீகேமிற்கு வந்தான். (நியா 9:26-29). காகால் ஒரு கானானியன். சீகேமின் தகப்பனான ஏமோரின் சந்ததியில் வந்தவன். (நியா 9:28) ஆதி 34 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவத்திலிருந்து ஒருசிலர் தப்பித்திருக்கலாம். அபிமெலேக்குக் காகாலைத் தோற்கடித்தான். (நியா 9:39-40) சேபூல் காகாலையும், அவன் சகோதரரையும் சீகேமிலே குடியிராதபடிக்குத் துரத்திவிட்டான். (நியா 9:41).

"அபிமெலேக்கை சபித்தார்கள்" - ஒருகாலத்தில் இவர்கள் அபிமெலேக்கோடு உறவாடியவர்கள். இப்போது அபிமெலேக்கை சபிக்கிறார்கள். மூன்று வருஷங்களுக்கு முன்பு அபிமெலேக்கை ராஜாவாக ஆக்கி, அவனை ஆசீர்வதித்தவர்கள் இப்போது அவனைச் சபிக்கிறார்கள். (நியா 9:6,22,27).

"சேபூல்" (Zebul) - அபிமெலேக்கின் அதிகாரி. சீகேமிலுள்ள ஒரு பிரபு (நியா 9:28,30). இவன் அபிமெலேக்குக்கு உண்மையுள்ளவன். பட்டணத்திற்குள் அபிமெலேக்கிற்காக வேலை பார்த்தான். (நியா 9:30-41).

"ஏமோர்" (Hamor) - (ஆதி 34)

"இந்த ஜனங்கள்மாத்திரம் என் கைக்குள் இருக்கட்டும்" - (2சாமு 15:4)

(ஆ) அபிமெலேக்கு சீகேமிற்கு எதிராக செய்த சதி

நியா 9:30 பட்டணத்தின் அதிகாரியாகிய சேபூல் ஏபேதின் குமாரனாகிய காகாலின் வார்த்தைகளைக் கேட்டபோது, கோபமூண்டு,

நியா 9:31 இரகசியமாய் அபிமெலேக்கினிடத்துக்கு ஆட்களை அனுப்பி: இதோ, ஏபேதின் குமாரனாகிய காகாலும் அவனுடைய சகோதரரும் சீகேமுக்கு வந்திருக்கிறார்கள்; பட்டணத்தை உமக்கு விரோதமாக எழுப்புகிறார்கள்.

நியா 9:32 ஆகையால் நீர் உம்மோடிருக்கும் ஜனங்களோடேகூட இரவில் எழுந்து வந்து வெளியிலே பதிவிருந்து,

நியா 9:33 காலமே சூரியன் உதிக்கையில் எழும்பி, பட்டணத்தின்மேல் விழுந்து, அவனும் அவனோடிருக்கிற ஜனங்களும் உமக்கு எதிரே புறப்படும்போது, உம்முடைய கைக்கு நேரிடுகிறபடி அவனுக்குச் செய்யும் என்று சொல்லியனுப்பினான்.

9 அதிகாரம்

நியா 9:34 அப்படியே அபிமெலேக்கும், அவனோடிருந்த சகல ஜனங்களும், இரவில் எழுந்துபோய், சீகேமுக்கு விரோதமாக நாலு படையாகப் பதிவிருந்தார்கள்.

நியா 9:35 ஏபேதின் குமாரன் காகால் புறப்பட்டு, பட்டணத்தின் ஒலிமுக வாசலில் நின்றான்; அப்பொழுது பதிவிருந்த அபிமெலேக்கு தன்னோடிருக்கிற ஜனங்களோடேகூட எழும்பிவந்தான்.

"சேபூல்.......கோபமுண்டு" - பட்டணத்திற்குள் சேபூல் அபிமெலேக்குக்கு உண்மையுள்ளவனாக இருந்தான். அபிமெலேக்கு பட்டணத்திற்கு வெளியே சீகேமிற்கு எதிராக ஜனங்களைத் திரட்டுவதற்காகப் போய் இருக்கவேண்டும். அவன் தன் சேனையைப் பெருகப்பண்ணி, புறப்பட்டு வருகிறான். (நியா 9:29). காகாலின் வார்த்தைகளைப் பட்டணத்தின் அதிகாரி அபிமெலேக்குக்குச் சொல்லி அனுப்புகிறான். (நியா 9:30-41) முதலாவது யுத்தத்தில் ஏராளமானோர் கொல்லப்பட்டார்கள். சீகேமின் ஒலிமுக வாசல் வரையிலும் யுத்தம் பலத்தது. பட்டணத்து அதிகாரியாகிய சேபூல் யுத்தத்தில் பலத்து, காகாலையும், அவன் சகோதரரையும் சீகேமிலே குடியிராதபடிக்குத் துரத்திவிட்டான். (நியா 9:41) அபிமெலேக்கின் எல்லா சத்துருக்களும் முழுவதுமாக அழிக்கப்படவில்லை. (நியா 9:42-57)

"இரவில் எழுந்து வந்து வெளியிலே பதிவிருந்து" - சேபூல் அபிமெலேக்குக்குக் காகாலைப் பற்றி செய்தி அனுப்பினான். அபிமெலேக்கும், அவனோடு இருக்கும் ஜனங்களும், இரவில் எழுந்து வந்து, வெளியிலே பதிவிருக்க வேண்டும். காலமே சூரியன் உதிக்கையில் எழும்பி, பட்டணத்தின்மேல் விழவேண்டும். இதுதான் அவர்கள் யுத்த வியூகம். (நியா 9:32லி33) இதன் பிரகாரமாக அபிமெலேக்கும், அவனோடிருந்த சகல ஜனங்களும், இரவில் எழுந்துபோய், சீகேமுக்கு விரோதமாக நாலு படையாகப் பதிவிருந்தார்கள். (நியா 9:34).

"அவனும் அவனோடிருக்கிற ஜனங்களும்" - காகாலும், அவனுடைய சகோதரரும் அபிமெலேக்குக்கு எதிராகக் கலகம் பண்ணிய சீகேமின் மனுஷரும்.(நியா9:29-35).

"ஏபேதின் குமாரன் காகால் புறப்பட்டு, பட்டணத்தின் ஒலிமுகவாசலில் நின்றான்" - காலமே சூரியன் உதிக்கையில் காகாலும், யுத்தம் பண்ணுவதற்கு ஆயத்தமாக இருந்தான். ஒலிமுக வாசலுக்கு வந்து, அதிகாலையில் ஜனங்களுடைய நடமாட்டத்தைக் கவனித்தான். மலைகளின் உச்சிகளிலிருந்து ஜனங்கள் இறங்கிவருகிறார்கள் என்று காகால் சேபூலோடே சொன்னான். ஆனால் அது மனுஷரல்ல. மலைகளின் நிழல் என்று சேபூல் பதில் கூறினான். (நியா 9:35-36) அபிமெலேக்கும், அவனோடிருந்த ஜனங்களும் தேசத்தின் மேட்டிலிருந்து இறங்கிவந்தார்கள். அவனுடைய படைகளில் ஒன்று மெயோனெனீமின் கர்வாலிமரத்தின் வழியாய் வந்தது. இந்த யுத்தத்தில் பட்டண வாசல் மட்டும் அநேகர் வெட்டுண்டு விழுந்தார்கள். யாருக்கும் வெற்றி தோல்வி நிர்ணயம் பண்ண முடியாமல் இந்த யுத்தம் முடிவுற்றது. (நியா 9:37-40)

(இ) அபிமெலேக்கின் வெற்றி

நியா 9:36 காகால் அந்த ஜனங்களைக் கண்டு: இதோ, மலைகளின் உச்சிகளிலிருந்து ஜனங்கள் இறங்கி வருகிறார்கள் என்று சேபூலோடே சொன்னான். அதற்குச் சேபூல்: நீ மலைகளின் நிழலைக் கண்டு, மனுஷர் என்று நினைக்கிறாய் என்றான்.

நியா 9:37 காகாலோ திரும்பவும்: இதோ, ஜனங்கள் தேசத்தின் மேட்டிலிருந்து இறங்கிவந்து, ஒரு படை மெயோனெனீமின் கர்வாலிமரத்தின் வழியாய் வருகிறது என்றான்.

நியா 9:38 அதற்குச் சேபூல்: அபிமெலேக்கை நாம் சேவிக்கிறதற்கு அவன் யார் என்று நீ சொன்ன உன் வாய் இப்பொழுது எங்கே? நீ நிந்தித்த ஜனங்கள் அவர்கள் அல்லவா? இப்பொழுது நீ புறப்பட்டு, அவர்களோடே யுத்தம்பண்ணு என்றான்.

9 அதிகாரம்

நியா 9:39 அப்பொழுது காகால் சீகேமின் மனுஷருக்கு முன்பாகப் புறப்பட்டுப்போய், அபிமெலேக்கோடே யுத்தம்பண்ணினான்.

நியா 9:40 அபிமெலேக்கு அவனைத் துரத்த, அவன் அவனுக்கு முன்பாக ஓடினான்; பட்டணவாசல்மட்டும் அநேகர் வெட்டுண்டு விழுந்தார்கள்.

நியா 9:41 அபிமெலேக்கு அருமாவில் இருந்து விட்டான்; சேபூல் காகாலையும் அவன் சகோதரரையும் சீகேமிலே குடியிராதபடிக்குத் துரத்திவிட்டான்.

"மெயொனெனீம்" (Meonenim) - இது ஒரு சமபூமி. குறிசொல்லுகிறவர்களின் கர்வாலி மரம் என்று இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை குறிசொல்லுகிறவர்களைப் பார்க்கப்போகும் வழியாக இருக்கலாம்.

"அருமா" (Arumah) - சீகேமிலே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அபிமெலேக்கு அருமாவிற்கு ஓடிப்போனான். இது சீகேமிற்கு அருகிலுள்ள இடம்.

"சேபூல் காகாலையும் அவன் சகோதரரையும் சீகேமிலே குடியிராதபடிக்குத் துரத்திவிட்டான்" - சேபூல் சீகேமின் ஜனங்களோடே பேசி, காகாலையும், அவன் சகோதரரையும் அந்தப் பட்டணத்தைவிட்டு துரத்திவிட்டான். இதனால் அந்தப் பட்டணத்தில் மறுபடியும் சமாதானம் உண்டாயிற்று.

(ஈ) சீகேமின் அழிவு

நியா 9:42 மறுநாளிலே ஜனங்கள் வெளியிலே வயலுக்குப் போனார்கள்; அது அபிமெலேக்குக்கு அறிவிக்கப்பட்டபோது,

நியா 9:43 அவன் ஜனங்களைக் கூட்டிக் கொண்டு, அவர்களை மூன்று படையாக வகுத்து, வெளியிலே பதிவிருந்து, அந்த ஜனங்கள் பட்டணத்திலிருந்து புறப்பட்டு வருகிறதைக் கண்டு, அவர்கள்மேல் எழும்பி, அவர்களை வெட்டினான்.

நியா 9:44 அபிமெலேக்கும் அவனோடிருந்த படையும் பாய்ந்துவந்து, பட்டணத்தின் ஒலி முகவாசலில் நின்றார்கள்; மற்ற இரண்டு படைகளோ வெளியிலிருக்கிற யாவர்மேலும் விழுந்து, அவர்களை வெட்டினார்கள்.

நியா 9:45 அபிமெலேக்கு அந்நாள் முழுதும் பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ணி, பட்டணத்தைப் பிடித்து, அதிலிருந்த ஜனங்களைக் கொன்று, பட்டணத்தை இடித்து விட்டு, அதில் உப்பு விதைத்தான்.

நியா 9:46 அதைச் சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் கேள்விப்பட்டபோது, அவர்கள் பேரீத் தேவனுடைய கோவில் அரணுக்குள் பிரவேசித்தார்கள்.

நியா 9:47 சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் அங்கே கூடியிருக்கிறது, அபிமெலேக்குக்கு அறிவிக்கப்பட்டபோது,

நியா 9:48 அபிமெலேக்கு தன்னோடிருந்த எல்லா ஜனங்களோடுங்கூடச் சல்மோன் மலையில் ஏறி, தன் கையிலே கோடரியைப் பிடித்து, ஒரு மரத்தின் கொம்பை வெட்டி, அதை எடுத்து, தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு, தன்னோடிருந்த ஜனங்களை நோக்கி: நான் என்ன செய்கிறேன் என்று பார்க்கிறீர்களே, நீங்களும் தீவிரமாய் என்னைப்போலச் செய்யுங்கள் என்றான்.

நியா 9:49 அப்படியே சகல ஜனங்களும் அவரவர் ஒவ்வொரு கொம்பை வெட்டி, அபிமெலேக்குக்குப் பின்சென்று, அவைகளை அந்த அரணுக்கு அருகே போட்டு, அக்கினி கொளுத்தி அந்த அரணைச் சுட்டுப் போட்டார்கள்; அதினால் புருஷரும் ஸ்திரீகளும் ஏறக்குறைய ஆயிரம்பேராகிய சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் செத்தார்கள்.

9 அதிகாரம்

"மறுநாளிலே ஜனங்கள் வெளியிலே வயலுக்குப் போனார்கள்" - வயலுக்குப் போன ஜனங்களை அபிமெலேக்கு கொன்றுபோட்டான். (நியா 9:42வி44). பகல்பொழுது முழுவதும் யுத்தம் பண்ணி, சீகேமைக் கைப்பற்றினான். சீகேமிலிருந்த மனுஷர்கள் அபிமெலேக்கு பட்டணத்தைப் பிடித்து விட்டதைக் கேள்விப்பட்ட போது, அவர்கள் பேரீத் தேவனுடைய கோவில் அரணுக்குள் பிரவேசித்தார்கள். அபிமெலேக்கும், அவனோடிருந்த ஜனங்களும் சீகேம் பட்டணத்தின் அரணுக்கு அருகே மரங்களைப் போட்டு அக்கினி கொழுத்தி, அந்த அரணைச் சுட்டுப் போட்டார்கள்; அதினால் புருஷரும் ஸ்திரீகளும் ஏறக்குறைய ஆயிரம்பேராகிய சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் செத்தார்கள். (நியா 9:49). அதன்பின்பு, அபிமெலேக்கு தேபேசுக்குப் போய், அதற்கு விரோதமாய்ப் பாளயமிறங்கி, அதைப் பிடித்தான். அந்தப் பட்டணத்தின் நடுவே பலத்த துருக்கம் இருந்தது; அங்கே சகல புருஷரும் ஸ்திரீகளும் பட்டணத்து மனுஷர் அனைவரும் ஓடிப்புகுந்து, கதவைப் பூட்டிக் கொண்டு, துருக்கத்தின்மேல் ஏறினார்கள். அபிமெலேக்கு அந்தத் துருக்கம்மட்டும் வந்து, அதின்மேல் யுத்தம்பண்ணி, துருக்கத்தின் கதவைச் சுட்டெரித்துப் போடும்படிக்கு, அதின் கிட்டச் சேர்ந்தான். அப்பொழுது ஒரு ஸ்திரீ ஒருஎந்திரக்கல்லின் துண்டை அபிமெலேக்குடைய தலையின்மேல் போட்டாள்; அது அவன் மண்டையை உடைத்தது. (நியா 9:46வி57). இவ்வாறு யோதாம் கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. அபிமெலேக்குக்கும், சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியைத் தேவன் வரப்பண்ணினார். கிதியோனின் குமாரரைக் கொன்றுபோட்டதற்காகக் கர்த்தர் அவர்களிடத்தில் பழிவாங்கினார். (நியா 9:8 - 20).

"அதில் உப்பு விதைத்தான்" - ஒரு பட்டணத்தைப் பிடித்து அதில் உப்பு விதைக்கும் போது, அந்தப் பட்டணம் இனிமேல் ஒன்றுக்கும் உதவாமல் பாழாய்ப்போகும். தன்னுடைய சத்துருக்களுக்கு எதிராக யுத்தம்பண்ணி, அவர்களை அழித்ததற்கு அடையாளமாக அபிமெலேக்கு சீகேமில் உப்பு விதைக்க விரும்பினான். பட்டணத்தைப் பாழாக்குவதற்கு ஏராளமான உப்பு தேவைப்பட்டிருக்கும். வரலாற்றுக் காலத்தில் எருசலேமில் உப்பு விதைக்கப்பட்டிருக்கிறது. கிபி. 1162 ஆம் வருஷத்தில் இத்தாலியிலுள்ள மிலான் பட்டணத்தில் உப்பு விதைக்கப்பட்டிருக்கிறது. பிரான்ஸ் தேசத்தில் ராஜாவுக்கு விரோதமாக துரோகம் பண்ணியவர்களுடைய விளை நிலத்தில் உப்பு விதைத்து விடுவார்கள்.

"பேரீத் தேவனுடைய கோவில்" - சீகேம் துருக்கத்து மனுஷர் பேரீத் தேவனுடைய கோவில் அரணுக்குள் பிரவேசித்தார்கள். (நியா 8:33) அபிமெலேக்கு பேரீத் தேவனைக் கனம்பண்ணி, அந்தக் கோவிலுக்குள் வரமாட்டான் என்று நினைத்தார்கள். அது தங்களுக்கு பாதுகாப்பான இடமாக இருக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் அபிமெலேக்கோ இரக்கமற்றவனாக இருந்தான். கோவிலுக்குள் பிரவேசித்து, அங்குள்ள தெய்வங்களையும், ஜனங்களையும் அழித்துப்போட்டான். (நியா 9:46-49).

"சல்மோன்" (Zalmon) - இதற்கு நிழல் என்று பொருள். இது சீகேமிற்கு அருகிலுள்ள மலைப்பகுதி. இங்கு ஏராளமான மரங்கள் உள்ளன. பாகால்பேரீத்தின் கோவிலையும், அதிலுள்ள ஜனங்களையும் சுட்டெரிப்பதற்கு அபிமெலேக்கும், அவனுடைய ஜனங்களும் சல்மோனில் மரங்களை வெட்டினார்கள். "அபிமெலேக்கிலிருந்து அக்கினி புறப்பட்டு, சீகேம் பட்டணத்தாரையும், மில்லோவின் குடும்பத்தாரையும் பட்சிக்கும்" என்று யோதாம் ஏற்கெனவே இதைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறான். (நியா 9:20). இதன் பின்பு அபிமெலேக்கும், சுட்டெரிக்கப்பட்டான். இதனால் நியா 9:20 ஆவது வசனத்தில் பின்பகுதியில் கூறப்பட்டிருக்கும் மீதி தீர்க்கதரிசனமும் நிறைவேறிற்று. தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி நிறைவேறும்போது இந்தத் தீர்க்கதரிசனத்திலுள்ள எல்லாக் காரியங்களும் நிறைவேறும். (நியா 9:46-49).

(உ) அபிமெலேக்கின் மரணம்

நியா 9:50 பின்பு அபிமெலேக்கு தேபேசுக்குப் போய், அதற்கு விரோதமாய்ப் பாளயமிறங்கி, அதைப் பிடித்தான்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

9 அதிகாரம்

நியா 9:51 அந்தப் பட்டணத்தின் நடுவே பலத்த துருக்கம் இருந்தது; அங்கே சகல புருஷரும் ஸ்திரீகளும் பட்டணத்து மனுஷர் அனைவரும் ஓடிப்புகுந்து, கதவைப் பூட்டிக் கொண்டு, துருக்கத்தின்மேல் ஏறினார்கள்.

நியா 9:52 அபிமெலேக்கு அந்தத் துருக்கம்மட்டும் வந்து, அதின்மேல் யுத்தம்பண்ணி, துருக்கத்தின் கதவைச் சுட்டெரித்துப் போடும்படிக்கு, அதின் கிட்டச் சேர்ந்தான்.

நியா 9:53 அப்பொழுது ஒரு ஸ்திரீ ஒரு ஏந்திரக்கல்லின் துண்டை அபிமெலேக்குடைய தலையின்மேல் போட்டாள்; அது அவன் மண்டையை உடைத்தது.

நியா 9:54 உடனே அவன் தன் ஆயுததாரியாகிய வேலைக்காரனைக் கூப்பிட்டு: ஒரு ஸ்திரீ என்னைக் கொன்றாள் என்று என்னைக் குறித்துச் சொல்லாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் கொன்று போடு என்று அவனோடே சொன்னான்; அப்படியே அவன் வேலைக்காரன் அவனை உருவக் குத்தினான், அவன் செத்துப் போனான்.

நியா 9:55 அபிமெலேக்குச் செத்துப் போனதை இஸ்ரவேல் மனுஷர் கண்டபோது, அவர்கள் தங்கள்தங்கள் இடங்களுக்குப் போய் விட்டார்கள்.

நியா 9:56 இப்படியே அபிமெலேக்கு தன்னுடைய எழுபது சகோதரரைக் கொலை செய்ததினால், தன் தகப்பனுக்குச் செய்த பொல்லாப்பை தேவன் அவன்மேல் திரும்பப்பண்ணினார். செய்தார்.

நியா 9:57 சீகேம் மனுஷர் செய்த எல்லாப் பொல்லாப்பையும் தேவன் அவர்கள் தலையின்மேல் திரும்பும்படி செய்தார்; யெருபாகாலின் குமாரன் யோதாமின் சாபம் அவர்களுக்குப் பலித்தது.

“தேபேசு” (Thebez) - இது சீகேமிற்கு அருகிலுள்ள பட்டணம். இந்தப் பட்டணத்து ஜனங்களும், சீகேமின் ஜனங்களோடு சேர்ந்து, அபிமெலேக்குக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். சீகேமைப்போல இந்தப் பட்டணமும் எரிக்கப்படும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்படவில்லை. அபிமெலேக்கு தேபேசைப் பிடித்தான். அந்தப் பட்டணத்தின் நடுவே பலத்த துருக்கம் இருந்தது; அங்கே சகல புருஷரும் ஸ்திரீகளும் பட்டணத்து மனுஷர் அனைவரும் ஓடிப்புகுந்து, கதவைப் பூட்டிக் கொண்டு, துருக்கத்தின்மேல் ஏறினார்கள். அபிமெலேக்கு அந்தத் துருக்கம்மட்டும் வந்து, அதின்மேல் யுத்தம்பண்ணி, துருக்கத்தின் கதவைச் சுட்டெரித்துப் போடும்படிக்கு, அதின் கிட்டச் சேர்ந்தான். அப்பொழுது ஒரு ஸ்திரீ ஒரு ஏந்திரக்கல்லின் துண்டை அபிமெலேக்குடைய தலையின்மேல் போட்டாள்; அது அவன் மண்டையை உடைத்தது. (நியா 9:51-57).

“நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் கொன்று போடு” - ஒரு ஸ்திரீ தன்னைக் கொன்றுபோட்டாள் என்று யாரும் தன்னைக் குறித்துச் சொல்லக்கூடாது என்பதில் அபிமெலேக்கு மிகுந்த எச்சரிப்போடு இருக்கிறான். ஆகையினால் அவன் தன்னுடைய ஆயுததாரியாகிய வேலைக்காரனைப் பார்த்து “நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் கொன்று போடு” என்று சொன்னான். அப்படியே அவன் வேலைக்காரன் அவனை உருவக் குத்தினான், அவன் செத்துப்போனான். (1சாமு 31:3-6; 2சாமு 1:6-16).

“தன் தகப்பனுக்குச் செய்த பொல்லாப்பை தேவன் அவன்மேல் திரும்பும்படி செய்தார்” - மனுஷன் தான் விதைத்ததையே அறுப்பான். கர்த்தருடைய வார்த்தையை மீறுகிறவர்களுக்கு அதற்குரிய தண்டனை வரும். கர்த்தர் பல சமயங்களில் தாமாகவே நேரடியாக யாரையும் தண்டிப்பதில்லை. ஆனால் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் துன்மார்க்கருக்கு ஏழ்வது ஒரு வழியில் தண்டனை வருவதை அனுமதிக்கிறார். மனுஷர் தங்களுடைய பாவத்திற்குத் தண்டனையை இந்தப் பூலோக வாழ்வில் அனுபவிக்காவிட்டாலும், மரணத்திற்குப் பின்பு பாவம் செய்தவர்கள் நரகத்தில் பாடுகளை அனுபவிப்பார்கள். அபிமெலேக்கின் விஷயத்தில் கிதியோனின் குமாரன் யோதாமின் சாபம் அவனுக்குப் பலித்தது. (ரோமர் 2: 12-16; கலா 6:7-8).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

10 அதிகாரம்

14. தோலா - எட்டாவது நியாயாதிபதி - இருபத்தி மூன்று வருஷங்கள்

நியா 10:1 அபிமெலேக்குக்குப் பின்பு, தோதோவின் மகனாகிய பூவாவின் குமாரன் தோலா என்னும் இசக்கார் கோத்திரத்தான் இஸ்ரவேலை இரட்சிக்க எழும்பினான்; அவன் எப்பிராயீம் மலைத்தேசத்து ஊராகிய சாமீரிலே குடியிருந்தான்.

நியா 10:2 அவன் இஸ்ரவேலை இருபத்துமூன்று வருஷம் நியாயம் விசாரித்து, பின்பு மரித்து, சாமீரிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

"தோலா" **(Tola)** - இஸ்ரவேலின் எட்டாவது நியாயாதிபதி. இந்த இரண்டு வசனங்களில் தோலாவைப் பற்றி கூறப்பட்டிருப்பதைத் தவிர வேறு விவரம் எதுவும் தெரியவில்லை. இவன் இஸ்ரவேலை 23 வருஷங்கள் நியாயம் விசாரித்தான். (நியா 10: 1-2)

"சாமீர்" **(Shamir)** - (நியா 10:1-2; யோசு 15:48).

15. யாவீர் - ஒன்பதாவது நியாயாதிபதி - இருபத்திரண்டு வருஷங்கள்

நியா 10:3 அவனுக்குப்பின்பு, கீலேயாத்தியனானயாவீர் எழும்பி, இஸ்ரவேலை இருபத்திரண்டு வருஷம் நியாயம் விசாரித்தான்.

நியா 10:4 முப்பது கழுதைக்குட்டிகளின் மேல் ஏறும் முப்பது குமாரர் அவனுக்கு இருந்தார்கள்; அவர்களுக்கு முப்பது ஊர்களும் இருந்தது; கீலேயாத் தேசத்திலிருக்கிற அவைகளுக்கு இந்நாள்வரைக்கும் யாவீரின் கிராமங்களென்கிற பேர் இருக்கிறது.

நியா 10:5 யாவீர் மரித்து, காமோனிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

"யாவீர்" **(Jair)** - எண் 32:41; உபா 3:14; யோசு 13:30 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யாவீர் அல்ல. இவன் யாவீரின் சந்ததியில் வந்தவனாக இருக்கலாம். முதலாவது யாவீர் யோசுவாவின் நாட்களில் வாழ்ந்தவன். இந்த யாவீர் ஒரு நியாயாதிபதி. இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, 309 வருஷங்களுக்குப் பின்பு, நடைபெறும் சம்பவத்தில் இந்த யாவீர் வருகிறான். யாவீருக்கு முன்பாக எட்டு நியாயாதிபதிகள் இருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஐந்து தடவை அடிமைத்தனத்தில் சிக்கியிருந்தார்கள். இவனுக்கு முப்பது குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் முப்பது கழுதைக்குட்டிகளின்மேல் ஏறக்கூடியவர்கள். அவர்களுக்கு கீலேயாத்தில் முப்பது ஊர்களும் இருந்தன. (நியா 10:4).

"இருபத்திரண்டு வருஷம்" - தோலா 23 வருஷமும், யாவீர் 22 வருஷமும் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார்கள். இந்த 45 வருஷக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் அமரிக்கையாயிருந்தது. மற்ற தேசங்கள் இவர்கள்மீது யுத்தம் பண்ணவில்லை. தோலா இஸ்ரவேலை இரட்சிக்க எழும்பினான். ஆனால் எந்த யுத்தத்தைப் பற்றியும் இந்த வசனங்களில் கூறப்படவில்லை. (நியா 10:1-3).

"கழுதைக்குட்டிகள்" **(ass colts)** - (நியா 5:10)

"யாவீரின் கிராமங்கள்" **(Havothjair)** - (எண் 32:41)

"காமோன்" **(Camon)** - கீலேயாத்திலுள்ள யாவீரின் கிராமங்களில் ஒன்று.

16. ஏழாவது முரண்பாடும், ஆறாவது அடிமைத்தனமும் - பெலிஸ்தர், அம்மோன் புத்திரர் ஆகியோரின் கீழ் பதினெட்டு வருஷங்கள்

நியா 10:6 இஸ்ரவேல் புத்திரர், மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்புச் செய்து, கர்த்தரைச் சேவியாமல் அவரை விட்டுப் போய், பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும், அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவித்தார்கள்.

10 அதிகாரம்

நியா 10:7 அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டு, அவர்களைப் பெலிஸ்தர் கையிலும், அம்மோன் புத்திரர் கையிலும் விற்றுப்போட்டார்.

நியா 10:8 அவர்கள் அந்த வருஷம் முதற்கொண்டு பதினெட்டு வருஷமாய் யோர்தானுக்கு அப்பாலே கீலேயாத்திலுள்ள எமோரியரின் தேசத்தில் இருக்கிற இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்கினார்கள்.

நியா 10:9 அம்மோன் புத்திரர் யூதாவின்மேலும், பென்யமீன்மேலும், எப்பிராயீம் குடும்பத்தார்மேலும் யுத்தம்பண்ண யோர்தானைக் கடந்து வந்தார்கள்; இஸ்ரவேலர் மிகவும் நெருக்கப்பட்டார்கள்.

"பாகால்களையும், அஸ்தரோத்தையும்" - இந்த தெய்வங்கள் பன்மையில் கூறப் பட்டிருக்கின்றன.

கர்த்தரைக் கோபம் மூளச்செய்யும் பாவங்கள்

1. கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்புச் செய்தல்.

2 பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும், அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவிப்பது.

3. கர்த்தரைச் சேவியாமல் இருப்பது.

4. கர்த்தரை விட்டுப் போய்விடுவது.

"கோபமூண்டு" - (நியா 2:14)

"விற்றுப்போட்டார்" - (நியா 2:14)

இஸ்ரவேல் புத்திரரை நெருக்கி ஒடுக்குகிறவர்கள்

1. தெற்கு யூதேயாவிலுள்ள பெலிஸ்தர்

2. யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள அம்மோன் புத்திரர்

"பதினெட்டு வருஷம்" - இஸ்ரவேல் புத்திரரின் மூன்றாவது அடிமைத்தனம் 18 வருஷக்காலத்துக்கு நீடித்தது. இந்தக் காலத்தில் யூதா, பென்யமீன், எப்பிராயீம் ஆகியோர் மிகவும் நெருக்கப்பட்டார்கள். (நியா 10:8-9).

17. இஸ்ரவேலர் மனந்திரும்பினார்கள் - இஸ்ரவேலரின் வார்த்தைகளை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை

நியா 10:10 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டு: உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; நாங்கள் எங்கள் தேவனைவிட்டு, பாகால்களைச் சேவித்தோம் என்றார்கள்.

நியா 10:11 கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: எகிப்தியரும், எமோரியரும், அம்மோன் புத்திரரும், பெலிஸ்தியரும்,

நியா 10:12 சீதோனியரும், அமலேக்கியரும், மாகோனியரும், உங்களை ஒடுக்கும் சமயங்களில், நீங்கள் என்னை நோக்கி முறையிட்டபோது, நான் உங்களை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவில்லையா?

நியா 10:13 அப்படியிருந்தும் நீங்கள் என்னை விட்டு, அந்நிய தேவர்களைச் சேவித்தீர்கள்; ஆகையால் இனி உங்களை இரட்சியேன்.

நியா 10:14 நீங்கள் போய், உங்களுக்காகத் தெரிந்துகொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள்; அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும் என்றார்.

"கர்த்தரை நோக்கி முறையிட்டு" - (நியா 3:15)

10 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரரின் பாவஅறிக்கை

1. உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்.

2. நாங்கள் பாகால்களைச் சேவித்தோம்.

கர்த்தருடைய பதிலுரை

1. எகிப்தியரின் கைக்கு நீங்கலாக்கி உங்களை நான் இரட்சிக்கவில்லையா. (யாத் 1:1-15:27)

2. எமோரியரின் கைக்கு நீங்கலாக்கி உங்களை நான் இரட்சிக்கவில்லையா. (எண் 21:21-35; யோசு 5:1-6:27; யோசு 10:5-12; யோசு 24: 8-18)

3. அம்மோன் புத்திரரின் கைக்கு நீங்கலாக்கி உங்களை நான் இரட்சிக்கவில்லையா. (யோசு 13:25). இதற்கு முன்பு அம்மோன் புத்திரரோடு யுத்தம் நடைபெற்றதாக செய்தி எதுவுமில்லை. ஆனால் இதற்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரர் அம்மோன் புத்திரரை முறியடித்தார்கள். (நியா 11:4,28-40; 1சாமு 11:11;1சாமு 14:47;2சாமு 8:11-12; 2சாமு 10:1-11:1; 2சாமு 12:26-31)

4. பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி உங்களை நான் இரட்சிக்கவில்லையா. (நியா 3:31; நியா 10:11)

5. சீதோனியரின் கைக்கு நீங்கலாக்கி உங்களை நான் இரட்சிக்கவில்லையா. (நியா 3:3; நியா 10:12; யோசு 13:6)

6. அமலேக்கியரின் கைக்கு நீங்கலாக்கி உங்களை நான் இரட்சிக்கவில்லையா. (நியா 3:13; நியா 5:14; நியா 7:12; நியா 10:12; யாத் 17: 8-16; 1சாமு 15)

7. மாகோனியரின் கைக்கு நீங்கலாக்கி உங்களை நான் இரட்சிக்கவில்லையா. (நியா 10:12; 1சாமு 23:24)

8. நான் உங்களை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவில்லையா? (நியா 10:12).

9. நீங்கள் என்னை விட்டு விட்டீர்கள். (நியா 10:13).

10. அந்நிய தேவர்களைச் சேவித்தீர்கள்; ஆகையால் இனி உங்களை இரட்சியேன்.

11. நீங்கள் போய், உங்களுக்காகத் தெரிந்து கொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள். (நியா 10:14).

12. அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும்.

18. தங்கள் பாவங்களை விலக்கி, உண்மையான மனந்திரும்புதலை இஸ்ரவேலர்கள் உறுதி பண்ணினார்கள்

நியா 10:15 இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி: பாவஞ்செய்தோம், தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும்; இன்றைக்கு மாத்திரம் எங்களை இரட்சித்தருளும் என்று சொல்லி,

நியா 10:16 அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்.

இஸ்ரவேல் புத்திரரின் உண்மையான மனந்திரும்புதல்

1. மனந்திருந்துதலின் ஜெயம்

(1) பாவஞ்செய்தோம் - பாவஅறிக்கை செய்கிறார்கள். (லூக்கா 15:1-5; 1யோவான் 1:9)

(2) தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும் - கர்த்தருடைய சித்தத்திற்குத் தங்களைப் பூரணமாக ஒப்புக் கொடுக்கிறார்கள்.

10 அதிகாரம்

(3) இன்றைக்குமாத்திரம் எங்களை இரட்சித்தருளும் - தங்களுடைய பாவ நிலைமையிலிருந்து உடனடியாக விடுதலை பெற வேண்டுமென்று தங்களைப் பூரணமாகக் கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணுவது.

2. மனந்திருந்துதலின் கிரியை

(1) அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டார்கள்.(நியா 10:16)

(2) கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்

"அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்" - நியா 10:15 ஆவது வசனத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி தங்கள் வாயினால் பாவஅறிக்கை செய்கிறார்கள். இது உண்மையான பாவஅறிக்கை. ஆகையினால் நியா 10:16 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டு காரியங்களையும் செய்கிறார்கள். அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கி விட்டுவிடுவதும், கர்த்தருக்கு ஆராதனை செய்வதும் அவர்களுடைய தீர்மானத்தின் முக்கியமான பகுதியாகும். சர்வாங்க தகனபலிகளைவிட இது மேன்மையானது. தம்மை முழு இருதயத்தோடு ஆராதிக்க வேண்டும் என்பதையே கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். (1சாமு 15:22; மீகா 6:8). இஸ்ரவேல் புத்திரர் அதைச் செய்தார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்.

"மனதுருகினார்" - கர்த்தருக்கு ஒரு மனது உள்ளது. தேவனுடைய ஆத்துமா மனுஷனுடைய ஆத்துமாவைப்போல உணர்வுகள், பொறுமைகள், ஆவல்கள், எல்லாவற்றிற்கும் இருப்பிடமாகும். (யோவான் 4:24)

19. யுத்தத்திற்கு ஆயத்தம்

நியா 10:17 அம்மோன் புத்திரர் கூட்டங்கூடி, கீலேயாத்திலே பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் கூடிக்கொண்டு, மிஸ்பாவிலே பாளயமிறங்கினார்கள்.

நியா 10:18 அப்பொழுது கீலேயாத்தின் ஜனங்களும் பிரபுக்களும் ஒருவரையொருவர் நோக்கி: அம்மோன் புத்திரர்மேல் முந்தி யுத்தம் பண்ணப்போகிற மனுஷன் யார்? அவனே கீலேயாத்தின் குடிகளுக்கு எல்லாம் தலைவனாயிருப்பான் என்றார்கள்.

"கீலேயாத்" (Gilead) - யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள மலைதேசம். காத் புத்திரர் இங்கு குடியிருந்தார்கள். (யோசு 13:25). மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்கும் (யோசு 13:30-31), ரூபன் புத்திரருக்கும் (உபா 3:12) கீலேயாத்தின் ஒரு பகுதி சுதந்தரமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. மனாசேயின் பாதிக் கோத்திரத்தார் கீலேயாத்தின் வடக்குப் பகுதியைப் பெற்றுக் கொண்டார்கள். இது யாப்போக்கு நதியின் வடக்குப் பகுதியாகும். இது யாயீர், மாகீர் ஆகியவற்றிற்கு இடையில் உள்ளது. ரூபன் புத்திரருக்கும், காத் புத்திரருக்கும் கீலேயாத்தின் தென்பகுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இது யாப்போக்கு நதிக்கும், அர்னோன் நதிக்கும் நடுவிலுள்ளது. கீலேயாத்தின் முழு தேசமும் யோர்தான் நதியின் கிழக்குப் பகுதியில் உள்ளது.

"மிஸ்பா" (Mizpeh) - யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள பட்டணம். இங்கு யெப்தா தன்னுடைய சேனையைத் திரட்டினான். (நியா 11:11,29).

"அவனே கீலேயாத்தின் குடிகளுக்கெல்லாம் தலைவனாயிருப்பான்" - அம்மோன் புத்திரர்மீது முந்தி யுத்தம் பண்ணப்போகிற மனுஷனுக்குக் கீலேயாத்தின் குடிகளுக்கெல்லாம் தலைவனாயிருக்கக்கூடிய சிலாக்கியம் கொடுக்கப்படுகிறது.

11 அதிகாரம்

20. யெப்தா - பத்தாவது நியாயாதிபதி - ஆறு வருஷங்கள் - (12:7)

(1) யெப்தாவிற்கு தன் தகப்பன் வீட்டில் சுதந்திரம் இல்லை

நியா 11:1 கீலேயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் பரஸ்திரீயின் குமாரன்; கிலெயாத் அவனைப் பெற்றான்.

நியா 11:2 கிலெயாத்தின் மனைவியும் அவனுக்குக் குமாரர்களைப் பெற்றாள்; அவன் மனைவி பெற்ற குமாரர் பெரியவர்களான பின்பு, அவர்கள் யெப்தாவை நோக்கி: உனக்கு எங்கள் தகப்பன் வீட்டிலே சுதந்தரம் இல்லை; நீ அந்நிய ஸ்திரீயின் மகன் என்று சொல்லி அவனைத் துரத்தினார்கள்.

நியா 11:3 அப்பொழுது யெப்தா: தன் சகோதரரை விட்டு ஓடிப்போய் தோப் தேசத்திலே குடியிருந்தான்; வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு, அவனோடேகூட யுத்தத்திற்குப் போவார்கள்.

யெப்தாவைப் பற்றிய விவரம்

1. கீலேயாத்தில் பிறந்தவன். இவனுடைய தகப்பனின் பெயர் கிலெயாத். இவனுடைய தாய் ஒரு பரஸ்திரீ.
2. யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான்.
3. யெப்தாவின் தகப்பனுடைய புத்திரர் அவனைத் தங்கள் தகப்பன் வீட்டில் சுதந்தரமில்லையென்று கூறி அவனைத் துரத்தினார்கள். (நியா 11:2).
4. யெப்தா தன் சகோதரரை விட்டு ஓடிப்போய் தோப்தேசத்திலே குடியிருந்தான் (நியா 11:3).
5. வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு, அவனோடேகூட யுத்தத்திற்குப் போவார்கள்.
6. அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் பண்ணினார்கள். கீலேயாத்தின் மூப்பர் தங்களுக்கு சேனாபதியாக இருக்க வேண்டுமென்று யெப்தாவைக் கேட்டுக் கொண்டார்கள்.
7. யெப்தா கீலேயாத்தின் மூப்பரைப் பார்த்து: நீங்கள் அல்லவா என்னைப் பகைத்து, என் தகப்பன் வீட்டிலிருந்து என்னைத் துரத்தினவர்கள் என்று கூறி அவர்களைக் கடிந்து கொண்டான். (நியா 11:7).
8. கர்த்தர் அவர்களை என் முன்னிலையாய் ஒப்புக்கொடுத்தால், என்னை உங்களுக்குத் தலைவனாய் வைப்பீர்களா என்று கீலேயாத்தின் மூப்பரை யெப்தா கேட்டான். (நியா 11:8-9).
9. கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவின் வார்த்தைக்கு சம்மதம் தெரிவிக்கிறார்கள். (நியா 11:10).
10. ஜனங்கள் யெப்தாவை மிஸ்பாவில் தங்கள்மேல் தலைவனும் சேனாபதியுமாக வைத்தார்கள். (நியா 11:11).
11. யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி முடிந்தால் யுத்தத்தைத் தவிர்க்குமாறு கூறினான். (நியா 11:12).
12. அம்மோன் புத்திரரின் ராஜா யெப்தாவின் ஸ்தானாபதிகளை நோக்கி: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, அர்னோன் துவக்கி யாபோக்மட்டும், யோர்தான்மட்டும் இருக்கிற என் தேசத்தைக் கட்டிக் கொண்டார்களே; இப்பொழுது அதை எனக்குச் சமாதானமாய்த் திரும்பக் கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லுங்கள் என்றான்.
13. யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவினுடைய குற்றச்சாட்டுக்களை வரலாற்று ஆதாரங்களைக்கூறி மறுக்கிறான். (நியா 11:14-18).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

11 அதிகாரம்

14. இஸ்ரவேல் புத்திரருக்கு எமோரியரின் தேசத்தைப் பிடித்துக் கொள்ளும் நோக்கமில்லை. கானான் தேசத்திற்கு போகும்போது அவர்கள் தங்கள் தேசத்தின் வழியாக இஸ்ரவேல் புத்திரரைப் பிரயாணம் பண்ண அனுமதியாததினால் யுத்தம் உண்டாயிற்று என்று யெப்தா விளக்கம் கூறுகிறான். (நியா 11:19-22).

15. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எமோரியரைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்தியிருக்கிறார். அது அம்மோன் புத்திரருக்கு உரிய தேசமல்ல. ஆகையினால் அதை அம்மோன் புத்திரருக்குத் தர இயலாது என்று யெப்தா தீர்மானமாகக் கூறுகிறான். (நியா 11:23).

16. அம்மோன் புத்திரர் தங்களுக்கு உள்ள தேசத்தில் திருப்தியாக இருக்க வேண்டும் என்று யெப்தா ஆலோசனை கூறுகிறான். தாங்கள் அம்மோன் புத்திரருக்கு அநியாயம் செய்யவில்லை என்று கூறிவிட்டு, அவர்கள்மீது யுத்தம் பண்ணுவதற்கு ஆயத்தமாக இருக்கிறான். (நியா 11:24-27)

17. யெப்தாவின் வார்த்தைக்கு அம்மோன் புத்திரரின் ராஜா செவிகொடுக்கவில்லை. (நியா 11:28).

18. கர்த்தருடைய ஆவி யெப்தாவின்மேல் இறங்கினார். அவன் அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போனான். (நியா 11:29)

19. யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணினான். (நியா 11:30-31).

20. கர்த்தர் அம்மோன் புத்திரரை யெப்தா கையில் ஒப்புக்கொடுத்தார். (நியா 11:32-33)

21. யெப்தா தன் பொருத்தனையை நிறைவேற்றினான். (நியா 11:34-40).

22. எப்பிராயீமில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தை அடக்கி, அங்கு 42,000 மனுஷரைக் கொன்றுபோட்டான். (நியா 12:1-6).

23. யெப்தா இஸ்ரவேலை ஆறு வருஷம் நியாயம்விசாரித்தான். பின்பு அவன் மரித்தான். அவனை கீலேயாத்திலுள்ள ஒரு பட்டணத்தில் அடக்கம் பண்ணினார்கள். (நியா 12:7).

"தோப்" (Tob) - இது ஒரு நல்ல தேசம். சீரியாவிற்குத் தென் கிழக்கில் உள்ளது. (நியா 11:3-5).

(2) அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ணுவதற்கு சேனாதிபதியாக இருக்குமாறு யெப்தாவை அழைத்தார்கள்

நியா 11:4 சிலநாளைக்குப்பின்பு, அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் பண்ணினார்கள்.

நியா 11:5 அவர்கள் இஸ்ரவேலின்மேல் யுத்தம் பண்ணும்போது கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவைத் தோப்தேசத்திலிருந்து அழைத்துவரப்போய்,

நியா 11:6 யெப்தாவை நோக்கி: நீ வந்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ண எங்கள் சேனாபதியாயிருக்க வேண்டும் என்றார்கள்.

(3) யெப்தாவின் நிபந்தனை

நியா 11:7 அதற்கு யெப்தா கீலேயாத்தின் மூப்பரைப் பார்த்து: நீங்கள் அல்லவா என்னைப் பகைத்து, என் தகப்பன் வீட்டிலிருந்து என்னைத் துரத்தினவர்கள்? இப்பொழுது உங்களுக்கு ஆபத்து நேரிட்டிருக்கிற சமயத்தில் நீங்கள் என்னிடத்தில் ஏன் வருகிறீர்கள் என்றான்.

நியா 11:8 அதற்குக் கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை நோக்கி: நீ எங்களுடனேகூட வந்து, அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ணி, கீலேயாத்தின் குடிகளாகிய எங்கள் அனைவர் மேலும் தலைவனாயிருக்க வேண்டும்; இதற்காக இப்பொழுது உன்னிடத்தில் வந்தோம் என்றார்கள்.

11 அதிகாரம்

நியா 11:9 அதற்கு யெப்தா: அம்மோன் புத்திரரோடே யுத்தம்பண்ண, நீங்கள் என்னைத் திரும்ப அழைத்துப்போனபின்பு, கர்த்தர் அவர்களை என் முன்னிலையாய் ஒப்புக்கொடுத்தால், என்னை உங்களுக்குத் தலைவனாய் வைப்பீர்களா என்று கீலேயாத்தின் மூப்பரைக் கேட்டான்.

"இதற்காக இப்பொழுது உன்னிடத்தில் வந்தோம்" - யெப்தாவின் சகோதரர் அவனை வீட்டை விட்டு துரத்திவிட்டார்கள். இப்போது கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவின் உதவியைத் தேடி அவனிடத்தில் வந்திருக்கிறார்கள். இது யெப்தாவின் சகோதரருக்கு மிகுந்த அவமானமாக இருந்திருக்கும். (நியா 11:2,8-11).

தாழ்மைப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. யாக்கோபு - ஏசாவைத் தவறாக நடத்தியதற்காக. (ஆதி 25:31; ஆதி 27:36; ஆதி 32:1-33:17)
2. யோசேப்பின் சகோதரர் - யோசேப்பிற்குத் தவறு செய்ததற்காக. (ஆதி 37:11-36; ஆதி 42:1-45:15; ஆதி 50:15-21)
3. எகிப்தியர் - இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கியதற்காக. (யாத் 1:1-15:21)
4. கீலேயாத்தின் மனுஷர் - யெப்தாவை ஊரைவிட்டு துரத்தியதற்காக. (நியா 11:2-11)
5. சவுல் - தாவீதைத் துன்புறுத்தியதற்காக. (1சாமு 24, 1சாமு 26)
6. தாவீது - உரியாவைத் துன்புறுத்தியதற்காக. (2சாமு 12)
7. ரெகொபெயாம் - இஸ்ரவேல்மீது விரோதம் காண்பித்ததற்காக. (1இராஜா 12)
8. அசீரியர் - கர்த்தரை மறுதலித்ததற்காக. (1இராஜா 18-19)
9. மனாசே - அவனுடைய பாவங்களுக்காக. (2நாளா 33:11-13)
10. இஸ்ரவேல் புத்திரர் - தங்களுடைய பாவங்களுக்காக. (2இராஜா 17, 2இராஜா 25; 2நாளா 36)

(4) நிபந்தனையை இஸ்ரவேலர்கள் ஏற்றுக் கொண்டார்கள் - இஸ்ரவேலரின் சேனைக்கு யெப்தா சேனாதிபதியாக இருந்தான்

நியா 11:10 கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை பார்த்து: நாங்கள் உன் வார்த்தையின் படியே செய்யாவிட்டால், கர்த்தர் நமக்கு நடுநின்று கேட்பாராக என்றார்கள்.

நியா 11:11 அப்பொழுது யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடே கூடப் போனான்; ஜனங்கள் அவனைத் தங்கள்மேல் தலைவனும் சேனாபதியுமாக வைத்தார்கள். யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே சொன்னான்.

தலைவன் (head) - ראשׁ - roshe - 7218

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆறு, சிகரம், நுனி, மேல், தலைவர், முகப்பு, உச்சி, குமிழ், முதல், முடி, தொகை, பாகை, முகம், சிரசு, வம்சம், பிரதானம், ஆதிமுதல், முக்காடிடு, தலைமை, முனை, பவுஞ்சு, சேனாதிபதி, அதிபதி, முக்கியம், ஆரம்பம், கொடுமுடி, தலை, பெரியது, சமூகம், ஏழை, ராஜாங்கம், தலைமாட்டு "chief" (எண் 31:26; எண் 32:28; உபா 1:15); "first" (1நாளா 12:9; 1நாளா 16:7; 1நாளா 23:19-20; 1நாளா 24:21); "principal" (யாத் 30:23; லேவி 6:5; எண் 5:7; 1நாளா 24:31; நெகே 11:17); "rulers" (உபா 1:13; ஏசா 29:10); "top" (ஆதி 11:4; ஆதி 28:12,18); "head" (நியா 10:18; நியா 11:8-11); "captain" (எண்14:4; உபா 29:10; 1நாளா 4:42; 1நாளா 11:15,42; 1நாளா 12:14,18-20; 2நாளா 13:12; நெகே 9:17).

11 அதிகாரம்

1நாளா 12:14,18-20; 2நாளா 13:12; நெகே 9:17).

சேனாதிபதி (captain) - קָצִין - kaw-tseen' - 7101

ஆண்பால் பெயர்ச்சொல் - அதிபதி, சேனாதிபதி, பிரபு "captain" (நியா 11:6,11; யோசு 10:24); "guide" (நீதி 6:7); "ruler" (ஏசா 1:10; ஏசா 3:6,7;ஏசா 22:3); "prince" (நீதி 25:15; தானி 11:18).

"யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே சொன்னான்" - யெப்தாவிற்கும், கீலேயாத்தின் மனுஷருக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் உண்டாயிற்று. இதற்கு கர்த்தரே சாட்சியாக இருக்கிறார். (நியா 11:10). இந்த ஒப்பந்தத்தை ஜனங்கள் மத்தியில் செய்தாலும், யெப்தா மிஸ்பாவில் கர்த்தருடைய சந்நிதியிலும் இதைப் பற்றி அறிவிக்கிறான்.

(5) அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு யெப்தாவின் முதல் செய்தி

நியா 11:12 பின்பு யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நீ என் தேசத்தில் எனக்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறதற்கு, எனக்கும் உனக்கும் என்ன வழக்கு இருக்கிறது என்று கேட்கச் சொன்னான்.

(6) அம்மோன் புத்திரரின் தேசத்தை கட்டிக்கொண்டதாக இஸ்ரவேலர் மீது தவறான குற்றச்சாட்டு

நியா 11:13 அம்மோன் புத்திரரின் ராஜா யெப்தாவின் ஸ்தானாபதிகளை நோக்கி: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, அர்னோன் துவக்கி யாபோக்மட்டும், யோர்தான்மட்டும் இருக்கிற என் தேசத்தைக் கட்டிக்கொண்டார்களே; இப்பொழுது அதை எனக்குச் சமாதானமாய்த் திரும்பக் கொடுத்து விடவேண்டும் என்று சொல்லுங்கள் என்றான்.

"இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, அர்னோன் துவக்கி யாபோக்மட்டும், யோர்தான் மட்டும் இருக்கிற என் தேசத்தைக் கட்டிக் கொண்டார்களே" - 350 வருஷங்களுக்கு முன்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி வந்தார்கள். அப்போது அவர்கள் தன் தேசத்தைக் கட்டிக் கொண்டதாக அம்மோன் புத்திரரின் ராஜா குற்றம் சுமத்துகிறான். (நியா 11:26) யெப்தா இந்தக் குற்றச்சாட்டை மறுக்கிறான். (நியா 11:15-22). அம்மோன் புத்திரரின் தேசத்தில் பாதிப் பகுதி காத் புத்திரருக்குக் கொடுக்கப்படுகிறது. (யோசு 13:25) எமோரியரின் ராஜாவாகிய சீகோன் இந்தத் தேசத்தை அம்மோன் புத்திரரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான். இதன் பின்பு, இஸ்ரவேல் புத்திரர் சீகோனின்மீது யுத்தம்பண்ணி, இந்தத் தேசத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். சீகோன் மோவாபியரிடமிருந்து தேசத்தைப் பெற்றுக் கொண்டான். இஸ்ரவேல் புத்திரர் சீகோனை ஜெயித்தபின்பு, அந்தத் தேசம் இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரமாயிற்று. (எண் 21:26-29; உபா 2:19).

"அதை எனக்குச் சமாதானமாய்த் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்" - இந்த தேசத்தைச் சமாதானமாகக் கொடுத்துவிட்டால் யோர்தானின் அப்புறத்திலுள்ள கிழக்குத் தேசத்தின் பாதிப்பகுதியை இஸ்ரவேல் புத்திரர் இழந்துபோகவேண்டும். இதை அம்மோன் புத்திரருக்குக் கொடுக்கவில்லையென்றால், அவர்களோடு யுத்தம் பண்ணுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். கர்த்தருடைய ஆவியானவர் யெப்தாவின்மீது இருந்தார். ஆகையினால் யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவிற்குக் கீழ்ப்படியாமல் அவன்மீது யுத்தம் பண்ண ஆயத்தமானான். (நியா 11:29).

(7) முந்நூறு வருஷ சரித்திரத்தை விளக்கிக் கூறி யெப்தா குற்றச்சாட்டை மறுத்தார்

நியா 11:14 யெப்தா மறுபடியும் அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி, அவனுக்குச் சொல்லச் சொன்னதாவது:

11 அதிகாரம்

நியா 11:15 யெப்தா சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலர் மோவாபியரின் தேசத்தையாகிலும், அம்மோன் புத்திரரின் தேசத்தையாகிலும் கட்டிக்கொண்டதில்லையே.

நியா 11:16 இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, வனாந்தரத்தில் சிவந்த சமுத்திர மட்டும் நடந்து, பின்பு காதேசுக்கு வந்து,

நியா 11:17 இஸ்ரவேலர் ஏதோமின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நாங்கள் உன் தேசத்துவழியாய்க் கடந்து போகட்டும் என்று சொல்லச் சொன்னார்கள்; அதற்கு ஏதோமின் ராஜா செவிகொடுக்கவில்லை; அப்படியே மோவாபின் ராஜாவினிடத்திற்கும் அனுப்பினார்கள்; அவனும் சம்மதிக்க வில்லை. ஆதலால் இஸ்ரவேலர் காதேசிலே தரித்திருந்து,

நியா 11:18 பின்பு வனாந்தரவழியாய் நடந்து ஏதோம் தேசத்தையும் மோவாப் தேசத்தையும் சுற்றிப்போய், மோவாபின் தேசத்திற்குக் கிழக்கேவந்து, மோவாபின் எல்லைக்குள் பிரவேசியாமல், மோவாபின் எல்லையான அர்னோன் நதிக்கு அப்பாலே பாளயமிறங்கினார்கள்.

நியா 11:19 அப்பொழுது இஸ்ரவேலர் எஸ்போனில் ஆளுகிற சீகோன் என்னும் எமோரியரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நாங்கள் உன் தேசத்து வழியாய் எங்கள் ஸ்தானத்திற்குக் கடந்துபோக இடங்கொடு என்று சொல்லச் சொன்னார்கள்.

நியா 11:20 சீகோன் இஸ்ரவேலரை நம்பாததினால், தன் எல்லையைக் கடந்துபோகிறதற்கு இடங்கொடாமல் தன் ஜனங்களையெல்லாம் கூட்டி யாகாசிலே பாளயமிறங்கி, இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினான்.

நியா 11:21 அப்பொழுது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சீகோனையும் அவனுடைய எல்லா ஜனங்களையும் இஸ்ரவேலரின் கையில் ஒப்புக் கொடுத்தார்; அவர்களை முறிய அடித்தார்கள்; அப்படியே இஸ்ரவேலர் அந்த தேசத்திலே குடியிருந்த எமோரியரின் சீமையையெல்லாம் பிடித்து, அர்னோன் துவக்கி,

நியா 11:22 யாபோக்மட்டும், வனாந்தரம் துவக்கி யோர்தான்மட்டும் இருக்கிற எமோரியரின் எல்லையையெல்லாம் சுதந்தரமாய்க் கட்டிக் கொண்டார்கள்.

நியா 11:23 இப்படி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எமோரியரைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்தியிருக்க, நீர் அந்த தேசத்தைக் கட்டிக் கொள்ளத்தகுமா?

நியா 11:24 உம்முடைய தேவனாகிய காமோஸ் உமக்கு முன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தை நீர் கட்டிக்கொள்ளமாட்டீரோ? அப்படியே எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு முன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தையெல்லாம் நாங்களும் கட்டிக்கொள்ளுகிறோம்.

நியா 11:25 மேலும் சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜாவைப் பார்க்கிலும் உமக்கு அதிக நியாயம் உண்டோ? அவன் இஸ்ரவேலோடே எப்போதாகிலும் வழக்காடினானா? எப்போதாகிலும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினானா?

நியா 11:26 இஸ்ரவேலர் எஸ்போனிலும் அதின் கிராமங்களிலும், ஆரோவேரிலும் அதின் கிராமங்களிலும், அர்னோன் நதியருகான எல்லா ஊர்களிலும், முந்நூறு வருஷம் குடியிருக்கையில், இவ்வளவு காலமாய் நீங்கள் அதைத் திருப்பிக் கொள்ளாதே போனதென்ன?

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

11 அதிகாரம்

நியா 11:27 நான் உமக்கு விரோதமாய்க் குற்றம் செய்யவில்லை; நீர் எனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறதினால் நீர்தான் எனக்கு அநியாயம் செய்கிறீர்; நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயம் தீர்க்கக்கடவர் என்று சொல்லி அனுப்பினான்.

நியா 11:28 ஆனாலும் அம்மோன் புத்திரரின் ராஜா தனக்கு யெப்தா சொல்லியனுப்பின வார்த்தைகளுக்குச் செவி கொடாதே போனான்.

"இஸ்ரவேலர் மோவாபியரின் தேசத்தையாகிலும், அம்மோன் புத்திரரின் தேசத்தையாகிலும் கட்டிக்கொண்டதில்லையே" - அம்மோன் புத்திரர் லோத்தின் சந்ததியார். (உபா 2:19). அம்மோனியரின் தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் எடுத்துக் கொள்வதற்கு அவர்கள் தடை பண்ணப்பட்டிருக்கிறார்கள். எமோரியர் அம்மோன் புத்திரருடைய தேசத்தைக் கைப்பற்றினார்கள். இஸ்ரவேல் புத்திரர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனிடமிருந்து இந்தத் தேசத்தை யுத்தம் பண்ணி கைப்பற்றினார்கள். (நியா 11:15; எண் 21:21-35).

"இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது" - (யாத் 12:37-17:2; எண் 10:20; எண் 33:3-36)

"வனாந்தரத்தில் சிவந்த சமுத்திர மட்டும் நடந்து" - வனாந்தரத்தின் வழியாக இஸ்ரவேல் புத்திரர் மெதுவாகப் பிரயாணம் பண்ணியதை இந்த வாக்கியம் விளக்குகிறது. (சங் 66:6).

"பின்பு காதேசுக்கு வந்து" - (எண் 13-14)

"இஸ்ரவேலர் ஏதோமின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி" - (எண் 20:14-21; உபா 2:4-8,29)

"அப்படியே மோவாபின் ராஜாவினிடத்திற்கும் அனுப்பினார்கள்" - இது ஒரு புதிய செய்தி. ஏதோமிற்கு ஸ்தானாபதிகளை அனுப்பியது போன்று, அவர்கள் மோவாபிற்கும் ஸ்தானாபதிகளை அனுப்பியிருக்க வேண்டும். (எண் 14-21; உபா 2:4-8,29)

"இஸ்ரவேலர் காதேசிலே தரித்திருந்து" - (எண் 20:1,16)

"பின்பு வனாந்தரவழியாய் நடந்து ஏதோம் தேசத்தையும் மோவாப் தேசத்தையும் சுற்றிப்போய்" - (எண் 20:22; எண் 21:4, 10-13; எண் 33:37-44)

"எஸ்போனில் ஆளுகிற சீகோன் என்னும் எமோரியரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி" - (எண் 21:21-35; உபா 2:26-37; உபா 3:1-17)

"அர்னோன் துவக்கி, யாபோக் மட்டும், வனாந்தரம்துவக்கி யோர்தான்மட்டும் இருக்கிற எமோரியரின் எல்லையையெல்லாம்" - அம்மோன் புத்திரருக்குத் தேசத்தின் வடக்குப் பகுதியும், மோவாபின் புத்திரருக்குத் தேசத்தின் தெற்குப் பகுதியும் கிடைத்தது. மோவாபும், அம்மோனும் லோத்தின் இரண்டு புத்திரர்கள். இவர்களுடைய தேசம் சவக்கடலுக்குத் தெற்கு பகுதியிலுள்ள ஏதோமிலிருந்து யாபோக்கு நதி வரையிலும் விரிந்து செல்கிறது. இது யோர்தான் நதி வரையிலும் விரிந்து பரவியிருக்கிறது. எமோரியர் யுத்தக்குணம் கொண்டவர்கள். எமோரியரின் ராஜாவாகிய சீகோன் அம்மோன் புத்திரரின் தேசத்தையும், மோவாப் புத்திரரின் தேசத்தையும் கைப்பற்றிக் கொண்டான். வடக்கே யாப்போக்கிலிருந்து தெற்கே அர்னோன் வரையிலும், மேற்கே யோர்தானிலிருந்து, கிழக்கே அரபிய சமவெளி வரையிலும் சீகோன் கைப்பற்றினான். இந்தத் தேசம் முழுவதையும் இஸ்ரவேல் புத்திரர் சீகோனிடமிருந்து கைப்பற்றினார்கள். 350 வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரர் இந்தத் தேசத்தைச் சுதந்தரமாக அனுபவித்து வருகிறார்கள். (நியா 11:26)

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எமோரியரைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்தியிருக்க" - அம்மோன் புத்திரர் கேட்கும் தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் எவ்வாறு பெற்றுக் கொண்டார்கள் என்பதை யெப்தா விளக்கிக் கூறுகிறான். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இந்தத் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் இந்தத் தேசம் தங்களுக்கே உரியது என்று யெப்தா விளக்கம் கூறுகிறான். (எண் 34:13-15).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

11 அதிகாரம்

"உம்முடைய தேவனாகிய காமோஸ்" - யெப்தா காமோசை ஒரு தேவனாக அங்கிகரிக்கவில்லை. காமோஸ் மோவாபியரின் தெய்வம். அந்தத் தெய்வம் அவர்களுக்கு தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுக்கட்டும் என்று கூறிவிடுகிறான்.

"சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜாவைப் பார்க்கிலும் உமக்கு அதிக நியாயம் உண்டோ?" - மோவாபின் ராஜா தனக்குள்ள தேசத்தில் திருப்தியாக இருக்கிறான். அர்னோன் ஆற்றுக்கு தெற்கிலுள்ள தேசம் மோவாபியருக்குரியது. சீகோன் இதை அவர்களிடமிருந்து கைப்பற்றிக் கொள்ளவில்லை. சீகோனிடமிருந்து பெற்றுக் கொண்ட தேசத்தைத் தங்களுக்குத் திருப்பித் தரவேண்டுமென்று மோவாபியர் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரரிடம் யுத்தம் பண்ண வரவில்லை. மோவாபின் ராஜாவாகிய பாலாக் அமைதியாக இருக்கிறான். அம்மோன் புத்திரரின் ராஜா பாலாக்கைப்போலவே அமைதியாக இருக்கவேண்டும். கடந்த 300 வருஷக்காலமாக இஸ்ரவேல் புத்திரர் அனுபவித்து வரும் சுதந்தரத்தை அம்மோன் புத்திரர் திரும்பக் கேட்கக்கூடாது. அது நியாயமல்ல என்பது யெப்தாவின் விளக்கம்.

மோவாபியர் கடந்த 350 வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ணியிருக்கிறார்கள். ஆனால் தாங்கள் இழந்த தேசத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் இதுவரையிலும் யுத்தம் பண்ணவில்லை. யோர்தானின் இரண்டு பகுதியிலுமுள்ள இஸ்ரவேல் தேசத்தாரிடமிருந்து மோவாபியர் 18 வருஷங்களாகக் கப்பம் வாங்கினார்கள். (நியா 2:12-14) இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து வெளியேறி வந்தபோது, மோவாபியர் தங்கள் தேசத்தைக் கைப்பற்றியதற்காக இஸ்ரவேல் புத்திரர் பகுதி கட்டவில்லை. ஆகையினால் அம்மோன் புத்திரருடைய ராஜாவின் குற்றச்சாட்டு நியாயமற்றது. (நியா 11:13).

"முந்நூறு வருஷம்" - கானான் தேசத்திற்குள் இஸ்ரவேல் புத்திரர் பிரவேசித்து, 350 வருஷமாயிற்று. யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள இஸ்ரவேல் புத்திரரின் அடிமைத்தனக்காலத்தை இந்த 350 வருஷத்திலிருந்து அகற்றிவிட்டால், இஸ்ரவேல் புத்திரர் இந்தத் தேசத்தை 300 வருஷங்களாகச் சுதந்தரமாக அனுபவித்து வருகிறார்கள்.

"நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயம் தீர்க்கக்கடவர்" - அம்மோன் புத்திரரின் ராஜாவினுடைய குற்றச்சாட்டை கர்த்தரே நடுநின்று நியாயந்தீர்க்க வேண்டும் என்று யெப்தா கூறுகிறான். கர்த்தர் நீதியாய் நியாயந்தீர்த்தார். அம்மோன் புத்திரருக்கு யுத்தத்தில் தோல்வி உண்டாயிற்று. யெப்தா மூலமாகக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சித்தார். (நியா 11:27-33).

தங்கள் பெருமையினால் தோற்றுப் போனவர்கள்

1. லூசிபர் (ஏசா 14:12-14; எசே 28:11-17; 1தீமோ 3:6; வெளி 12:10-12; வெளி 20:10)
2. பார்வோன் (யாத் 1:1-15:21)
3. அபிமெலேக்கு (நியா 9:15,23-57)
4. அம்மோன் ராஜா (நியா 11:28-33)
5. கோலியாத் (1சாமு 17)
6. பெனாதாத் (1இராஜா 20:1-21)
7. அமசியா (2இராஜா 14:7-16)
8. இஸ்ரவேல் புத்திரர் (உபா 8:11-20; 2இராஜா 17, 2இராஜா 25)
9. நேபுகாத்நேச்சார் (தானி 4)
10. ஆமான் (எஸ் 3:1-7:10)

11 அதிகாரம்

(8) யெப்தாவின் பயங்கரமான பொருத்தனை

நியா 11:29 அப்பொழுது கர்த்தருடைய ஆவி யெப்தாவின்மேல் இறங்கினார்; அவன் கீலேயாத்தையும் மனாசே நாட்டையும் கடந்துபோய், கீலேயாத்திலிருக்கிற மிஸ்பாவுக்கு வந்து, அங்கேயிருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போனான்.

நியா 11:30 அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி: தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக் கொடுத்தால்,

நியா 11:31 நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலி ருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்.

"கர்த்தருடைய ஆவி யெப்தாவின்மேல் இறங்கினார்" - (நியா 3:10)

யெப்தாவின் பொருத்தனை

1. யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணினான். (லேவி 27)

2. அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்.

யெப்தா தன் பொருத்தனையை நிறைவேற்றிய விதத்தைக் குறித்து வேதபண்டிதர்கள் பலவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். "அதை சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன்" என்னும் வார்த்தைக்குச் சர்வாங்க தகனபலிக்குப் பொருத்தமானதை நான் செலுத்துவேன் என்பதே இதன் வியாக்கியானமாகும். கர்த்தர் நரபலியை ஏற்றுக் கொள்வதில்லை. (லேவி 18:21; லேவி 20:2-5) அதுமட்டுமல்லாமல், சர்வாங்க தகனபலியாக கர்த்தர் அங்கிகரியாத மிருகஜீவன்களும் உள்ளன. இந்த நிகழ்ச்சியில் யெப்தா தன் மகளை நித்திய கன்னிகையாக **(perpetual virginity)** கர்த்தருக்கு அர்ப்பணித்திருக்கலாம். (நியா 11:36-40).

லேவி 27 ஆவது அதிகாரத்தில் பொருத்தனையின் பிரமாணம் விளக்கப் பட்டிருக்கிறது. நபர்கள், மிருகஜீவன்கள், பொருட்கள் ஆகியவற்றைக் கர்த்தருடைய பரிசுத்த பயன்பாட்டிற்காகப் பொருத்தனை பண்ணலாம். இவையெல்லாவற்றையும் அக்கினியில் தகிக்க வேண்டும் என்னும் அவசியமில்லை. அதுமட்டுமல்லாமல், பொருத்தனை செய்யப்பட்டதை பணத்தினால் மீட்டுக் கொள்வதற்கும் பிரமாணத்தில் இடம் உள்ளது. அதன்கிரயம் ஆசாரியருக்கும், லேவியருக்கும் கொடுக்கப்படவேண்டும். (லேவி 27:1-25). ஒருசில பொருட்களை மீட்க முடியாது. கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவைகள் கர்த்தருடைய சேவைக்கு நிரந்தரமாகப் பயன்பட வேண்டும். (லேவி 27:26-29). யெப்தா இது போன்ற ஒரு பொருத்தனையைச் செய்திருக்கலாம். தன்னுடைய மகளை நித்திய கன்னிகையாகக் கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணி அர்ப்பணித்திருக்கலாம். (நியா 11:35).

(9) அம்மோன் புத்திரரின்மீது வெற்றி

நியா 11:32 யெப்தா அம்மோன் புத்திரரின்மேல் யுத்தம்பண்ண, அவர்களுக்கு விரோதமாய்ப் புறப்பட்டுப் போனான்; கர்த்தர் அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்.

நியா 11:33 அவன் அவர்களை ஆரோவேர் துவக்கி மின்னித்திற்குப் போகுமட்டும், திராட்சத்தோட்டத்து நிலங்கள்வரைக்கும், மகா சங்காரமாய் முறிய அடித்து, இருபது பட்டணங்களைப் பிடித்தான்; இப்படி அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப் பட்டார்கள்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

11 அதிகாரம்

"கர்த்தர் அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்" - யெப்தா அம்மோன் புத்திரரை ஆரோவேரிலிருந்து முறியடித்தான். இது அர்னோனின் வடக்கு பகுதியிலுள்ள ஆறு. யெப்தா அவர்களை மின்னித்திற்குப் போகும் வரையிலும் முறியடித்தான். இது எஸ்போனுக்கு 4 மைல் தூரத்திலுள்ளது. யெப்தா அம்மோன் புத்திரரைச் சுமார் 30 அல்லது 40 மைல் தூரத்திற்கு முறியடித்து, இருபது பட்டணங்களைப் பிடித்துக் கொண்டான். (நியா 11:32-33).

(10) யெப்தாவின் பொருத்தனை நிறைவேறிற்று - (லேவி 27:1-8; உபா 23:2)

நியா 11:34 யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ, அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து, அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள்; அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள்; அவளையல்லாமல் அவனுக்குக் குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை.

நியா 11:35 அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது என்றான்.

நியா 11:36 அப்பொழுது அவள்: என் தகப்பனே, நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்து பேசினீரல்லவோ? அம்மோன் புத்திரராகிய உம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும் ஜெயத்தைக் கர்த்தர் உமக்குக் கட்டளையிட்டபடியினால், உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும் என்றாள்.

நியா 11:37 பின்னும் அவள் தன் தகப்பனை நோக்கி: நீர் எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும்; நான் மலைகளின்மேல் போய்த் திரிந்து, நானும் என் தோழிமார்களும் என் கன்னிமையினிமித்தம் துக்கங் கொண்டாட, எனக்கு இரண்டுமாதம் தவணைகொடும் என்றாள்.

நியா 11:38 அதற்கு அவன்: போய்வா என்று அவளை இரண்டு மாதத்திற்கு அனுப்பிவிட்டான்; அவள் தன் தோழிமார்களோடும் கூடப்போய், தன் கன்னிமையினிமித்தம் மலைகளின்மேல் துக்கங்கொண்டாடி,

நியா 11:39 இரண்டுமாதம் முடிந்தபின்பு, தன் தகப்பனிடத்திற்குத் திரும்பிவந்தாள்; அப்பொழுது அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்; அவள் புருஷனை அறியாதிருந்தாள்.

நியா 11:40 இதினிமித்தம் இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் போய், நாலுநாள் கீலேயாத்தியானான யெப்தாவின் குமாரத்தியைக் குறித்துப் புலம்புவது இஸ்ரவேலிலே வழக்கமாயிற்று.

"அவன் குமாரத்தி" - யெப்தா தன் வீட்டிற்கு வருகிறபோது, அவன் வீட்டு வாசற்படியிலிருந்து அவனுடைய குமாரத்தி எதிர்கொண்டு வந்தாள். நியா 11:31 ஆவது வசனத்தில் யெப்தா பொருத்தனை பண்ணியதற்கும், அவனுடைய குமாரத்தி அவனுக்கு எதிர்கொண்டு வருவதற்கும் சம்பந்தம் உள்ளது. யுத்தத்திலிருந்து வீரர்கள் ஜெயம் பெற்று திரும்பி வரும்போது அவர்களுடைய வீட்டார் அவர்களைத் தம்புரு இசைத்து, நடனம் செய்து, வரவேற்பது வழக்கம். (1சாமு 18:6).

"அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு" - தன் மகள் யெப்தாவிற்கு எதிர்கொண்டு வருகிறாள். தன் பொருத்தனையின்பிரகாரம் யெப்தா அவளை கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணி ஒப்புக் கொடுக்க வேண்டும். அவளை நித்திய கன்னிகையாக அர்ப்பணிக்க வேண்டும். அவள் யெப்தாவிற்கு ஒரே மகள். அவள் நித்திய கன்னிகையாக ஆவதினால் இனிமேல் யெப்தாவின் சந்ததி இஸ்ரவேலில் தொடராது. (நியா 11:34).

11 அதிகாரம்

"உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும்" - யெப்தாவின் பொருத்தனையை நிறைவேற்ற அவனுடைய மகள் ஆயத்தமாக இருக்கிறாள். இது சம்பந்தமாக அவள் ஒரு காரியம் செய்ய வேண்டுமென்று கூறி, இரண்டு மாதம் தவணை கேட்கிறாள். அவள் கேட்பது அவளுக்குக் கொடுக்கப்படுகிறது. (நியா 11:37).

"நான் மலைகளின்மேல் போய்த் திரிந்து, நானும் என் தோழிமார்களும் என் கன்னிமையினிமித்தம் துக்கங் கொண்டாட, எனக்கு இரண்டுமாதம் தவணைகொடும் என்றாள்" - தன்னுடைய கன்னிமையின் நிமித்தம் இரண்டு மாதம் தன் தோழிமார்களோடு சேர்ந்து துக்கங் கொண்டாடுகிறாள். இனிமேல் அவள் தன் வாழ்நாள் முழுவதும் கன்னிகையாகவே இருப்பாள். இது அவளுடைய வாழ்வில் மிகப்பெரிய இனிமேல் அவள் ஆசரிப்புக்கூடாரத்தின் சேவைகளில் ஈடுபட்டிருப்பாள். யெப்தாவின் மகளைப்போலவே ஆசரிப்புக்கூடாரத்தில் பல கன்னிகைகள் சேவை புரிந்து கொண்டிருப்பார்கள். மீதியானியரோடு யுத்தம் பண்ணிய பின்பு, கர்த்தருடைய பங்காக சில கன்னிகைகள் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப் பட்டார்கள். (எண் 31:15-40).

"இஸ்ரவேலிலே வழக்கமாயிற்று" - இஸ்ரவேலில் ஒரு புதிய வழக்கம் உண்டாயிற்று. இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் யெப்தாவின் குமாரத்தியைக் குறித்து நாலுநாள் புலம்புகிறார்கள். (நியா 11:39-40). இந்த வழக்கம் எதுவரையிலும் தொடர்ந்தது என்று தெரியவில்லை. ஒருவேளை யெப்தாவின் மகள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் அவளுக்காக வருஷந்தோறும் புலம்பியிருக்க வேண்டும். இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் இந்த வழக்கம் இல்லாதே போனாலும், கீலேயாத் தேசத்திலே இந்த வழக்கம் இருந்திருக்க வேண்டும்.

12 அதிகாரம்

(11) ஐந்தாவது உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 25:25)

நியா 12:1 எப்பிராயீம் மனுஷர் ஏகமாய்க் கூடி வடக்கே புறப்பட்டுப்போய், யெப்தாவை நோக்கி: நீ எங்களை உன்னோடேகூட வரும்படி அழைப்பியாமல் அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ணப் போனதென்ன? உன் வீட்டையும் உன்னையும் கூட அக்கினியால் சுட்டுப் போவோம் என்றார்கள்.

நியா 12:2 அதற்கு யெப்தா: எனக்கும் என் ஜனத்திற்கும் அம்மோன் புத்திரரோடே பெரிய வழக்கு இருக்கும்போது, நான் உங்களைக் கூப்பிட்டேன்; நீங்கள் என்னை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கவில்லை.

நியா 12:3 நீங்கள் என்னை ரட்சிக்க வில்லை என்று நான் கண்டபோது, நான் என் ஜீவனை என் கையிலே பிடித்துக் கொண்டு, அம்மோன் புத்திரருக்கு விரோதமாய்ப் போனேன்; கர்த்தர் அவர்களை என் கையில் ஒப்புக் கொடுத்தார்; இப்படியிருக்க, நீங்கள் என்மேல் யுத்தம்பண்ண, இன்று என்னிடத்திற்கு வரவேண்டியது என்ன என்று சொன்னான்.

நியா 12:4 பின்பு யெப்தா கீலேயாத் மனுஷரையெல்லாம் கூட்டி, எப்பிராயீமோடு யுத்தம்பண்ணினான்; எப்பிராயீமுக்கும் மனாசேக்கும் நடுவே குடியிருக்கிற கீலேயாத்தியரான நீங்கள் எப்பிராயீமைவிட்டு ஓடிப்போனவர்கள் என்று எப்பிராயீமர் சொன்னபடியினால், கீலேயாத் மனுஷர் அவர்களை முறிய அடித்தார்கள்.

நியா 12:5 கீலேயாத்தியர் எப்பிராயீமருக்கு முந்தி யோர்தானின் துறைகளைப் பிடித்தார்கள்; அப்பொழுது எப்பிராயீமரிலே தப்பின வர்களில் யாராவது வந்து: நான் அக்கரைக்குப் போகட்டும் என்று சொல்லும்போது, கீலேயாத் மனுஷர்: நீ எப்பிராயீமனா என்று அவனைக் கேட்பார்கள்; அவன் அல்ல என்றால்,

நியா 12:6. நீ ஷிபோலேத் என்று சொல் என்பார்கள்; அப்பொழுது அவன் அப்படி உச்சரிக்கக்கூடாமல், சிபோலேத் என்பான்; அப்பொழுது அவனைப் பிடித்து, யோர்தான் துறையிலே வெட்டிப் போடுவார்கள்; அக்காலத்திலே எப்பிராயீமில் நாற்பத்தீராயிரம்பேர் விழுந்தார்கள்.

நியா 12:7 யெப்தா இஸ்ரவேலை ஆறு வருஷம் நியாயம் விசாரித்தான்; பின்பு கீலேயாத்தியனான யெப்தா மரித்து, கீலேயாத்திலுள்ள ஒரு பட்டணத்தில் அடக்கம் பண்ணப்பட்டான்.

எப்பிராயீம் மனுஷரால் ஏற்பட்ட குழப்பங்கள்

1. யாக்கோபின் மூலமாக யோசேப்பின் குமாரருக்கு ஆசீர்வாதத்தில் எப்பிராயீம் மூலமாகக் குழப்பம் உண்டாயிற்று. (ஆதி 48:3-22).

2. கானான் தேசத்தைப் பங்கு பிரித்துக் கொடுக்கும்போது எப்பிராயீம் மனுஷர் முறையிட்டார்கள். (யோசு 17:14-18).

3. மீதியான் புத்திரரோடு யுத்தம் பண்ணுவதற்கு கிதியோன் இவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆகையினால் இவர்கள் கிதியோனோடு வாக்குவாதம் பண்ணினார்கள். (நியா 8:1-3).

4. அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ணுவதற்கு யெப்தா இவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆகையினால் இவர்கள் யெப்தாவோடு வாக்குவாதம் பண்ணினார்கள். யெப்தாவோடும் யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள இஸ்ரவேல் புத்திரரோடும் யுத்தம் பண்ணினார்கள். இந்த யுத்தத்தில் எப்பிராயீம் மனுஷர் தோற்றுப்போனார்கள். இவர்களில் 42,000 மனுஷர்கள் மரித்துப்போனார்கள். (நியா 12:1-6).

5. தாவீதின் நாட்களிலும், இஸ்போசேத்தின் நாட்களிலும் ராஜ்யம் பிரிக்கப்பட்ட போது எப்பிராயீம் மனுஷர் மற்றவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். (2சாமு 2:8-11).

12 அதிகாரம்

6. எப்பிராயீம் மனுஷர் அப்சலோமோடு சேர்ந்துகொண்டு, தாவீதிற்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். (2சாமு 17:26).

7. தாவீதிற்கு எதிராக எப்பிராயீம் மனுஷர் பத்துக் கோத்திரத்தாரோடு சேர்ந்து கலகம் பண்ணினார்கள். மறுபடியும் தாவீதை அழைத்து வந்ததற்காக பொறாமையினால் இந்தக் கலகம் உண்டாயிற்று. (2சாமு 19:43-20:26)

8. இஸ்ரவேல் தேசத்தைப் பிரிப்பதில் தாவீதிற்கு எதிராக ஏற்பட்ட கடைசி கலகத்திற்கு எப்பிராயீம் மனுஷர் தலைமை பொறுப்பேற்றார்கள். இஸ்ரவேலின் வடக்கு தேசத்தைக் குறிப்பதற்கு எப்பிராயீமின் பெயர் பல வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (1இராஜா 12; ஏசா 7:2-17; ஏசா 11:13; ஏசா 28:1; எசே 37:16-19; ஓசி 4:17; ஓசி 5:3-14; ஓசி 6:4,10; ஓசி 7:1-11; ஓசி 8:9-11; ஓசி 9:3-16; ஓசி10:6-11; ஓசி 11:3-12; ஓசி 12:1-14; ஓசி 13:1-12; ஓசி 14:8; சக 9:10-13; சக 10:7).

"நான் உங்களைக் கூப்பிட்டேன்; நீங்கள் என்னை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கவில்லை" - யெப்தா மற்ற கோத்திரத்தாரையும், அம்மோன் புத்திரர்மேல் யுத்தம் பண்ணப்போகும்போது உதவிக்காக அழைத்திருக்கிறான். ஆனால் மற்றவர்கள் உதவி புரியவில்லை. ஆகையினால் யெப்தா தானே தலைமைப் பொறுப்பெடுத்து, அம்மோன் புத்திரர்மீது யுத்தம் பண்ணினான். எப்பிராயீம் மனுஷருடைய குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை. (நியா 12:1-3).

"யெப்தா கீலேயாத் மனுஷரையெல்லாம் கூட்டி, எப்பிராயீமோடு யுத்தம்பண்ணினான்" - சகோதரருக்குள்ளே கலகம் உண்டாயிற்று. எப்பிராயீம் மனுஷரில் 42,000 பேர் இந்தக் கலகத்தில் கொல்லப்பட்டார்கள். (நியா 12:6) இந்த யுத்தத்திற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. தங்களையும் யுத்தம் பண்ண சேர்த்துக் கொள்ளவில்லை என்னும் காரணத்திற்காக இந்த யுத்தம் நடைபெறுகிறது.

"அக்காலத்திலே எப்பிராயீமில் நாற்பத்திரண்டாயிரம்பேர் விழுந்தார்கள்" - இதற்கு முன்பு கணக்கெடுத்தபோது, எப்பிராயீம் கோத்திரத்தில் யுத்தமனுஷர் மொத்தம் 32,500பேர் மட்டுமே இருந்தார்கள். (எண் 26:37). ஆனால் இப்பொழுது இங்கு இறந்துபோனவர்கள் மட்டுமே 42,000 பேர்களாகும். பழைய எண்ணிக்கை 350 வருஷங்களுக்கு முன்பு எண்ணித் தொகையேற்றப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் எப்பிராயீமின் ஜனத்தொகை அதிகரித்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. 70 பேராக இருந்த யாக்கோபு 215 வருஷத்தில் 600,000 யுத்த புருஷராக ஆனான். (ஆதி 46:27= யாத் 12:37)

"யெப்தா இஸ்ரவேலை ஆறு வருஷம் நியாயம் விசாரித்தான்" - அம்மோன் புத்திரர்மீது வெற்றி பெற்ற பின்பு, யெப்தா ஆறு வருஷம் மட்டுமே உயிரோடிருக்கிறான். (நியா 12:7). ஒருவேளை அவனுடைய மகள் நித்திய கன்னிகையாக ஆன சம்பவம் அவனுடைய உள்ளத்தை வருத்தியிருக்கலாம். (நியா 11:35-36) யெப்தா குறைந்த ஆயுசில் மரித்தாலும், அவன் விசுவாசவீரனாகவும், நல்லவனாகவும் இருந்திருக்கிறான். (எபி 11:32)

21. இப்சான் - பதினொராவது நியாயாதிபதி - ஏழு வருஷங்கள்

நியா 12:8 அவனுக்குப்பின்பு பெத்லெகேம் ஊரானாகிய இப்சான் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

நியா 12:9 அவனுக்கு முப்பது குமாரரும் முப்பது குமாரத்திகளும் இருந்தார்கள்; முப்பது குமாரத்திகளையும் புறத்திலே விவாகம்பண்ணிக்கொடுத்து, தன் குமாரருக்கு முப்பது பெண்களைப் புறத்திலே கொண்டான்; அவன் இஸ்ரவேலை ஏழு வருஷம் நியாயம் விசாரித்தான்.

நியா 12:10 பின்பு இப்சான் மரித்து, பெத்லெகேமிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

12 அதிகாரம்

"பெத்லெகேம் ஊரானாகிய இப்சான் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்" - இவன் இஸ்ரவேலின் பதினொராவது நியாயாதிபதி. இவன் இஸ்ரவேலை ஏழு வருஷம் நியாயம் விசாரித்தான். யெப்தாவைவிட இவனுடைய நியாயம் விசாரிப்புக்காலம் ஒரு வருஷம் அதிகம். (நியா 12:7) அப்தோனைவிட ஒரு வருஷம் குறைவு. (நியா 12:14). இப்சானுக்கு 60 பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் 30பேர் குமாரர்கள், மற்ற 30 பேர் குமாரத்திகள். இவர்களுக்கு தன்னுடைய கோத்திரத்தில் திருமணம் செய்து வைக்காமல், புறத்திலே அதாவது வேறு கோத்திரத்தில் விவாகம் செய்து வைத்தான். (நியா 12:8-10). இந்த பெத்லகேம் செபுலோனில் இருக்கிற ஊரா (யோசு 19:15), அல்லது யூதாவில் இருக்கிற ஊரா என்று தெளிவாகத் தெரியவில்லை. செபுலோனிலுள்ள பெத்லகேமைப் பற்றி மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (நியா 12:8-10; யோசு 19:15) யூதாவிலுள்ள பெத்லகேமைப் பற்றி 46 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

22. ஏலோன் - பன்னிரெண்டாவது நியாயாதிபதி - பத்து வருஷங்கள்

நியா 12:11 அவனுக்குப்பின்பு செபுலோனியனாகிய ஏலோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்; அவன் பத்து வருஷம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

நியா 12:12 பின்பு செபுலோனியனாகிய ஏலோன் மரித்து, செபுலோன் தேசமான ஆயலோன் ஊரில் அடக்கம்பண்ணப் பட்டான்.

"செபுலோனியனாகிய ஏலோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்" - இஸ்ரவேலின் பன்னிரண்டாவது நியாயாதிபதி. இவன் இஸ்ரவேலை பத்து வருஷம் நியாயம் விசாரித்தான். இவனுடைய நியாய விசாரிப்புக் காலத்தைப் பற்றி விசேஷமாக எதுவும் கூறப்படவில்லை. ஆகையினால் இவனுடைய காலத்தில் இஸ்ரவேல் தேசம் அமைதியாக இருந்திருக்க வேண்டும். (நியா 12:11-12).

23. அப்தோன் - பதின்மூன்றாவது நியாயாதிபதி - எட்டு வருஷங்கள்

நியா 12:13 அவனுக்குப்பின்பு இல்லேலின் குமாரனாகிய பிரத்தோனியனான அப்தோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

நியா 12:14 அவனுக்கு நாற்பது குமாரரும் முப்பது பேரப்பிள்ளைகளும் இருந்தார்கள்; அவர்கள் எழுபது கழுதைகளின் மேல் ஏறுவார்கள்; அவன் இஸ்ரவேலை எட்டு வருஷம் நியாயம் விசாரித்தான்.

நியா 12:15 பின்பு பிரத்தோனியனான இல்லேலின் குமாரனாகிய அப்தோன் மரித்து, எப்பிராயீம் தேசத்தில் அமலேக்கியர் மலையிலிருக்கிற பிரத்தோனிலே அடக்கம் பண்ணப் பட்டான்.

"பிரத்தோனியனான அப்தோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்" - இவன் இல்லேலின் குமாரன். பிரத்தோனியர் எப்பிராயீமின் கோத்திரத்தார். அப்தோன் இஸ்ரவேலின் பதின்மூன்றாவது நியாயாதிபதி. இவன் இஸ்ரவேலை எட்டு வருஷம் நியாயம் விசாரித்தான். இவனுக்கு 40 குமாரரும், 30 பேரப்பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்கள் எழுபது கழுதைகளின் மேல் ஏறுவார்கள் என்று அப்தோனின் குமாரரைப் பற்றியும், பேரப்பிள்ளைகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. (நியா 12:13-15).

"பிரத்தோன்" (Pirathon) - எப்பிராயீம் தேசத்திலுள்ள பட்டணம். ஆனால் இது எங்குள்ளது என்று தெளிவாகத் தெரியவில்லை. இதன் இருப்பிடத்தைப் பற்றி பலவிதமான கருத்துக்கள் உள்ளன. (நியா 12:13-15; 2சாமு 23:30; 1நாளா 11:31; 1நாளா 27:14).

13 அதிகாரம்

24. எட்டாவது முரண்பாடும், ஏழாவது அடிமைத்தனமும் - பெலிஸ்தரின் கீழ் நாற்பது வருஷங்கள்

நியா 13:1 இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார்.

"கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார்" - நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஏழு தடவை அந்நியருடைய கைகளினால் ஒடுக்கப்பட்டார்கள். அவற்றில் இது நீண்டகால அடிமைத்தனமாகும். (நியா 6:1)

25. சிம்சோன் - பதினான்காவது நியாயாதிபதி - இருபது வருஷங்கள் - (16:31)

(1) கர்த்தருடைய தூதனானவரின் அறிவிப்பு

நியா 13:2 அப்பொழுது தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானான ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் மனோவா; அவன் மனைவி பிள்ளைபெறாத மலடியாயிருந்தாள்.

நியா 13:3 கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனை பெறுவாய்.

நியா 13:4 ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

நியா 13:5 நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்.

"சோரா" **(Zorah)** - தாண் கோத்திரத்திலுள்ள பட்டணம். இது எஸ்தாவோலுக்கும், சோராவிற்கும் நடுவிலுள்ளது. (நியா 13:2,25; நியா 16:31; நியா 18:2-11;யோசு 19:41; 2நாளா 11:10).

"மனோவா" **(Manoah)** - இதற்கு ஓய்வு என்று பொருள். இவன் சிம்சோனின் தகப்பன். சிம்சோன் இஸ்ரவேலின் பதினான்காவது நியாயாதிபதி. (நியா 13:2-22; நியா 16:31).

தீர்க்கதரிசன எண் - 13

"இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனை பெறுவாய்......" (நியா 13:3-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 13:24-16:31).

கர்த்தருடைய தூதனானவர் முன்னறிவித்த காரியங்கள்

1. நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனை பெறுவாய்.
2. அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான். (நியா 13:5).
3. அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்.

"கர்த்தருடைய தூதனானவர்" **(angel of the LORD)** - இவர் திரித்துவத்தில் ஒரு நபர். மனோவாவும், அவனுடைய மனைவியும் தாங்கள் தேவனைக் கண்டதாக அறிவிக்கிறார்கள். (நியா 13:22)

13 அதிகாரம்

மனோவாவின் மனைவிக்குக் கூறப்பட்ட கட்டளைகள்

1. திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. (நியா 13:4,7,14).

2. தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

3. உன் குமாரன் தலையின்மேல் சவரகன் கத்திபடலாகாது. (நியா 13:5).

4. திராட்சச்செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும் இரு. (நியா 13:14).

"அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது" - நசரேயர்கள் தங்களுடைய தலைமயிரை வெட்டக்கூடாது. வளர்க்க வேண்டும். அத்துடன் திராட்சப்பழம் சம்பந்தமான எதையும் புசிக்கவோ, பருகவோ கூடாது. (எண் 6).

"ரட்சிக்கத் தொடங்குவான்" - சிம்சோன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கத் தொடங்கினான். ஆனால் மற்ற புறஜாதி தேசத்தாரைப்போல பெலிஸ்தரை முற்றிலுமாக அழிக்க முடியவில்லை. (நியா 14:19-16:31)

(2) வழிநடத்துமாறு கர்த்தரிடம் ஜெபம்

நியா 13:6 அப்பொழுது அந்த ஸ்திரீ தன் புருஷனிடத்தில் வந்து: தேவனுடைய மனுஷன் ஒருவர் என்னிடத்தில் வந்தார்; அவருடைய சாயல் தேவனுடைய தூதரின் சாயலைப்போல மகா பயங்கரமாயிருந்தது; எங்கேயிருந்து வந்தீர் என்று நான் அவரிடத்தில் கேட்கவில்லை; அவர் தம்முடைய நாமத்தை எனக்குச் சொல்லவுமில்லை.

நியா 13:7 அவர் என்னை நோக்கி: இதோ, நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானது ஒன்றும் புசியாமலும் இரு; அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தன் மரணநாள்மட்டும் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான் என்று சொன்னார் என்றாள்.

நியா 13:8 அப்பொழுது மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ, என் ஆண்டவரே, நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒருவிசை எங்களிடத்தில் வந்து, பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக என்று வேண்டிக் கொண்டான்.

தேவதூதரைப் பற்றிய வர்ணனை

1. தேவனுடைய மனுஷன்.

2. அவருடைய சாயல் தேவனுடைய தூதரின் சாயலைப்போல மகா பயங்கரமாயிருந்தது.

"அவர் என்னை நோக்கி...சொன்னார்" - (நியா 13:3)

"மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி" - தேவனுடைய தூதனானவர் மறுபடியும் ஒரு விசை தங்களிடத்தில் வரவேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினார். (நியா 13:8-23). அவர் வந்தார். தெய்வீக தரிசனங்கள் வேண்டுமென்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுவதில் தவறொன்றுமில்லை. (எபி 1:14).

மனோவாவின் விண்ணப்பம்

1. நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒருவிசை எங்களிடத்தில் வருவாராக.

2. பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

13 அதிகாரம்

"பிறக்கப்போகிற பிள்ளை" - மனோவாவும், அவனுடைய மனைவியும் கர்த்தருடைய தூதனானவர் சொன்னதை நம்புகிறார்கள். தூதனானவர் மறுபடியும் வருவதற்கு முன்பாகவே தங்களுக்கு பிறக்கப்போகிற பிள்ளையைக் குறித்து விசுவாசத்தோடு மனோவா அறிக்கையிடுகிறான்.

(3) இரண்டாம் முறை தேவ தூதனானவரின் தரிசனம்

நியா 13:9 தேவன் மனோவாவின் சத்தத்துக்குச் செவிகொடுத்தார்; அந்த ஸ்திரீ வயல்வெளியில் இருக்கும்போது தேவனுடைய தூதனானவர் திரும்பவும் அவளிடத்தில் வந்தார்; அப்பொழுது அவள் புருஷனாகிய மனோவா அவளோடே இருக்கவில்லை.

நியா 13:10 ஆகையால் அந்த ஸ்திரீ சீக்கிரமாய் ஓடி, இதோ, அன்று என்னிடத்தில் வந்தவர் எனக்குத் தரிசனமானார் என்று தன் புருஷனுக்கு அறிவித்தாள்.

நியா 13:11 அப்பொழுது மனோவா எழுந்திருந்து, தன் மனைவியின் பின்னாலே போய், அவரிடத்துக்கு வந்து: இந்த ஸ்திரீயோடே பேசினவர் நீர்தானா என்று அவரிடத்தில் கேட்டான்; அவர் நான் தான் என்றார்.

நியா 13:12 அப்பொழுது மனோவா: நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும் என்று கேட்டான்.

நியா 13:13 கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: நான் ஸ்திரீயோடே சொன்ன யாவற்றிற்கும், அவள் எச்சரிக்கையாயிருந்து,

நியா 13:14 திராட்சச்செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும், நான் அவளுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் கைக்கொள்ளக்கடவள் என்றார்.

நியா 13:15 அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக் கொண்டுவருமட்டும் தரித்திரும் என்றான்.

நியா 13:16 கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: நீ என்னை இருக்கச் சொன்னாலும் நான் உன் உணவைப் புசியேன்; நீ சர்வாங்க தகனபலி இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்றார். அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறியாதிருந்தான்.

நியா 13:17 அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி, உம்முடைய நாமம் என்ன என்று கேட்டான்.

நியா 13:18 அதற்குக் கர்த்தருடைய தூதனானவர்: என் நாமம் என்ன என்று நீ கேட்க வேண்டியது என்ன? அது அதிசயம் என்றார்.

நியா 13:19 மனோவா போய், வெள்ளாட்டுக்குட்டியையும், போஜனபலியையும் கொண்டுவந்து, அதைக் கன்மலையின்மேல் கர்த்தருக்குச் செலுத்தினான்; அப்பொழுது மனோவாவும் அவன் மனைவியும் பார்த்துக்கொண்டிருக்கையில், அதிசயம் விளங்கினது.

நியா 13:20 அக்கினிஜுவாலை பலிபீடத்திலிருந்து வானத்திற்கு நேராக எழும்புகையில், கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனார்; அதை மனோவாவும் அவன் மனைவியும் கண்டு, தரையிலே முகங்குப்புற விழுந்தார்கள்.

13 அதிகாரம்

"தேவன் மனோவாவின் சத்தத்துக்குச் செவிகொடுத்தார்" - மனோவாவின் மனைவி வயல்வெளியில் இருக்கும்போது தூதனானவர் திரும்பவும் அவளிடத்தில் வந்தார். அந்த ஸ்திரீ சீக்கிரமாய் ஓடி இதைத் தன் புருஷனுக்கு அறிவித்தாள். (நியா 13:10-11). தூதனானவர் சொன்ன சங்கதிகளெல்லாம் அந்த ஸ்திரீக்கே உரியது. ஆகையினால் அவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமானார். (நியா 13:3-7). மனோவா தீர்க்கதரிசனத்தைப் பற்றி தூதனானவரிடம் கேட்டபோது, அவர் "நான் ஸ்திரீயோடே சொன்ன யாவற்றிற்கும் எச்சரிக்கையாயிருந்து.... நான் அவளுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் கைக்கொள்ளக்கடவள்" என்று மனோவாவிடம் கூறுகிறார். (நியா 13:13-14).

"நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக்கொண்டுவருமட்டும் தரித்திரும்" - இந்த விண்ணப்பத்தையும் கர்த்தருடைய தூதனானவர் அங்கிகரிக்கிறார். உணவு சமைக்கப்படும் வரையிலும் காத்திருக்கிறார். ஆனாலும், அவர் சொன்ன பிரகாரமாக அந்த உணவைப் புசிக்கவில்லை. சர்வாங்க தகனபலி இடவேண்டுமானால், அதை கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்று தூதனானவர் மனோவாவிடம் கூறுகிறார். (நியா 13:15-16). இந்த வாக்கியத்தை வைத்து, இங்கு வந்திருக்கும் தூதர் சாதாரண தேவதூதர் என்று சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். (நியா 13:3)

"நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி" - மனோவா கர்த்தருடைய தூதனானவரின் வார்த்தைகளை நம்புகிறான். இந்த வாக்கியத்தை மனோவா விசுவாசத்தோடு கூறுகிறான். (நியா 13:8,12).

அதிசயம் (secret) - פִּלְאִי - pil-ee', paw-lee' - 6383

பெயரடை - அதிசயம், ஆச்சரியம்

அதிசயமானது (marvelous) - פָּלָא - paw-law' - 6381

வினைச்சொல் - ஆச்சரியமாயிரு, அரியதாயிரு, வருத்தமாய்க்காண், அதிசயம், அற்புதம், மறைபொருள், ஆச்சரியமான விதம், ஆச்சரியமான கிரியை, புத்திக்கு எட்டாதது, அதிசயமான கிரியை, அதிசயமான செய்கை, மிஞ்சின கருமம், அதிசயமானது, அற்புதச்செயல், ஆச்சரியமான காரியம், விசேஷம், அதிசயமாய்செய், ஆச்சரியப்படத் தக்கது, அதிசய வல்லமையை விளங்கப்பண்ணு (to be separate; great; wonderful; marvelous) "Wonderful" (ஏசா 9:6)

அதிசயம் (wonder) - פֶּלֶא - peh'-leh - 6382

ஆ.பெ.சொ. - அற்புதம், அதிசயம், ஆச்சரியம், அதிசயமானது, ஆச்சரியமானது, அதிசயமானவர்

இந்த மூன்று வார்த்தைகளும் பரிசுத்த வேதாகமத்தில் இவ்வாறு மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. "wonder" (ஏசா 29:14); "wonders" (யாத் 3:20; யாத் 15:11; யோசு 3:5; நெகே 9:17; யோபு 9:10; சங் 77:11,14; சங் 78:11; சங் 88:10,12; சங் 89:5; சங் 96:3; சங் 106:7; சங் 107:24; சங் 136:4; தானி 12:6); "wonderful" (உபா 28:59; 2சாமு 1:26; 2நாளா 2:9; யோபு 42:3; சங் 40:5; சங் 78:4; சங் 107:8,15,21,31; சங் 111:4; சங் 119:129; சங் 139:6; நீதி 30:18; ஏசா 9:6; ஏசா 25:1; ஏசா 28:29); "wonderfully" (புல 1:9; தானி 8:24); "wondrous"(1நாளா 16:9; யோபு 37:14; சங் 26:7; சங் 71:17; சங் 72:18; சங் 75:1; சங் 78:32; சங் 86:10; சங் 105:2; சங் 106:22; சங் 119:18,27; சங் 145:5; எரே 21:2); "wondrously" (நியா 13:19; யோவே 2:26).

"கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனார்" - மனோவாவும், அவனுடைய மனைவியும் தங்கள் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கும்போது கர்த்தருடைய தூதனானவர் தம்முடைய சொந்த வல்லமையினால் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனார். ஆகையினால் இந்த தூதர் மிகவும் முக்கியமானவராக இருக்க வேண்டும்.

13 அதிகாரம்

(4) தேவ தூதனானவரை தரிசித்தும், மதிக்கவில்லை - (ஆதி 32:30; நியா 6:22)

நியா 13:21 பின்பு கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் காணப்படவில்லை; அப்பொழுது அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறிந்து,

நியா 13:22 தன் மனைவியைப் பார்த்து: நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம் என்றான்.

நியா 13:23 அதற்கு அவன் மனைவி: கர்த்தர் நம்மைக் கொன்றுபோடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் ஒப்புக்கொள்ள மாட்டார், இவைகளையெல்லாம் நமக்குக் காண்பிக்கவுமாட்டார், இவைகளை நமக்கு அறிவிக்கவுமாட்டார் என்றாள்.

"அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறிந்து" - கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனதைப் பார்த்தபோது அவர் வானத்திலிருந்து வந்திருக்கும் தூதனானவர் என்பதை மனோவா அறிந்துகொண்டான். (நியா 13:19-21).

"நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம்" - இது ஒரு பழங்கால நம்பிக்கை. இதற்கு வேதத்தில் எந்த ஆதாரமும் இல்லை. (நியா 13:22-23; நியா 6:22-23; ஆதி 32:30).

"அதற்கு அவன் மனைவி.......என்றாள்" - மனோவாவின் மனைவி நிதானமாகப் பதில் கூறுகிறாள். கர்த்தருக்குத் தங்களைக் கொன்றுபோட சித்தமில்லை என்பதை விளக்கமாகக் கூறுகிறாள். (நியா 13:23).

(5) சிம்சோனின் பிறப்பு

நியா 13:24 பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

நியா 13:25 அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத் துவக்கினார்.

"சிம்சோன்" (Samson) - இவனுடைய பிறப்பே அற்புதமானது. இவன் தன் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே நசரேயனாக இருந்தவன். சிம்சோனின் தாய் தன்னுடைய வயிற்றில் சிம்சோனைச் சுமந்திருந்தபோதே, நசரேயருக்குரிய விரதங்களைக் கடைப்பிடித்து வந்தாள். (நியா 13:2-7,24-25). புதிய ஏற்பாட்டில் இவனுடைய விசுவாசம் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறது. (எபி 11:32).

அற்புதமாகப் பிறந்த பிள்ளைகள்

1. ஈசாக்கு (ஆதி 21:1-8; ரோமர் 4:16-21; ரோமர் 11:11-12)
2. யாக்கோபு (ஆதி 25:21-23)
3. யோசேப்பு (ஆதி 30:22-24)
4. சிம்சோன் (நியா 13:2-25)
5. சாமுவேல் (1சாமு 1)
6. யோவான்ஸ்நானன் (லூக்கா 1:5-80)
7. இயேசு கிறிஸ்து (மத் 1:18-25; லூக்கா 2)

"அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்" - (லூக்கா 1:80; லூக்கா 2:40,52.

"எஸ்தாவோல்" (Eshtaol) - யூதாவிலுள்ள பட்டணம். (நியா 16:31; நியா 18:2-11; யோசு 15:33; யோசு 19:41).

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

13 அதிகாரம்

மனுஷரை ஏவுகிறவர்களும், ஏவுகிறவைகளும்

1. தேவன் (2நாளா 18:31)
2. தேவனுடைய பிரசன்னம் (சங் 68:8)
3. பரிசுத்த ஆவியானவர் (நியா 13:25; 2பேதுரு 1:21)
4. எரிச்சல் (உபா 32:21)
5. பொறுமை (மத் 9:36; மத் 14:14)
6. எரிச்சல் (Indignation) (மத் 20:24)
7. பொறாமை (Envy) (அப் 7:9)
9. போட்டி (அப் 21:30)
9. பயம் (எபி 11:7)

14 அதிகாரம்

(6) சிம்சோனின் முதலாவது காதலி

நியா 14:1 சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு,

நியா 14:2 திரும்ப வந்து, தன் தாயையும் தகப்பனையும் நோக்கி: திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன்; அவளை எனக்குக் கொள்ள வேண்டும் என்றான்.

நியா 14:3 அப்பொழுது அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ள வேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனமனைத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்.

நியா 14:4 அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம்பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள்.

"திம்னாத்" (Timnath) - சோராவிற்கு கீழே 3 மைல் தூரத்திலுள்ள உள்ளது. (நியா 14:1-5; ஆதி 38:12-14).

"அவளை எனக்குக் கொள்ள வேண்டும் என்றான்" - இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜாதி ஸ்திரீயை விவாகம் பண்ணக்கூடாது. (யாத் 34:16; உபா 7:3= யோசு 23:12) பெலிஸ்தரின் கையிலிருந்து இஸ்ரவேலை விடுவிப்பதற்காக கர்த்தர் இந்த விவாகத்தைப் பயன்படுத்துகிறார். (நியா14:3-

(7) சிம்சோனும், சிங்கமும்

நியா 14:5 அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது.

நியா 14:6 அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறது போல் கிழித்துப் போட்டான்; ஆனாலும், தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை;

நியா 14:7 அவன் போய் அந்தப் பெண்ணோடே பேசினான்; அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருந்தாள்.

நியா 14:8 சிலநாளைக்குப்பின்பு, அவன் அவளை விவாகம்பண்ணத் திரும்பிவந்து, சிங்கத்தின் உடலைப் பார்க்கிறதற்கு வழிவிலகிப் போனான்; இதோ, சிங்கத்தின் உடலுக்குள்ளே தேனீக் கூட்டமும் தேனும் இருந்தது.

நியா 14:9 அவன் அதைத் தன் கைகளில் எடுத்து, சாப்பிட்டுக்கொண்டே நடந்து தன் தாய்தகப்பனிடத்தில் வந்து, அவர்களுக்கும் கொடுத்தான்; அவர்களும் சாப்பிட்டார்கள்; ஆனாலும் தான் அந்தத் தேனைச் சிங்கத்தின் உடலிலே எடுத்ததை அவர்களுக்கு அறிவிக்க வில்லை.

"கெர்ச்சிக்கிற பாலசிங்கம்" - பாலஸ்தீன தேசத்தில் பூர்வகாலத்தில் ஏராளமான சிங்கங்கள் இருந்தன. மிருகஜீவன்களில் சிங்கம் மிகவும் வலிமையானதாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. (நீதி 30:30; 2இராஜா 17:25-26).

14 அதிகாரம்

சிங்கங்கள் உருவகமாகக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. மடக்கிப்படுப்பது. (ஆதி 49:9)
2. கெர்ச்சிப்பது. (ஆதி 49:9; எண் 24:9)
3. சண்டையிடுதல் (எண் 23:24)
4. அழிவு (உபா 33:20; சங் 7:2)
5. சுற்றித்திரிதல் (யோபு 4:10; சங் 22:13)
6. வலுவான இருதயம் (2சாமு 17:10)
7. வேட்டையிடுதல் (யோபு 10:16)
8. பொறுமை (சங் 17:12)
9. பீறுதல் (சங் 17:12)
10. சாத்தானின் வல்லமைகள் (சங் 91:13)
11. கோபம் (நீதி 19:12; நீதி 20:2)
12. தைரியம் (நீதி 28:1)
13. வல்லமை (ஏசா 38:13)
14. வேகம் (எரே 49:19; எரே 50:44)
15. சாத்தான் (2தீமோ 4:17; 1பேதுரு 5:8)
16. ராஜ்யம் (தானி 7:4; வெளி 13:2)
17. ராஜரீகம் (வெளி 5:5)

சிங்கங்களைக் கொன்றவர்கள்

1. சிம்சோன் (நியா 14:5-8)
2. தாவீது (1சாமு 17:34-37)
3. பெனாயா (2சாமு 23:20; 1நாளா 11:22)

"கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால்" - (நியா 3:10)

"தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை" - தன் பெற்றோரிடமிருந்து சிம்சோன் இரகசியத்தைக் காத்துக் கொண்டான். ஆனால் ஒரு ஸ்திரீயிடம் அவனால் இரகசியத்தைக் காத்துக் கொள்ள முடியவில்லை. (நியா 14:16-17; நியா 16:16-21). இரண்டுமுறை தன் பெற்றோரிடமிருந்து தன் இரகசியத்தை மறைத்தான். ஆனாலும் ஒரு ஸ்திரீக்கு இரண்டுமுறை தன் இரகசியத்தை வெளிப்படுத்தினான்.

சிம்சோனின் வீரச்செயல்கள்

1. தன் கையினால் சிங்கத்தைக் கிழித்துப் போட்டான். (நியா 14:6).
2. முப்பது மனுஷரைக் கொன்றான். (நியா 14:19).
3. முந்நூறு நரிகளைப் பிடித்தான். (நியா 15:4-5).
4. பெலிஸ்தரைச் சங்காரம்பண்ணினான். (நியா 15:8).
5. தன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகளை அறுத்துப்போட்டான். (நியா 15:14).
6. கழுதையின் பச்சைத்தாடை எலும்பை எடுத்து 1000 பேரை வெட்டிக் கொன்று போட்டான். (நியா 15:15-17).
7. தாடை எலும்பிலிருந்து தண்ணீர் வரவழைத்தான். (நியா 15:16-20).
8. பட்டணத்து வாசற்கதவுகளையும், அதன் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூட பெயர்த்து தன் தோளின்மேல் வைத்து, எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்கு சுமந்துகொண்டு போனான். (நியா 16:1-3)
9. உலராத பச்சையான ஏழு அகணிநார் கயிறுகளை அறுத்துப்போட்டான். (நியா 16:6-9).
10. தன்னைக் கட்டியிருந்த புதுக் கயிறுகளை அறுத்துப்போட்டான். (நியா 16:10-12).

14 அதிகாரம்

11. தன் தலைமயிரின் ஏழு ஜடைகளைக் கட்டியிருந்த நெசவு ஆணியையும், நூல்பாவையும் பிடுங்கிக் கொண்டு போனான். (நியா 16:13-15)

12. வீட்டைத் தாங்குகிற தூண்களைச் சாய்த்து, அந்த வீட்டிலிருந்த 3,000 புருஷரையும், ஸ்திரீகளையும் கொன்று போட்டான். (நியா 16:23-31).

"சிலநாளைக்குப்பின்பு, அவன் அவளை விவாகம்பண்ணத் திரும்பிவந்து" - பழங்காலத்து விவாகத்தில் இரண்டு பகுதிகள் இருந்தன. ஒன்று நிச்சயம் பண்ணுவது (நியா 14:7). மற்றொன்று விவாகம் பண்ணுவது (நியா 14:8). இந்த வசனத்தில் சிம்சோன் விவாகம் பண்ணும் பகுதிக்கு வந்திருக்கிறான்.

"தேனீக்கூட்டம்" - பாலஸ்தீன தேசத்தில் தேனீக்கள் அதிகம். ஐந்து இடங்களில் தேனீக்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (நியா 14:8; உபா 1:44; சங் 118:12; ஏசா 7:18).

(8) சிம்சோனின் திருமணமும், விடுதலையும்

நியா 14:10 அவன் தகப்பன் அந்தப் பெண் இருக்கும் இடத்தில் போனபோது, சிம்சோன் அங்கே விருந்துசெய்தான்; வாலிபர் அப்படிச் செய்வது வழக்கம்.

நியா 14:11 அவர்கள் அவனைக் கண்ட போது, அவனோடேகூட இருக்கும்படி முப்பது தோழரை அவனிடத்தில் கொண்டு வந்தார்கள்.

நியா 14:12 சிம்சோன் அவர்களை நோக்கி: ஒரு விடுகதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்; அதை நீங்கள் விருந்துண்கிற ஏழுநாளைக்குள்ளே கண்டுபிடித்து எனக்கு விடுவித்தால், நான் உங்களுக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுப்பேன்.

நியா 14:13 அதை எனக்கு விடுவிக்காதே போனால், நீங்கள் எனக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: உன் விடுகதையைச் சொல்லு; நாங்கள் அதைக் கேட்கட்டும் என்றார்கள்.

நியா 14:14 அப்பொழுது அவன்: பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது என்றான்; அந்த விடுகதை அவர்களால் மூன்றுநாள்மட்டும் விடுவிக்கக்கூடாதே போயிற்று.

பூர்வகாலத்து விவாகங்கள்

மணவாளனுடைய வீட்டிலிருந்து விவாகம் சம்பந்தமான பேச்சு ஆரம்பமாகும். சில சமயங்களில் மணவாட்டியின் வீட்டிலிருந்தும் விவாகப்பேச்சு ஆரம்பமாகலாம். (யாத் 2:21; யோசு 15:16-17; 1சாமு 18:27)

ஆதிகாலத்து விவாகங்களில் மார்க்கச் சடங்குகள் நடைபெற்றதற்கு சான்றுகள் இல்லை. வரதட்சணை சம்பந்தமான காரியங்களையும், மற்றும் திருமண ஒழுங்குகளையும் பேசி முடித்தபின்பு, மணப்பெண்ணை, மணவாளனுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்வது வழக்கம். அங்கு அவள் திருமணநாள் வரும் வரையிலும் தங்கியிருக்க வேண்டும்.

ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாயின் கூடாரத்திற்கு அழைத்து வந்தான். அங்கு அவர்கள் கணவனும், மனைவியுமானார்கள். (ஆதி 24:67). பலமனைவிகள் விவாகத்தில் ஒவ்வொரு மனைவிக்கும் தனித்தனியாகக் கூடாரம் இருக்கும். (ஆதி 31:33).

இதற்குப் பின்பு நடைபெற்ற விவாகங்கள் பண்டிகைப்போல கொண்டாடப்பட்டன. விவாகம் சம்பந்தமான பேச்சுக்களில் கலியாண விருந்துகளை எத்தனை நாட்கள் நடத்த வேண்டும் என்பதையும் பேசி முடித்து விடுவார்கள். ஒரு வருஷமாக விவாகக் காரியங்கள் நடைபெற்றன. (மத் 1:18-25; லூக்கா 1:24-38,56-57).

14 அதிகாரம்

கலியாண விருந்துகள் ஏழு நாட்களுக்கு நடைபெறும். (நியா 14:12-18; ஆதி 29:22; எஸ் 2:18; மத் 22:1-14; வெளி 19:1-10). கலியாணத்தின்போது ஊர்வலங்களும், கேளிக்கைகளும் இருக்கும். (எரே 7:34; எரே 16:9; எரே 25:10; எரே 33:11; மத் 25:1-13, வெளி 18:23). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மணவாளனுக்குத் தோழர்கள் இருப்பார்கள். (நியா 14:11) மணவாட்டிக்கு கலியாணம் நிகழ்ச்சிகளில் உதவி புரிவதற்குக் கன்னிகைகள் தோழியராக இருப்பார்கள். (மத் 25:1-13)

"அவர்கள் அவனைக் கண்டபோது" - சிம்சோன் பல விஷயங்களில் வித்தியாசமாகச் சிறந்திருந்தான். அவனுடைய வீரத்தை வாலிபர்கள் கண்டார்கள்.

விடுகதை (riddle) - חִידָה - khee-daw' - 2420

பெ.பெ.சொ.-பிரத்தியட்சம், விடுகதை, மறைபொருள், கேள்விப்படுதல், சூதான பேச்சு, பழமொழி **(a puzzle; trick; conundrum; enigmatic saying or question) "riddle"** (நியா 14:12-19; எசே 17:2); **"dark speeches"** (எண் 12:8); **"dark sayings"** (சங் 49:4; சங் 78:2; நீதி 1:6); **"dark sentences"** (தானி 8:23); **"hard questions"** (1இராஜா 10:1; 2நாளா 9:1); **"proverb"** (ஆப 2:6).

(9) விடுகதையை விடுவித்தார்கள்

நியா 14:15 ஏழாம்நாளிலே அவர்கள் சிம்சோனின் பெண்சாதியைப் பார்த்து: உன் புருஷன் அந்த விடுகதையை எங்களுக்கு விடுவிக்கும்படிக்கு நீ அவனை நயம்பண்ணு; இல்லாவிட்டால் நாங்கள் உன்னையும் உன் தகப்பன் வீட்டையும் அக்கினியால் சுட்டெரித்துப் போடுவோம்; எங்களுக்குள்ளவைகளைப் பறித்துக்கொள்ளவா எங்களை அழைத்தீர்கள் என்றார்கள்.

நியா 14:16 அப்பொழுது சிம்சோனின் பெண்சாதி அவனுக்கு முன்பாக அழுது, நீ என்னை நேசியாமல் என்னைப் பகைக்கிறாய், என் ஜனங்களுக்கு ஒரு விடுகதையைச் சொன்னாய், அதை எனக்காவது விடுவிக்கவில்லையே என்றாள்; அதற்கு அவன்: இதோ, நான் என் தாய்தகப்பனுக்கும் அதை விடுவிக்கவில்லையே உனக்கு அதை விடுவிப்பேனோ என்றான்.

நியா 14:17 விருந்துண்கிற ஏழுநாளும் அவள் அவன் முன்பாக அழுதுகொண்டே இருந்தாள்; ஏழாம்நாளிலே அவள் அவனை அலட்டிக்கொண்டிருந்தபடியால், அதை அவளுக்கு விடுவித்தான்; அப்பொழுது அவள் தன் ஜனங்களுக்கு அந்த விடுகதையை விடுவித்தாள்.

நியா 14:18 ஆகையால் ஏழாம்நாளிலே பொழுது போகுமுன்னே, அந்த ஊர் மனுஷர் அவனை நோக்கி: தேனைப் பார்க்கிலும் மதுரமானது என்ன, சிங்கத்தைப்பார்க்கிலும் பலமானதும் என்ன என்றார்கள்; அதற்கு அவன்: நீங்கள் என் கிடாரியால் உழாதிருந்தீர்களானால், என் விடுகதையைக் கண்டுபிடிப்பதில்லை என்றான்.

"உன் புருஷன் அந்த விடுகதையை எங்களுக்கு விடுவிக்கும்படிக்கு நீ அவனை நயம்பண்ணு" - சிம்சோனின் பெண்சாதியை அந்த ஊர் வாலிபர்கள் ஏமாற்றுகிறார்கள். தங்கள் சொற்படி கேட்காவிட்டால் அவர்களைக் குடும்பத்தோடு சுட்டெரித்து விடுவதாக மிரட்டுகிறார்கள். 000(நியா 14:15-18). சிம்சோனின் பெண்சாதி அவர்களுடைய மிரட்டலுக்குப் பணிகிறாள். ஆனாலும் அவளால் தன்னையோ, தன் குடும்பத்தாரையோ காப்பாற்ற இயலவில்லை. சிம்சோன் செய்த மற்றொரு காரியத்திற்காக இவர்களைக் குடும்பத்தோடு எரித்து விடுகிறார்கள். (நியா 15:3-6). இவள் சிம்சோனுக்கு உண்மையானவளாக இருந்திருந்தால் ஒருவேளை அவன் இவளையும், இவளுடைய வீட்டாரையும் பாதுகாத்திருப்பான்.

14 அதிகாரம்

"அதை எனக்காவது விடுவிக்கவில்லையே" - சிம்சோனிடமிருந்து இரகசியத்தைப் பெறுவதற்காக அவனுடைய பெண்சாதி அவனிடம் நடிக்கிறாள். தன்னை நேசியாமல் பகைப்பதாகக் கூறுகிறாள். (நியா 14:16-17; நியா 16:6-20). சிம்சோன் வாழ்வில் அவன் தாயாரைத் தவிர, மேலும் மூன்று ஸ்திரீகள் இடம் பெற்றார்கள். இம்மூவருமே வேசிகளும், அவனை ஏமாற்றுகிறவர்களுமாவார்கள். (நியா 16:1). சிம்சோனின் தாய் மட்டுமே அவனை உண்மையாகப் பாதுகாத்து பராமரித்து வளர்த்தவள்.

"விருந்துண்கிற ஏழுநாளும்" - சிம்சோனின் விடுகதைக்கு அந்த ஊர் வாலிபர்களால் ஏழு நாட்களுக்கு விடை கண்டுபிடிக்க முடியவில்லை. (நியா 14:14-15) அதுவரையிலும் அவர்கள் சிம்சோனுடைய மனைவியின் வீட்டாருக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. ஏழு நாட்களாக விடுகதைக்கு விடை காணவேண்டுமென்று சிம்சோனின் பெண்சாதி முயற்சி பண்ணுகிறாள். ஏழாம்நாளில் அவளுடைய பிரச்சனை முற்றிற்று. ஆகையினால் அன்று அவள் அவனை அலட்டிக் கொண்டிருந்தாள். செப்துவஜிந்த் பதிப்பில் "ஏழாம் நாளில்" என்பதற்குப் பதிலாக "நாலாம் நாளில்" என்றிருக்கிறது. நியா 14:14 ஆவது வசனத்தில் "அந்த விடுகதை அவர்களால் மூன்றுநாள்மட்டும் விடுவிக்கக்கூடாதே போயிற்று" என்று உள்ளது. நாலாம் நாளில் என்னும் வாக்கியம் இதோடு ஒத்துப்போகிறது. இந்தப்புஸ்தகத்தைப் பிரதியெடுத்து எழுதியவர்கள் நாலாம் நாள் என்பதற்குப் பதிலாக ஏழாம்நாள் என்று தவறுதலாக எழுதியிருக்க வேண்டும்.

"கிடாரியால் உழாதிருந்தீர்களானால்" - விசுவாசமில்லாமல் ஏமாற்றுத்தனம் பண்ணுதல் என்று பொருள்படும் எபிரெய வழக்குச்சொல்.

(10) சிம்சோன் முப்பது பேரைக் கொன்று பழிதீர்த்தான்

நியா 14:19 கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவன் அஸ்கலோனுக்குப் போய், அவ்வூராரில் முப்பதுபேரைக் கொன்று, அவர்களுடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டுவந்து, விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்த மாற்று வஸ்திரங்களைக் கொடுத்து, கோபம் மூண்டவனாய்ப் புறப்பட்டு, தன் தகப்பன் வீட்டுக்குப் போய்விட்டான்.

நியா 14:20 சிம்சோனின் பெண்சாதியோவென்றால், அவனுடைய தோழரில் அவனோடே சிநேகமாயிருந்த ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

"கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால்" - (நியா 3:10)

"அவன் அஸ்கலோனுக்குப் போய்" - பெலிஸ்தருடைய தேசத்திற்குள் இந்த ஊர் 30 மைல் உள்ளே இருக்கிறது. சிம்சோன் அஸ்கலோனுக்குப்போனது மிகவும் வீரமான செயலாகும். அங்கு அவன் முப்பது பேரைக் கொன்று தான் பட்ட கடனை அடைத்தான்.

15 அதிகாரம்

(11) இரண்டாம் முறையாக பழிதீர்க்கும் எண்ணம்

நியா 15:1 சிலநாள் சென்றபின்பு, சிம்சோன் கோதுமை அறுக்கிற நாட்களில் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை எடுத்துக் கொண்டு, தன் பெண்சாதியைக் காணப்போய்: நான் என் பெண் சாதியினிடத்தில் அறைவீட்டிற்குள் போகட்டும் என்றான்; அவள் தகப்பனோ, அவனை உள்ளே போக ஒட்டாமல்:

"கோதுமை அறுக்கிற நாட்களில்" - இது ஏப்ரல் மாதம் இறுதியில் அல்லது மேமாதம் ஆரம்பத்தில் வரும். கோதுமை அறுப்பு பொதுவாக கோடைகாலத்தில் நடைபெறும். தானியங்களை உலர்த்துவதற்கு கோடைகாலம் உகந்த காலமாகும்.

"ஒரு வெள்ளாட்டுக்குட்டியை எடுத்துக் கொண்டு, தன் பெண்சாதியைக் காணப்போய்" - ஒருவரைக் காணப்போகும்போது அவருக்கு ஏதாவது ஒரு வெகுமதியை எடுத்துச் செல்வது அக்காலத்து வழக்கம். தான் வஞ்சிக்கப் பட்டதற்காக சிம்சோன் கோபமாக இருந்தான். ஆனாலும் இப்போது தன் கோபம் தணிந்து தன் பெண்சாதியைச் சமாதானம் பண்ணுவதற்காக ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்துக் கொண்டு போகிறான். பாலஸ்தீன தேசத்தில் ஆட்டுக்குட்டி அனைவரும் போஜனம் பண்ணும் போஜனமாகும். (ஆதி 38:16-17; லூக்கா 15:29).

"நான் என் பெண்சாதியினிடத்தில் அறை வீட்டிற்குள் போகட்டும்" - சிம்சோன் இதைத் தனக்குள் சொல்கிறான். ஆனால் அவளுடைய தகப்பன் அவனை அந்த அறைவீட்டிற்குள் போகவிடவில்லை. சிம்சோனின் பெண்சாதியை அவனுடைய தோழரில் ஒருவனுக்குக் கொடுத்து விட்டான். (நியா 14:20). அவளுக்குப் பதிலாக அவளுடைய தங்கையை சிம்சோனுக்குக் கொடுக்க விரும்புகிறான். ஆனால் இது இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. (லேவி 18:18).

(12) முந்நூறு நரிகளால் பெலிஸ்தரின் வெள்ளாண்மையை சுட்டெரித்தான்

நியா 15:2 நீ அவளை முற்றிலும் பகைத்துவிட்டாய் என்று நான் எண்ணி, அவளை உன் சிநேகிதனுக்குக் கொடுத்து விட்டேன்; அவள் தங்கை அவளைப் பார்க்கிலும் அழகானவள் அல்லவா, அவளுக்குப் பதிலாக இவள் உனக்கு இருக்கட்டும் என்று சொன்னான்.

நியா 15:3 அப்பொழுது சிம்சோன்: நான் பெலிஸ்தருக்குப் பொல்லாப்புச் செய்தாலும், என்மேல் குற்றமில்லை என்று அவர்களுக்குச் சொல்லி,

நியா 15:4 புறப்பட்டுப்போய், முந்நூறு நரிகளைப் பிடித்து, பந்தங்களை எடுத்து, வாலோடே வால் சேர்த்து, இரண்டு வால்களுக்கும் நடுவே ஒவ்வொரு பந்தத்தை வைத்துக் கட்டி,

நியா 15:5 பந்தங்களை கொளுத்தி, பெலிஸ்தரின் வெள்ளாண்மையிலே அவைகளை ஓடவிட்டு, கதிர்க் கட்டுகளையும் வெள்ளாண்மையையும் திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் சுட்டெரித்துப் போட்டான்.

"நான் பெலிஸ்தருக்குப் பொல்லாப்புச் செய்தாலும், என்மேல் குற்றமில்லை" - தனக்கு வந்த பிரச்சனைக்காகவும், துன்பத்திற்காகவும், வேதனைக்காகவும் சிம்சோன் பெலிஸ்தரைப் பழிவாங்க விரும்புகிறான். முந்நூறு நரிகளைப் பிடித்து, பந்தங்களை எடுத்து, வாலோடே வால் சேர்த்து, இரண்டு வால்களுக்கும் நடுவே ஒவ்வொரு பந்தத்தை வைத்துக் கட்டி, பந்தங்களை கொளுத்தி, பெலிஸ்தரின் வெள்ளாண்மையிலே அவைகளை ஓடவிட்டு, கதிர்க்கட்டுகளையும் வெள்ளாண்மையையும் திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் சுட்டெரித்துப்போட்டான். (நியா 15:4-5).

நரிகள் (foxes) - שׁוּעָל - shoo-awl', shoo-awl' – 7776

15 அதிகாரம்

ஆ.பெ.சொ. - நரி, குழிநரி **(jackal; fox)** - பாலஸ்தீன தேசத்தில் ஏராளமான நரிகள் உள்ளன. (நெகே 4:3; சங் 63:10; உன் 2:15; புல 5:18; எசே 13:4; மத் 8:20; லூக்கா 9:58; லூக்கா 13:32.

பெலிஸ்தருக்கு ஏற்பட்ட அழிவுகள்

1. கோதுமை கதிர்க்கட்டுக்கள்
2. கோதுமை வெள்ளாண்மை
3. திராட்சத்தோட்டங்கள்
4. ஒலிவத்தோப்புகள்

(13) மூன்றாம் முறையாக பழிதீர்க்கும் எண்ணம்

நியா 15:6 இப்படிச் செய்தவன் யார் என்று பெலிஸ்தர் கேட்கிறபோது, திம்னாத்தானுடைய மருமகனாகிய சிம்சோன்தான்; அவனுடைய பெண்சாதியை அவனுடைய சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டபடியால் அப்படிச் செய்தான் என்றார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் போய், அவளையும் அவள் தகப்பனையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள்.

"திம்னாத்தானுடைய மருமகனாகிய சிம்சோன்தான்" - தங்களுடைய விளைச்சல் நிலங்களைச் சுட்டெரித்துப் போட்டவன் சிம்சோன் என்பதை பெலிஸ்தர் எளிதாகக் கண்டுபிடிக்கிறார்கள். ஏனெனில் அவனால் மட்டுமே இப்படிப்பட்ட பெரிய காரியங்களைச் செய்ய முடியும். இதற்காக பெலிஸ்தர் சிம்சோனின் மனைவியையும், அவளுடைய தகப்பனையும், அக்கினியால் சுட்டெரித்தார்கள்.

(14) சிம்சோன் பெலிஸ்தரை சின்னா பின்னமாக்கினான்

நியா 15:7 அப்பொழுது சிம்சோன் அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிச் செய்தபடியால் நான் உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேன் என்று சொல்லி,

நியா 15:8 அவர்களைச் சின்ன பின்னமாகச் சங்காரம்பண்ணி, பின்பு போய், ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திலே குடியிருந்தான்.

நியா 15:9 அப்பொழுது பெலிஸ்தர்போய், யூதாவிலே பாளயமிறங்கி, லேகி என்கிற வெளியிலே பரவியிருந்தார்கள்.

நியா 15:10 நீங்கள் எங்களுக்கு விரோதமாக வந்தது என்ன என்று யூதா மனுஷர் கேட்டதற்கு, அவர்கள்: சிம்சோன் எங்களுக்குச் செய்ததுபோல, நாங்களும் அவனுக்குச் செய்யும்படி அவனைக் கட்டுகிறதற்காக வந்தோம் என்றார்கள்.

"உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேன்" - தன்னுடைய பெண் சாதியையும், அவளுடைய தகப்பனையும் சுட்டெரித்ததற்காக சிம்சோன் பெலிஸ்தரைப் பழிவாங்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறான். அவர்களைச் சின்னபின்னமாகச் சங்காரம்பண்ணினான். (நியா 15:7-8).

"பெலிஸ்தர்போய், யூதாவிலே பாளயமிறங்கி" - சிம்சோன் என்னும் ஒரு மனுஷனுக்காக பெலிஸ்தர் தேசமாக ஒன்றுசேர்ந்து யூதாவிலே பாளயமிறங்குகிறார்கள். அவனைப் பிடித்துக் கொண்டு போவதற்காக லேகி என்கிற வெளியிலே பரவியிருந்தார்கள். (நியா 15:9-10).

15 அதிகாரம்

(15) நான்காம் பழிதீர்க்கும் எண்ணம்

நியா 15:11 அப்பொழுது யூதாவிலே மூவாயிரம் பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப் போய்: பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? பின்னை ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று சிம்சோனிடத்தில் சொன்னார்கள். அதற்கு அவன்: அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்றான்.

நியா 15:12 அப்பொழுது அவர்கள்: உன்னைக் கட்டி, பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுக்க வந்திருக்கிறோம் என்றார்கள். அதற்குச் சிம்சோன்: நீங்களே என்மேல் விழுகிறதில்லை என்று எனக்கு ஆணையிடுங்கள் என்றான்.

நியா 15:13 அதற்கு அவர்கள்: நாங்கள் உன்னை இறுகக்கட்டி, அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்போமே அல்லாமல், உன்னைக் கொன்றுபோடமாட்டோம் என்று சொல்லி, இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக் கட்டி, கன்மலையிலிருந்து கொண்டு போனார்கள்.

"யூதாவிலே மூவாயிரம் பேர்" - சிம்சோன் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்தில் இருக்கிறான். யூதாவிலே மூவாயிரம்பேர் இந்த இடத்திற்குப் போய் சிம்சோனைப் பிடித்து பெலிஸ்தரிடம் ஒப்படைப்பதற்காகப் போகிறார்கள். ஆனால் சிம்சோனோ அவர்களுக்குப் பணியவில்லை. அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்று கூறிவிடுகிறான். யூதாவின் மனுஷர் சிம்சோனைக் கொல்லாமல் அவனைக் கயிறுகளால் கட்டி, பெலிஸ்தரிடம் ஒப்படைப்பதாக வாக்குப்பண்ணினார்கள். (நியா 15:11-13). இதனால் சிம்சோனுக்கு இன்னும் அநேக பெலிஸ்தரைக் கொல்வதற்கு வாய்ப்புண்டாயிற்று.

கயிறுகள் (cords) - עֲבֹת - ab-oth', ab-oth', ab-oth-aw' - 5688

பொதுப்பெயர்ச்சொல் - பின்னல், கயிறு, அடர்த்தியானகிளை, தழை, நுனிக்கிளை (something entwined) "cords" (நியா 15:13-14; சங் 2:3; சங் 118:27; சங் 129:4); "wreathen chains or work" (யாத் 28:14,22-25; யாத் 39:15-18); "ropes" (நியா 16:11-12; ஏசா 5:18); "bands" (எசே 3:25; எசே 4:8; ஓசி 11:4)

(16) கழுதையின் தாடைஎலும்பினால் ஆயிரம் பேரைக் கொன்றான்

நியா 15:14 அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்து போயிற்று.

நியா 15:15 உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான்.

நியா 15:16 அப்பொழுது சிம்சோன்: கழுதையின் தாடையெலும்பினால் குவியல் குவியலாகப் பட்டுக் கிடக்கிறார்கள், கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன்றேன் என்றான்.

நியா 15:17 அப்படிச் சொல்லித் தீர்ந்தபின்பு, தன் கையில் இருந்த தாடையெலும்பை எறிந்துவிட்டு, அவ்விடத்திற்கு ராமாத் லேகி என்று பேரிட்டான்.

15 அதிகாரம்

"லேகி" (Lehi) - மறுபெயர் ராமாத்-லேகி (Ramathlehi) என்பதாகும். இதற்கு "லேகியின் சிகரம் அல்லது தாடை எலும்பை உயர்த்துதல்" என்று பொருள். (நியா 15:17). இந்த இடம் எங்குள்ளது என்று தெரியவில்லை. இங்கு சிம்சோன் 1,000 பெலிஸ்தரைக் கொன்று போட்டான். (நியா 15:9,14,17,19).

"கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால்" - (நியா 3:10) பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய கிரியைகளோடு பூமிக்குரிய கிரியைகளையும், பலமாய்ச் செய்யக்கூடியவர்.

"கழுதையின் பச்சைத் தாடையெலும்பு" - அழுகிப்போனதல்ல, புதியது. இதை வைத்து சிம்சோன் 1,000 பெலிஸ்தரைக் கொன்று போட்டான். (நியா 3:31)

"ராமாத் லேகி" (Ramathlehi) - (நியா 15:14)

(17) அற்புதம் - சிம்சோனுக்குத் தண்ணீர் கிடைத்தது

நியா 15:18 அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ என்றான்.

நியா 15:19 அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப் பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஒடிவந்தது; அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது, அவன் பிழைத்தான்; ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பேரிட்டான்; அது இந்நாள்வரையும் லேகியில் இருக்கிறது.

நியா 15:20 அவன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்.

"நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ" - யுத்த நாட்கள் முடிந்தது என்று சிம்சோன் நினைத்தான். ஆனால் கர்த்தர் அவனுக்கு வேறு திட்டங்களை வைத்திருந்தார். புதிய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகளாகிய நமக்கு ஏராளமான வாக்குத்தத்தங்களைக் கர்த்தர் கொடுத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களுக்கு இந்தச்சிலாக்கியங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், சிம்சோன் கர்த்தரிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தினால் நற்பெயர் பெற்றான். (எபி 11:32). நமக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கும் வாக்குத் தத்தங்களைப் பற்றிக் கொண்டு நாம் கர்த்தருக்காக ஜீவிக்க வேண்டும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:1-13; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:13-14).

"தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார்" - கழுதையின் தாடை எலும்பிலிருந்த ஒரு பள்ளத்திலிருந்து தண்ணீர் ஒடிவந்தது. கர்த்தருடைய தெய்வீக வல்லமையினால் அற்புதம் நடைபெறுகிறது.

"எந்நக்கோரி" (En-hakkore) - இதற்கு கூப்பிடுகிறவனின் ஊற்று (the caller's fount) என்று பொருள். சிம்சோன் தண்ணீருக்காக ஜெபித்தான். கர்த்தர் அவனுக்குத் தண்ணீரைக் கொடுத்தார். நியா 15:18 ஆவது வசனத்தில் சிம்சோனின் முழு ஜெபமும் கூறப்படவில்லை.

"இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்" - இஸ்ரவேலில் சிம்சோன் நியாயம் விசாரித்த சம்பவங்களைப் பற்றி அதிகமான விவரம் எதுவும் தெரியவில்லை. பெலிஸ்தரோடு அவன் பண்ணின யுத்தத்தில் கர்த்தர் செய்த அற்புதங்கள் மட்டுமே இந்தப் புஸ்தகத்தில் அதிகமாக விளக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் சிம்சோனின் நடபடிகள் எதுவும் இந்தப் புஸ்தகத்தில் அதிகமாகக் கூறப்படவில்லை.

16 அதிகாரம்

(18) ஐந்தாம் பழிதீர்க்கும் எண்ணம்

நியா 16:1 பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்.

நியா 16:2 அப்பொழுது: சிம்சோன் இங்கே வந்திருக்கிறான் என்று காசா ஊராருக்குச் சொல்லப்பட்டது. அவர்கள்: காலையில் வெளிச்சமாகிறபோது அவனைக் கொன்று போடுவோம் என்று சொல்லி, அவனை வளைந்துகொண்டு இராமுழுதும் அவனுக்காகப் பட்டண வாசலில் பதிவிருந்து இராமுழுதும் பேசாதிருந்தார்கள்.

"வேசி" - சிம்சோன் நேசித்த இரண்டாவது ஸ்திரீ. (நியா 14:1-4; நியா 16:4-22).

"அவனை வளைந்துகொண்டு இராமுழுதும் அவனுக்காகப் பட்டணவாசலில் பதிவிருந்து இராமுழுதும் பேசாதிருந்தார்கள்." - காசா ஊராரின் சதித்திட்டம் சிம்சோனுக்குத் தெரிய வருகிறது. ஒருவேளை கர்த்தர் அவனை எழுப்பியிருக்கலாம். சிம்சோன் நடுராத்திரிமட்டும் படுத்திருந்து, நடுராத்திரியில் எழுந்து, பட்டணத்து வாசல் கதவுகளையும் அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூடப் பேர்த்து, தன் தோளின் மேல் வைத்து, எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்குச் சுமந்து கொண்டு போனான். காசா ஊரிலிருந்து எபிரோன் இருபது மைல் தூரத்திலுள்ளது. (நியா 16:1-3; நியா 14:6).

(19) பட்டணத்து வாசற்கதவுகளை அழித்தான்

நியா 16:3 சிம்சோன் நடுராத்திரிமட்டும் படுத்திருந்து, நடுராத்திரியில் எழுந்து, பட்டணத்து வாசல் கதவுகளையும் அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூடப் பேர்த்து, தன் தோளின் மேல் வைத்து, எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்குச் சுமந்து கொண்டுபோனான்.

(20) ஆறாம் பழிதீர்க்கும் எண்ணம் - சிம்சோனும், தெலீலாள்

(அ) ஏழு அகணிநார் கயிறுகளால் கட்டப்படுதல்

நியா 16:4 அதற்குப்பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலிலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்.

நியா 16:5 அவளிடத்திற்குப் பெலிஸ்தரின் அதிபதிகள் போய்: நீ அவனை நயம்பண்ணி, அவனுடைய மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்றும், நாங்கள் அவனைக் கட்டிச் சிறுமைப் படுத்துகிறதற்கு எதினாலே அவனை மேற்கொள்ளலாம் என்றும் அறிந்து கொள்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்துநூறு வெள்ளிக்காசு உனக்குக் கொடுப்போம் என்றார்கள்.

நியா 16:6 அப்படியே தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது, உன்னைச் சிறுமைப்படுத்த உன்னை எதினாலே கட்டலாம் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்.

நியா 16:7 அதற்கு சிம்சோன்: உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளாலே என்னைக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன் என்றான்.

நியா 16:8 அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளை அவளிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; அவைகளால் அவள் அவனைக் கட்டினாள்.

நியா 16:9 பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டிலே காத்திருக்கும்போது, அவள்: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அப்பொழுது, சணல்நூலானது நெருப்புப்பட்டவுடனே இற்றுப்போகிறதுபோல, அவன் அந்தக் கயிறுகளை அறுத்துப்போட்டான்; அவன் பலம் இன்னதினாலே உண்டாயிருக்கிறது என்று அறியப்படவில்லை.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

16 அதிகாரம்

“சோரேக் ஆற்றங்கரை” **(valley of Sorek)** - சோரேக் என்பதற்கு நேர்த்தியான திராட்சச்செடி **“choice vines”** என்று பொருள். இது தாணின் தென்பகுதியிலுள்ளது. இந்தப் பள்ளத்தாக்கு வழியாகப் பாய்ந்து ஓடும் ஆறு அஸ்கலோனுக்கு அருகில் மத்திய தரைக்கடலில் கலக்கிறது.

“தெலீலாள்” **(Delilah)** - இதற்கு அழகானவள் **(languishing, delicate)** என்று பொருள். சிம்சோன் சிநேகமாக இருந்த ஸ்திரீகளில் இவளுடைய பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (நியா 4-18).

“ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்” - சிம்சோன் சிநேகமாக இருந்த ஸ்திரீகள் எல்லோருமே அவனுக்குப் பிரச்சனையைக் கொடுத்தார்கள். அவன் அந்நிய ஸ்திரீகளிடத்தில் சிநேகமாக இருக்கிறான். சிம்சோன் சிநேகமாக இருந்த மூவருமே பெலிஸ்திய ஸ்திரீகளாவார்கள். அவர்களுடைய விவரம் வருமாறு:

1. திம்னாத்திலிருக்கிற அவனுடைய மனைவி (நியா 14:1-4)
2. காசாவிலிருந்த வேசி (நியா 16:1)
3. சோரேக் ஆற்றங்கரையிலிருந்த தெலீலாள். (நியா 16:4-22)

சிம்சோனின் பெற்றோர் அவனுடைய அந்நிய சிநேகிதிகளைக் குறித்து மென்மையாகக் கண்டித்தார்கள். (நியா 14:3). கர்த்தர் சிம்சோனின் ஜீவியத்தில் இதை அனுமதித்தார். பெலிஸ்தருடைய கையிலிருந்து இஸ்ரவேலை மீட்க வேண்டுமென்பது கர்த்தருடைய திட்டம். (நியா 14:4). சிம்சோன் பல சமயங்களில் கர்த்தருடைய வழிநடத்துதலை நாடாமல் தன் சுய இச்சைக்கு இடம் கொடுத்தான்.

“பெலிஸ்தரின் அதிபதிகள்” - இவர்கள் ஐந்து பேர். (யோசு 13:3).

“அவனை நயம்பண்ணி” - சிம்சோன் அந்நிய ஸ்திரீகளை நேசித்தாலும் அவர்கள் இவன்மீது உண்மையான நேசத்தை வெளிப்படுத்தவில்லை. அவர்களுடைய நேசம் மற்றவர்கள்மீது இருந்தது. அல்லது அவர்களுடைய சிநேகிதர்கள் சிம்சோனின் சத்துருக்களாக இருந்தார்கள். சிம்சோன் ஸ்திரீகளை அதிகமாக நேசித்த படியினால், அவர்கள் அவனுடைய நேசத்தைத் தங்களுக்கு ஆதாயமாக எடுத்துக் கொண்டு அவனை வஞ்சித்தார்கள். சிம்சோனின் முதலாவது சிநேகிதியும், மூன்றாவது சிநேகிதியும் அவனுடைய சத்துருக்களோடு சேர்ந்து அவனுக்கு சதி பண்ணினார்கள். (நியா 14:1-20; நியா 16:1-22).

“நாங்கள் அவனைக் கட்டிச் சிறுமைப் படுத்துகிறதற்கு” - தன்னை நேசிக்கும் மனுஷனை மற்றவர்கள் கட்டி, சிறுமைப் படுத்துவதற்குத் தெலீலாள் சம்மதிக்கிறாள். சிம்சோனை அவர்கள் உபத்திரவப்படுத்தி, கொன்றுபோடுவார்கள். இது தெரிந்திருந்தும், தெலீலாள் சிம்சோனுக்கு எதிராகப் பெலிஸ்தருக்கு உதவி புரிகிறாள். தெலீலாளின் உதவிக்காக பெலிஸ்தரின் அதிபதிகள் ஒவ்வொருவரும் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசுகள் கொடுப்பதாக வாக்குப் பண்ணுகிறார்கள். தெலீலாள் காசுக்காக சிம்சோனைக் காட்டிக் கொடுக்கிறாள்.

“உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது” - சிம்சோனின் பலத்தை அறிந்து கொள்வதற்கு தெலீலாள் ஏறெடுக்கும் முதலாவது முயற்சி. சிம்சோன் இதை உணர்ந்து எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் தெலீலாளின் அழகு அவனுடைய மனக்கண்களைக் குருடாக்கிவிட்டது.

அகணிநார்க் கயிறுகள் **(withs)** - יֶתֶר - **yeh’-ther - 3499**

> ஆ.பெ.சொ. - கயிறுகள், கொடிகள் - செப்துவஜிந்த் பதிப்பில் ஏழு பச்சைக் கயிறுகள் என்றுள்ளது. இது உலராத புதிய கயிறுகளைக் குறிக்கும். இந்தக் கயிறுகள் வலுவானவை. (நியா 16:7-9).

“அந்தக் கயிறுகளை அறுத்துப்போட்டான்” - சணல்நூலானது நெருப்புப் பட்டவுடனே இற்றுப்போகிறதுபோல, சிம்சோன் அந்தக் கயிறுகளை அறுத்துப்போட்டான். இது பச்சைக் கயிறுகள். ஆகையினால் எளிதில் தீப்பற்றி எரியாது. ஆயினும் சிம்சோன் தன்னுடைய வலிமையினால் அந்தக் கயிறுகளை அறுத்துப் போட்டான். (ஏசா 1:31; ஏசா 43:17).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

16 அதிகாரம்

(ஆ) புதுக் கயிறுகளால் கட்டப்படுதல்

நியா 16:10 அப்பொழுது தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதோ, என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய் சொன்னாய்; இப்போதும் உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்.

நியா 16:11 அதற்கு அவன்: இதுவரைக்கும் ஒரு வேலைக்கும் வழங்காதிருக்கிற புதுக்கயிறுகளால் என்னை இறுகக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன் என்றான்.

நியா 16:12 அப்பொழுது தெலீலாள், புதுக்கயிறுகளை வாங்கி, அவைகளால் அவனைக் கட்டி: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டில் இருந்தார்கள்; ஆனாலும் அவன் தன் புயங்களில் இருந்த கயிறுகளை ஒரு நூலைப்போல அறுத்துப்போட்டான்.

"இதுவரைக்கும் ஒரு வேலைக்கும் வழங்காதிருக்கிற புதுக்கயிறுகளால்" - சிம்சோன் தெலீலாளுக்கு மற்றுமொரு கயிற்றினால் தன்னை இறுகக் கட்டுமாறு கூறுகிறான். ஆனால் இம்முறையும் அவன் தன் புயங்களில் இருந்த கயிறுகளை ஒரு நூலைப்போல அறுத்துப்போட்டான். (நியா 16:9; நியா 15:13).

(இ) சிம்சோனின் தலைமயிரின் ஏழு சடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிடுதல்

நியா 16:13 பின்பு தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதுவரைக்கும் என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்ல வேண்டும் என்றாள்; அதற்கு அவன்: நீ என் தலைமயிரின் ஏழுஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிட்டால் ஆகும் என்றான்.

நியா 16:14 அப்படியே அவன் செய்து, அவைகளை ஆணியடித்து மாட்டி: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டெழும்பி, நெசவு ஆணியையும் நூல்பாவையும் கூடப் பிடுங்கிக்கொண்டுபோனான்.

"என் தலைமயிரின் ஏழுஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிட்டால் ஆகும்" - சிம்சோனின் இரகசியத்தை எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்று தெலீலாள் முயற்சி பண்ணுகிறாள். கயிறுகளில் ஆரம்பித்த சிம்சோன் இப்போது தன் தலைமயிரின் ஏழு ஜடைகளைப் பற்றி பேச ஆரம்பிக்கிறான். இதற்கு முன்பு தன் கைகளையும், கால்களையும் கட்ட வேண்டுமென்று கூறினவன் இப்போது தன் தலைமயிரைப் பற்றிக் குறிப்பிடுகிறான். தன் தலைமயிரின் ஏழுஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிட்டால் சிம்சோனின் பலமெல்லாம் போய்விடும் என்று கூறுகிறான்.

(ஈ) சிம்சோன் முதன்முறையாக தலைசிரைக்கப்படுதல்

நியா 16:15 அப்பொழுது அவள் அவனைப் பார்த்து: உன் இருதயம் என்னோடே இராதிருக்க, உன்னைச் சிநேகிக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம் பண்ணினாய் அல்லவா, உன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்று எனக்குச் சொல்லாமற்போனாயே என்று சொல்லி,

நியா 16:16 இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு,

நியா 16:17 தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப் போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்.

16 அதிகாரம்

நியா 16:18 அவன் தன் இருதயத்தையெல்லாம் தனக்கு வெளிப்படுத்தினதைத் தெலீலாள் கண்டபோது, அவள் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு ஆள் அனுப்பி: இந்த ஒருவிசை வாருங்கள், அவன் தன் இருதயத்தையெல்லாம் எனக்கு வெளிப்படுத்தினான் என்று சொல்லச் சொன்னாள்; அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் வெள்ளிக்காசுகளைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு அவளிடத்துக்கு வந்தார்கள்.

நியா 16:19 அவள் அவனைத் தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணி, ஒருவனை அழைத்து, அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள்; அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று.

"நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம் பண்ணினாய்" - (நியா 16:7-9,11-12, 13-14)

"சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு" - தெலீலாள் சிம்சோனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறாள். சிம்சோனுக்கு அவளைவிட்டு விலகிப்போய்விட மனதில்லை. சிம்சோன் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு, அவருக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாகத் தெலீலாளின் பேச்சைக் கேட்டு, தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தினான்.

"தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தினான்" - சிம்சோன் தன்னையும், கர்த்தரையும் நிந்தித்து விட்டான். தன்னுடைய பாவத்திற்காகவும், மதியீனத்திற்காகவும் தன் ஜீவனையே கிரயமாகச் செலுத்தினான். தெலீலாளின் வஞ்சகம் அவனுக்குத் தெரிந்திருந்தும், அவளுடைய வஞ்சக வலையில் விழுந்தான். சிம்சோனின் சரீரம் பலமாக இருந்தது. ஆனால் அவனுடைய இருதயமோ பலவீனமானது. சிம்சோன் மூன்றுமுறை தெலீலாளிடம் பொய்யுரைத்தான். அவளை அவன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் அவளோடு விபசாரமும் பண்ணியிருக்கிறான். காசாவிலுள்ள ஸ்திரீயோடும் சிம்சோன் வேசித்தனம் பண்ணினான். (நியா 16:1-22). தன்னுடைய ஆத்துமாவைச் சிம்சோன் ஏற்கெனவே இழந்து விட்டான். தன்னுடைய கடைசி நாட்களில் சிம்சோன் தான் செய்த பாவங்களுக்காக மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறான். (நியா 16:28-30; எபி 11:32).

"என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்" - சிம்சோனின் பலம் அவனுடைய தலைமுடியிலோ அல்லது அவன் சரீரத்திலோ இல்லை. அவனுடைய முழு பலமும் பரிசுத்த ஆவியானவரிடத்திலும், (நியா 13:25; நியா 14:6,19; நியா 15:14) கர்த்தரிடத்தில் அவன் வைத்திருக்கும் விசுவாசத்திலும் இருக்கிறது. (எபி 11:32-40). கர்த்தரோடு அவன் பொருத்தனை பண்ணிக் கொண்டதற்கு அவனுடைய தலைமயிர் ஓர் அடையாளம் மட்டுமே ஆகும்.

தெலீலாளின் பாவங்கள்

1. பெலிஸ்தரின் அதிபதிகளோடு சேர்ந்து சிம்சோனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறாள். (நியா 16:5; நீதி 1:10-22).

2. அவள் சிம்சோனைத் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்திருந்தால், அவனோடு வேசித்தனம் பண்ணுகிறாள். (நியா 16:4,5,9,12).

3. பணத்திற்காக தீமையான காரியத்தைச் செய்கிறாள். (நியா 16:5).

4. தன்னை நேசிக்கும் மனுஷனை வஞ்சித்து, அவனுடைய மரணத்திற்குச் சதிபண்ணுகிறாள். (நியா 16: நியா 6,9-10,13,15-16).

5. சிம்சோனின் நேசத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவனுடைய சத்துருக்களிடம் அவனை ஒப்படைத்து விடுகிறாள். (நியா 16:4,15-19).

6. அவன் நித்திரையாயிருக்கையில் பலவீனமாக இருக்கும்போது அவனுக்கு எதிராகச் சதி பண்ணி அவனை அழித்துப் போடுகிறாள். (நியா 16:19-25).

13 அதிகாரம்

7. தேவனுக்கு எதிராக யுத்தம் பண்ணுகிறாள். இஸ்ரவேலை மீட்பதற்காகக் கர்த்தர் அபிஷேகம் பண்ணின மனுஷனை அழித்துப்போட முயற்சி பண்ணுகிறாள். (நியா 16:4-25).

"அவள் அவனைத் தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணி" - சிம்சோன் தெலீலாளின் மடியில் நித்திரையாயிருக்கிறான். அவள் அவனுக்கு மயக்க மருந்து கொடுத்தாளா என்று தெரியவில்லை. ஏனெனில் அவள் ஒருவனை அழைத்து, சிம்சோன் நித்திரையாயிருக்கையில் அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்தாள். அதுவரையிலும், சிம்சோன் நித்திரையைவிட்டு எழவில்லை.

சிரைப்பித்தல் (shave) - גָּלַח - gaw-lakh' - 1548

வினைச்சொல் - சிரை, சவரம் பண்ணு, மொட்டையடி, கத்தரி **"shave"** (நியா 16:17,19,22; ஆதி 41:14; லேவி 13:33; லேவி 14:8-9; லேவி 21:5; எண் 6:9,18-19; உபா 21:12; 2சாமு 10:4; 1நாளா 19:4; ஏசா 7:20; எரே 41:5; எசே 44:20) **"polled"** (2சாமு 14:26).

"அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள்" - தெலீலாள் சிம்சோனைக் கட்டி, அவனுடைய தலைமயிரைச் சிரைத்திருக்கலாம். தலைமயிர் சிரைக்கப்பட்ட பின்பு, அவனால் அந்தக் கயிறுகளை அறுக்க முடிகிறதா என்று அவள் சோதித்து பார்த்திருக்க வேண்டும். அவனைச் சிறுமைப்படுத்துகிறாள். அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று. பெலிஸ்தர் கட்டப்பட்டிருக்கும் சிம்சோனைப் பிடித்துச் செல்கிறார்கள். (நியா 16:21).

(21) சிம்சோனுக்குக் கிடைத்த தண்டனை

நியா 16:20 அப்பொழுது அவள்: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டு விழித்து, கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான்.

நியா 16:21 பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்க வைத்தார்கள்.

நியா 16:22 அவன் தலைமயிர் சிரைக்கப்பட்ட பின்பு, திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று.

நியா 16:23 பெலிஸ்தரின் பிரபுக்கள்: நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலி செலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் கூடிவந்தார்கள்.

நியா 16:24 ஜனங்கள் அவனைக் கண்டவுடனே: நம்முடைய தேசத்தைப் பாழாக்கி, நம்மில் அநேகரைக் கொன்று போட்ட நம்முடைய பகைஞனை நம்முடைய தேவன் நமது கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனைப் புகழ்ந்தார்கள்.

நியா 16:25 இப்படி அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கும்போது: நமக்கு முன்பாக வேடிக்கைகாட்டும்படிக்கு, சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்றார்கள்; அப்பொழுது சிம்சோனைச் சிறைச்சாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டினான்; அவனைத் தூண்களுக்கு நடுவே நிறுத்தினார்கள்.

சிம்சோனுக்கு ஏற்பட்ட நிலைமை

1. முதல் முறையாக அவனுடைய தலைமயிர் சிரைக்கப்படுகிறது. (நியா 16:17).
2. இனிமேல் அவன் நசரேயன் அல்ல.
3. மற்ற எல்லா மனுஷரைப்போல சிம்சோன் பலட்சயமானான். (நியா 16:17-19).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

16 அதிகாரம்

4. அவன் சிநேகித்த தெலீலாள் அவனை வஞ்சித்தாள். (நியா 16:18).

5. சிம்சோனின் சத்துருக்கள் அவனைப் பிடித்தார்கள். (நியா 16:19-21).

6. கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல் எப்போதும்போல உதறிப் போட்டு வெளியே போக முயற்சி பண்ணினான். (நியா 16:20).

7. கர்த்தர் சிம்சோனைவிட்டு விலகிப் போனார்.

8. பெலிஸ்தரை எதிர்க்கக்கூடிய பலம் சிம்சோனிடம் இப்போது இல்லை. (நியா 16:20-21).

கர்த்தர் மனுஷனைவிட்டு விலகினதை விவரிக்கும் வாக்கியம்

1. கர்த்தர் சிம்சோனைவிட்டு விலகினார். (நியா 16:20).

2. கர்த்தருடைய மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிற்று. (1சாமு 4:21-22).

3. கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார். (1சாமு 16:14).

4. கர்த்தர் தாவீதோடே கூட இருக்கிறார் என்றும், தன்னைவிட்டு விலகிப்போனார் என்றும் சவுல் கண்டு, தாவீதிற்குப் பயந்தான். (1சாமு 18:12).

5. தேவன் என்னைக் கைவிட்டார் என்று சவுல் சாமுவேலிடம் கூறுகிறான். (1சாமு 28:15).

6. கர்த்தர் உன்னைவிட்டு விலகி உனக்கு சத்துருவாயிருக்கிறார் என்று சாமுவேல் சவுலிடம் கூறுகிறார். (1சாமு 28:16).

7. கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியைவிட்டு புறப்பட்டது. (எசே 10:18).

மனுஷன் கர்த்தரைவிட்டு விலகிப்போனதை விவரிக்கும் வாக்கியம்

1. எங்கள் மீறுதல்கள் உமக்கு முன்பாக மிகுதியாயிருந்து.....கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் பண்ணி, பொய்பேசி எங்கள் தேவனைவிட்டு பின்வாங்கினோம். (ஏசா 59:12-13).

2. மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன். (எரே 17:5).

3. இஸ்ரவேலர் எல்லாரும் உமது நியாயப்பிரமாணத்தை மீறி, உமது சத்தத்துக்குச் செவிகொடாமல் விலகிப் போனார்கள். (தானி 9:11).

4. கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தோம். (தானி 9:11).

5. தேசம் கர்த்தரைவிட்டு விட்டுவிலகிச் சோரம்போயிற்று. (ஓசி 1:2).

6. பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். (1தீமோ 4:1).

7. சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். (எபி 3:12).

"அவன் கண்களைப் பிடுங்கி" - பெலிஸ்தர் சிம்சோனைப் பிடித்தவுடன் அவனுடைய இரண்டு கண்களையும் பிடுங்கிவிட்டார்கள். அதன்பின்பு, காசாவிலுள்ள சிறைச்சாலைக்கு அவனைக் கொண்டுபோனார்கள். அவனுடைய கால்களுக்கு இரண்டு வெண்கல விலங்கு போட்டார்கள். சிறைச்சாலையில் சிம்சோன் மாவரைத்துக் கொண்டிருந்தான். மாவரைப்பது ஸ்திரீகளுடைய வேலை. இஸ்ரவேலை இரட்சிக்க வேண்டியவன் ஒரு ஸ்திரீயின்மீது ஆசை வைத்து, தன்னுடைய அழைப்பை மறந்து, இப்போது கண் தெரியாதவனாக, சிறைச்சாலையில் மாவரைத்துக் கொண்டிருக்கிறான். அதிகமாகச் சிறுமைப் படுத்தப்பட்டிருக்கிறான். (புல 5:13,மத் 24:41).

16 அதிகாரம்

"அவன் தலைமயிர் ....திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று" - சிம்சோனின் தலைமயிர் திரும்பவும் முளைக்கத்தொடங்கிற்று. அவனுடைய நசரேய பொருத்தனையும் புதுப்பிக்கப்படுகிறது. ஒரு விசை மாத்திரம் தன்னை நினைத்தருளுமாறு கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். (நியா 16:22,28).

"நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார்" - பெலிஸ்தருடைய தேவன் தாகோன். தாகோன் சிம்சோனைப் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. தாகோனுக்கு ஜீவனில்லை. சிம்சோனைத் தெலீலாள் வஞ்சித்தாள். அவள் பணத்திற்காக ஆசைப்பட்டாள். இதனால் சிம்சோன் பெலிஸ்தருடைய கையில் சிக்கிவிட்டான். (நியா 16:4-22).

"நம்மில் அநேகரைக் கொன்றுபோட்ட நம்முடைய பகைஞன்" - சிம்சோன் முதல் தடவையாக முப்பதுபேரைக் கொன்றான். (நியா 14:19) அடுத்த தடவை அநேகரைக் கொன்றான். (நியா 15:8) மற்றொரு சமயத்தில் 1,000பேரைக் கொன்றான். (நியா 15:16) கடைசியாகச் சிம்சோன் 3,000பேரைக் கொன்றான். (நியா 16:27,30).

"நமக்கு முன்பாக வேடிக்கைகாட்டும்படிக்கு, சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்" - ரோமப்பேரரசில் ரோமாபுரியாருக்கு வேடிக்கை காட்டுவதற்காகக் கைதிகளைப் பயன் படுத்துவார்கள். சிங்கங்களுக்கு அவர்களை இரையாக்குவார்கள். பெலிஸ்தருடைய நாட்களிலும் இதுபோன்ற காரியம் நடைபெற்றிருக்கிறது.

(22) மூந்நூறு பேரைக் கொன்று பழிவாங்குதல்

நியா 16:26 சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளையாண்டானோடே, வீட்டைத் தாங்குகிற தூண்களிலே நான் சாய்ந்துகொண்டிருக்கும்படி அவைகளை நான் தடவிப்பார்க்கட்டும் என்றான்.

நியா 16:27 அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருந்தது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின்மேல் புருஷரும் ஸ்திரீகளுமாக ஏறக்குறைய மூவாயிரம்பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நியா 16:28 அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி,

நியா 16:29 சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத் தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும், மற்றொன்றைத் தன் இடதுகையினாலும் பிடித்துக் கொண்டு,

நியா 16:30 என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுந்தது; இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப்பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப் பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள்.

"சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு" - சிம்சோன் தன்னுடைய தாழ்மையில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறான். கர்த்தர் அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்கிறார். இதன் விளைவாக இஸ்ரவேலருக்கு மிகப்பெரிய மீட்பு உண்டாயிற்று. (நியா 16:28-30).

16 அதிகாரம்

"நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு" - தன்னுடைய இரண்டு கண்களுக்காகப் பழிவாங்க வேண்டுமென்பது சிம்சோனின் விருப்பம். ஆனால் இஸ்ரவேலை இரட்சிக்க வேண்டுமென்பது கர்த்தரின் விருப்பம். சிம்சோன் இருந்த வீட்டில் பெலிஸ்தரின் பிரபுக்களும், தலைவர்களும், ஸ்திரீகளும் மற்றும் பல முக்கியமான நபர்களும் இருக்கிறார்கள். பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரைப் பல வருஷங்களாக ஒடுக்கினார்கள். அவர்கள் எல்லோரும் இப்போது அழிந்து போனார்கள். தங்கள் சத்துருக்கள் மரித்துப் போனாலும், அவர்களுடைய சரீரங்களை வைத்து, வேடிக்கை காட்டுவது பெலிஸ்தரின் சுபாவம். சவுலும், அவனுடைய குமாரரும் மரித்த பின்பு, அவர்களுடைய சரீரங்களைப் பெலிஸ்தர் கைப்பற்றி, பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போட்டார்கள். (1சாமு 31:8-13) சிம்சோனின் சரீரத்தை எடுக்க அவனுடைய உறவினர் வந்தார்கள். அவனை மனோவாவின் கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். இங்கு வீடு இடிந்து விழுந்ததினால் அந்த வீட்டிற்குள் இருந்த சிம்சோனும் பெலிஸ்தரும் கொல்லப்பட்டார்கள். பெலிஸ்தர்களால் சிம்சோனின் சரீரத்தை வைத்து வேடிக்கை காண்பிக்க முடியவில்லை.

"அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்கள்" - வீட்டிலுள்ள நடுத்தூண்கள் அந்த வீடு முழுவதையும் தாங்கி நிற்கும். அந்தத் தூண்கள் இடிந்து விழுந்துவிட்டால் அந்த வீட்டிலுள்ள அனைவரும் இடிபாடுகளில் சிக்கி, மடிந்துபோவார்கள். அந்த வீட்டின்மேல் ஏறக்குறைய 3,000பேர் இருந்தார்கள். (நியா 16:27) சிம்சோனை வேடிக்கை பார்க்க வந்தவர்கள் எல்லோரும் மாண்டுபோனார்கள்.

"என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது" - இது சிம்சோனின் கடைசி வார்த்தைகள். இஸ்ரவேலின் ஜெயத்திற்காக சிம்சோன் இப்பொழுது மரிப்பதற்கும் ஆயத்தமாக இருக்கிறான்.

சிம்சோன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப்பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள். அதைப்போலவே இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கையில் அவரால் இரட்சிக்கப்பட்டவர்களைவிட அவர் மரித்தபின்பு, அவரால் இரட்சிக்கப்பட்டவர்கள் அநேகர். (மத் 26:28; 2கொரி 15:3; 2கொரி 5:15;கலா 1:4; கொலோ 1:20-22; எபி 2:9-18;எபி 13:12; 1பேதுரு 2:24)

(23) சிம்சோன் கல்லறையில் அடக்கம் பண்ணப்படுதல்

நியா 16:31 பின்பு அவன் சகோதரரும், அவன் தகப்பன் வீட்டாரனைவரும் போய், அவனை எடுத்துக்கொண்டுவந்து, சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவே அவன் தகப்பனாகிய மனோவாவின் கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். அவன் இஸ்ரவேலை இருபதுவருஷம் நியாயம் விசாரித்தான்.

"அவன் இஸ்ரவேலை இருபதுவருஷம் நியாயம் விசாரித்தான்" - நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் சிம்சோனுக்கும், பெலிஸ்தருக்கும் இடையிலுள்ள பிரச்சனைகளைப் பற்றி அதிகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் இஸ்ரவேலை நியாயம்விசாரித்த சம்பவங்களைப் பற்றி இந்தப் புஸ்தகத்தில் எதுவும் விரிவாக விளக்கப்படவில்லை. (நியா 15:20)

17 அதிகாரம்

III. உள்நாட்டு குழப்பங்கள் - ஒன்பதாவது முரண்பாடு - (நியா 17:1-21:25)

1. மீகாவின் விக்கிரக ஆராதனை

நியா 17:1 எப்பிராயீம் மலைத் தேசத்தானாகிய மீகா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் இருந்தான்.

நியா 17:2 அவன் தன் தாயை நோக்கி: உன்னிடத்திலிருந்த ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு களவுபோயிற்றே, அதைக் குறித்து என் காதுகள் கேட்க நீ சாபமிட்டாயே, அந்தப் பணம், இதோ, என்னிடத்தில் இருக்கிறது; அதை எடுத்தவன் நான்தான் என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாய் என்றாள்.

நியா 17:3 அவன் அந்த ஆயிரத்து நூறு வெள்ளிக்காசைத் தன் தாயினிடத்தில் திரும்பக் கொடுத்தான்; அவள்: வெட்டப் பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ண, நான் என் கையிலிருந்த இந்த வெள்ளியை என் மகனுக்காக முற்றிலும் கர்த்தருக்கென்று நியமித்தேன்; இப்போதும் இதை உனக்குத் திரும்பக் கொடுக்கிறேன் என்றாள்.

நியா 17:4 அவன் அந்த வெள்ளியைத் தன் தாய்க்குத் திரும்பக் கொடுத்தான்; அப்பொழுது அவன் தாய் இருநூறு வெள்ளிக்காசை எடுத்து, தட்டான் கையிலே கொடுத்தாள்; அவன் அதினாலே, வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் பண்ணினான்; அவைகள் மீகாவின் வீட்டில் இருந்தது.

நியா 17:5 மீகா, சுவாமிக்கு ஒரு அறைவீட்டை நியமித்து வைத்திருந்தான்; அவன் ஒரு ஏபோத்தையும் சுரூபங்களையும் உண்டு பண்ணி, தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்டை பண்ணினான்; இவன் அவனுக்கு ஆசாரியனானான்.

நியா 17-21 ஆகிய அதிகாரங்களைப் பற்றிய விவரம்

இந்த அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் எப்பொழுது நடைபெற்றது என்று தெளிவாகத் தெரியவில்லை. நியா 17-18 ஆகிய அதிகாரங்களின் நிகழ்ச்சிகள் யோசுவாவின் நாட்களில் நடைபெற்றன. இவற்றைப் பற்றிய குறிப்பு யோசு 19:47-48 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. கானான் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்குப் பங்கு பிரித்துக் கொடுத்த பின்பு, இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த நிகழ்ச்சிகளை யோசுவா எழுதியிருக்க வேண்டும். நியா 17-18 ஆகிய அதிகாரங்களில் யோசுவாவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிற செய்தி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இவை நியா 19-21 ஆகிய அதிகாரங்களுக்கு முன்னுரையாகவும், ஆதாரமாகவும் உள்ளது. நியாயாதிபதிகளின் ஆரம்ப நாட்களில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கலாம். நியா 17-21 ஆகிய அதிகாரங்களைப் பற்றிய விவரம் பின்வருமாறு.

1. யோசு 19:40-48 ஆகிய வசனங்களின் பிரகாரம் தாண் புத்திரருடைய சுதந்தரம் அந்தக் கோத்திரத்திற்கு மிகவும் சிறியதாக இருந்தது. ஆகையினால் அவர்கள் லேசேமிற்கு (Leshem) எதிராக யுத்தம்பண்ணி அதைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதற்கு லாயீஸ் (Laish) என்னும் மறுபெயரும் உள்ளது. (யோசு 18:7,14,27,29) இதன் பின்பு, அவர்களுடைய கோத்திரப் பிதாவாகிய தாணின் பெயர் இந்த இடத்திற்கு வழங்கப்படலாயிற்று. (நியா 16:29; யோசு 19:47-48). தாண் புத்திரர் லேசேமைக் கைப்பற்றிய சம்பவம் யோசு 19:47 ஆவது வசனத்தில் கூறப் பட்டிருப்பதைவிட நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் விரிவாக விளக்கப் பட்டிருக்கிறது.

17 அதிகாரம்

2. இஸ்ரவேல் புத்திரர் யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், யோசுவாவிற்குப் பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பர்களுடைய சகல நாட்களிலும் கர்த்தரைச் சேவித்தார்கள். (யோசு 24:31). அவர்கள் கர்த்தரைச் சேவித்த இந்தச் சம்பவங்கள் நியா 19-21 ஆகிய அதிகாரங்களில் விவரிக்கப் பட்டிருக்கிறது.

3. தாண் புத்திரர் தங்களுடைய சுதந்தரத்தில் பூரணமாகக் குடியேறுவதற்கு முன்பாக உள்ள காலம் நியா 17-18 ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (நியா 18:1) இந்தக் காலம் யோசுவாவின் நாட்களையும், அவனுடைய மரணத்திற்குப் பின்பு உடனடியாக நடைபெற்ற சம்பவங்களையும் குறிக்கும். இந்த நிகழ்ச்சிகள் நியா 1:34 ஆவது வசனத்தின் நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை. இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்தாரோடு சம்பந்தம் கலக்கிறார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். இந்தக் காலத்தில் நியாயாதிபதிகளின் ஆட்சி தேவையாயிற்று. (நியா 2:1-3:8).

4. நியா 19-21 ஆகிய அதிகாரங்களின் நிகழ்ச்சியில் பினெகாஸ் இன்னும் உயிரோடு இருக்கிறான். (நியா 20:28) இவன் இஸ்ரவேலின் மூன்றாவது பிரதான ஆசாரியன். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருஷம் அலைந்து திரிந்து முடித்த பின்பு, பினெகாஸ் வயதில் பெரியவனாக இருந்திருக்க வேண்டும். (எண் 25)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் மீகாக்கள்

1. எப்பிராயீமியன் (நியா 17:1-13; நியா 18:2-27)
2. ரூபன் குடும்பத்து தலைவன். (1நாளா 5:5)
3. மேவிபோசேத்தின் குமாரன். (1நாளா 8:34-35; 1நாளா 9:40-41). மறுபெயர் "Micha" (2சாமு 9:12)
4. லேவியன் (1நாளா 9:15)
5. மற்றொரு லேவியன் (1நாளா 23:20; 1நாளா 24:24-25)
6. அப்தோனின் தகப்பன் (2நாளா 34:20)
7. சிறிய தீர்க்கதரிசி (எரே26:18-19; மீகா 1:1,14,15)

"ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு" - பெலிஸ்தரின் பிரபுக்கள் ஒவ்வொருவரும் தெலீலாளுக்கு 1,100 வெள்ளிக்காசுகளைக் கொடுப்பதாகக் கூறினார்கள். (நியா 16:5)

"அதைக் குறித்து என் காதுகள் கேட்க நீ சாபமிட்டாயே" - மீகாவின் தாயிடம் 1,100 வெள்ளிக்காசுகள் இருந்தது. அது களவுபோயிற்று. திருடியவனை மீகாவின் தாய் சபித்தாள். தாயின் சாபமான வார்த்தைகளைக் கேட்டு, மீகா பயந்துபோய், அந்தப் பணத்தை எடுத்தது தான்தான் என்று ஒப்புக்கொள்கிறான். அந்தப் பணத்தைத் தன் தாயிடம் திருப்பிக் கொடுக்கிறான். மீகாவின் கண்ணியத்தைப் பார்த்து, அவனுடைய தாய் அவனை ஆசீர்வதிக்கிறாள். வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ணுவதற்காக மீகாவின் தாய் அந்தப் பணத்தைக் கர்த்தருக்கென்று நியமித்து வைத்திருந்தாள். அவன் அந்த வெள்ளிக்காசை வைத்து, ஒரு ஏபோத்தையும் சுரூபங்களையும் உண்டு பண்ணினான். (நியா 17:3-5).

"வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ண" - இது பத்துக் கற்பனைக்கு விரோதமான செயல். (யாத் 20:1-6).

மெய்யான ஆராதனையைப்போன்ற பொய்யான ஆராதனை

1. இஸ்ரவேலில் கர்த்தருடைய வாசஸ்தலத்தைப் போல மீகாவின் சுவாமிக்கு ஒரு அறைவீடு இருந்தது.
2. கர்த்தருக்கும் அல்லது உடன்படிக்கைப் பெட்டிக்கும், கிருபாசனத்திற்கும் அடையாளமாக வெட்டப்பட்ட சுரூபமும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகமும் இருந்தது. (நியா 17:3)

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

17 அதிகாரம்

3. ஏபோத்து - ஆசாரியரின் பரிசுத்த வஸ்திரங்களுக்குப் போலியாகச் செய்யப்படுகிறது. (யாத் 28)

4. தேராபீம் - கிருபாசனத்திற்கு மேலிருக்கும் கேரூபீன்களுக்கு அடையாளமாகச் செய்யப்பட்டிருக்கிறது.

5. ஆசாரியன் - ஆரோனின் ஆசாரியத்துவத்திற்கு போலியான மற்றொரு ஆசாரியன். (யாத் 28-29)

“தேராபீம்” **(teraphim)** - (நியா 17:5; நியா 18:14-20; ஆதி 31:19; ஓசி 3:4) இது ஒரு வீட்டு தெய்வத்தையோ அல்லது ஒரு விக்கிரகத்தையோ குறிக்கும்.

2. நிலையற்ற அரசாங்கம் - (18:1)

நியா 17:6 அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்.

“அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை” - இஸ்ரவேல் தேசத்தில் ராஜாக்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, இந்தப் புஸ்தகத்தை எழுதிய ஆசிரியர் உயிரோடு இருந்திருக்க வேண்டும். இந்த வாக்கியம் நான்கு தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவையனைத்தும் நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் காணப்படுகிறது. (நியா 17:6; நியா 18:1; நியா 19:1; நியா 21:25). இஸ்ரவேலின் ராஜாக்களின் காலம் இன்னும் ஆரம்பமாக வில்லை என்பதே இதன் பொருள். அத்துடன் நியாயாதிபதிகளின் காலம் இன்னும் முடியவடையவில்லை என்றும் இதற்குப் பொருள் கூறலாம். (1சாமு 8-9). நியாயாதிபதிகளின் காலம் சாமுவேல் தீர்க்கதரிசியோடு நிறைவு பெறுகிறது. ராஜாக்களின் காலம் சவுல் ராஜாவோடு ஆரம்பமாகிறது. மோசேயும் ராஜா என்று அழைக்கப்பட்டிருக்கிறான். (உபா 33:5) இஸ்ரவேலின் ஏழாவது நியாயாதிபதியாகிய அபிமெலேக்கும் ராஜா என்றே அழைக்கப் பட்டிருக்கிறான். (நியா 9:6,18,22). நியாயாதிபதிகளின் காலத்தில் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான். ஒருமுறையான ஆளுகை இல்லை. எல்லாமே குழப்பமாக இருந்தது.

நியாயாதிபதிகளின் தாறுமாறுகள்

1. முதலாவது அடிமைத்தனத்திற்கு முன்பாக. (நியா 3:5-8)
2. இரண்டாவது அடிமைத்தனத்திற்கு முன்பாக. (நியா 3:12-14)
3. மூன்றாவது அடிமைத்தனத்திற்கு முன்பாக. (நியா 3:31)
4. நான்காவது அடிமைத்தனத்திற்கு முன்பாக. (நியா 4:1-3)
5. ஐந்தாவது அடிமைத்தனத்திற்கு முன்பாக. (நியா 6:1-6)
6. கிதியோனின் மரணத்திற்கு முன்பாக. (நியா 8:32-35)
7. ஆறாவது அடிமைத்தனத்திற்கு முன்பாக. (நியா 10:6-18)
8. ஏழாவது அடிமைத்தனத்திற்கு முன்பாக. (நியா 13:1)
9. தாண் புத்திரரின் யுத்தத்திற்கு முன்பாக. (நியா 17:1-19:30)

3. லேவியரின் முரண்பாடு

நியா 17:7 யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானும் லேவியனுமான ஒரு வாலி பன் அங்கே தங்கியிருந்தான்.

நியா 17:8 அந்த மனுஷன் எங்கேயாகிலும் பரதேசியாய்ப் போய்த் தங்கும்படிக்கு, யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பிரயாணம் போகையில், எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருக்கிற மீகாவின் வீட்டில் வந்து சேர்ந்தான்.

நியா 17:9 எங்கே இருந்து வந்தாய் என்று மீகா அவனைக் கேட்டதற்கு, அவன்: நான் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய லேவியன், எங்கேயாகிலும் போய்த் தங்கப்போகிறேன் என்றான்.

17 அதிகாரம்

நியா 17:10 அப்பொழுது மீகா: நீ என்னிடத்தில் இரு, நீ எனக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிருப்பாய்; நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக்காசையும், மாற்று வஸ்திரத்தையும், உனக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன் என்று அவனிடத்தில் சொன்னான்; அப்படியே லேவியன் உள்ளே போனான்.

நியா 17:11 அந்த லேவியன் அந்த மனிதனிடத்தில் இருக்கச் சம்மதித்தான்; அந்த வாலிபன் அவனுக்கு அவன் குமாரரில் ஒருவனைப்போல் இருந்தான்.

நியா 17:12 மீகா அந்த லேவியனைப் பிரதிஷ்டை பண்ணினான்; அந்த வாலிபன் அவனுக்கு ஆசாரியனாகி, மீகாவின் வீட்டில் இருந்தான்.

நியா 17:13 அப்பொழுது மீகா: எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மைசெய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றான்.

"யூதாவிலுள்ள பெத்லெகேம்" - செபுலோனில் ஒரு பெத்லெகேம் உள்ளது. (யோசு 19:15). அதிலிருந்து இதை வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக இது யூதாவிலுள்ள பெத்லெகேம் என்று அழைக்கப்படுகிறது.

"அந்த மனுஷன் எங்கேயாகிலும் பரதேசியாய்ப் போய்த் தங்கும்படிக்கு" - தேசத்தில் லேவியருக்கு வருமானம் இல்லை. ஜனங்கள் தசமபாகம் செலுத்தவில்லை. ஆகையினால் தங்கள் ஊர்களில் லேவியருக்கு கர்த்தருடைய பணிவிடையைச் செய்ய வாய்ப்பில்லை. அவர்கள் நியாயாதிபதிகளின் காலத்தில் ஏதாவது ஊர்களில் பரதேசியாய்ப் போய் தங்கினார்கள்.

"எங்கேயாகிலும் போய்த் தங்கப்போகிறேன்" - இது இஸ்ரவேல் தேசத்திலுள்ள குழப்பத்தையும், ஸ்திரத்தன்மை இல்லாததையும் காண்பிக்கிறது. லேவியர் பன்னிரண்டு கோத்திரத்தார்களுக்கும் ஊழியக்காரர்கள். எல்லாக் கோத்திரத்தாரும் லேவியரை ஆதரிக்க வேண்டும். ஜனங்களுடைய ஆதரவு அற்றுப்போனதினால், லேவியர் பிழைப்புக்கு வழிதேடி, ஊர்ஊராகச் சுற்றித் திரிகிறார்கள். (நெகே 13:10). இஸ்ரவேலில் மெய்யான தேவனுக்கு ஆராதனை நடைபெறவில்லை. விக்கிரகாராதனை சிறந்து விளங்கிற்று. விக்கிரகாராதனைக்காரர்கள் விக்கிரகங்களைச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களைக் கர்த்தரைவிட்டு விலகிப்போக வைக்கிறார்கள்.

"நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக்காசையும், மாற்று வஸ்திரத்தையும், உனக்குவேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன்" - இந்த லேவியன் சாப்பிட்டிற்காக ஊழியம் செய்ய சம்மதிக்கிறான். இஸ்ரவேலின் மார்க்க நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. சாப்பிட்டிற்காகவும், பத்து வெள்ளிக் காசுக்காகவும் மாற்று வஸ்திரத்திற்காகவும் லேவியன் தன் இரட்சிப்பை இழந்துபோகவும், கர்த்தருடைய பிரமாணத்தை மீறவும் சம்மதிக்கிறான்.

"எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மை செய்வார்" - ஜனங்கள் விக்கிரகாராதனையில் இருக்கிறார்கள். ஜனங்களுக்குக் கர்த்தரும், லேவியரும் இருப்பதினால் அவர்களுக்கு நன்மை வந்துவிடப்போவதில்லை. ஜனங்கள் தங்களுடைய உள்ளத்தைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். அப்போதுதான் ஜனங்களுக்குக் கர்த்தர் மூலமாக நன்மை உண்டாகும். கர்த்தர் லேவியரை ஆசீர்வதித்திருக்கிறார். இஸ்ரவேலில் தம்முடைய ஊழியத்தைச் செய்வதற்காகக் கர்த்தர் லேவியரை வேறுபிரித்திருக்கிறார். ஆனாலும், லேவியர் கர்த்தரை மெய்யாய் ஆராதிக்க வேண்டும். லேவியர் விக்கிரகாராதனை செய்யும்போது கர்த்தர் ஜனங்களை ஆசீர்வதிக்கமாட்டார். பிற்காலத்தில் மீகா தன்னுடைய விக்கிரகத்தையும், ஆசாரியனையும் இழந்தான். (நியா 18:14-31).

18 அதிகாரம்

4. நிலையற்ற அரசாங்கம் - (17:6)

நியா 18:1 அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை; தாண் கோத்திரத்தார் குடியிருக்கிறதற்கு, தங்களுக்குச் சுதந்தரம் தேடினார்கள்; அந்நாள்வரைக்கும் அவர்களுக்கு இஸ்ரவேல் கோத்திரங்கள் நடுவே போந்த சுதந்தரம் கிடைக்க வில்லை.

"அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை" - (நியா 17:6)

"தாண் கோத்திரத்தார்" - இந்த வாக்கியம் தாண் கோத்திரத்தார் அனைவரையும் குறிக்கவில்லை. இவர்கள் தாண் கோத்திரத்தில் ஒரு பகுதியினர். பாலஸ்தீனத்தின் வடக்குப் பகுதியில் தாண் கோத்திரத்தாரில் 600பேர் மட்டுமே யுத்தம் பண்ணப்போகிறார்கள். (நியா 18:16).

"அந்நாள்வரைக்கும்" - யோசுவாவின் நாட்களில் தேசத்தைக் கைப்பற்றுவதற்குத் தாண் கோத்திரத்தின் 600 புருஷர்கள் லேசேமிற்குச் சென்ற நாள்வரைக்கும் என்று பொருள். (யோசு 19:47).

5. தாண் புத்திரரின் உளவுவேலை

நியா 18:2 ஆகையால் தேசத்தை உளவு பார்த்து வரும்படி, தாண் புத்திரர் தங்கள் கோத்திரத்திலே பலத்த மனுஷராகிய ஐந்து பேரைத் தங்கள் எல்லைகளில் இருக்கிற சோராவிலும் எஸ்தாவோலிலுமிருந்து அனுப்பி: நீங்கள் போய், தேசத்தை ஆராய்ந்துபார்த்து வாருங்கள் என்று அவர்களோடே சொன்னார்கள்; அவர்கள் எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருக்கிற மீகாவின் வீடுமட்டும் போய், அங்கே இராத் தங்கினார்கள்.

நியா 18:3 அவர்கள் மீகாவின் வீட்டண்டை இருக்கையில், லேவியனான வாலிபனுடைய சத்தத்தை அறிந்து, அங்கே அவனிடத்தில் போய்: உன்னை இங்கே அழைத்துவந்தது யார்? இவ்விடத்தில் என்ன செய்கிறாய்? உனக்கு இங்கே இருக்கிறது என்ன என்று அவனிடத்தில் கேட்டார்கள்.

நியா 18:4 அதற்கு அவன்: இன்ன இன்னபடி மீகா எனக்குச் செய்தான்; எனக்குச் சம்பளம் பொருந்தினான்; அவனுக்கு ஆசாரியனானேன் என்றான்.

நியா 18:5 அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: எங்கள் பிரயாணம் அநுகூலமாய் முடியுமா என்று நாங்கள் அறியும்படி தேவனிடத்தில் கேள் என்றார்கள்.

நியா 18:6 அவர்களுக்கு அந்த ஆசாரியன்: சமாதானத்தோடே போங்கள்; உங்கள் பிரயாணம் கர்த்தருக்கு ஏற்றது என்றான்.

நியா 18:7 அப்பொழுது அந்த ஐந்து மனுஷரும் புறப்பட்டு, லாயீசுக்குப் போய், அதில் குடியிருக்கிற ஜனங்கள் சீதோனியருடைய வழக்கத்தின்படியே, பயமில்லாமல் அமரிக்கையும் சுகமுமாய் இருக்கிறதையும், தேசத்திலே அவர்களை அடக்கி ஆள யாதொரு அதிகாரியும் இல்லை என்பதையும், அவர்கள் சீதோனியருக்குத் தூரமானவர்கள் என்பதையும், அவர்களுக்கு ஒருவரோடும் கவை காரியம் இல்லை என்பதையும் கண்டு,

நியா 18:8 சோராவிலும் எஸ்தாவோலிலும் இருக்கிற தங்கள் சகோதரரிடத்திற்குத் திரும்பிவந்தார்கள். அவர்கள் சகோதரர்: நீங்கள் கொண்டுவருகிற செய்தி என்ன என்று அவர்களைக் கேட்டார்கள்.

நியா 18:9 அதற்கு அவர்கள்: எழும்புங்கள், அவர்களுக்கு விரோதமாய்ப் போவோம் வாருங்கள்; அந்த தேசத்தைப் பார்த்தோம், அது மிகவும் நன்றாயிருக்கிறது, நீங்கள் சும்மாயிருப்பீர்களா? அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி புறப்பட்டுப் போக அசதியாயிராதேயுங்கள்.

நியா 18:10 நீங்கள் அங்கே சேரும்போது, சுகமாய்க் குடியிருக்கிற ஜனங்களிடத்தில் சேருவீர்கள்; அந்த தேசம் விஸ்தாரமாயிருக்கிறது; தேவன் அதை உங்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்; அது பூமியிலுள்ள சகல வஸ்துவும் குறைவில்லாமலிருக்கிற இடம் என்றார்கள்.

18 அதிகாரம்

'பலத்த மனுஷர்' **"Men of valour"** (நியா 18:2; நியா 3:29; நியா 20:44-46; யோசு 1:14; யோசு 6:2; யோசு 8:3; யோசு 10:7; 2இராஜா 24:14; 1 நாளா. 5:24; 1நாளா. 7:7-11,40; 1நாளா 8:40; 1நாளா 12:21,25,30; 1நாளா 26:6,30-32; 2நாளா 13:3; 2நாளா 14:8;2நாளா 17:13-16; 2நாளா 25:6; 2நாளா 26:12; 2நாளா 32:21; நெகே 11:14) **"man of valour"** (நியா 6:12; நியா 11:1; 1இராஜா 11:28; 2இராஜா 5:1; 1நாளா 12:28; 2நாளா 17:17).

பலவான் **(valour) - חַיִל - khah'-yil - 2428**

ஆ.பெ.சொ. - திறமை, ராணுவம், சேனை, பராக்கிரமம், ஆஸ்தி, ஐசுவரியம், சம்பத்து, யுத்தம், பலவான், பாக்கியவான், பலம், சேவகர், குணசாலி, செல்வம், பொருள், தைரியம், யோக்கியன், கெட்டிக்காரன், வீரியம் **(force, wealth, virtue, valour, ability, strength)**

"சோரா" **(Zorah)** - சிம்சோன் சோராவில் பிறந்தவன். (நியா 13:2,25). தாண், பென்யமீன் ஆகிய கோத்திரத்தாரின் வரலாற்றுப் பகுதிக்கு முன்பாக சிம்சோனின் வரலாறு இறுதியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (நியா 13:1-16:31) சிம்சோன் தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவன். இதனால்தான் நியா 17-21 ஆகிய அதிகாரங்கள் யோசுவா புஸ்தகத்தில் சேர்க்கப்படாமல் இந்தப் புஸ்தகத்தில் இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது.

"லேவியனான வாலிபனுடைய சத்தத்தை அறிந்து" - (நியா 17:7-13) எப்பிராயீம் கோத்திரத்தாரின் பேச்சு மற்ற கோத்திரத்தாரின் பேச்சிலிருந்து வித்தியாசமாக இருக்கும். லேவியன் எப்பிராயீம் கோத்திரத்தாரைப்போல பேசவில்லை. (நியா 12:6).

"எங்கள் பிரயாணம் அநுகூலமாய் முடியுமா என்று நாங்கள் அறியும்படி தேவனிடத்தில் கேள்" - ஏபோத்தைப் பயன்படுத்தி ஆலோசனை கேட்பது. (நியா 17:5).

"லாயீஸ்" **(Laish)** - மறுபெயர் லேசேம் **(Leshem)** (யோசு 19:47)

லாயீசு ஜனங்களைப் பற்றிய காரியங்கள்

1. அவர்கள் பயமில்லாமல் அமரிக்கையும் சுகமுமாய் இருக்கிறார்கள்.
2. தேசத்திலே அவர்களை அடக்கி ஆள யாதொரு அதிகாரியும் இல்லை.
3. அவர்கள் சீதோனியருக்குத் தூரமானவர்கள்.
4. அவர்களுக்கு ஒருவரோடும் கவை காரியம் இல்லை.

லாயீசு பற்றிய விவரம்

1. அது மிகவும் நன்றாயிருக்கிறது. (நியா 18:9)
2. அந்த தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் சுகமாய் இருக்கிறார்கள். (நியா 18:10)
3. அந்த தேசம் விஸ்தாரமாயிருக்கிறது
4. அது பூமியிலுள்ள சகல வஸ்துவும் குறைவில்லாமலிருக்கிற இடம் (நியா 19:19; சங் 34:9-10; யாக் 1:4)

6. மீகாவின் விக்கிரகங்களையும், சுருபங்களையும் திருடுதல்

நியா 18:11 அப்பொழுது சோராவிலும் எஸ்தாவோலிலும் இருக்கிற தாண் கோத்திரத்தாரில் அறுநூறுபேர் ஆயுதபாணிகளாய் அங்கேயிருந்து புறப்பட்டுப்போய்,

நியா 18:12 யூதாவிலுள்ள கீரியாத் யாரீமிலே பாளயமிறங்கினார்கள்; ஆதலால் அது இந்நாள்வரைக்கும் மகனிதான் என்னப்படும்; அது கீரியாத்யாரீமின் பின்னாலே இருக்கிறது.

நியா 18:13 பின்பு அவர்கள் அங்கேயிருந்து எப்பிராயீம் மலைக்குப் போய், மீகாவின் வீடு மட்டும் வந்தார்கள்.

18 அதிகாரம்

நியா 18:14 அப்பொழுது லாயீசின் நாட்டை உளவுபார்க்கப் போய்வந்த ஐந்து மனுஷர் தங்கள் சகோதரரைப் பார்த்து: இந்த வீடுகளில் ஏபோத்தும் சுரூபங்களும் வெட்டப்பட்ட விக்கிரகமும் வார்ப்பிக்கப் பட்ட விக்கிரகமும் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா; இப்போதும் நீங்கள் செய்யவேண்டியதை யோசித்துக் கொள்ளுங்கள் என்றார்கள்.

நியா 18:15 அப்பொழுது அவ்விடத்திற்குத் திரும்பி, மீகாவின் வீட்டில் இருக்கிற லேவியனான வாலி பனின் வீட்டிலே வந்து, அவனிடத்தில் சுகசெய்தி விசாரித்தார்கள்.

நியா 18:16 ஆயுதபாணிகளாகிய தாண் புத்திரர் அறுநூறுபேரும் வாசற்படியிலே நின்றார்கள்.

நியா 18:17 ஆசாரியனும் ஆயுத பாணிகளாகிய அறுநூறுபேரும் வாசற்படியிலே நிற்கையில், தேசத்தை உளவுபார்க்கப் போய் வந்த அந்த ஐந்து மனுஷர் உள்ளே புகுந்து, வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள்

நியா 18:18 அவர்கள் மீகாவின் வீட்டிற்குள் புகுந்து, வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு வருகிறபோது, ஆசாரியன் அவர்களைப் பார்த்து: நீங்கள் செய்கிறது என்ன என்று கேட்டான்.

நியா 18:19 அதற்கு அவர்கள்: நீ பேசாதே, உன் வாயை மூடிக்கொண்டு, எங்களோடேகூட வந்து எங்களுக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிரு; நீ ஒரே ஒருவன் வீட்டுக்கு ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ? இஸ்ரவேலில் ஒரு கோத்திரத்திற்கும் வம்சத்திற்கும் ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ? என்றார்கள்.

நியா 18:20 அப்பொழுது ஆசாரியனுடைய மனது இதமியப்பட்டு, அவன் ஏபோத்தையும் சுரூபங்களையும் வெட்டப் பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக் கொண்டு, ஜனங்களுக்குள்ளே புகுந்தான்.

நியா 18:21 அவர்கள் திரும்பும்படி புறப்பட்டு, பிள்ளைகளையும், ஆடு மாடுகளையும், பண்டம் பாடிகளையும், தங்களுக்கு முன்னே போகும்படி செய்தார்கள்.

"அறுநூறுபேர்" - தங்களுடைய ஸ்தானத்திலிருந்து 110 மைல் தூரத்திலுள்ள புதிய இடத்திற்கு ஆயுதபாணிகளான 600பேரும், அவர்களுடைய பிள்ளைகளும், ஸ்திரீகளும் பிரயாணம் பண்ணிப்போனார்கள். (நியா 18:10,21).

"மக்னிதான்" **(Mahanehdan)** - இதற்கு "தாணின் பாளயம்" **(camp of Dan)** என்று பொருள். (நியா 13:25) நியா 18 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நியா 13-16 ஆகிய அதிகாரங்களுக்கு முன்பு வரவேண்டும். ஏனெனில் சிம்சோன் தாணின் பாளயத்தில் பிறந்து வளர்ந்தவன். (நியா 17-21).

"அங்கேயிருந்து எப்பிராயீம் மலைக்குப் போய்" - சோராவிலிருந்து லாயீசுக்குப் போவதற்கு சுமார் ஐந்து நாட்களாகும். இரண்டாம் நாளில் அவர்கள் எப்பிராயீம் மலைக்குப் போனார்கள். அங்கு மீகாவின் விக்கிரகங்களும், சுரூபங்களும் இருக்கிறது. (நியா 18:12-14). தாண் புத்திரர் விக்கிரகங்களைத் திருடிக் கொண்டு, அந்த லேவியனையும், தங்களுக்கு ஆசாரியனாக இருக்குமாறு அழைத்துச் சென்று விடுகிறார்கள். அதன் பின்பு அவர்கள் லாயீசுக்குப் போய், அந்த ஊர் ஜனங்களை அழித்தார்கள். அங்கு தாண் பட்டணத்தைக் கட்டி வாசம் பண்ணினார்கள். (நியா 18:15-29).

"இந்த வீடுகளில்" - இது மீகாவின் வீட்டையும், அவனுடைய விக்கிரகம் இருந்த வீட்டையும் அந்த ஊராரின் வீட்டையும் குறிக்கும். (நியா 18:22).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

18 அதிகாரம்

தாண் புத்திரர் களவு செய்த பொருட்கள்

1. ஏபோத்து **(ephod)** (நியா18:14-20; நியா 8:27; நியா 17:5)
2. தேராபீம் **(teraphim)** (சுரூபங்கள்) (நியா 18:14-20; நியா 17:5; ஓசி 3:4)
3. வெட்டப்பட்ட விக்கிரகம் **(graven image)** (நியா 18:14,17,20,30-31; நியா 17:3-4)
4. வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகம் **(molten image)** (நியா 18:14,17-18; நியா 17:3-4)

"சுகசெய்தி விசாரித்தார்கள்" - தாண் புருஷரில் ஐந்துபேர் தேசத்தை உளவுபார்க்க வந்தபோது, அவர்கள் இந்த லேவியனைச் சந்திக்கிறார்கள். இப்பொழுது அவனுடைய வீட்டில் வந்து அவனிடத்தில் சுகசெய்தி விசாரிக்கிறார்கள். (நியா 18:2-6,15-28).

"ஆயுதபாணிகளாகிய தாண் புத்திரர் அறுநூறுபேரும் வாசற்படியிலே நின்றார்கள்" - தாண் புத்திரரின் 600 பேரும் ஆயுதபாணிகள். எதிர்ப்பு வந்தால் யுத்தம் பண்ணுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். (நியா 18:16-20).

"ஆசாரியனுடைய மனது இதமியப்பட்டு" - ஆசாரியனின் மனது தீமை செய்யத் தூண்டுகிறது. அவன் ஏற்கெனவே சாப்பிட்டிற்காகவும், வஸ்திரத்திற்காகவும் மீகாவோடு சேர்ந்து விக்கிராராதனை செய்தான். (நியா 17:10). இப்போது மீகாவிற்குத் துரோகம் பண்ணிவிட்டு, இந்தத் திருடர்களோடு புறப்பட்டுப் போகிறான். தனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்குமென்றால் இந்த லேவியன் எதையும் செய்வான். (நியா 18:19-28).

"தங்களுக்கு முன்னே போகும்படி செய்தார்கள்" - தங்களுடைய ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் தங்களுக்கு முன்னே போகும்படி செய்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அவர்களைப் பாதுகாப்பதற்காக இவ்வாறு போவது வழக்கம். (நியா 18:21-26).

7. மீகாவால் தன் விக்கிரகங்களையும், சுருபங்களையும் திரும்பப் பெறமுடியவில்லை

நியா 18:22 அவர்கள் புறப்பட்டு, மீகாவின் வீட்டை விட்டுக் கொஞ்சந் தூரம் போனபோது, மீகாவின் வீட்டிற்கு அயல்வீட்டார் கூட்டங்கூடி, தாண் புத்திரரைத் தொடர்ந்துவந்து,

நியா 18:23 அவர்களைப் பார்த்துக் கூப்பிட்டார்கள்; அவர்கள் திரும்பிப் பார்த்து, மீகாவை நோக்கி: நீ இப்படிக் கூட்டத்துடன் வருகிற காரியம் என்ன என்று கேட்டார்கள்.

நியா 18:24 அதற்கு அவன்: நான் உண்டுபண்ணின என்னுடைய தெய்வங்களையும் அந்த ஆசாரியனையுங் கூட நீங்கள் கொண்டுபோகிறீர்களே; இனி எனக்கு என்ன இருக்கிறது; நீ கூப்பிடுகிற காரியம் என்ன என்று நீங்கள் என்னிடத்தில் எப்படிக் கேட்கலாம் என்றான்.

நியா 18:25 தாண் புத்திரர் அவனைப் பார்த்து: எங்கள் காதுகள் கேட்க கூக்குரல் இடாதே, இட்டால் கோபிகள் உங்கள்மேல் விழுவார்கள்; அப்பொழுது உன் ஜீவனுக்கும் உன் வீட்டாரின் ஜீவனுக்கும் மோசம் வருவித்துக் கொள்வாய் என்று சொல்லி,

நியா 18:26 தங்கள் வழியே நடந்து போனார்கள்; அவர்கள் தன்னைப் பார்க்கிலும் பலத்தவர்கள் என்று மீகா கண்டு, அவன் தன் வீட்டுக்குத் திரும்பினான்.

மனுஷர் பின்தொடர்ந்து வந்த சம்பவங்கள்

1. மீகா தாண் புத்திரரைத் தொடர்ந்து வந்தான். (நியா 18:22)
2. லாபான் யாக்கோபைத் தொடர்ந்து வந்தான். (ஆதி 31:23-25)
3. யோசேப்பின் வேலைக்காரன் யோசேப்பின் சகோதரரைத் தொடர்ந்து வந்தான். (ஆதி 44:1-6)

18 அதிகாரம்

4. செங்கடலுக்கு அருகில் பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைத் தொடர்ந்து வந்தான். (யாத் 14:9)

5. நேபுகாத்நேச்சார் எரிகோவின் சமவெளிகளில் சிதேக்கியாவைத் தொடர்ந்து வந்தான். (2இராஜா 25:5; எரே 39:5; எரே 52:8)

6. யூதாவை அவனுடைய சத்துருக்கள் தொடர்ந்து வந்தார்கள். (புல 1:3)

கூப்பிடு (cried) - קָרָא - kaw-raw' - 7121

வினைச்சொல் - வேண்டிக்கொள், பேரிடு, என்னப்படு, பேர்உண்டாகு, சத்தமிடு, அழை, கூறு, வாசி, கூப்பிடு, கூறப்படு, உரை, பிரசித்தப்படுத்து, வரவழை, சொல், ஆரவாரம் பண்ணு, அழைப்பி, ஆர்ப்பரி, கேள், பிரஸ்தபமாக்கு, முறையிடு, தேடு, வாசிக்கப்படு, பிரபலமாகு, விளங்கு, விருந்தளி, தரித்துக் கொள், பேர் இருத்தல், வழங்கு, பெயரிடு, கட்டளையிடு, கொடு, பிரார்த்தி, கூறப்படு, பேர் பெற்றவர்கள், ஏற்படுத்தப்பட்டவர்கள், பேர்களைக் கொடு, புகழ் பெற்றிடு, கூறுவி, அழைக்கப்படு, அழைப்பிக்கப்படு, பெயர் பெறு, வரவழைக்கப்பட்டிரு, தொழு, சொல்லப்படு, கூட்டிக்கொள், தரிக்கப்படு, பிடிக்கப்பார், விண்ணப்பம் பண்ணு, வருவி **(to call out to; address)**

"அவர்கள் திரும்பிப்பார்த்து" - தாண் புத்திரரின் ஆயுதமணிந்த அறுநூறுபேரும், மீகாவையும், அவனுடைய மனுஷரையும் முகத்துக்கு முகமாக பார்க்கிறார்கள்.

"அவர்கள் தன்னைப்பார்க்கிலும் பலத்தவர்கள் என்று மீகா கண்டு, அவன் தன் வீட்டுக்குத் திரும்பினான்" - மனுஷருடைய பார்வையில் துன்மார்க்கர் பலத்தவர்கள்போன்று இருப்பார்கள். ஆனால் கர்த்தர் துன்மார்க்கரைப் பலத்தவர்களாகக் காண்பதில்லை. மனுஷர் தங்களுடைய எல்லாப் பாவங்களுக்கும் இம்மையில் தண்டனை பெறுவதில்லை. துன்மார்க்கர் நரகத்தில் நித்திய ஆக்கினையை அனுபவிப்பார்கள்.(கலா 6:7-8). யுத்தத்தில் ஜெயித்தவர்களுக்குத் தோற்றவர்களின் பொருட்கள் கொள்ளைப் பொருளாகக் கிடைக்கும். அதன் பிரகாரமாக மீகாவின் பொருட்கள் தாண் புத்திரருக்குக் கிடைக்கிறது.

8. லாயீஸ் ஊரை வென்றதும், தாண் பட்டணத்தை கட்டியதும்

நியா 18:27 அவர்களோ மீகா உண்டு பண்ணினவைகளையும், அவனுடைய ஆசாரியனையும் கொண்டுபோய், பயமில்லாமல் சுகமாயிருக்கிற லாயீஸ் ஊர் ஜனங்களிடத்தில் சேர்ந்து, அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினியால் சுட்டெரித்துப் போட்டார்கள்.

நியா 18:28 அது சீதோனுக்குத் தூரமாயிருந்தது; வேறே மனுஷரோடே அவர்களுக்குச் சம்பந்தமில்லாமலும் இருந்தபடியால், அவர்களைத் தப்புவிப்பார் ஒருவரும் இல்லை; அந்தப் பட்டணம் பெத்ரேகோபுக்குச் சமீபமான பள்ளத்தாக்கில் இருந்தது; அவர்கள் அதைத் திரும்பக் கட்டி, அதிலே குடியிருந்து,

நியா 18:29 பூர்வத்திலே லாயீஸ் என்னும் பேர் கொண்டிருந்த அந்தப் பட்டணத்திற்கு இஸ்ரவேலுக்குப் பிறந்த தங்கள் தகப்பனாகிய தாணுடைய நாமத்தின்படியே தாண் என்று பேரிட்டார்கள்.

"மீகா உண்டு பண்ணினவைகள்" - ஏபோத்து, தேராபீம், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்களும், வெட்டப்பட்ட விக்கிரகங்களும். (நியா 18:24)

18 அதிகாரம்

"அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினியால் சுட்டெரித்துப் போட்டார்கள்" - லாயீஸ் ஊரார் பயமில்லாமல் சுகமாய் இருந்தார்கள். வேறே மனுஷரோடே அவர்களுக்குச் சம்பந்தம் இல்லை. அப்படிப்பட்ட மனுஷரைத் தாண் புத்திரர் பட்டயக்கருக்கினால் வெட்டிப்போட்டார்கள். அவர்களுடைய பட்டணத்தை அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டார்கள். இது பாவமான செயல்போன்று தெரியலாம். ஆனாலும் வாக்குத்தத்த தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் சுதந்தரிப்பதற்குக் கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். லாயீஸ் மனுஷரைப் பற்றி அதிகமாகத் தெரியவில்லை. அவர்கள் ஒருவேளை அழிவுக்குப் பாத்திரவான்களாக இருக்கலாம். (நியா 18:27-29; ஆதி 15:14; உபா 7:1-11; உபா 12:1-4).

"அவர்களைத் தப்புவிப்பார் ஒருவரும் இல்லை" - லாயீஸ் சீதோனுக்குத் தூரமாயிருந்தது. தீரு பட்டணம் 25 மைல் தூரத்திலுள்ளது. இவர்கள் மற்ற மனுஷரோடே சம்மந்தம் கலவாமல் தனியாக இருந்தார்கள். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆயத்தமாக இல்லை. தாண் புத்திரரின் ஆயுதமணிந்த அறுநூறுபேரை இவர்களால் எதிர்க்க முடியவில்லை.

"அவர்கள் அதைத் திரும்பக் கட்டி" - லாயீசைத் தாண் புத்திரர் எந்த அளவிற்கு எரித்தார்கள் என்று தெரியவில்லை. எரித்த பின்பு, அதை அவர்கள் திரும்பக்கட்டி, அதிலே குடியிருந்தார்கள். யாக்கோபின் ஐந்தாவது குமாரனாகிய தாணின் நாமத்தை அந்தப் பட்டணத்திற்கு பேரிட்டார்கள். (நியா 18:28-29; ஆதி 30:6). வடக்கு பாலஸ்தீனத்தில் இது இரண்டாவது தாணாகும். (ஆதி 14:14).

9. தாண்புத்திரரின் விக்கிரக ஆராதனை

நியா 18:30 அப்பொழுது தாண் புத்திரர் அந்தச் சுரூபத்தைத் தங்களுக்கு ஸ்தாபித்துக்கொண்டார்கள்; மனாசேயின் குமாரனாகிய கெர்சோனின் மகன் யோனத்தானும், அவன் குமாரரும் அந்தத் தேசத்தார் சிறைப்பட்டுப்போன நாள்மட்டும், தாண் கோத்திரத்தாருக்கு ஆசாரியராயிருந்தார்கள்.

நியா 18:31 தேவனுடைய ஆலயம் சீலோவிலிருந்த காலமுழுதும் அவர்கள் மீகா உண்டுபண்ணின சுரூபத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

"யோனத்தான்" (Jonathan) - இவன் மோசேயின் பேரன். ஆரோனின் பேரனாகிய பினெகாஸ் இவனுடைய காலத்தில் பிரதான ஆசாரியனாக இருந்தான். (நியா 20:28) மனாசேக்கு கெர்சோன் என்னும் பெயரில் புத்திரர் யாருமில்லை. ஆனால் இந்தப் பெயரில் மோசேக்கு ஒரு குமாரன் இருந்தான். பழைய ஏற்பாட்டு மூலச்சுவடிகளின் சில பதிப்புக்களில் மோசேயின் பெயர் மனாசே என்று மாற்றி எழுதப்பட்டிருக்கிறது.

"யோனத்தானும், அவன் குமாரரும் அந்தத் தேசத்தார் சிறைப்பட்டுப்போன நாள்மட்டும், தாண் கோத்திரத்தாருக்கு ஆசாரியராயிருந்தார்கள்" - தாண் கோத்திரத்தார் விக்கிரகாராதனை செய்து வந்தார்கள். யோனத்தானும், அவனுடைய குமாரரும் தாண் கோத்திரத்தாரின் விக்கிரகாராதனைக்கு ஆசாரியர்களாக இருந்தார்கள். ஏலியின் கடைசி நாட்களில் பெலிஸ்தர் உடன்படிக்கைப் பெட்டியைச் சீலோவிலிருந்து எடுத்துச் சென்றார்கள். அதுவரையிலும் யோனத்தானும், அவன் குமாரரும் தாண் கோத்திரத்தாருக்கு ஆசாரியராக இருந்தார்கள். சீலோவிலிருந்து பெலிஸ்தர் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச் சென்ற பின்பு, அது மறுபடியும் சீலோவிற்குத் திரும்பி வரவேயில்லை.

தாண் புத்திரர் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருந்தார்கள். ஆகையினால் தானியேலின் எழுபதாவது வாரத்தில் இரட்சிக்கப்பட்ட கோத்திரங்களின் பெயர்களில் தாண் புத்திரரின் பெயர் இல்லை என்று ஒருசிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். (வெளி 7:1-8) இவ்வாறு கூறுவதற்குச் சரியான ஆதாரமில்லை. ஏனெனில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாருமே ஏதாது ஒரு சமயத்தில் விக்கிரகாராதனைக்காரராக இருந்திருக்கிறார்கள். யோசுவாவின் காலத்திற்கும், பாபிலோனின் சிறையிருப்பிற்கும் இடையிலுள்ள 1,053 வருஷக்காலத்தில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரின் நடுவிலும் விக்கிரகாராதனை நடைபெற்று வந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரின் விக்கிரகாராதனையின் நிமித்தமாகவே

18 அதிகாரம்

அவர்கள் பாபிலோனிய சிறையிருப்பிற்கும், அசீரிய சிறையிருப்பிற்கும் சென்றார்கள். (நியா 2:11-15; 2இராஜா 17:7-23; 2இராஜா 23:3-20)

"அந்தத் தேசத்தார் சிறைப்பட்டுப்போன நாள்மட்டும்" - ஏலியின் நாற்பது வருஷக் காலத்தில் பெலிஸ்தியர் ஆசரிப்புக் கூடாரத்தை அழித்ததையும், உடன்படிக்கைப் பெட்டியை அவர்கள் எடுத்துச் சென்றதையும் இந்த வாக்கியம் குறிக்கிறது. (நியா 18:30-31; 1சாமு 4;சங் 78:60-64; எரே 7:12; எரே 26:6).

19 அதிகாரம்

10. இஸ்ரவேலரின் பாவமான ஜீவியம்

(1) லேவியனும், அவனுடைய மறுமனையாட்டியும்

நியா 19:1 இஸ்ரவேலில் ராஜா இல்லாத அந்நாட்களிலே, எப்பிராயீம் மலைகள் அருகே பரதேசியாய்த் தங்கின ஒரு லேவியன் இருந்தான்; அவன் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராளாகிய ஒரு ஸ்திரீயைத் தனக்கு மறுமனையாட்டியாகக் கொண்டிருந்தான்.

நியா 19:2 அவள் அவனுக்குத் துரோகமாய் விபசாரம்பண்ணி, அவனை விட்டு, யூதா தேசத்துப் பெத்லெகேம் ஊரிலிருக்கிற தன் தகப்பன் வீட்டுக்குப் போய், அங்கே நாலுமாதம்வரைக்கும் இருந்தாள்.

நியா 19:3 அவள் புருஷன் அவளோடே நலவு சொல்லவும், அவளைத் திரும்ப அழைத்து வரவும், இரண்டு கழுதைகளை ஆயத்தப்படுத்தி, தன் வேலைக்காரனைக் கூட்டிக்கொண்டு, அவளிடத்துக்குப் போனான்; அப்பொழுது அவள் அவனைத் தன் தகப்பன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனாள்; ஸ்திரீயின் தகப்பன் அவனைக் கண்டபோது சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு,

நியா 19:4 ஸ்திரீயின் தகப்பனாகிய அவனுடைய மாமன் அவனை இருத்திக்கொண்டதினால், மூன்றுநாள் அவனோடிருந்தான்; அவர்கள் அங்கே புசித்துக் குடித்து இராத் தங்கினார்கள்.

நியா 19:5 நாலாம் நாள் காலமே அவர்கள் எழுந்திருந்தபோது, அவன் பிரயாணப் படுகையில், ஸ்திரீயின் தகப்பன் தன் மருமகனை நோக்கி: கொஞ்சம் அப்பம் புசித்து, உன் மனதைத் தேற்றிக்கொள்; பிற்பாடு நீங்கள் போகலாம் என்றான்.

நியா 19:6 அவர்கள் உட்கார்ந்து, இருவரும் கூடப் புசித்துக் குடித்தார்கள்; ஸ்திரீயின் தகப்பன் அந்த மனுஷனைப் பார்த்து: நீ தயவுசெய்து, உன் இருதயம் மகிழ்ச்சியடைய இராத்திரிக்கும் இரு என்றான்.

நியா 19:7 அப்படியே போகிறதற்கு அந்த மனுஷன் எழுந்தபோது, அவனுடைய மாமன் அவனை வருந்திக் கொண்டதினால், அவன் அன்று இராத்திரியும் அங்கே இருந்தான்.

நியா 19:8 ஐந்தாம் நாளிலே அவன் போகிறதற்கு அதிகாலமே எழுந்திருந்த போது, ஸ்திரீயின் தகப்பன்: இருந்து உன் இருதயத்தைத் தேற்றிக்கொள் என்றான்; அப்படியே அந்திநேரமட்டும் தாமதித்திருந்து, இருவரும் போஜனம் பண்ணினார்கள்.

நியா 19:9 பின்பு அவனும், அவன் மறுமனையாட்டியும், அவன் வேலைக்காரனும் போகிறதற்கு எழுந்திருந்த போது, ஸ்திரீயின் தகப்பனாகிய அவனுடைய மாமன்: இதோ, பொழுது அஸ்தமிக்கப்போகிறது, சாயங் காலமுமாயிற்று; இங்கே இராத்திரிக்கு இருங்கள்; பார், மாலைமயங்குகிற வேளையாயிற்று; உன் இருதயம் சந்தோஷமாயிருக்கும்படி, இங்கே இராத்தங்கி நாளை இருட்டோடே எழுந்திருந்து, உன் வீட்டுக்குப் போகலாம் என்றான்.

"ஒரு லேவியன்" - (நியா 17:1, நியா 18:1)

"மறுமனையாட்டி" **(concubine)** - அக்காலத்தில் புருஷர்கள் மறுமனையாட்டிகளை வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. மறுமனையாட்டிகளும் மனையாட்டிகளைப் போன்றவர்களே. ஆனாலும் முதல் மனைவியின் குமாரருக்கு மட்டுமே குடும்பத்தில் சுதந்தரவீதம் கிடைக்கும். (நியா 19:1-2; ஆதி 15:4; ஆதி 21:10). மறுமனையாட்டிகளை தள்ளி வைக்கலாம். (ஆதி 21:9-14). மறுமனையாட்டிகள் சம்பந்தமான பிரமாணம் யாத் 21:7-11; லேவி 19:20-22; உபா 21:10-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

19 அதிகாரம்

"யூதாவிலுள்ள பெத்லெகேம்" - (நியா 17:7)

மறுமனையாட்டியைக் கொண்டிருந்த புருஷர்கள்

1. ஆபிரகாம் (ஆதி 16:3; ஆதி 25:6; 1நாளா 1:32)
2. நாகோர் (ஆதி 22:23-24)
3. யாக்கோபு (ஆதி 30:4)
4. எலிபாஸ் (ஆதி 36:12)
5. கிதியோன் (நியா 8:31)
6. லேவியன் (நியா 19:1-5)
7. காலேப் (1நாளா 2:46-48)
8. மனாசே (1நாளா 7:14)
9. சவுல் (2சாமு 3:7; 2சாமு 11:3)
10. தாவீது (2சாமு 5:13; 2சாமு 15:16)
11. சாலொமோன் (1இராஜா 11:3)
12. ரெகொபெயாம் (2நாளா 11:21)
13. அபியா (2நாளா 13:21)
14. பெல்ஷாத்சார் (தானி 5:2)

விபசாரம் பண்ணியவர்கள்

1. தாமார் (ஆதி 38:24)
2. லேவியனின் மறுமனையாட்டி (நியா 19:2)
3. இஸ்ரவேல் புத்திரர் - அவர்களுடைய விக்கிரகாராதனையைப் பற்றி கடிந்து கூறும்போது கர்த்தர் அவர்களை விபசாரக்காரர்கள் என்று உருவகமாகக் கூறுகிறார். (எரே 2:20; எரே 3:1-8; எசே 16:15-16,28,41,44; எசே 23:5,19; ஓசி 3:3; ஓசி 4:15).

"அவளோடே நலவு சொல்லவும்" - பிரியமாக பேசுவதற்காக.

"ஸ்திரீயின் தகப்பன் அவனைக் கண்டபோது சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு" - தன்னுடைய மகளையும், அவளுடைய புருஷனையும் சேர்த்து வைப்பதற்கு ஒரு வாய்ப்பு இருந்ததினால் அவளுடைய தகப்பன் சந்தோஷபடுகிறான்.

"மூன்றுநாள்" - லேவியன் தன் மறுமனையாட்டியின் வீட்டில் மூன்றுநாள் தங்கியிருந்தான். அவளுடைய தகப்பன் அவனைத் தன்வீட்டில் தங்கியிருக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டதினால் அவன் ஐந்துநாள் வரையிலும் தங்கியிருக்கிறான். ஐந்தாம் நாள் சாயங்காலவேளையிலே லேவியன் தன் மறுமனையாட்டியையும், வேலைக் காரனையும் கூட்டிக்கொண்டு கிபியாவிற்கு வந்தான். (நியா 19:4-14). கிபியாவில் அவனுடைய மறுமனையாட்டிக்கு மிகவும் மோசமான அவமானம் நேரிடுகிறது. (நியா 19:15-28).

(2) கிபியாவில் தங்குதல்

நியா 19:10 அந்த மனுஷனோ, இராத்திரிக்கு இருக்க மனதில்லாமல், இரண்டு கழுதைகள் மேலும் சேணம் வைத்து, தன் மறுமனையாட்டியைக் கூட்டிக்கொண்டு, எழுந்து புறப்பட்டு, எருசலேமாகிய எபூசுக்கு நேராக வந்தான்.

நியா 19:11 அவர்கள் எபூசுக்குச் சமீபமாய் வருகையில், பொழுதுபோகிறதாயிருந்தது; அப்பொழுது வேலைக்காரன் தன் எஜமானை நோக்கி: எபூசியர் இருக்கிற இந்தப் பட்டணத்திற்குப் போய், அங்கே இராத் தங்கலாம் என்றான்.

நியா 19:12 அதற்கு அவன் எஜமான் நாம் வழியைவிட்டு, இஸ்ரவேல் புத்திரரில்லாத மறுஜாதியார் இருக்கிற பட்டணத்துக்குப் போகப்படாது; அப்பாலே கிபியாமட்டும் போவோம் என்று சொல்லி,

நியா 19:13 தன் வேலைக்காரனைப் பார்த்து: நாம் கிபியாவிலாகிலும் ராமாவிலாகிலும் இராத்தங்கும்படிக்கு, அவைகளில் ஒரு இடத்திற்குப் போவோம் வா என்றான்.

19 அதிகாரம்

நியா 19:14 அப்படியே அப்பாலே நடந்துபோனார்கள்; பென்யமீன் நாட்டைச் சேர்ந்த கிபியாவின் கிட்ட வருகையில், சூரியன் அஸ்தமனமாயிற்று.

நியா 19:15 ஆகையால் கிபியாவிலே வந்து இராத்தங்கும்படிக்கு, வழியைவிட்டு அவ்விடத்திற்குப் போனார்கள்; அவன் பட்டணத்துக்குள் போனபோது, இராத்தங்குகிறதற்கு அவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்வார் இல்லாததினால், வீதியில் உட்கார்ந்தான்.

நியா 19:16 வயலிலே வேலைசெய்து, மாலையிலே திரும்புகிற ஒரு கிழவன் வந்தான்; அந்த மனுஷனும் எப்பிராயீம் மலைத்தேசத்தான், அவன் கிபியாவிலே சஞ்சரிக்கவந்தான்; அவ்விடத்து மனுஷரோ பென்யமீனர்.

நியா 19:17 அந்தக் கிழவன் தன் கண்களை ஏறெடுத்துப் பட்டணத்து வீதியில் அந்தப் பிரயாணக்காரன் இருக்கக் கண்டு: எங்கே போகிறாய், எங்கேயிருந்து வந்தாய் என்று கேட்டான்.

நியா 19:18 அதற்கு அவன்: நாங்கள் யூதாவிலுள்ள ஊராகிய பெத்லெகேமிலிருந்து வந்து, எப்பிராயீம் மலைத்தேசத்தின் புறங்கள்மட்டும் போகிறோம்; நான் அவ்விடத்தான்; யூதாவிலுள்ள பெத்லெகேம் மட்டும் போய்வந்தேன், நான் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகிறேன்; இங்கே என்னை வீட்டிலே ஏற்றுக் கொள்வார் ஒருவரும் இல்லை.

நியா 19:19 எங்கள் கழுதைகளுக்கு வைக்கோலும் தீபனமும் உண்டு; எனக்கும் உமது அடியாளுக்கும் உமது அடியானோடிருக்கிற வேலைக்காரனுக்கும் அப்பமும் திராட்சரசமும் உண்டு; ஒன்றிலும் குறைவில்லை என்றான்.

நியா 19:20 அப்பொழுது அந்தக் கிழவன்: உனக்குச் சமாதானம்; உன் குறைவுகளெல்லாம் என்மேல் இருக்கட்டும்; வீதியிலேமாத்திரம் இராத்தங்கவேண்டாம் என்று சொல்லி,

நியா 19:21 அவனைத் தன் வீட்டுக்குள் அழைத்துக் கொண்டுபோய், கழுதைகளுக்குத் தீபனம்போட்டான்; அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிக்கொண்டு, புசித்துக்குடித்தார்கள்.

"எருசலேமாகிய எபூசு" - எருசலேம் இன்னும் எபூசியரின் கையில் இருந்தது. (நியா 1:21). அந்நியர் இந்த ஊரில் தங்குவதற்கு அஞ்சுவார்கள். லேவியனும், எருசலேமில் இராத்தங்க மறுத்துவிடுகிறான். (நியா 19:11-12). ஒருவேளை அவன் எருசலேமில் அன்று இரவு தங்கியிருந்தால் அவனுடைய மறுமனையாட்டிக்கு அவமானம் நேரிட்டிருக்காது. (நியா 20:18-48). கிபியாவில் உள்ள பென்யமீன் புத்திரர் அந்நியருக்கு மோசமான பாவம் செய்து விடுகிறார்கள். (நியா 19:22-30).

"இராத்தங்குகிறதற்கு அவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்வார் இல்லாததினால்" - கிபியாவில் ஒருவேளை தங்கும் சத்திரம் இல்லாமல் இருக்கலாம். அல்லது சத்திரத்தில் இடம் இல்லாமற் போயிருக்கலாம். (லூக் 2:7) இந்த ஊருக்கு வரும் அந்நியர்கள் ஒருவேளை அந்த ஊரிலுள்ள யாருடைய வீட்டிலாவது தங்க வேண்டியது இருக்கலாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சத்திரங்கள் இருந்ததாக குறிப்புக்கள் உள்ளன. ஆனாலும், எல்லா ஊர்களிலும் சத்திரங்கள் இல்லை. (ஆதி 42:27; ஆதி 43:21; யாத் 4:24; லூக்கா 10:34).

"கிழவன்" - லேவியன் எருசலேமிலுள்ள அந்நியர் மத்தியில் இராத்தங்க விரும்பவில்லை. (நியா 19:12) கிபியாவிலே ஒரு கிழவன் லேவியனுக்குத் தங்க இடம் தருகிறான். இந்தக் கிழவனும் கிபியாவிலே சஞ்சரிக்க வந்தவன். எப்பிராயீம் மலைத்தேசத்தான். (நியா 19:16-21).

19 அதிகாரம்

"கிபியா" (Gibeah) - வேதாகமத்தில் இரண்டு ஊர்களுக்கு கிபியா என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று எபிரோனுக்கு தென்கிழக்கில் யூதாவில் உள்ளது. (யோசு 15:57; 2நாளா 13:2) மற்றொன்று பென்யமீனில் உள்ளது. இது எருசலேமிலிருந்து வடக்கே 4மைல் தூரத்தில் உள்ளது. சீகேமிற்கு போகும் பெரிய பாதையும், கிழக்குப் பக்கத்தில் எருசலேமிற்கு அருகில் உள்ளது.(நியா 19:12-16; நியா 20:4-43; 1சாமு 14:2-5,16; 2சாமு 23:29). பென்யமீனிலுள்ள சீகேம் சவுலின் சொந்த ஊராகம்.(1சாமு 10:26; 1சாமு 11:4; 1சாமு 15:34; 1சாமு 23:19; 1சாமு 26:1; 2சாமு 21:6;ஏசா10:29). இங்கு சவுல் பெலிஸ்தரோடு யுத்தம் பண்ணி ஜெயம் பெற்றான். (1சாமு 13:2,15-16) கிபியோனியர் சவுலின் ஏழு குமாரர்களைக் கொன்று போட்டார்கள். (2சாமு 21).

"நான் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகிறேன்" - லேவியன் தன் ஆசாரிய ஊழியத்தை தேவாலயத்தில் செய்வதற்காகப் போகிறான். நியா 17:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் லேவியனுக்கும், இந்த லேவியனுக்கும் வேறுபாடு உள்ளது. நியா 17-18 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவத்திற்கும், இந்தச் சம்பவத்திற்கும் தொடர்பில்லை. இக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில் காணப்பட்ட கொடூரமான பாவபழக்கத்தையும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு எந்த அளவிற்குப் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள் என்பதையும் விளக்குவதற்காக இவ்விரண்டு சம்பவங்களும் கூறப்பட்டிருக்கிறது.

"உனக்குச் சமாதானம்" - கிபியாவில் ஏராளமான ஜனங்கள் இருந்த போதிலும், இந்தக் கிழவன் மட்டுமே அந்நியரை உபசரிக்கிறான். (நியா 19:20-21).

விருந்து உபசரிக்கும் பழக்கம்

1. உனக்குச் சமாதானம் என்று கூறுதல்.
2. தன்னுடைய சொந்த செலவில் விருந்து உபசரித்தல்.
3. விருந்தினரை வீட்டுக்குள் அழைத்துக் கொண்டுபோதல். (நியா 19:21).
4. கழுதைகளுக்குத் தீனம்போடுதல்.
5. கால்களைக் கழுவுதல். (லூக்கா 7:36-50).
6. விருந்தினருக்குப் போஜனம் கொடுத்தல்.

கிழக்கு தேசத்தில் விருந்தினரை உபசரிப்பது மிகவும் புனிதமாகக் கருதப்பட்டது. தன்னுடைய விருந்தினரைப் பாதுகாப்பதற்காக இந்தக் கிழவன் தன்னுடைய கன்னிகையான குமாரத்தியையே தியாகம் பண்ணுவதற்கு ஆயத்தமாக இருந்தான். (நியா 19:24)

(3) கிபியாவின் மக்களில் சிலர் லேவியனின் மறுமனையாட்டியை இராமுழுவதும் இச்சையாய் நடத்தினார்கள்

நியா 19:22 அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கிற போது, இதோ, பேலியாளின் மக்களாகிய அந்த ஊர் மனுஷரில் சிலர் அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு, கதவைத் தட்டி: உன் வீட்டிலே வந்த அந்த மனுஷனை நாங்கள் அறியும்படிக்கு, வெளியே கொண்டுவா என்று வீட்டுக்காரனாகிய அந்தக் கிழவனோடே சொன்னார்கள்.

நியா 19:23 அப்பொழுது வீட்டுக் காரனாகிய அந்த மனுஷன் வெளியே அவர்களிடத்தில் போய்: இப்படிச் செய்யவேண்டாம்; என் சகோதரரே, இப்படிப்பட்ட பொல்லாப்பைச் செய்ய வேண்டாம்; அந்த மனுஷன் என் வீட்டிற்குள் வந்திருக்கையில், இப்படிக் கொத்த மதிகேட்டைச் செய்யீர்களாக.

நியா 19:24 இதோ, கன்னியாஸ்திரீயாகிய என் மகளும், அந்த மனிதனுடைய மறுமனையாட்டியும் இருக்கிறார்கள்; அவர்களை உங்களிடத்தில் வெளியே கொண்டுவருகிறேன்; அவர்களை அவமானப்படுத்தி, உங்கள் பார்வைக்குச் சரிபோனபிரகாரம் அவர்களுக்குச் செய்யுங்கள்; ஆனாலும் இந்த மனுஷனுக்கு அப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம் என்றான்.

19 அதிகாரம்

நியா 19:25 அந்த மனுஷர் அவன் சொல்லைக் கேட்கவில்லை; அப்பொழுது அந்த மனுஷன் தன் மறுமனையாட்டியைப் பிடித்து, அவர்களிடத்தில் வெளியே கொண்டுவந்து விட்டான்; அவர்கள் அவளை அறிந்து கொண்டு, இராமுழுவதும் விடியுங்காலமட்டும் அவளை இலச்சையாய் நடத்தி, கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிட்டார்கள்.

"பேலியாளின் மக்கள்" - பிசாசின் மக்கள், பிரயோஜனமற்றவர்கள் என்று பொருள். (நியா 20:13; உபா 13:13; 1சாமு 1:16; 1சாமு 2:12; 1சாமு 10:27; 1சாமு 25:17,25; 1சாமு 30:22; 2சாமு 16:7; 2சாமு 20:1; 2சாமு 23:6; 1இராஜா 21:10-13; 2நாளா 13:7; 2கொரி 6:15).

"உன் வீட்டிலே வந்த அந்த மனுஷனை நாங்கள் அறியும்படிக்கு" - சோதோமில் லோத்திற்கு இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டது. (நியா 19:22-26=ஆதி 19:4-9). தேவதூதர்கள் இங்கு லேவியனையும், அவனுடைய மறுமனையாட்டியையும் இந்தக் கூட்டத்திலிருந்து விடுவிக்கவில்லை. (ஆதி 19:10-24). "அறியும்படிக்கு" என்பதற்கு ஆண்புணர்ச்சியில் ஈடுபடுவதற்கு என்று பொருள். (ரோமர் 1:18-32).

"அந்த மனுஷன் என் வீட்டிற்குள் வந்திருக்கையில், இப்படிக்கொத்த மதிகேட்டைச் செய்யீர்களாக" - லோத்தைப்போல இந்தக் கிழவனும் பென்யமீன் புத்திரரிடம் கெஞ்சுகிறான். லேவியனை விட்டுவிடுமாறும், அதற்குப் பதிலாக கன்னியாஸ்திரீயாகிய தன் மகளையும், லேவியனுடைய மறுமனையாட்டியையும் வைத்துக் கொள்ளுமாறும் கூறுகிறான். (நியா 19:23-24). இதுபோலவே லோத்து சோதோமியருக்கு தன்னுடைய குமாரத்திகளைக் கொடுக்க முன்வந்தான். ஆனால் அவர்கள் சுபாவமில்லாத ஆண்புணர்ச்சியில் ஈடுபட விரும்பினார்கள். (ஆதி 19:8-11). சோதோமில் காணப்பட்ட இந்தப் பாவத்தைக் கர்த்தர் உடனடியாக நியாயம் தீர்த்தார். இந்தப் பாவம் பூமியில் நியாயந்தீர்க்கப்படாவிட்டாலும், நரகத்தில் இந்தப் பாவச்செயலில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை கிடைக்கும். (ரோமர் 1:18-32; 2கொரி 6:9-11; கலா 5:19-21;வெளி 20:11-15; வெளி 21:8; வெளி 22:15).

"கன்னியாஸ்திரீயாகிய என் மகளும், அந்த மனிதனுடைய மறுமனையாட்டியும் இருக்கிறார்கள்" - அந்நியருக்கு விருந்து உபசரிக்கும்போது அவர்களைப் பாதுகாப்பதற்காக ஒருவன் தன்னுடைய மகளையும் தியாகம் பண்ண வேண்டுமென்று எங்கும் கூறப்படவில்லை. (நியா 19:20) லேவியனும் இதுபோன்ற சூழ்நிலையில் தன் மறுமனையாட்டியைப் பாதுகாக்க வேண்டும். கோழையாக இருக்கக்கூடாது. இந்த லேவியனோ, தன் மறுமனையாட்டியைப் பிடித்து, அவர்களிடத்தில் வெளியே கொண்டுவந்து விட்டான்; அவர்கள் அவளை அறிந்து கொண்டு, இராமுழுவதும் விடியுங்காலமட்டும் அவளை இலச்சையாய் நடத்தி, கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிட்டார்கள். (நியா 19:25) லேவியன் பொறுப்பற்றவனாக இருக்கிறான். ஒருவேளை அவனுடைய மறுமனையாட்டி அவனுடைய சுபாவம் தெரிந்து அவனைவிட்டுப் பிரிந்து போயிருக்கலாம். (நியா 19:1-3).

"அந்த மனுஷன் தன் மறுமனையாட்டியைப் பிடித்து" - இந்த வாக்கியத்தில் "பிடித்து" என்பதற்கான எபிரெய வார்த்தை "காசாக்" (khaw-zak') என்பதாகும். இதற்கு பலவந்தமாகப் பிடித்தல், அவளுடைய சம்மதமில்லாமல் அவளைப் பிடித்து அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தல் என்று பொருள்.

பிடித்தல் חָזַק - khaw-zak' - 2388

வி.சொ.-கொடிதாயிரு, மேலிடு, பலத்திரு, நிர்ணயம் பண்ணிக்கொள், கடினமாயிரு, பெலன் அடை, எச்சரிக்கையாயிரு, பலங்கொள், தைரியமாய் ஸ்திரப்படு, திடன்கொள், திடமனதாய் இரு, மேற்கொள், துரிதப்படுத்து, உறுதியாயிரு, கெட்டியாக்கு, தைரியமாயிரு, பலவந்தமாய் பிடி, மாட்டிக்கொள், உற்சாகமாய்க் கைக்கொள்ளு

19 அதிகாரம்

(4) மறுமனையாட்டியின் மரணம்

நியா 19:26 விடியுங்காலத்திற்கு முன்னே அந்த ஸ்திரீ வந்து, வெளிச்சமாகுமட்டும் அங்கே தன் எஜமான் இருந்த வீட்டு வாசற்படியிலே விழுந்துகிடந்தாள்.

நியா 19:27 அவள் எஜமான் காலமே எழுந்திருந்து வீட்டின் கதவைத் திறந்து, தன் வழியே போகப் புறப்படுகிறபோது, இதோ, அவன் மறுமனையாட்டியாகிய ஸ்திரீ வீட்டுவாசலுக்கு முன்பாகத் தன் கைகளை வாசற்படியின்மேல் வைத்தவளாய்க் கிடந்தாள்.

நியா 19:28 எழுந்திரு போவோம் என்று அவன் அவளோடே சொன்னதற்குப் பிரதியுத்தரம் பிறக்கவில்லை. அப்பொழுது அந்த மனுஷன் அவளைக் கழுதையின் மேல் போட்டுக்கொண்டு, பிரயாணப்பட்டு, தன் இடத்திற்குப் போனான்.

“தன் எஜமான் இருந்த வீட்டுவாசற்படியிலே விழுந்துகிடந்தாள்” - இரவு முழுவதும் அந்த ஊர் மனுஷர்கள் அவளை இலச்சையாய் நடத்தினார்கள். கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிட்டார்கள். அந்த இரவு வேளையில் லேவியன் அந்த வீட்டிற்குள் என்ன செய்து கொண்டிருந்தான் என்று தெரியவில்லை. “மறுநாள் காலமே எழுந்திருந்து” என்று நியா 19:27 ஆவது வசனத்தில் உள்ளது. ஆகையினால் அவன் வீட்டில் நித்திரையாயிருந்திருக்க வேண்டும். (நியா 19:22-25).

எஜமான் (ஆண்டவன்) என்று அழைக்கப்பட்ட மனுஷர்

1. சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று அழைத்தாள். (ஆதி 18:12; 1பேதுரு 3:6).
2. மற்ற புருஷர்கள் ஆண்டவன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (நியா 19:26-27; சங் 45:11).
3. மற்றவர்கள் ஆபிரகாமை ஆண்டவன் என்று அழைத்தார்கள்.(ஆதி 23:6-15).
4. ரெபெக்காள் எலெயாசாரை ஆண்டவன் என்று அழைத்தாள். (ஆதி 24:18).
5. ராகேல் தன் தகப்பனை ஆண்டவன் என்று அழைத்தாள். (ஆதி 31:35).
6. யாக்கோபு ஏசாவை ஆண்டவன் என்று அழைத்தான். (ஆதி32:4-5; ஆதி 33:8-15).
7. போத்திபார் யோசேப்பின் எஜமான் என்று அழைக்கப்பட்டான்.(ஆதி 39:16).
8. ராஜாக்கள் ஆண்டவன் என்று அழைக்கப் பட்டிருக்கிறார்கள். (ஆதி 40:1; 1சாமு 22:12; 1சாமு 24:8,10; 1சாமு 26:15-19; 1சாமு 29:8; 2சாமு 2:5; 2சாமு 3:21; 2சாமு 4:8; 2சாமு 9:11; 2சாமு 10:3; 2சாமு 11:9-13; 2சாமு 13:32-33; 2சாமு 14:9-22; 2சாமு 19:7-37; 1இராஜா 1:2-47)
9. தீர்க்கதரிசிகள் ஆண்டவன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (1இராஜா 18:7; 1இராஜா 2:19; 1இராஜா4:16,28; 2இராஜா 4:16,28).
10. யோசேப்பின் சகோதரர் யோசேப்பை ஆண்டவன் என்று அழைத்தார்கள். (ஆதி 42:10,30-33; ஆதி 44:5-36; ஆதி 47:18-25).11. யோசேப்பு தன்னை அதிபதி என்று அழைத்துக் கொண்டான். (ஆதி 45:9).
12. ஆரோன் மோசேயை ஆண்டவனே என்று அழைத்தான். (யாத் 32:22; எண் 12:11) யோசுவாவும், (எண் 11:28) மற்றவர்களும் (எண் 32:25,27; எண் 36:2)அவ்வாறே அழைத்தார்கள்.
13. ராணுவத்தலைவர்கள் ஆண்டவன் என்று அழைக்கப்பட்டார்கள். (நியா 4:18; 1சாமு 25:24-41).
14. ரூத் போவாசை ஆண்டவனே என்று அழைத்தாள். (ரூத் 2:13).
15. பிரதான ஆசாரியர்கள் ஆண்டவன் என்று அழைக்கப்பட்டார்கள். (1சாமு 1:15,26).

19 அதிகாரம்

16. முதலாளிகள் எஜமான்கள் என்று அழைக்கப்பட்டார்கள். (ஆதி 39:16; ஆதி 44:5; ரூத் 2:13).

எபிரெய மொழியில் "அதோன்" 'Adown என்னும் வார்த்தை கர்த்தரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது அவருடைய சர்வ ஆளுகையைக் குறிக்கும். (யாத் 23:17; யாத் 34:23; உபா 10:17; யோசு 3:11,13; யோசு 5:14; நியா 6:13; நெகே 3:5; நெகே 8:10; நெகே 10:29; சங் 8:1,9; சங் 97:5; சங் 110:1; சங் 114:7; சங் 135:5; சங் 136:3; சங் 147:5; ஏசா 1:24; ஏசா 3:1; ஏசா 10:16,33; ஏசா 19:4; ஏசா 51:22; தானி 10:16-19; தானி 12:8; ஓசி 12:14; மீகா 4:13; சக 1:9; சக 4:4-5,13-14; சக 6:4-5; மல் 3:1)

அதோன் என்னும் எபிரெய வார்த்தை மனுஷரைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.(ஆதி 24:9-65; ஆதி 39:4-8,32; உபா 23:15; நியா 19:11-22; 1சாமு 20:38; 1சாமு 24:6; 1சாமு 25:10-17; 1சாமு 26:16; 1சாமு 29:4; 1சாமு 30:13-15; 2சாமு 2:7;1இராஜா 22:17; 2இராஜா 2:3-5,16;2இராஜா 5:1,18,20,22,25; 2இராஜா 6:5,15,22; 2இராஜா 8:14; 2இராஜா 9:7,31; 2இராஜா 10:9; 2இராஜா 18:27; 2இராஜா 19:4-6; 1நாளா 12:19; 2நாளா 18:16; யோபு 3:19; நீதி 27:18; நீதி 30:10; ஏசா 24:2; ஏசா 36:8,12; ஏசா 37:4-6; மல் 1:6); "owner" 1இராஜா16:24); "sir" (ஆதி 43:20).

அதோன் என்னும் வார்த்தை கர்த்தருக்குப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக மனுஷனுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதி 18:12).

"தன் வழியே போகப் புறப்படுகிறபோது" - லேவியன் தன் மறுமனையாட்டியை விட்டுவிட்டு, போய்விடலாம் என்று நினைத்திருக்க வேண்டும். ஆனால் அவளோ வாசற்படியில் மரித்தவளாகக் கிடந்தாள். அதைக் கண்டபோது இந்தப் பாவத்தைச் செய்த மனுஷரைத் தண்டிக்க வேண்டும் என்னும் எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று.

(5) லேவியன் தன் மறுமனையாட்டியை பன்னிரெண்டு துண்டமாக்கி இஸ்ரவேலின் எல்லைகளுக்கெல்லாம் அனுப்பினான்

நியா 19:29 அவன் தன் வீட்டுக்கு வந்தபோது, ஒரு கத்தியை எடுத்து, தன் மறுமனையாட்டியைப் பிடித்து, அவளை அவளுடைய எலும்புகளோடுங்கூடப் பன்னிரண்டு துண்டமாக்கி, இஸ்ரவேலின் எல்லைகளுக்கெல்லாம் அனுப்பினான்.

நியா 19:30 அப்பொழுது அதைக் கண்டவர்களெல்லாரும், இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் இதைப் போலொத்த காரியம் செய்யப்படவும் இல்லை, காணப்படவும் இல்லை; இந்தக் காரியத்தை யோசித்து ஆலோசனை பண்ணி செய்யவேண்டியது இன்னதென்று சொல்லுங்கள் என்றார்கள்.

"அவளை அவளுடைய எலும்புகளோடுங் கூடப் பன்னிரண்டு துண்டமாக்கி, இஸ்ரவேலின் எல்லைகளுக்கெல்லாம் அனுப்பினான்" - லேவியன் தன் மறுமனையாட்டியைப் பன்னிரண்டு துண்டுகளாக வெட்டினான். ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு கோத்திரத்திற்குமாக இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்திற்கும் அனுப்பினான். ஆண்புணர்ச்சிக்காரர்கள் கொலைபண்ணப் படவேண்டும் என்பது பிரமாணம். (லேவி 18:22-29). கர்த்தர் தாமே சோதோமின் ஆண்புணர்ச்சிக்காரர்களை அழித்து ஒரு முன்மாதிரியை உண்டு பண்ணியிருக்கிறார். (ஆதி 19).

"இந்தக் காரியத்தை யோசித்து ஆலோசனை பண்ணி செய்யவேண்டியது இன்னதென்று சொல்லுங்கள்" - இஸ்ரவேல் மத்தியில் நடைபெற்ற இந்தக் கொடுமையைக் கேள்விப் பட்டபோது, இதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்க வேண்டும் என்னும் எண்ணம் அனைவருக்கும் உண்டாயிற்று. இஸ்ரவேலிலிருந்து இதுபோன்ற துன்மார்க்கத்தை அகற்ற வேண்டும் என்று எல்லோரும் விரும்பினார்கள். (நியா 19:29-30).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

20 அதிகாரம்

11. ஆறாவது உள்நாட்டு குழப்பம் - (2இராஜா 25:25)

(1) இஸ்ரவேலரை ஒன்று சேர்த்தல்

நியா 20:1 அப்பொழுது தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கீலேயாத் தேசத்தாருடன் மிஸ்பாவிலே கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து சபையாகக் கூடினார்கள்.

நியா 20:2 சகல ஜனங்களின் அதிபதிகளும், இஸ்ரவேலின் சகல கோத்திரத்தாரும் தேவனுடைய ஜனமாகிய சபையாகக் கூடிநின்றார்கள்; அவர்கள் பட்டயம் உருவுகிற நாலு லட்சம் காலாட்கள்.

நியா 20:3 இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவுக்கு வந்த செய்தியைப் பென்யமீன் புத்திரர் கேள்விப்பட்டார்கள்; அந்த அக்கிரமம் நடந்தது எப்படி, சொல்லுங்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் கேட்டார்கள்.

யோசுவாவின் காலத்திலும், நியாயாதிபதிகள் காலத்திலும் நடைபெற்ற உள்நாட்டுக் கலகங்கள்

1. யோசுவாவின் காலத்தில் - யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள கோத்திரத்தாருக்கும், மேற்குப் பகுதியிலுள்ள கோத்திரத்தாருக்கும். (யோசு 22)
2. கிதியோனுக்கு விரோதமாக எப்பிராயீம் (நியா 8:1-17)
3. கிதியோனின் குமாரருக்கு விரோதமாக அபிமெலேக்கு. (நியா 9:1-21)
4. அபிமெலேக்குக்கும், காகாலுக்கும். (நியா 9:22-57)
5. கீலேயாத்தியருக்கு எதிராக எப்பிராயீம். (நியா 12:1-7)
6. பென்யமீன் புத்திரருக்கும், இஸ்ரவேலின் மற்றோருக்கும். (நியா 20:1-48). இது நியாயாதிபதிகளின் காலத்தில் நடைபெற்றது. (நியா 17-21).

"ஏகோபித்து" - ஒரே மனுஷன் கருத்து வேறுபாடில்லாமல் செயல்படுவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஏகோபித்து சபையாகக் கூடினார்கள். (நியா 19:8,11)

"தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள" - நியா 17-18 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் இஸ்ரவேலின் வடக்கு கடைசியிலிருந்து தெற்கு கடைசி வரையிலும் தெரிய வருகிறது.

"மிஸ்பா" **(Mizpeh)** - பென்யமீனில் உள்ளது. இஸ்ரவேல் புத்திரர் இங்கு கூடினார்கள். இதற்குப் பின்பும், பலதடவை இஸ்ரவேல் புத்திரர் இங்கு கூடி வந்திருக்கிறார்கள். (1சாமு 7:11; 1சாமு 10:17). மிஸ்பா சீலோவிற்கு அருகிலுள்ளது. சீலோவில் தேவனுடைய வாசஸ்தலம் உள்ளது. ஜனங்கள் அங்குபோய் கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்கு இது எளிதாக இருந்தது. (நியா 20:18,23,26-28).

மிஸ்பா என்னும் பெயருள்ள இடங்கள்

1. கீலேயாத்திலுள்ள ஓர் இடம். (நியா 11:11,29,34; ஆதி 31:49)
2. வடக்கு பாலஸ்தீனத்திலுள்ள பள்ளத்தாக்கு - எர்மோன் மலையடிவாரத்தில் (யோசு 11:2-3,8)
3. யூதாவிலுள்ள பட்டணம். (யோசு 15:21,38)
4. மோவாபிலுள்ள பட்டணம்(1சாமு 22:3)
5. தெக்கோவாவிற்கு அருகில் வனாந்தரத்தில் உள்ள ஓர் இடம். (2நாளா 20:24)
6. பென்யமீனிலுள்ள ஓர் இடம். (நியா 20:1-3; நியா 21:1-8; யோசு 18:26; 1சாமு 7:5-16; 1சாமு 10:17)

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

20 அதிகாரம்

"அவர்கள் பட்டயம் உருவுகிற நாலு லட்சம் காலாட்கள்" - பென்யமீன் கோத்திரத்தில் 26,700 யுத்த வீரர்கள் இருந்தார்கள். (நியா 20:2,15). இஸ்ரவேலரின் மற்ற கோத்திரம் முழுவதிலும் 400,000 யுத்தவீரர்கள் இருந்தார்கள். இவர்களுக்கிடையே நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேலில் 40,030 வீரர்களும், பென்யமீனில் 25,100 வீரர்களும் மரித்துப் போனார்கள். (நியா 20:21,25,35,39).

"இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவுக்கு வந்த செய்தியைப் பென்யமீன் புத்திரர் கேள்விப் பட்டார்கள்" - மிஸ்பாவில் கூடிய கூட்டத்தில் பென்யமீன் புத்திரர் கலந்து கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் அங்கு கூடிவந்த செய்தியைக் கேள்விப்பட்டபோது பென்யமீன் புத்திரர் அவர்களுக்கு எதிராக யுத்தம் பண்ண ஆயத்தமானார்கள். (நியா 20:3,14-17).

(2) இஸ்ரவேலிடம் லேவியன் நடந்த காரியங்களை மறுபடியும் கூறினான்

நியா 20:4 அப்பொழுது கொலைசெய்யப் பட்ட ஸ்திரீயின் புருஷனாகிய லேவியன் மாறுத்தரமாக: நானும் என் மறுமனையாட்டியும் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலே இராத்தங்க வந்தோம்.

நியா 20:5 அப்பொழுது கிபியா பட்டணத்தார் எனக்கு விரோதமாய் எழும்பி, என்னைக் கொலைசெய்ய நினைத்து, நான் இருந்த வீட்டை இராத்திரியிலே வளைந்து கொண்டு, என் மறுமனையாட்டியை அவமானப் படுத்தினார்கள்; அதினாலே அவள் செத்துப்போனாள்.

நியா 20:6 ஆகையால் இஸ்ரவேலிலே அவர்கள் இப்படிப்பட்ட முறைகேட்டையும் மதிகேட்டையும் செய்தபடியினால், நான் என் மறுமனையாட்டியைப் பிடித்துத் துண்டித்து, இஸ்ரவேலின் சுதந்தரமான சகல நாடுகளுக்கும் அனுப்பினேன்.

"கொலைசெய்யப்பட்ட ஸ்திரீயின் புருஷனாகிய லேவியன்" - நியா 19 ஆவது அதிகாரத்தில் இதன் முழு விவரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(3) கிபியாவின் மீது யுத்தம்

நியா 20:7 நீங்கள் எல்லோரும் இஸ்ரவேல் புத்திரராமே, இங்கே ஆலோசித்துத் தீர்மானம் பண்ணுங்கள் என்றான்.

நியா 20:8 அப்பொழுது எல்லா ஜனங்களும் ஏகமாய் எழும்பி: நம்மில் ஒருவரும் தன்கூடாரத்திற்குப் போகவும் படாது, ஒருவனும் தன் வீட்டிற்குத் திரும்பவும்படாது.

நியா 20:9 இப்பொழுது கிபியாவுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்: சீட்டுப்போட்டு அதற்கு விரோதமாகப் போவோம்.

நியா 20:10 பென்யமீன் கோத்திரமான கிபியா பட்டணத்தார் இஸ்ரவேலிலே செய்த எல்லா மதிகேட்டுக்கும் தக்கதாக ஜனங்கள் வந்து செய்யும்படிக்கு, நாம் தானிய தவசங்களைச் சம்பாதிக்கிறதற்கு, இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் நூறுபேரில் பத்துப்பேரையும், ஆயிரம் பேரில் நூறுபேரையும், பதினாயிரம்பேரில் ஆயிரம்பேரையும், தெரிந்தெடுப்போம் என்றார்கள்.

நியா 20:11 இஸ்ரவேலரெல்லாரும் ஒன்றுபோல ஏகோபித்துப் பட்டணத்திற்கு முன்பாகக் கூட்டங்கூடி,

நியா 20:12 அங்கே இருந்த இஸ்ரவேலின் கோத்திரத்தார் பென்யமீன் கோத்திரமெங்கும் ஆட்களை அனுப்பி: உங்களுக்குள்ளே நடந்த இந்த அக்கிரமம் என்ன?

நியா 20:13 இப்பொழுது கிபியாவில் இருக்கிற பேலியாளின் மக்களாகிய அந்த மனுஷரை நாங்கள் கொன்று, பொல்லாப்பை இஸ்ரவேலை விட்டு விலக்கும்படிக்கு, அவர்களை ஒப்புக் கொடுங்கள் என்று சொல்லச் சொன்னார்கள்; பென்யமீன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரராகிய தங்கள் சகோதரரின் சொல்லைக் கேட்க மனமில்லாமல்,

20 அதிகாரம்

"இங்கே ஆலோசித்துத் தீர்மானம் பண்ணுங்கள்" - நியா 19:30 ஆவது வசனத்தில் "யோசித்து ஆலோசனை பண்ணி செய்ய வேண்டியது" இன்னதென்று சொல்லுங்கள் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிது.

இஸ்ரவேல் புத்திரரின் தீர்மானம்

1. கிபியா தண்டிக்கப்படும் வரையிலும் நம்மில் ஒருவரும் தன்கூடாரத்திற்குப் போகவும் படாது. ஒருவனும் தன் வீட்டிற்குத் திரும்பவும்படாது.

2. கிபியாவுக்கு விரோதமாகப் போவோம். (நியா 20:9).

3. நான்கு லட்சம் யுத்தவீரரில் 40,000 பேரைத் தெரிந்தெடுப்போம். (நியா 20:2,10).

"உங்களுக்குள்ளே நடந்த இந்த அக்கிரமம் என்ன?" - கிபியாவின் மனுஷர் துன்மார்க்கமான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்கள்மீது கோபம் இருந்தாலும், மிகவும் நேர்மையாகவும், நிதானமாகவும் பேசுகிறார்கள். லேவியனின் மறுமனையாட்டியிடம் தவறாக நடந்த பேலியாளின் மக்களைத் தங்களிடம் ஒப்படைத்துவிடுமாறு கூறுகிறார்கள். பொல்லாப்பை இஸ்ரவேலை விட்டு, விலக்கும்படிக்கு இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள். (நியா 20:13). ஆனால் பென்யமீன் புத்திரருக்கு இஸ்ரவேல் புத்திரரின் சொல்லைக் கேட்க மனமில்லை. ஆண்புணர்ச்சிக்காரர்களைப் பென்யமீன் புத்திரர் தண்டிக்க விரும்பவில்லை. பென்யமீன் கோத்திரம் முழுவதுமே பாவத்தில் விழுந்திருக்கிறார்கள். ஆகையினால் பென்யமீன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ண புறப்பட்டார்கள்.

(4) பென்யமீன் புத்திரர் கிபியாவின் மக்களை பாதுகாக்க ஒன்று கூடினார்கள் - (லேவி 18:22-30)

நியா 20:14 இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ணப் புறப்படும்படிக்கு, பட்டணங்களிலிருந்து கிபியாவுக்கு வந்து கூடினார்கள்.

நியா 20:15 கிபியாவின் குடிகளிலே தெரிந்து கொள்ளப்பட்ட எழுநூறு பேரையல்லாமல் அந்நாளில் பட்டணங்களிலிருந்து வந்து கூடின பட்டயம் உருவுகிற மனுஷரின் லக்கம் இருபத்தாறாயிரம்பேர் என்று தொகையிடப்பட்டது.

நியா 20:16 அந்த ஜனங்களெல்லாருக்குள்ளும் தெரிந்து கொள்ளப்பட்ட இடதுகை வாக்கான எழுநூறுபேர் இருந்தார்கள்; அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறிவார்கள்.

நியா 20:17 பென்யமீன் கோத்திரத்தையல்லாமல் இஸ்ரவேலிலே பட்டயம் உருவுகிற மனுஷர் நாலு லட்சம்பேர் என்று தொகையிடப்பட்டது; இவர்களெல்லாரும் யுத்த வீரராயிருந்தார்கள்.

"பென்யமீன் புத்திரர்" - இஸ்ரவேல் புத்திரடமிருந்து இவர்களை வேறுபிரித்துக் கூறுவதற்காக இவர்களுக்கு இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதுபோலவே யூதாவின் புத்திரர் என்றும், சில வசனங்களில் யூதா புத்திரரை வேறுபிரித்துக் கூறுவதற்காக காணப்படுகிறது. இவர்கள் பென்யமீன் புத்திரராக இருந்தபோதிலும் இவர்களும் இஸ்ரவேல் புத்திரரே.

"இடதுகை வாக்கான" - வேதாகமத்தில் இடதுகை பழக்கமுள்ளவர்களாக கூறப்பட்டிருக்கிறவர்கள் அனைவரும் பென்யமீன் கோத்திரத்தாராகும். (நியா 3:15).

(5) முதலாவது யுத்தம் - இஸ்ரவேலரின் தோல்வி

நியா 20:18 இஸ்ரவேல் புத்திரரான அவர்கள் எழும்பி, தேவனுடைய வீட்டிற்குப்போய்: எங்களில் யார் முந்திப் போய் பென்யமீன் புத்திரரோடு யுத்தம் பண்ண வேண்டும் என்று தேவனிடத்தில் விசாரித்தார்கள்; அதற்குக் கர்த்தர்: யூதா முந்திப் போகவேண்டும் என்றார்.

நியா 20:19 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் காலமே எழுந்து புறப்பட்டு, கிபியாவுக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள்.

20 அதிகாரம்

நியா 20:20 பின்பு இஸ்ரவேல் மனுஷர் பென்யமீனோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டு, கிபியாவிலே அவர்களுக்கு எதிராகப் போர் செய்ய அணிவகுத்து நின்றார்கள்.

நியா 20:21 ஆனாலும் பென்யமீன் புத்திரர் கிபியாவிலிருந்து புறப்பட்டு, இஸ்ரவேலில் இருபத்தீராயிரம்பேரை அன்றையதினம் தரையிலே விழும்படி சங்கரித்தார்கள்.

"தேவனிடத்தில் விசாரித்தார்கள்" - இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவில் கூடியிருந்தார்கள். இப்போது இங்கிருந்து தேவனுடைய வாசஸ்தலம் உள்ள இடமாகிய சீலோவிற்குப் போனார்கள். அங்கு பிரதான ஆசாரியனாகிய பினெகாஸ் இருக்கிறான். இவன் மூலமாக தேவனிடத்தில் பென்யமீன் புத்திரரோடு யுத்தம் பண்ணுவது சம்பந்தமாக விசாரிக்கப்போனார்கள். (நியா 20:18,27-28). பினெகாசிடம் ஊரீம், தும்மீம் ஆகியவை உள்ளன. இவற்றின் மூலமாக பிரதான ஆசாரியன் தேவனிடத்தில் விசாரித்துக் கூறுவான்.

"யூதா முந்திப் போகவேண்டும்" - யூதா ஏன் முந்திப்போக வேண்டும் என்பதற்கான காரணம் கூறப்படவில்லை. கர்த்தருக்குச் சித்தமானது இங்கு வெளிப்படுத்தப்படுகிறது. (எபே 1:11; ரோமர் 8:28).

"இஸ்ரவேல் மனுஷர்" - இங்கு யூதா புத்திரர் இஸ்ரவேல் மனுஷர் என்று அழைக்கப் பட்டிருக்கிறார்கள். (நியா 20:18,20). இவர்களைப்போலவே இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரும் இஸ்ரவேல் புத்திரரே.

"இஸ்ரவேலில் இருபத்தீராயிரம்பேர்" - முதல் நாள் யுத்தத்தில் யூதாவின் மனுஷரும், அவர்களோடு யுத்தத்திற்குப் போன மனுஷரும் 22,000பேர் மரித்துப்போனார்கள். இரண்டாம் நாளில் 18,000பேரும், (நியா 20:25); கடைசி நாளில் 30 பேரும் (நியா 20:39) மரித்துப்போனார்கள். கடைசி நாளில் பென்யமீன் கோத்திரத்தில் 25,000 புருஷர் மரித்துப்போனார்கள். (நியா 20:35).

(6) இரண்டாவது யுத்தம் - இஸ்ரவேலரின் தோல்வி (20:22-25)

நியா 20:22 இஸ்ரவேல் ஜனங்கள் தங்களைத் திடப்படுத்திக்கொண்டு, முதல்நாளில் அணிவகுத்து நின்ற ஸ்தலத்திலே, மறுபடியும் போர்செய்ய அணிவகுத்து நின்றார்கள்.

நியா 20:23 அவர்கள் போய், கர்த்தருடைய சந்நிதியில் சாயங்கால மட்டும் அழுது: எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே திரும்பவும் யுத்தம் கலக்கப்போவோமா என்று கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்; அப்பொழுது கர்த்தர்: அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள் என்றார்.

நியா 20:24 மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் புத்திரர் கிட்டச் சேருகிறபோது,

நியா 20:25 பென்யமீன் கோத்திரத்தாரும் அந்நாளிலே கிபியாவிலிருந்து அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டுவந்து, பின்னும் இஸ்ரவேல் புத்திரரில் பட்டயம் உருவுகிற பதினெண்ணாயிரம்பேரைத் தரையிலே விழும்படி சங்கரித்தார்கள்.

"பட்டயம் உருவுகிற பதினெண்ணாயிரம்பேர்" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாகத் தங்களுடைய திரளான எண்ணிக்கையைச் சார்ந்திருக்கிறார்கள். முதல் இரண்டு நாட்களில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைத் தாழ்த்துகிறார். அடுத்த நாள் யுத்தத்திற்குப் போவதற்கு முன்பாக மூன்றாம் நாளில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் ஜெபம்பண்ணி, உபவாசித்து, கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்துகிறார்கள். (நியா 20:26). இதன் பின்பு, மறுநாளில் கர்த்தர் அவர்களுக்கு வெற்றியைக் கட்டளையிடுகிறார். (நியா 20:28) இஸ்ரவேல் ஜனங்கள் ஆயீ பட்டணத்தைப் பிடிப்பதற்கு வகுத்த வியூகத்தைப் போலவே இங்கும் வியூகம் வகுக்கிறார்கள். (நியா 20:29-46; யோசு 8).

20 அதிகாரம்

(7) இஸ்ரவேலரின் ஜெபமும் உபவாசமும்

நியா 20:26 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் புறப்பட்டு, தேவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து, அன்று சாயங்காலமட்டும் உபவாசித்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலி களையும் இட்டு,

நியா 20:27 கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்; தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி அந்நாட்களில் அங்கே இருந்தது.

நியா 20:28 ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரின் மகன் பினெகாஸ் அந்நாட்களில் அவருடைய சந்நிதியில் நின்றான்; எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே பின்னும் யுத்தம்பண்ணப் புறப்படலாமா புறப்படலாகாதா என்று அவர்கள் விசாரித்தார்கள்; அப்பொழுது கர்த்தர்: போங்கள்; நாளைக்கு அவர்களை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 14

"போங்கள்; நாளைக்கு அவர்களை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்" (நியா 20:28) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (நியா 20:29-46).

"பினெகாஸ்" - இஸ்ரவேலின் மூன்றாவது பிரதான ஆசாரியன்.

(8 மூன்றாவது யுத்தம் - பென்யமீன் புத்திரரின் தோல்வி

நியா 20:29 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கிபியாவைச்சுற்றிலும் பதிவிடையாட்களை வைத்து,

நியா 20:30 மூன்றாம்நாளிலே பென்யமீன் புத்திரருக்கு விரோதமாய்ப் போய், முன் இரண்டுதரம் செய்ததுபோல, கிபியாவுக்குச் சமீபமாய்ப் போருக்கு அணிவகுத்து நின்றார்கள்.

நியா 20:31 அப்பொழுது பென்யமீன் புத்திரர் ஜனத்திற்கு விரோதமாய்ப் புறப்பட்டுப் பட்டணத்தை விட்டு, அப்பாலே வந்து, வெளியிலே பெத்தேலுக்கும் கிபியாவுக்கும் போகிற இரண்டு வழிகளில் இஸ்ரவேல் ஜனத்தின் ஏறக்குறைய முப்பதுபேரை, முதல் இரண்டுதரம் செய்ததுபோல, வெட்டவும் கொல்லவும் தொடங்கினார்கள்.

நியா 20:32 முன்போல நமக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்கள் என்று பென்யமீன் புத்திரர் சொன்னார்கள்; இஸ்ரவேல் புத்திரரோ: அவர்களைப் பட்டணத்தை விட்டு அப்பாலேயிருக்கிற வழிகளிலே வரப்பண்ணும்படிக்கு, நாம் ஓடவேண்டும் என்று சொல்லி யிருந்தார்கள்.

நியா 20:33 அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தங்கள் ஸ்தானத்திலிருந்து எழும்பி, பாகால் தாமாரிலே யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள்; இஸ்ரவேலரில் கிபியாவின் பள்ளத்தாக்கிலே பதிவிருந்தவர்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு,

நியா 20:34 அவர்களில் எல்லா இஸ்ரவேலிலும் தெரிந்துகொள்ளப்பட்ட பதினாயிரம்பேர் கிபியாவுக்கு எதிரே வந்தார்கள்; யுத்தம் பலத்தது; ஆனாலும் தங்களுக்கு விக்கினம் நேரிட்டது என்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.

நியா 20:35 கர்த்தர் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பென்யமீனை முறிய அடித்தார்; அந்நாளிலே இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனிலே பட்டயம் உருவுகிற ஆட்களாகிய இருபத்தையாயிரத்து நூறுபேரைச் சங்கரித்தார்கள்.

20 அதிகாரம்

நியா 20:36 இஸ்ரவேலர் கிபியாவுக்கு அப்பாலே வைத்த பதிவிடையை நம்பியிருந்தபடியினாலே, பென்யமீனருக்கு இடம் கொடுத்தார்கள்; அதினாலே அவர்கள் முறிய அடிக்கப்படுகிறார்கள் என்று பென்யமீன் புத்திரருக்குக் காணப்பட்டது.

நியா 20:37 அப்பொழுது பதிவிடையிருந்தவர்கள் தீவிரமாய்க் கிபியாவின்மேல் பாய்ந்து பரவி, பட்டணத்தில் இருக்கிறவர்களெல்லாரையும் பட்டயக் கருக்கினால் வெட்டினார்கள்.

நியா 20:38 பட்டணத்திலிருந்து மகா பெரிய புகையை எழும்பப்பண்ணுவதே இஸ்ரவேலருக்கும் பதிவிடைக்காரருக்கும் குறிக்கப்பட்ட அடையாளமாயிருந்தது.

நியா 20:39 ஆகையால் இஸ்ரவேல் யுத்தத்திலே பின்வாங்கினபோது, பென்யமீனர்: முந்தின யுத்தத்தில் நடந்ததுபோல, அவர்கள் நமக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்களே என்று சொல்லி, இஸ்ரவேலரில் ஏறக்குறைய முப்பதுபேரை வெட்டவும் கொல்லவும் தொடங்கினார்கள்.

நியா 20:40 பட்டணத்திலிருந்து புகையானது ஸ்தம்பம்போல உயர எழும்பினபோது, பென்யமீனர் பின்னாகப் பார்த்தார்கள்; இதோ, பட்டணத்தின் அக்கினிஜுவாலை வானபரியந்தம் எழும்பிற்று.

நியா 20:41 அப்பொழுது இஸ்ரவேலர் திரும்பிக்கொண்டார்கள்; பென்யமீன் மனுஷரோ, தங்களுக்கு விக்கினம் நேரிட்டதைக் கண்டு திகைத்து,

நியா 20:42 இஸ்ரவேல் புத்திரரைவிட்டு, வனாந்தரத்திற்குப் போகிற வழிக்கு நேராய்த் திரும்பி ஓடிப்போனார்கள்; ஆனாலும் யுத்தம் அவர்களைத் தொடர்ந்தது; பட்டணங்களில் இருந்தவர்களும் தங்கள் நடுவே அகப்பட்டவர்களைக் கொன்று போட்டார்கள்.

நியா 20:43 இப்படியே பென்யமீனரை வளைந்துகொண்டு துரத்தி, கிபியாவுக்குக் கிழக்குப்புறமாக வருமட்டும், அவர்களை லேசாய் மிதித்துப்போட்டார்கள்.

நியா 20:44 இதினால் பென்யமீனரிலே பதினெண்ணாயிரம்பேர் விழுந்தார்கள்; அவர்களெல்லாரும் பலவான்களாயிருந்தார்கள்.

நியா 20:45 மற்றவர்கள் விலகி, வனாந்தரத்தில் இருக்கிற ரிம்மோன் கன்மலைக்கு ஓடிப்போனார்கள்; அவர்களில் இன்னும் ஐயாயிரம்பேரை வழிகளிலே கொன்று, மற்றவர்களைக் கீதோம்மட்டும் பின்தொடர்ந்து, அவர்களில் இரண்டாயிரம் பேரை வெட்டிப்போட்டார்கள்.

நியா 20:46 இவ்விதமாய் பென்யமீனரில் அந்நாளில் விழுந்தவர்களெல்லாரும் இருபத்தையாயிரம்பேர்; அவர்களெல்லாரும் பட்டயம் உருவுகிற பலவான்களாயிருந்தார்கள்.

"மூன்றாம்நாளிலே" - யுத்தத்தை ஆரம்பித்து மூன்றாம் நாளில் இவர்கள் பென்யமீன் புத்திரருக்கு விரோதமாகப் போகவில்லை. மூன்றாம் நாளில் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து, அன்று சாயங்காலமட்டும் உபவாசித்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலி களையும் இட்டார்கள். ஆகையினால் இந்த வசனத்தில் மூன்றாம் நாள் என்பது அவர்கள் யுத்தம் பண்ணிய மூன்றாவது நாளைக் குறிக்கும். இந்த நாள் அவர்கள் யுத்தம் பண்ண ஆரம்பித்து நான்காவது நாளாகும். (நியா 20:19-21,25,26,30).

"அவர்களைப் பட்டணத்தை விட்டு அப்பாலேயிருக்கிற வழிகளிலே வரப்பண்ணும் படிக்கு, நாம் ஓடவேண்டும்" - பட்டணத்து உள்ளேயிருக்கும் பென்யமீன் கோத்திரத்தாரை வெளியே வரவழைப்பதற்கு ஒரு வியூகம் வகுக்கப்படுகிறது. ஆயி பட்டணத்தின்மீது இஸ்ரவேல் புத்திரர் பதிவிருந்து தாக்கியதுபோன்று, இங்கும் பதிவிருந்து தாக்குகிறார்கள். (நியா 20:32-34; யோசு 8).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

20 அதிகாரம்

"தங்களுக்கு விக்கினம் நேரிட்டது என்று அவர்கள் அறியாதிருந்தார்கள்" - கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் தங்களுக்கு அழிவு வருகிறது என்பதை பென்யமீன் புத்திரர் அறியாதிருந்தார்கள். இவர்கள் ஆண்புணர்ச்சியின்மீது மோகம் கொண்டதின் நிமித்தமாகவும், மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் ஆண்புணர்ச்சிக்காரரைத் தண்டியாமற் போனதின் நிமித்தமாகவும் கர்த்தர் பென்யமீன் புத்திரரைத் தண்டிப்பதற்கு சித்தம் கொண்டார். (லேவி 18:22-29). இஸ்ரவேலில் வேசித்தனத்திற்கும், கற்பழிப்புக்கும், விபசாரத்திற்கும், மரணதண்டனை கொடுக்கப் பட்டது. (லேவி 18:20,லேவி 20:1-17;உபா 22:22-26).

"கர்த்தர் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பென்யமீனை முறிய அடித்தார்" - இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சொந்த பலத்தினால் பென்யமீன் புத்திரரோடு முதல் இரண்டு நாட்களில் யுத்தம் பண்ணினார்கள். அதில் 40,030 யுத்த வீரர் மரித்துப் போனார்கள். இப்போது கர்த்தர் இஸ்ரவேலுக்கு முன்பாக பென்யமீனை முறியடித்தார். ஒரே நாளில் பென்யமீன் கோத்திரத்தாரில் ஏறத்தாழ யுத்த வீரர் அனைவருமே அழிந்துபோனார்கள்.

"பட்டணத்தில் இருக்கிறவர்களெல்லாரையும் பட்டயக்கருக்கினால் வெட்டினார்கள்" - பட்டணத்திற்குள் எத்தனைபேர் வெட்டப் பட்டார்கள் என்று எண்ணிக்கை தெரியவில்லை. யுத்தகளத்தில் பென்யமீன் புத்திரரில் 25,100 யுத்தவீரர்கள் கொல்லப்பட்டார்கள். (நியா 20:35-37).

"குறிக்கப்பட்ட அடையாளமாயிருந்தது" - பட்டணத்திலிருந்து மகா பெரிய புகையை எழும்பப்பண்ணுவது இங்கு குறிக்கப்பட்ட அடையாளமாகும். ஆயீ பட்டணத்தின்மீது யுத்தம் பண்ணப்போகும்போதும் யுத்த வீரருக்கு இதுவே அடையாளமாக இருந்தது. (யோசு 8:20-21).

"புகையானது ஸ்தம்பம்போல உயர எழும்பினபோது" - (யோசு 8:20-21)

"பென்யமீனரை வளைந்து கொண்டு" - இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனரை வளைந்து கொண்டார்கள். பென்யமீன் புத்திரர் நடுவில் ஆச்சரியமும், குழப்பமும் உண்டாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உதவியினால் பென்யமீனரை லேசாய் மிதித்துப்போட்டார்கள்.

"பென்யமீனரிலே பதினெண்ணாயிரம்பேர் விழுந்தார்கள்" - நியா 20:46 ஆவது வசனத்தில் பென்யமீனரில் 25,000பேர் விழுந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. நியா 20:44-45 ஆகிய வசனங்களில் பென்யமீனரில் 18,000பேரைத் தொடர்ந்து மேலும் 5,000பேரும், 2,000பேரும் விழுந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் சேர்ந்து 25,000பேராகும். நியா 20:35 ஆவது வசனத்தில் பென்யமீனரில் 25,100பேர் சங்கரிக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் அதிகமாக இருக்கும் 100பேர் முதல் இரண்டு நாள் யுத்தத்தின்போது மரித்துப் போயிருக்கலாம். இவ்வாறாக பென்யமீனரில் விழுந்தவர்களின் எண்ணிக்கை 25,100 யுத்த வீரர்கள் ஆயிற்று. இவர்கள்போக மேலும் 600 பேர் ரிம்மோன் கன்மலைக்குத் தப்பியோடினார்கள். (நியா 20:47) மேலும் 1,000பேர் வேறு எங்காவது தப்பியோடிருக்கலாம். இவ்வாறாக பென்யமீன் புத்திரருடைய யுத்த வீரர்களின் தொகை யுத்தம் ஆரம்பமானபோது 26,700 பேராக இருந்தது. (நியா 20:15).

(9) பென்யமீன் புத்திரரில் அறுநூறு பேர் தப்பி ஓடிவிட்டார்கள்

நியா 20:47 அறுநூறுபேர் திரும்பிக் கொண்டு ஓடி, வனாந்தரத்திலிருக்கிற ரிம்மோன் கன்மலைக்குப் போய், ரிம்மோன் கன்மலையிலே நாலு மாதம் இருந்தார்கள்.

நியா 20:48 இஸ்ரவேலரோ பென்யமீன் புத்திரர் மேல் திரும்பி, பட்டணத்தில் மனுஷர் தொடங்கி மிருகங்கள் மட்டும் கண்டவைகள் எல்லாவற்றையும் பட்டயக்கருக்கினால் வெட்டி, கண்ட பட்டணங்களையெல்லாம் அக்கினியால் கொளுத்திப் போட்டார்கள்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

20 அதிகாரம்

"அறுநூறுபேர்..........ரிம்மோன் கன்மலையிலே நாலு மாதம் இருந்தார்கள்" - இந்த 600பேரும் மேலும் பென்யமீன் புத்திரரில் 1000பேரும் ரிம்மோன் கன்மலைக்கு ஓடிப்போனார்கள். பழைய ஏற்பாட்டின் சில பதிப்புக்களில் நியா 20:15 ஆவது வசனத்தில் பென்யமீன் மனுஷரில் பட்டயம் உருவுகிற மனுஷரின் லக்கம் 25,700பேர் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம், ரிம்மோன் கன்மலைக்குத் தப்பியோடினவர்கள் மொத்தம் 600பேர் மட்டுமே ஆகும்.

"கண்ட பட்டணங்களையெல்லாம் அக்கினியால் கொளுத்திப் போட்டார்கள்" - எத்தனை பட்டணங்கள் என்று தெளிவாகக் கூறப்படவில்லை. ஒவ்வொரு பட்டணத்திலும் எத்தனை மனுஷர் மடிந்தார்கள் என்னும் விவரமும் தெரியவில்லை.

21 அதிகாரம்

(10) ஒரு கோத்திரம் குறைந்து போனதற்காக இஸ்ரவேல் புத்திரர் அழுது புலம்பினார்கள்

நியா 21:1 இஸ்ரவேலர் மிஸ்பாவிலே இருக்கும்போது: நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியைப் பென்யமீனருக்கு விவாகம்பண்ணிக் கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருந்தார்கள்.

நியா 21:2 ஆகையால் ஜனங்கள் தேவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே தேவசந்நிதியில் சாயங்காலமட்டும் இருந்து, சத்தமிட்டு, மிகவும் அழுது:

நியா 21:3 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்துபோகத்தக்கதாக இஸ்ரவேலில் இந்தக் காரியம் நேரிட்டது என்ன என்றார்கள்.

நியா 21:4 மறுநாளிலே, ஜனங்கள் காலமே எழுந்திருந்து, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினார்கள்.

நியா 21:5 கர்த்தருடைய சந்நிதியில் மிஸ்பாவுக்கு வராதவன் நிச்சயமாய்க் கொலை செய்யப்படக்கடவன் என்று அவர்கள் பெரிய ஆணையிட்டிருந்த படியால், இஸ்ரவேல் புத்திரர்: கர்த்தருடைய சந்நிதியில் சபைகூடின போது, இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமிருந்து வராதே போனவர்கள் யார் என்று விசாரித்தார்கள்.

நியா 21:6 இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரராகிய பென்யமீனரை நினைத்து, மனஸ்தாபப்பட்டு: இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் அறுப்புண்டுபோயிற்றே.

"ஆணையிட்டிருந்தார்கள்" - தேவனுடைய பிள்ளைகள் அவசரப்பட்டு எதையாவது ஆணையிடுகிறார்கள். அதன் பின்பு, தாங்கள் இட்ட ஆணைக்காக வருத்தப்படுகிறார்கள். அவஸ்தைப்படுகிறார்கள். இதற்கு யெப்தா ஒரு முன்மாதிரியாக இருந்தான். (நியா 11) ஆணையிடாமல் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்பது உத்தமமானது. கர்த்தரிடத்தில் ஆணையிட்டோ,பொருத்தனை பண்ணியோ நாம் எதையும் சாதிக்க முடியாது. கர்த்தர் நமது பொருத்தனையின் நிமித்தமாக நமக்கு எதையும் செய்வதில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய குமாரத்தியை பென்யமீனருக்கு விவாகம் பண்ணிக் கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருந்தார்கள். இவர்கள் ஆணையிடாதேபோனாலும், கர்த்தர் பென்யமீன் புத்திரரை அழித்திருப்பார்.

கர்த்தருடைய சமூகத்தில் பொருத்தனை முக்கியமானதல்ல. ஆனாலும், பொருத்தனை பண்ணிவிட்டால் அதைநிறைவேற்ற வேண்டிய பொறுப்பு பொருத்தனை பண்ணியவருக்கு உண்டு. பொருத்தனை பண்ணிவிட்டு, அதற்காக வருத்தப்படுவது விவேகமானதல்ல. கர்த்தருக்குப் பயந்தவன் ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும், தவறாதிருக்கிறான். (சங் 15:4)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் இவ்வாறு ஆணையிடவில்லையென்றால், அவர்கள் கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளை அழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. (நியா 21:10-14) தங்களுடைய குமாரத்திகளைப் பென்யமீன் புத்திரருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக யாபேசின் கன்னிகைகளைத் திருடிக் கொண்டு வந்து, அவர்களை மனைவிகளாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. (நியா 21:19-24).

"தேவனுடைய வீடு" - சில பதிப்புக்களில் தேவனுடைய வீடு என்பதற்குப் பதிலாக பெத்தேல் என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பெத்தேல் என்பதற்கு தேவனுடைய வீடு அல்லது தேவனுடைய சந்நிதி என்று பொருள்.

தேவனுடைய வீடு (the house of God) - בֵּית־אֵל - bayth-ale' - 1008

ஓர் இடத்தின் பெயர் - பெத்தேல், தேவனுடைய வீடு, தேவசந்நிதி

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

21 அதிகாரம்

"சத்தமிட்டு, மிகவும் அழுது" - இரண்டாம் முறையாக இஸ்ரவேல் புத்திரர் சத்தமிட்டு அழுகிறார்கள். முதலாவதாக பென்யமீன் புத்திரரோடு யுத்தம் செய்து, தங்களில் 40,000 யுத்த வீரர்கள் மரித்துப்போனபோது சத்தமிட்டு அழுதார்கள். (நியா 20:21,25). இப்போது பென்யமீன் கோத்திரம் இஸ்ரவேலில் இராதபடி அழிந்துபோயிற்றே என்று அழுகிறார்கள். (நியா 21:2-3). பென்யமீனரை ஜெயித்து, இஸ்ரவேலர்கள் பழிவாங்கினார்கள். இது அவர்களுக்குச் சந்தோஷமான காரியம். ஆனாலும் தாங்கள் செய்த தவறுக்கு மனம் வருந்துகிறார்கள். தங்களுடைய குமாரத்திகளைப் பென்யமீன் புத்திரருக்குக் கொடுப்பதில்லை என்று கர்த்தரிடத்தில் ஆணையிட்டிருக்கிறார்கள். இதனால் பென்யமீன் கோத்திரமே பிற்காலத்தில் சந்ததி பெருகாதபடிக்கு அழிந்துபோகும். கிபியாவின் பாவம் பெரியது. ஆனாலும் கர்த்தர் ஒரு முழு சந்ததியையும் அழிப்பதற்கு சித்தமாக இரார். இஸ்ரவேலில் ராஜா இல்லை. ஆகையினால் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான். (நியா 21:25).

"இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்து போகத்தக்கதாக" - கொலைகாரர்கள் தண்டிக்கப்பட்டது நியாயமான காரியம். ஆனால் இங்கு பென்யமீன் புத்திரரின் முழு கோத்திரமும், ஏறத்தாழ அழிந்துபோயிற்று. அவர்களுடைய பட்டணங்களும், பட்டணத்திலுள்ளவர்களும், மிருகங்களும் அழிந்துபோயிற்று. (நியா 20:48).

"ஒரு பலிபீடத்தைக் கட்டி" - தேவனுடைய வாசஸ்தலம் சீலோவில் இருந்தது. (நியா 21:12) ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள வெண்கல பலிபீடத்தை இவர்கள் ஏன் பயன்படுத்தவில்லை என்று தெரியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜாதியாரிடத்தில் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள். ஒருவேளை இஸ்ரவேலின் சத்துருக்கள் வெண்கல பலிபீடத்தையும், ஆசரிப்புக் கூடாரத்தின் சில பகுதிகளையும் அழித்துப்போட்டிருக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரரின் பெரிய ஆணை

1. நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியைப் பென்யமீனருக்கு விவாகம்பண்ணிக் கொடுப்பதில்லை (நியா 21:1,7)
2. கர்த்தருடைய சந்நிதியில் மிஸ்பாவுக்கு வராதவன் நிச்சயமாய்க் கொலை செய்யப்படக்கடவன் (நியா 21:5) இந்தக் காரணத்திற்காகத்தான் ஒருவேளை பென்யமீன் கோத்திரத்திலுள்ள எல்லோரையும் அவர்கள் கொன்று போட்டிருக்க வேண்டும். (நியா 20:48).

"பென்யமீனரை நினைத்து, மனஸ்தாபப்பட்டு" - பென்யமீன் புத்திரரை முழுவதுமாக அழிக்க வேண்டும் என்னும் தங்கள் நிலைமையிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் பின்வாங்குகிறார்கள். அவர்களுக்காக மனஸ்தாபப்படுகிறார்கள். பென்யமீன் கோத்திரம் இஸ்ரவேலில் இராதபடி அழிந்துபோகக்கூடாது என்று விரும்புகிறார்கள்.

(11) பென்யமீன் புத்திரருக்கு மனைவிகள் கிடைக்கும்படி செய்தார்கள்

நியா 21:7 மீந்திருப்பவர்களுக்கு மனைவிகள் கிடைக்கும்படி நாம் அவர்களுக்காக என்னசெய்யலாம்? நம்முடைய குமாரத்திகளில் ஒருத்தியையும் அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று நாம் கர்த்தர்மேல் ஆணையிட்டுக் கொண்டோமே.

"மீந்திருப்பவர்களுக்கு மனைவிகள் கிடைக்கும்படி நாம் அவர்களுக்காக என்ன செய்யலாம்?" - ரிம்மோன் கன்மலைக்கு 600பேர் ஓடிப்போனார்கள். அங்கு அவர்கள் நான்கு மாதங்களாகத் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு மனைவிகள் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அவர்களுக்கு தங்கள் குமாரத்தியைக் கொடுப்பதில்லையென்று இஸ்ரவேலர் கர்த்தர்மேல் ஆணையிட்டிருக்கிறார்கள்.(நியா 21:7,13-24). இந்த எண்ணம் ஆணையிடுவதற்கு முன்பாக வந்திருந்தால், அவர்கள் மனஸ்தாபப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. (நியா 21:1,5-7).

21 அதிகாரம்

(12) பென்யமீன் புத்திரரோடு சமாதான உடன்படிக்கை

நியா 21:8 இஸ்ரவேலின் கோத்திரங்களில் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியில் வராதேபோன யாதொருவர் உண்டோ என்று விசாரித்தார்கள்; அப்பொழுது கீலேயாத்திலுள்ள யாபேசின் மனுஷரில் ஒருவரும் பாளயத்தில் சபைகூடினபோது வரவில்லை.

நியா 21:9 ஜனங்கள் இலக்கம் பார்க்கப்பட்ட போது, கீலேயாத்திலிருக்கிற யாபேசின் குடிகளில் அங்கே ஒருவரும் இருந்ததில்லை.

நியா 21:10 உடனே சபையார் பலவான்களில் பன்னீராயிரம்பேரை அங்கே அழைத்து; நீங்கள் போய், கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளை ஸ்திரீகளோடும் பிள்ளைகளோடும் பட்டயக்கருக்கினால் வெட்டுங்கள்.

நியா 21:11 சகல ஆண்பிள்ளைகளையும், புருஷரை அறிந்த சகல பெண் பிள்ளைகளையும் சங்கரிக்கக்கடவீர்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

நியா 21:12 இவர்கள் கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளிடத்திலே புருஷரை அறியாத நானூறு கன்னிப்பெண்களைக் கண்டுபிடித்து, அவர்களைக் கானான் தேசமான சீலோவிலிருக்கிற பாளயத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

நியா 21:13 அப்பொழுது ரிம்மோன் கன்மலையிலிருக்கிற பென்யமீன் புத்திரரோடே பேசவும், அவர்களுக்குச் சமாதானம் கூறவும், சபையார் எல்லாரும் மனுஷரை அனுப்பினார்கள்.

நியா 21:14 அப்படியே அக்காலத்தில் பென்யமீனர் திரும்ப வந்தார்கள்; கீலேயாத்திலிருக்கிற யாபேசின் ஸ்திரீகளில் உயிரோடே வைத்த பெண்களை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படிச் செய்தும் அவர்கள் தொகைக்குக் காணாதிருந்தது.

நியா 21:15 இஸ்ரவேல் கோத்திரங்களிலே கர்த்தர் ஒரு பிளப்பை உண்டாக்கினார் என்று ஜனங்கள் பென்யமீனருக்காக மனஸ்தாபப்பட்டார்கள்.

"கீலேயாத்திலிருக்கிற யாபேசின் குடிகளில் அங்கே ஒருவரும் இருந்ததில்லை" - இஸ்ரவேலின் கோத்திரங்கள் அனைவரையும் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியில் வரவழைத்து அவர்களை இலக்கம் பார்த்தார்கள். இங்கு கூடிவராதவர்களை அழித்து விட வேண்டுமென்பது அவர்களுடைய பொருத்தனை. (நியா 21:5). கீலேயாத்திலிருக்கிற யாபேசின் குடிகளில் அங்கே ஒருவரும் வரவில்லை. இதற்காக இஸ்ரவேலர்கள் இவர்களைச் சங்காரம் பண்ணினார்கள். பென்யமீன் புத்திரரும் அங்கு வரவில்லை. (நியா 21:8-9; நியா 20:13). கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளிடத்தில் புருஷனை அறியாத நானூறு கன்னிப் பெண்கள் இருந்தார்கள். இவர்களைத் தவிர மற்ற புருஷரையும், ஸ்திரீகளையும் சங்கரித்தார்கள். (நியா 21:10-12). பென்யமீன் புத்திரரை இஸ்ரவேல் புத்திரர் இதற்குமேல் சங்காரம் பண்ணவில்லை.

"நானூறு கன்னிப்பெண்கள்" - பென்யமீன் புத்திரரில் மனைவிகள் இல்லாமல் 600 புருஷர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு நானூறு கன்னிப் பெண்களைத் தேடி பிடித்திருக்கிறார்கள். இதன் பின்பு, பென்யமீன் புத்திரரோடு அவர்கள் கலந்துபேசி, சமாதான உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள். (நியா 21:13-15).

"ரிம்மோன் கன்மலை" - இது எருசலேமிற்கு வடக்கே 15 மைல் தூரத்திலுள்ளது. பாலஸ்தீன தேசத்தில் இதுபோன்று ஏராளமான கன்மலைகளும், குகைகளும் உள்ளன. ஒரு குகையில் அநேகர் அநேக நாட்களுக்குத் தங்கியிருக்க முடியும். இஸ்ரவேல் புத்திரரின் அடிமைத்தனக்காலத்தில் இஸ்ரவேலரில் அநேகர் இதுபோன்ற குகைகளில் நீண்ட காலமாகத் தங்கியிருந்தார்கள். (நியா 6:1-7; 1சாமு 13:6,19).

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

21 அதிகாரம்

"அப்படிச் செய்தும் அவர்கள் தொகைக்குக் காணாதிருந்தது" - 600 புருஷர்களுக்கு 400 கன்னிப்பெண்கள் இருக்கிறார்கள். மீதமுள்ள 200 புருஷருக்கு ஸ்திரீகளைத் தேடுவதற்காக இஸ்ரவேல் புத்திரர் திட்டங்களை யோசித்தார்கள். (நியா 21:16-24).

(13) மனைவிகள் கிடைக்காமல் இருந்த பிரச்சனை தொடர்ந்தது

நியா 21:16 பென்யமீன் கோத்திர ஸ்திரீகள் அழிந்தபடியினாலே, மீதியான மற்றப்பேர்களுக்கும் மனைவிகள் கிடைக்கும்படி என்னசெய்யலாம் என்று சபையின் மூப்பரானவர்கள் கேட்டு,

நியா 21:17 இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் நிர்மூலமாகாதபடிக்கு தப்பினவர்களுடைய சுதந்தரம் பென்யமீனுக்கு இருக்கவேண்டுமே,

நியா 21:18 நாமோ நம்முடைய குமாரத்திகளில் அவர்களுக்குப் பெண் கொடுக்கக்கூடாது; பென்யமீனருக்குப் பெண்கொடுக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று, இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டார்களே என்றார்கள்.

"பென்யமீன் கோத்திர ஸ்திரீகள் அழிந்தபடியினாலே" - இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனின் பட்டணங்களை அழித்தபோது, அங்கு ஸ்திரீகளும், பிள்ளைகளும், மிருக ஜீவன்களும் அழிந்துபோனார்கள். (நியா 20:48).

"இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் நிர்மூலமாகாதபடிக்கு" - பென்யமீன் கோத்திரம் நிர்மூலமாகக்கூடாது என்பதில் இஸ்ரவேல் புத்திரர் அதிக கரிசனையோடு இருக்கிறார்கள். இந்தக் கரிசனை இதற்கு முன்பேயிருந்திருந்தால் இஸ்ரவேலர்கள் பென்யமீனரோடு யுத்தம் பண்ணியிருக்கமாட்டார்கள்.

"நம்முடைய குமாரத்திகளில் அவர்களுக்குப் பெண் கொடுக்கக்கூடாது" - தங்களுடைய குமாரத்திகளைப் பென்யமீன் புத்திரருக்குப் பெண் கொடுக்கமாட்டோம் என்று கர்த்தருடைய சமூகத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளைக் கொன்று போட்டார்கள். (நியா 21:1,5).

"பென்யமீனருக்குப் பெண்கொடுக்கிறவன் சபிக்கப்பட்டவன்" - தாங்கள் கூறின ஆணையின் நிமித்தமாக அந்த ஆணையை மீறினால், தங்களுக்குச் சாபம் வரும் என்று நினைத்தார்கள். கர்த்தரிடத்தில் தவறுதலாக ஆணையிட்டால், தான் இட்ட ஆணைக்காகக் கர்த்தரிடத்தில் மனம் வருந்தி, மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்குக் குற்ற நிவாரணம் செய்து, பரிகாரம் பண்ணலாம். ஒவ்வொரு மனுஷனும் தான் செய்யும் எல்லாப் பாவங்களுக்கும் மனந்திரும்ப வேண்டும். இதில் பாவம் செய்வதற்குத் தூண்டும் ஆணையும் அடங்கும். (மத் 12:31-32; 1யோவான் 1:9).

(14) எல்லோருக்கும் மனைவிகள் கிடைக்கச் செய்தார்கள்

நியா 21:19 பின்னும், இதோ, பெத்தேலுக்கு வடக்கே பெத்தேலிலிருந்து சீகேமுக்குப் போகிற பாதைக்குக் கிழக்காகவும் லிபோனாவுக்குத் தெற்காகவும் இருக்கிற சீலோவிலே வருஷந்தோறும் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடப்படுகிறதே என்று சொல்லி,

நியா 21:20 அவர்கள் பென்யமீன் புத்திரரை நோக்கி: நீங்கள் போய், திராட்சத்தோட்டங்களிலே பதிவிருந்து,

21 அதிகாரம்

"சீலோவிலே வருஷந்தோறும் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடப்படுகிறது" - சீலோ பெத்தேலுக்கு வடக்கே இருக்கிறது. சீகேமுக்குப் போகிற பாதைக்குக் கிழக்காக இருக்கிறது. லிபோனாவுக்குத் தெற்காக இருக்கிறது. இங்கு வருஷந்தோறும் கர்த்தருடைய பண்டிகை கொண்டாடுவது வழக்கம். இந்தப் பண்டிகையில் கலந்து கொள்வதற்காக சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம்பண்ணுகிறவர்களாய் புறப்பட்டு வருவார்கள். இந்த ஸ்திரீகளைப் பென்யமீன் புத்திரரில் மனைவிகள் இல்லாத 200 புருஷருக்கு பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது இஸ்ரவேல் புத்திரரின் திட்டம். (நியா 21:19-24). இஸ்ரவேல் புத்திரர் மூன்று வருஷாந்திர பண்டிகைகளைக் கொண்டாடுவது வழக்கம். (யாத் 23:14-17) மூன்று பண்டிகைகள் இப்பொழுது ஒரு பண்டிகையாயிற்று. நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரையும், அவருடைய பிரமாணங்களையும் விட்டு, விலகிப்போனார்கள். சீலோவிலே தேவனுடைய வாசஸ்தலம் உள்ளது. ஜனங்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனபடியினால் அவர்களுக்குக் கர்த்தருடைய பண்டிகைகளைக் குறித்து, விவரமாகக் கூறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

"லிபோனா" (Lebonah) - சீலோவிற்கு மேற்கில் 4மைல் தூரத்தில் உள்ளது.

பென்யமீன் புத்திரருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. திராட்சத்தோட்டங்களிலே பதிவிருங்கள்.
2. சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம் பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருகிறதைப் பார்த்துக் கொண்டிருங்கள். (நியா 21:21).
3. அவர்களை நீங்கள் காணும்போது, திராட்சத்தோட்டங்களிலிருந்து புறப்பட்டு வாருங்கள்.
4. ...
5. பிடித்த பெண்களைப் பென்யமீன் தேசத்திற்குக் கொண்டுபோங்கள்.

(15) நியாயாதிபதிகளின் ஆட்சிக் காலத்தில் சமுதாய வாழ்வும், சன்மார்க்க வாழ்வும்

நியா 21:21 சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம் பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருகிறதை நீங்கள் காணும்போது, திராட்சத்தோட்டங்களிலிருந்து புறப்பட்டு, உங்களில் அவரவர் சீலோவின் குமாரத்திகளில், ஒவ்வொரு பெண்ணைப் பிடித்துப் பென்யமீன் தேசத்திற்குக் கொண்டுபோங்கள்.

நியா 21:22 அவர்களுடைய தகப்பன்மாராகிலும், சகோதரராகிலும் எங்களிடத்தில் முறையிட வரும்போது, நாங்கள் அவர்களை நோக்கி: எங்கள் நிமித்தம் அவர்களுக்குத் தயவு செய்யுங்கள்; நாங்கள் யுத்தம்பண்ணி, அவனவனுக்கு மனைவியை வாங்கிக் கொடுக்கவில்லை; உங்கள்மேல் குற்றமுண்டாக இப்போது நீங்கள் அவர்களுக்கு மனைவிகளைக் கொடுக்கவும் இல்லை என்போம் என்று சொன்னார்கள்.

நியா 21:23 பென்யமீன் புத்திரர் அப்படியே செய்து, நடனம்பண்ணுகிறவர்களிலே தங்கள் தொகைக்குச் சரியான பெண்களை மனைவிகளாகப் பிடித்துக் கொண்டு, தங்கள் சுதந்தரத்திற்குத் திரும்பிப்போய், பட்டணங்களைப் புதுப்பித்துக் கட்டி, அவைகளில் குடியிருந்தார்கள்.

நியா 21:24 இஸ்ரவேல் புத்திரரும் அக்காலத்திலே அவ்விடம் விட்டு அவரவர் தங்கள் கோத்திரத்துக்கும் தங்கள் குடும்பத்துக்கும் போய், அவரவர் தங்கள் சுதந்தரத்தில் சேர்ந்தார்கள்.

நியா 21:25 அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்.

நியாயாதிபதிகள் - தொகுப்புரை

21 அதிகாரம்

"நடனம்பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருகிறதை நீங்கள் காணும்போது" - இஸ்ரவேல் புத்திரர் பண்டிகைகளை இப்போது ஆசரிக்கும் விதத்திற்கும், மோசேயின் காலத்தில் ஆசரித்த விதத்திற்கும் வித்தியாசம் உள்ளது. நியாயாதிபதிகளின் காலத்தில் புறஜாதியாரின் விக்கிரகாராதனை முறைமைகள் இஸ்ரவேல் புத்திரரின் ஆராதனை முறைமையில் கலந்து விட்டது.

"உங்களில் அவரவர் சீலோவின் குமாரத்திகளில், ஒவ்வொரு பெண்ணைப் பிடித்து" - சீலோவின் குமாரத்திகள் கன்னிப் பெண்கள். பென்யமீன் புத்திரருக்குத் தங்கள் குமாரத்திகளைக் கொடுக்கமாட்டோம் என்று சீலோவின் புத்திரரும், மற்றவர்களோடு சேர்ந்து ஆணையிட்டார்கள். சீலோவின் குமாரத்திகள் கானானியர் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. அவர்கள் கானானியராக இருந்தால் இஸ்ரவேலரின் பண்டிகையில் அவர்களுக்குப் பங்கில்லை. இவர்களும் இஸ்ரவேல் புத்திரரே. (நியா 21:22) சீலோவின்குமாரத்திகளைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்பது இஸ்ரவேலருடைய மூப்பரின் கட்டளை. ஒரு கன்னிப்பெண்ணை பிடித்துக் கடத்திக் கொண்டு போனால், அதற்கு மரண தண்டனை கொடுக்கப்படும். (யாத் 21:16; உபா 24:7) புருஷனுக்கு நியமிக்கப்படாத பெண்ணை ஒருவன் கெடுத்துவிட்டால் அவளை அவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும். தன் வாழ்நாளில் அவன் அவளைத் தள்ளிவிடக் கூடாது. (உபா 22:28-29). வேறுபுருஷனுக்கு நியமிக்கப்பட்ட கன்னிப்பெண்ணை ஒருவன் கெடுத்துவிட்டால், அவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். (உபா 22:25-27). இந்தப் பிரமாணங்களெல்லாம் தெரிந்திருந்தும், இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்கள் பென்யமீன் கோத்திரத்து புருஷரிடம் சீலோவின் குமாரத்திகளைப் பிடித்து அவர்களுடைய தேசத்திற்குக் கொண்டுபோகுமாறு ஆலோசனை கூறுகிறார்கள்.

"உங்கள்மேல் குற்றமுண்டாக இப்போது நீங்கள் அவர்களுக்கு மனைவிகளைக் கொடுக்கவும் இல்லை" - சீலோவின் குமாரத்திகளுடைய தகப்பன்மாரிடமும், சகோதரரிடமும் தாங்கள் பேசிக் கொள்வதாக இஸ்ரவேல் புத்திரர்கள் கூறுகிறார்கள். தாங்கள் கர்த்தர்பேரில் இட்ட ஆணையை மனப்பூர்வமாக மீறவில்லையென்றும், பென்யமீன் புருஷர்கள் தங்கள் ஸ்திரீகளைக் கட்டாயமாகப் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள் என்றும் கூறி அந்த ஆணையின் நிமித்தம் தாங்கள் தவறுசெய்ய வில்லை என்று விவாதம் பண்ணுகிறார்கள். இதன் பிரகாரம் இஸ்ரவேல் புத்திரரின் ஆணையும் மீறப்படவில்லை. பென்யமீன் கோத்திரத்தின் 200 புருஷர்களுக்கு ஸ்திரீகளும் கிடைக்கிறார்கள்.

"தங்கள் சுதந்தரம்" - சீலோவின் குமாரத்திகளுக்கு நல்ல வெகுமதி காத்திருக்கிறது. பென்யமீன் கோத்திரத்தில் 600 புருஷர்கள் மட்டுமே இருக்கிறார்கள். அந்தக் கோத்திரம் முழுவதற்கும் கொடுக்கப்பட்ட சுதந்தரவீத தேசம் இப்போது 600 பேருக்கு மட்டுமே வருகிறது. இந்தப் பெரிய சுதந்தரத்தை 600பேர் மட்டும் அனுபவிக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து, அவர்களுடைய ஸ்திரீகளும் அனுபவிக்கிறார்கள்.

"அவரவர் தங்கள் சுதந்தரத்தில் சேர்ந்தார்கள்" - இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் வரையிலும் இஸ்ரவேல் புத்திரரின் சேனைகள் கலைந்துபோகவில்லை. பென்யமீன் புருஷரின் பிரச்சனை தீர்த்து வைக்கப்பட்ட பின்பே அவர்கள் தங்களுடைய சுதந்தர தேசத்திற்குப் போனார்கள்.

"அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்" - நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில் அநீதியான காரியங்கள் ஏராளமாய் நடைபெற்றன. இதற்கான காரணம் இங்கு கூறப்பட்டிருக்கிறது. அவர்களைக் கட்டுப்படுத்தி, ஆளுகை செய்வதற்கு அங்கு ராஜா யாரும் இல்லை. ஒவ்வொருவனும் தன் மனதிற்குச் சரியாகத் தோன்றியதைச் செய்தான். தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக தன்னுடைய சொந்தப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, தனக்கு விருப்பமானதைச் செய்தான்.